# சட்டத்தின் திறப்பு விழா!

(வானொலி நாடகங்களின் தொகுப்பு)



மறவன்புலோ **செல்லம் அம்பலவாணர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்தின் திறப்புவிழா

2017 ஆம் வருட அரச இலக்கிய விழாவில் சிறந்த சிறுவர்நாடக இலக்கியத்துக்கான விருதுக்காகப் பரிந்துரைக்கப்பட்ட மூன்று நூல்களில் ஒன்றாக இடம் பெற்று சான்றிதழ் பெற்றுக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆசிரியரின் பிற ஆக்கங்கள் :**

- பஞ்சாமிர்தம் (சிறுவர் நாடகங்கள்) 2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[library stamp]

# சட்டத்தின் திறப்புவிழா

(வானொலி நாடகங்கள்)

ஆசிரியர்

'மறவன்புலோ' செல்லம் அம்பலவாணர்

C. Eng (MIESL), MBA (University Of Colombo).

ஆசிரியர் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நூலானது தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் அனுசரணையுடன் வெளியிடப்பட்டுள்ளது. இந் நூலின் உள்ளடக்கமானது தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் கருத்துக்களை பிரதிபலிக்கவில்லை என்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

'சட்டத்தின் திறப்புவிழா'
(வானொலி நாடகங்களின் தொகுப்பு)
@மறவன்புலோ செல்லம் அம்பலவாணர்
முதற்பதிப்பு : 2016
ISBN 978-955-42626-1-4

தேசிய் நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையத்தினால்
அங்கீகரிக்கப்பட்டு வடிவமைக்கப்பட்ட வெளியீட்டு பட்டியல் தரவு

அம்பலவாணர், செல்லம்
சட்டத்தின் திறப்புவிழா / செல்லம் அம்பலவாணர், -
கொழும்பு : ஆசிரியர், 2016, -
ப. XXX, 238 ; செமீ. 21.
ISBN 978-955-42626-1-4
i. 894.8112022 டிவி 23 ii. தலைப்பு
1. வானொலி நாடகங்கள் – தமிழ் இலக்கியம்

கணினி வடிவமைப்பு : ஸ்ரீ விக்னேஸ்வரா கிராஃபிக்ஸ், போன்: 9884513164
அட்டைப்பட வடிவமைப்பு : பான்ராஜா கிராஃபிக்ஸ்,
பதிப்பாசிரியர் : செ.அம்பலவாணர், 478 - 28 அளுத்மாவத்தை வீதி, கொழும்பு - 15
அச்சுப் பதிப்பு : மணிமேகலைப் பிரசுரம்
த.பெ. எண் : 1447, 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், சென்னை - 600 017. போன்: 24342926, 24346081

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம் .. ..



என் வாழ்வை
வாழ்வாக்கிய
வாழ்க்கைத்துணைக்கும்
வாழ்வின் அறுவடையான
இரு கண்மணிகளுக்கும் ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன
ஓய்வுநிலை பிரதிப் பணிப்பாளர் நாயகம்,
தமிழ்ச்சேவைப் பணிப்பாளர்,
இயல்நாடக கட்டுப்பாட்டாளர்


**கலாபூஷணம் திரு. வி.என். மதிஅழகன்**

அவர்களின்

# ஆசியுரை

## அள்ளிச் சொரிகிறேன் நல்லாசிகள்...

*மதிஅழகன்*



இலங்கை வானொலி 90 ஆவது ஆண்டை எட்டும் வேளையில் உங்களுடன் வி.என்.மதிஅழகன் பேசுகிறேன்.

எமது நாட்டில் 1925ஆம் ஆண்டு ஒலிபரப்புச் சேவைகள் உத்தியோகப் பூர்வமாக ஆரம்பித்தன.

சுதந்திர சதுக்கத்தில் றேடியோ சிலோன் கட்டிடம் 1950-ல் திறந்து வைக்கப்பட்டதையடுத்து சிங்கள, தமிழ், ஆங்கிலமொழி மூல ஒலிபரப்புகளுக்கென தனித்தனி அலைவரிசைகள் ஒதுக்கப்பட்டன.

நிரந்தர ஒலிபரப்பாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்களில் தமிழ்ச்சேவை நாடகத் தயாரிப்பாளராக விளங்கியவர் கலாஜோதி சானா எனப் பிரபலம் பெற்ற செல்லத்துரை சண்முகநாதன்.

இரண்டு தசாப்தகாலமாகப் பணியாற்றிவந்த சானாவே வானொலி தமிழ் நாடகங்களின் பிதாமகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சானாவைத் தொடர்ந்து கே.எம்.வாசகர், பி.விக்னேஸ்வரன், ஜோர்ஜ் சந்திரசேகரன் ஆகியோர் நிரந்தர நாடகத் தயாரிப்பாளர்களாக விளங்கி வந்தனர்.

எஸ்.எழில்வேந்தன், மயில்வாகனம் சர்வானந்தா, அப்துல் ஹமீட் போன்ற தயாரிப்பாளர்களும், ஒலிபரப்பாளர்களும் அவ்வப்போது நாடகங் களை வடிவமைத்து ஒலிபரப்பு செய்துவந்தனர். அவர்களில் நானும் ஒருவனாவேன் எனக் கூறுவதில் பெருமையடைகிறேன்.

வர்த்தக சேவையிலும் ''தணியாத தாகம்'' போன்ற தரமான நாடகங்கள் இடம்பெற்றுவந்தன. தரமான வானொலி நாடகங்களின் ஒலிபரப்புக்கு ஆதாரமாக விளங்கியவர்கள் நாடகப்பிரதி எழுத்தாளர்கள்.

காற்றோடு கலந்து மறைந்துவிடும் தமது நாடகப்பிரதிகளுக்கு இலகியத்தரம் வேண்டும் என எண்ணி அவற்றைத் தொகுத்து நூலாக்கிய வர்கள் பலர். அவர்களில் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை, 'அகளங்கன்" நா.தர்மராஜா எனத் தொடரும் பட்டியலில் புதிதாக இணைந்துகொள்ளும் அம்பலம் -

தமது நூலுக்கு ஆசி கூறுமாறு ''நந்தா புகழ்பெற்ற நாயகன் நடிகமணி வி.வி.வைரமுத்து" என்ற எனது நூலை அறிமுகம் செய்ய நான் கொழும்பு சென்ற வேளையில் கேட்டபோது ''ஓஹோ, எனக்கு வயதாகிப்போனமை அம்பலமாகிவிட்டது" என எண்ணிக்கொண்டேன்.

அம்பலம்!

உங்களின் வானொலி நாடகப்பிரதிகள் நூல் வடிவத்துக்கு எனது மனப்பூர்வமான ஆசிகளை அள்ளி வழங்குகிறேன்.

''சட்டத்தின் திறப்புவிழா'' என்ற இந்த நாடக நூலிலுள்ளே ''சட்டத்தின் திறப்புவிழா" தொடக்கம் ''அறுவடை'' வரையான ஒன்பது நாடகங்களையும் படித்தேன் - நெகிழ்ச்சி கொண்டேன் - மகிழ்ச்சி யடைந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடக எழுத்தாளர்களுக்கு உங்கள் நூல் ஒரு நெம்புகோலாக விளங்கட்டும். வானொலி நாடகங்களைத் தொகுத்து வெளியிடும் எழுத்தாளர் படடியல் நீண்டு செல்லட்டும்.

அம்பலத்தின் சொல்வண்ணத்தில் உருவான நாடகங்களை வாசிக்கும் அன்பர்களே உங்களோடும் சில வார்த்தைகள்.

1995 ம் ஆண்டு நான் தமிழ்ச்சேவை பணிப்பாளராக விளங்கிய காலத்தில் முதலாவது நாடகத்தயாரிப்பாளராக விளங்கிய சானா நினைவாக நடத்திய நாடகப்பிரதிப்போட்டி பற்றிய மனப்பதிவுகளை பகிர்ந்து கொள்ள இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த நீங்கள் என்னை அனுமதிக்க வேண்டும்.

காலஞ்சென்ற முன்னாள் தமிழ்ச்சேவைப் பணிப்பாளர் "நாவற்குழியூர்" நடராஜனைக் கௌரவிக்கும் வகையில் நடத்தப்பட்ட போட்டிக்கு 200 பிரதிகள் கிடைத்தன.

கே.கே.மதிவதனன் எழுதிய 'மனிதன் என்பவன் தெய்வமாகலாம்" முதலாவது பரிசையும், எஸ்.எஸ்.கணேசபிள்ளை எழுதிய 'குருவிக்கூடு" இரண்டாவது பரிசையும், அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதிய 'கல்வியா, கனடாவா, கல்யாணமா" மூன்றாவது பரிசையும் பெற்றன.

கே.ஞானசேகரனின் "மனக்கதவுகள்", பளையூர் சுந்தரம்பிள்ளையின் "துறவு" என்பவை ஆறுதல் பரிசுகளை அடைந்தன.

1996 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 3 ம் திகதி கொட்டாஞ்சேனை ஐங்கரன் மண்டபத்துக்கு ஐவரையும் அழைத்து பரிசுப்பணம் வழங்கப் பட்டது.

இலங்கையில் இடம்பெற்ற நாடகப்போட்டியொன்றில் அதிகூடிய தொகை பரிசுப் பணமாக வழங்கப்பட்டமை அதுவே முதற்தடவையாகும்.

நாடகப்பிரதி எழுத்தாளர்களை மகத்துவம் செய்வதில் தமிழ்ச்சேவை என்றுமே தயக்கம் காட்டியதில்லை. இந்த மரபு இன்னும் தொடர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறவன்புலோ அம்பலம்!

எனது ஒலிபரப்புப் பாசறையில் தளபதிகள் என விளங்கிய ஜோர்ஜ் சந்திரசேகரன், எஸ்.எழில்வேந்தன், ராஜேஸ்வரி சண்முகம், உருத்திராபதி, ராஜபுத்திரன் ஜோகராஜா போன்றவர்கள் உங்களின் திறன் பற்றி அடிக்கடி பெருமைப்பட கூறிக்கொண்டதை நான் மறந்ததில்லை.

காகிதம் இரண்டு விதங்களில் பெறுமதியாகிறது. ஒன்று பணத் தாளாகும்போது, மற்றது நல்ல நூலாகும்போது.

மனிதநேயம்மிக்க அம்பலமே!

உங்கள் கலைத்துவம் அற்புதமானது - அதி உன்னதமானது. எழுத்தும் நடிப்பும் உங்களுக்கு ஒருங்கே அமைந்தமை விசேடத்துவமானது. உங்கள் வாழ்க்கைத்துணை தயாளினி தந்து வரும் பக்கபலமே உங்களுக்கு அசுரபலம். அதனால் எழுத்துலகிலும் நீங்கள் பெற்றிருக் கிறீர்கள் அதிகூடிய பிரபலம் எனக்கூறி ஆசிகளை மீண்டும் அள்ளிச்சொரிந்து விடைபெறும் -

**'கலாபூஷணம்' வி.என்.மதிஅழகன்.**
இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன ஓய்வுநிலை -
பிரதிப் பணிப்பாளர் நாயகம்,
தமிழ்ச்சேவைப் பணிப்பாளர்,
இயல் நாடக கட்டுப்பாட்டாளர்,
ரொறன்ரோ,
கனடா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறவன்புலவு **க.சச்சிதானந்தன்** அவர்களின்

# வாழ்த்துரை



**தை**, மாசியில் அறுவடை. பங்குனியில் காற்றுத் தூங்கும். உடல் புழுங்கும். சித்திரை பிறந்ததும் கதிர்ப் பாய்கள் பரணில் ஏறும் இசைக் கருவிகள், நாடக உடைகள் பரணிலிருந்து இறங்கும்.

புத்தாண்டுக்குப் பின் முன்நிலவில் கலைஞர் கூடுவர். எந்த நாடகம்? கண்ணகியின் சினமா? காத்தவராயன் கூத்தா? சங்கிலியனின் வீரமா? பிறவா? ஏதாவது ஒன்று தேர்வாகும்.

**என்னையும் நடிக்கச் சேர்ப்பீர்களா? எனக் கேட்கும் இள வட்டன்கள். பெற்றோரின் உரிமம் இல்லாமலே வந்திறங்குவர். புதிய நடிகர் உண்டா? பழைய நடிகர்கள்தானா?**

யார் என்ன பாத்திரம் என்ற சொல்லாடல். உவன் போனமுறை சோபிக்கேல்லை. உவனுக்கு மனப்பாடம் வராது. என்னப்பா குரலை உயர்த்தமாட்டியா? என வடிகட்டல்கள், மடை மாற்றல்கள்.

வயல் வெளியில் பனங்குற்றிகளால் மேடை ஒருபுறம் எழும்.

கொளுத்தும் வெயிலில் பூவரச மரங்கள் விரிக்கும் நிழலில், கீழ்க் கொப்பு ஒன்றைக் கையால் பிடித்தவாறு, மறு கையில் நாடக வரிகளைப் பார்த்து மனப்பாடம் செய்யும் நடிகர் மறுபுறம்.

மேடை ஒழுங்கு, அணிமணி, ஆடை எனப் பார்ப்பபோர் இன்னொரு புறம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகாசியில் வயல்வெளி மேடையில் நாடகம் அரங்கேறும். தீவட்டி வெளிச்சம் போனது, பெட்ரோமாக்சு வந்தது.

மேடையைச் சுற்றி வேடிக்கை பார்க்கும் சிறுவர் சிறுமியர். மேடைக்கு முன்னே சில நூறு சுவைஞர்.

அறுகுவெளி, தளங்களப்பு, மறவன்புலவு, கோயிலாக்கண்டி, தச்சன்தோப்பு, நுணாவில், கைதடி, மட்டுவில் எனப் பல ஊர்களில் இருந்து வரும் சுவைஞர் கூட்டம். மறவன்புலவுக்கு வரும் சுவைஞர் கூட்டம்.

இவ்வாறான வயல்வெளி நாடக அரங்குகளே மறவன்புலவின் திரு. செல்லம் அம்பலவாணரின் கலைப்புலமோ?

அவரது இல்லத்துக்குத் தெற்கே கலை ஆபரணம் கோட்டை. கலைக்கான அணிமணிகள் சேர்த்த மாபெரும் களஞ்சியமோ?

எல்லோருக்கும் எல்லாம் கைகூடுவது அரிது. திரு. செல்லம் அம்பலவாணருள் புதைந்திருப்பனவோ கற்பனைத் திறன், எழுத்துத் திறன், நடிப்புத் திறன், கலையைச் சுவைக்கும் திறன், கணிதத் திறன், பொறியியல் திறன், வேளாண் திறன், நட்பும் உறவுகளும் பேணும் இல்லத்தாராகும் அறம்சார் அன்புத்திறன், பிறந்த மண்ணை நேசிக்கும் திறன்.

நாடகம் எழுதுவது எளிதல்ல. கதைக் கோவையைக் கற்பனையில் பின்னி, சொல்லவந்த செய்தியை இலக்காக்கி, கருத்துக் கோவையைக் குழைத்து, நாடக மாந்தராக மாறிமாறி, சொற்கோவையை ஒன்பான் சுவைக் கலவையாக்கி, மொழி நடையில் எளிமையும் புரிதலும் பேணி, எழுதுகோலின் கூரில் ஓடவிடும் மாபெரும் ஆற்றல் நாடக ஆசிரியருக்கு உண்டு.

அத்தகைய ஆற்றலும் அருந்திறனும் மறவன்புலவின் திரு. செல்லம் அம்பலவாணருக்குக் கைவரப்பெற்றதால், வானொலி நாடக எழுத்தாளராக, 1990இல் தொடங்கி, நூற்றுக்கும் கூடுதலான நாடகங்களில் பங்காற்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேறு, அவருக்கு. அவற்றுள் ஐந்து, பஞ்சாமிர்தம் என்ற தலைப்பில் நூலாகியது. வேறு ஒன்பது, 'சட்டத்தின் திறப்பு விழா' என்ற தலைப்பில் இந்நூலாகிறது.

பணியில் மீள்சேர்க்கை நோக்கிக் காத்திருந்தவர், வானொலி நாடக எழுத்துப் பணிக்குள் புகுந்தமை எதிர்பாராச் செயலெனினும் அவரது உயிருடன் உடலுள் பூரித்துப் பொங்கி வெளித்தள்ளக் காத்திருந்த கலை ஆற்றலுக்கு வடிகாலானதே! எழுபதிற்கும் கூடுதலான நாடகங்களில் நடித்துமிருக்கிறார். இவை தமிழுக்கும் தமிழருக்கும் பேறாயின.

சென்னையில் 2003இல் சிலப்பதிகார நாட்டிய நாடகத்தைத் தயாரிக்க, பத்மஸ்ரீ விருதுபெற்ற பேராசிரியர் சுதாராணி இரகுபதியும் அமெரிக்காவின் கோல்கேட் பல்கலைக்கழகப் பேராசிரியரும் தவில் வித்துவானும் ஆகிய வில்லியம் இசுகெலிற்றனும் முனைந்தபொழுது, சிலப்பதிகார நூலில் இருந்து நாட்டிய நாடகத்துக்குப் பொருத்தமான வரிகளை எடுத்துத் தருமாறு என்னைக் கேட்டனர்.

என் ஆற்றலின்மையைக் கூறினேன். அவர்கள் விடவில்லை. இரு மணி நேர நாட்டிய நாடகத்துக்கு ஏற்ற வரிகளைச் சிலப்பதிகார நூலில் இருந்து எடுத்துக் கொடுத்தேன். 2003 மார்கழி சென்னை இசை விழாவில் ஒன்பது அரங்குகளில் உள்ளூர் நாட்டிய மணிகளும் வெள்ளையரான அமெரிக்க நாட்டிய மணிகளும் சேர்ந்து நாட்டிய நாடகமாக அசத்தி, கலைச் சுவைஞர்களின் அமோக வரவேற்பைப் பெற்றனர். மேடைகள்தோறும் என்னையும் பாராட்டியபொழுது, எதிர்பாராச் செயலாக நிகழ்ந்த என் பங்களிப்பு எனக்கே வியப்பானது. பார்க்க, http://www.narthaki.com/info/intervw/intrvw57.html.

நாடகத் தமிழுக்கு மறவன்புலவின் கொடை திரு. செல்லம் அம்பலவாணர். தமிழும் தமிழரும் செழிக்க அவர் பணி தொய்வின்றித் தொடர வாழ்த்துகிறேன்.

மறவன்புலவு **க. சச்சிதானந்தன்,**

சித்திரை 17, 2047 (30.04.2016)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன
தமிழ்ச்சேவைக் கட்டுப்பாட்டாளர்

## திரு. இராஜபுத்திரன் யோகராஜா

அவர்கள்

மன மகிழ்ச்சியுடன் வழங்கும்

# வாழ்த்துரை



கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்னரே இலங்கை வானொலி தமிழ் நாடகங்கைளத் தயாரித்து ஒலிபரப்பி வந்துள்ளது. இலங்கை வானொலி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் நாடகங்கள் அனைத்தும் நேரடியாவே ஒலிபரப்பாகி வந்தன. நேரடியாக ஒலிபரப்பாகும்போதே அனைத்து நாடகங்களும் ஒலித்தட்டில் ஒலிப்பதிவு செய்யப்பட்டன. அவை இன்றும் இலங்கை வானொலியின் சுவடிக்கூடத்தில் கட்டிக்காக்கப்படுகின்றன. அதன் பின்னர் இலங்கை வானொலி நாடகங்கள் அனைத்தும் ஒலிநாடாவில் ஒலிப்பதிவு செய்யப்பட்டே ஒலிபரப்பாகிவந்தன.

இலங்கை வானொலியின் அத்தனை நாடகங்களும் நாட்டு மக்களின் வாழ்க்கையைச் சித்திரிப்பதாகவே இருந்தன. அது மட்டுமல்ல இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகும் நாடகங்கள் அத்தனையும் நாட்டின் ஒவ்வொரு பிரதேசத்தையும் பிரதிபலிப்பனவாக இருந்தன. அதாவது ஒவ்வொரு பிரதேசத்திலும் பேசப்படும் வட்டார வழக்கைக் கொண்டிருந்தன. பிரதிகளாக எழுதப்படும் நாடகப் பாத்திரங்கள் எல்லாம் சாதாரணமாக நாம் அன்றாடம் சமூகத்தில் பேசப்படும் மொழியாகும்.

இலக்கிய நாடகங்கள், சமூக நாடகங்கள், நகைச்சுவை நாடகங்கள், தொடர் நாடகங்கள் என்று பல்வேறு விதமான நாடகங்களை இலங்கை வானொலி ஒலிபரப்பியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

80ஆம் ஆண்டுக் காலகட்டத்தில்தான் நான் இலங்கை வானொலிக்குள் பிரவேசித்தேன். அப்போது நாடகத் தயாரிப்பாளராக இருந்தவர்தான் ஜோர்ஜ் சந்திரசேகரன் அவர்கள். கட்டுப்பாட்டாளராக வி.என்.மதியழகன் அவர்கள் கடமையாற்றினார். அந்தக் காலகட்டத்தில் நாடக நடிகர்களுக்கான நடிகர் தேர்வு இடம்பெற்றது. அந்தத் தேர்வில் நான் உட்பட பலர் வானொலி நாடகக் கலைஞர்களாகத் தெரிவு செய்யப்பட்டோம். அந்தப் பலரில் ஒருவர்தான் மறவன்புலோ செல்லம் அம்பலவாணர் அவர்கள்.

யாழ்ப்பாண வட்டார வழக்கைப் பேசி நடிக்கும் ஆற்றல் கொண்டவராக அம்பலவாணர் திகழ்ந்தார். அது மட்டுமல்ல, இலக்கிய நாடகங்களிலும் நகைச்சுவை நாடகங்களிலும் அவரது ஆற்றல் வானொலி ஊடாக வெளிவந்தது.

அன்று ஜோர்ஜ் சந்திரசேகரன் அவர்களுக்குப் பின்னர் தயாரிப்பாளர் களாக எஸ்.எழில்வேந்தன், மயில்வாகனம் சர்வானந்தா, இராஜபுத்திரன் யோகராஜன் மறைந்த மூத்த அறிவிப்பாளர் திருமதி ராஜேஸ்வரி சண்முகம் ஆகியோரது தயாரிப்பில் உருவான பல நாடகங்களில் அம்பலவாணர் அவர்கள் தனது நடிப்பாற்றலை வெளிப்படுத்தினார்.

இலங்கை வானொலியில் அன்று பல தலைசிறந்த நடிகர்கள் நடித்துவந்தார்கள். வரணியூரான் எஸ்.எஸ்.கணேசபிள்ளை, கே.எஸ்.பாலச் சந்திரன், கமலினி செல்வராஜன், ஜீ.பி.வேதநாயகம், அருணா செல்லத்துரை, கே.சந்திரசேகரன், ராஜா கணேசன், சுமதி பாலஸ்ரீதரன், வனஜா ஸ்ரீனிவாசன், ஏ.எம்.சி.ஜெயஜோதி போன்ற புகழ்பெற்ற வானொலி நாடகக் கலைஞர்களுடன் அம்பலவாணர் அவர்கள் நடித்துவந்தார். அத்துடன் அவர் நிற்கவில்லை. வானொலி நாடகங்களை எழுத ஆரம்பித் தார். அவரது நாடகங்கள் பல வானொலியில் ஒலிபரப்பாகின. மறவன்புலோ செல்லம் அம்பலவாணர் அவர்கள் இன்றும் இலங்கை வானொலி நாடகங்களில் நடித்துவருகின்றார்.

இலங்கை வானொலி பல திறமையான வானொலி நாடகக் கலைஞர்களை உருவாக்கியுள்ளது. அதில் ஒருவர்தான் அம்பலவாணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள். பண்பான குணங்களைக் கொண்டவர், வானொலி நாடகம் என்றால் அதில் வரும் பாத்திரமாகவே மாறிவிடும் அற்புதமான கலைஞர். எந்த வேலையில் இருந்தாலும் வானொலி நாடகம் என்றால் சரியான நேரத்திற்கு வந்து தனது பாத்திரத்தைத் தயாரிப்பாளரின் விருப்பத்திற்கு ஏற்ற மாதிரி நடிக்கும் ஆற்றல் கொண்டவர்.

அவரது சேவை தொடர்ந்தும் இலங்கை வானொலிக்கு இருக்க வேண்டும் என்பது எமது அவாவாகும். அவர் எழுத்துத் துறையிலும் நடிப்புத் துறையிலும் பல விருதுகளைப் பெற வேண்டும் என்று இந்த வேளையில் அவரை வாழ்த்துகின்றேன்.

அவர் இன்று இலங்கைத் தொலைத்தொடர்புப் பரிசோதகராகவும், பொறியியலாளராகவும், பிரதிப் பொது முகாமையாளராகவும் கடமையாற்றி வருகின்றார். பெரிய பதவியில் அவர் இருந்தாலும் இன்றும் அவர் சிறியவனாகவே வாழ்ந்துவருகின்றார். அவரது பணி தொடர வாழ்த்தி விடைபெறுகிறேன். நன்றி.

**இராஜபுத்திரன் யோகராஜன்,**
கட்டுப்பாட்டாளர்,
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறைப் பீடாதிபதி

**கலாநிதி சி.மௌனகுரு**

அவர்களின்

# அணிந்துரை

## அம்பலவாணரின் 'சட்டத்தின் திறப்பு விழா', நாடக நூலுக்கு ஓர் அணிந்துரை



இலங்கையின் தமிழ்நாடக வரலாறு எழுதுவோர் (நான் உட்பட) வானொலி நாடகங்களின்பால் தம் கவனத்தைச் செலுத்தினாரில்லை. அதற்கான காரணங்கள் தனியாக ஆராயப்பட வேண்டியவையாயினும், நாடக வரலாற்றில் வானொலி நாடகங்களுக்கும் இடம் உண்டு என்பதனை யாரும் மறுக்கமுடியாது.

வானொலிநாடகம் சுவாரசியமான ஒரு கலைவடிவமாகும். வானொலி நாடகமானது பிரதானமாக ஒலிகளின் தாக்கம் மூலமும் சொற்கள் மூலமுமே செயற்படுகின்றது. ஆம். அது ஒரு ஒலிவடிவினூடாகக் கேட்டு உணரப்படும் நாடக வடிவமாகும்.

அந்நாடகத்தில் வரும் பாத்திரங்களின் குரல் ஏற்ற இறக்கங்களும் ஒலிக்குறிகளும் இதில் முக்கிய இடம்பெறுகின்றன. அதன் மேடை, கேட்போரின் மனமேயாகும். அது மனமென்னும் மேடையில் நிகழும் நாடகம். பாத்திரங்கள் கூறும் சொற்கள் வழியாகக் காண்புலங்களைக் கேட்குநரே மனமேடையில் உண்டாக்கிவிடுவார்கள்.

இலங்கை வானொலி நாடகத்திற்கு நீண்டதோர் வரலாறு உண்டு. சானா, ஜோர்ஜ் சந்திரசேகரன், விக்னேஸ்வரன், வாசகர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணா செல்லத்துரை போன்ற நாடகத் தயாரிப்பாளர்கள் சட்டென்று வருகிறார்கள். அதன்முன்னால் கா.சிவத்தம்பி போன்றோர் வானொலி நடிகர்களாகவும், நாடக ஆசிரியர்களாகவும் இருந்துள்ளார்கள்.

1970களில் சி.வி.இராஜசுந்தரம் பணிப்பாளராகக் கடமைபுரிந்த காலத்தில் ந.சுந்தரலிங்கம் போன்ற மேடைநாடக விற்பன்னர்களை வானொலி நாடகம் தயாரிக்க கௌரவ தயாரிப்பாளர்களாக அழைத்தும் இருக்கிறார்கள். அதிலே அன்றைய பிரபல மேடை நடிகர்களான தாசீசியஸ், சிவானந்தன், மௌனகுரு உட்படப் பலர் நடித்திருக்கிறார்கள்.

காத்திரமான நாடகப்பிரதிகளை சிறந்த எழுத்தாளர்களைக்கொண்டு எழுதுவித்திருக்கிறார்கள். இப்படி வானொலிநாடகம் எழுத அழைக்கப் பட்டவருள் ஒருவர் கவிஞர் முருகையன் ஆவர். இவ்வகையில் நல்ல வானொலி நாடகங்களைத்தர இலங்கை வானொலி தன்னாலான முயற்சிகளைச் செய்துள்ளது. தேசிய ஒலிபரப்பில் இரவு பத்து மணிக்கு வானொலி நாடகம் கேட்கக் குழுமும் ஆட்களைக் கண்டிருக்கிறேன். அதன் ஆரம்பஇசை இப்போதும் காதில் ஒலிக்கின்றது. வர்த்தக ஒலிபரப்பிலே தொடராக வெளிவந்த சில்லையூர்செல்வராசனின் 'தணியாததாகம்' என்ற நாடகம் வெகு பிரசித்தமானது. இன்றைய தொலைக்காட்சி மெகா தொடரைப்போல அது அன்று பலபேரைக் கட்டிப்போட்டிருந்தது.

வானொலி நாடகம் எழுதுவதற்கு ஒரு தனித்திறன் வேண்டும். அது மேடைநாடகம் இல்லை என்ற உணர்வு எப்போதும் வானொலி நாடகம் எழுதுவோரின் உணர்வுள் உறைந்திருக்க வேண்டும். வானொலிநாடகம் எழுதுவோர் இரண்டு விடயங்களில் ஆழமான புலமை பெற்றிருத்தல் அவசியம். ஒன்று நாடகம் பற்றிய புலமை. இன்னொன்று வானொலி என்கிற ஊடகம் பற்றிய புலமை.

நாடகக் கதை அதன் பிரதான உரிப்பொருள், அதை நாடகப்பாங்கில் சொல்லும் முறை, அவ்வுரிப்பொருளின் பிரதானமுரண், அம்முரண் வளர்ந்து செல்லும் விதம், அம்முரணும் கிளைமுரண்களும் பிரதான பாத்திரங்களையும் ஏனைய பாத்திரங்களையும் பாதிக்கும் விதம் என்பன பற்றித் தெளிவான அறிவு வானொலி நாடகத்திற்கு அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடைநாடகக் குறிப்புகள்போல வானொலிக்காகக் குறிப்புக்களை எழுத்துப்பிரதியில் எழுத அவருக்கு வானொலி என்ற ஊடகம் பற்றிய அறிவும் அவசியம்.

உதாரணமாக நிகழ்ச்சி எங்கே நடக்கின்றது, என்ன நேரத்தில் நடக்கின்றது என்பதனை மனப்படத்தில் உருவாக்க வேண்டும். பாத்திரங்கள் மனதில் பதியும்வரை அவர்கள் தம்மைப் பெயர் சொல்லி அழைக்கவேண்டும்.

பாத்திரங்கள் எவ்வளவு குறைவாக உள்ளனவோ அவ்வளவு வானொலி நாடகம் சிறக்கும். நேயர்களின் கவனத்தைக் கவர்வதுடன் அதனைப் பேணிப் பாதுகாத்தலும் அவசியமாகும்.

சொற்களை அனாவசியமாகப் பாவிக்கக்கூடாது. ஒரு காட்சி நெருங்கி வரவர அடுத்த காட்சிக்குத் தயாராக இருக்குமாறு நேயரை வழிநடத்த வேண்டும்.

விரும்பியவுடன் மூடிவிடக்கூடிய ஆழி (Switch) நேயரின் கையில் இருக்கின்றது என்ற உண்மையை மனதில் எப்போதும் இருத்தல் வேண்டும்.

மூன்று வகையான வானொலி நாடகங்களை நாம் காணுகிறோம். ஒன்று உணர்வுகளை மோதவிட்டு நமது உள்ளங்களை உசுப்பிவிடுகின்ற காத்திரமான வானொலி நாடகங்கள். இரண்டாவது பரிசோதனைகளாக நடைபெறுகின்ற வானொலி நாடகங்கள். அடுத்தது வெகுஜனங்களுக்கு கிளுகிளுப்பூட்டும் சாதாரண நாடகங்கள்.

இந்த வரைவிலக்கணங்களுடன் எழுதப்பட்ட பல நாடகங்களை இலங்கை வானொலி கண்டுள்ளது. அருணா செல்லத்துரை, அராலியூர் சுந்தரம்பிள்ளை, அகளங்கன் முதலானோரின் வானொலி நாடகங்கள் நூல்வடிவில் ஏற்கெனவே வெளிவந்துள்ளன.

இந்தப் பின்னணியில்தான் மறவன்புலோ செல்லம் அம்பலவாணர் என்ற வானொலி நாடக ஆசிரியர் தோன்றுகிறார். 1992 தொடக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2015வரை ஏறத்தாழ் 22வருட வானொலி நாடக எழுத்து அனுபவம் அலருக்குண்டு. இக்காலகட்டத்தில் இலங்கை வானொலியில் ஒலிபரப்பான அவரது நாடகங்களில் ஒன்பது நாடகங்களைத் தெரிவுசெய்து இங்கு தொகுத்துத் தந்திருக்கிறார். இதில் வரும் ஒரு நாடகத்தின் பெயரே 'சட்டத்தின் திறப்பு விழா.' எனினும் இவ் ஒன்பது நாடகங்களையும் அவரது 22 வருட வானொலி நாடக அறுவடை என நாம் எடுப்பதில் தவறிருக்காது என்றே எண்ணுகின்றேன்.

இவ் ஒன்பது நாடகங்களுக்குள்ளும் நான் முன்னர் குறிப்பிட்ட வானொலிநாடக இலக்கணங்கள் பல காணப்படுகின்றன. காத்திரமான நாடகங்களும் உண்டு. அதேவேளை காத்திரம் போலக் காட்டும் ஜனரஞ்சக நாடகங்களும் உண்டு.

'சட்டத்தின் திறப்புவிழா' 'இருபது ரூபா நோட்டு' 'அறுவடை' ஆகிய மூன்று நாடகங்களும் சாதாரண மனிதர்களின் மனஉணர்வு களோடு சம்பந்தப்பட்ட நாடகங்கள். காத்திரமான நாடகங்களாக, மேலெழும்பும் நாடகங்களாக எனக்குப் படுகின்றன.

மொத்தத்தில் இவரது எல்லா நாடகங்களிலும் காணப்படும் சாதக மான அம்சங்கள் யாவை எனில் அவை மனித உணர்வுகளையும் அவர்களின் பலம் பலவீனங்களையும் அவர்கள் மொழியில் சொல்வது தான்.

உதாரணமாகச் 'சட்டத்தின் திறப்புவிழாவில்' வள்ளிப்பிள்ளையின் நல்வாழ்வுக்குச் சட்டத்தைக்கொண்டே வழிசமைக்கின்றார் கணபதிப் பிள்ளை வாத்தியார். சட்டத்தின் ஓட்டைக்குள் அந்த வழியை அவர் கண்டுபிடித்து நடைமுறைப்படுத்திவிடுகிறார். அருமையான கதைக்கரு. மொழிநடை. 'இருபதுரூபா நோட்டில்' நல்லமனம் கொண்ட மோகனின் மனப்போராட்டமும் அப்பாவியான இராசம்மாவின் பாசம் மற்றும் ஏக்க உணர்வுகள் நன்கு வெளிக்கொணரப்படுகின்றது. அறுவடை ஒரு படிப்பினை பாசப்பிணைப்பு. 'மயிர்க் கொட்டிகள்' காதல் திருமணத்தை சமகால நிகழ்வுகளுடன் இணைத்து வெற்றிகொண்டிருக்கிறார். 'பெறுமதி' தாய்ப்பாசத்திற்கு ஏங்கும் ஒரு பிஞ்சு உள்ளத்தின் துடிப்பு. இன்றைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிஜத்தைக் கோடிட்டுக் காட்டியிருக்கின்றார். ஒலிவடிவில் மெருகேறியுள்ளது. அருமை.

யாழ்ப்பாண மொழிப்பிரயோகத்தை மிகலாவகமாகக் கையாளும் மறவன்புலோ அம்பலவாணர் 'செய்வினையில்' போடியார், அவர் மனைவி, மந்திரம், கூத்து என வரும் மட்டக்களப்புப் பாத்திரங்களையும் யாழ்ப்பாணப் பேச்சு வழக்கிலேயே பேசவைப்பதை நாம் எவ்வாறு விளங்கிக்கொள்வது?

இலங்கைத் தமிழரிடையே பலவகைப் பேச்சுத் தமிழ்கள் உள்ளன. யாழ்ப்பாணத்தமிழ், மட்டக்களப்புத்தமிழ், மன்னார்த்தமிழ், மலைநாட்டுத்தமிழ், இஸ்லாமியத்தமிழ், என அது பலவகைப்படும். யாழ்ப்பாணத்தை எடுத்துக்கொண்டாலே அது பிரதேசத்துக்குப் பிரதேசம் மாறும் தன்மைகொண்டது. இஸ்லாமியத்தமிழ் கூட மட்டக்களப்பில் ஒருவிதமாகப் பேசப்பட ஏனைய பகுதிகளில் இன்னொரு விதமாகப் பேசப்படுகின்றது. கொழும்பில் இஸ்லாமியத் தமிழ் தனித்துவமானது.

மறவன்புலோ அம்பலவாணர் இதில் சற்றுக் கவனம் செலுத்த வேண்டுமென்பது எனது வேண்டுகோள்.

அம்பலவாணர் வானொலி நாடக எழுத்தாளர் மாத்திரமல்லாது அவர் ஒரு நாடக நடிகர் என்பதனையும் எழுபதுக்கு மேற்பட்ட நாடகங்களில் நடித்திருக்கிறார் என்பதனையும் பின்குறிப்புகள் மூலமும் என்னுரை மூலமும் உணர்த்துகின்றார். எழுத்தாளரே நடிகராக இருப்பது நாடகத்திற்கு வலுசேர்க்கும். இந் நாடகங்களுடன் அந்நாடகங்களை உள்ளடக்கிய இறுவட்டுக்களையும் இணைத்திருப்பது நல்ல முயற்சி. வரவேற்கத்தக்கது.

அந்த இறுவட்டை ஒருதடவை போட்டுப்பார்த்த போது இலங்கை வானொலி தனக்கென ஒரு யாழ்ப்பாணத்தமிழை உருவாக்கியுள்ளதோ அன்றி அம்பலவாணரின் மறவன்புலோத்தமிழை வெளிக்கொணர்ந் துள்ளதோ என்ற ஐயமே எழுந்தது. ஆனால் திறமை பளிச்சிடுவது உண்மை. அதை மறுக்கமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றிற்கும் அப்பால் என் முன்னுரைக்காக நீண்ட நாட்கள் காத்திருந்த அம்பலவாணரின் பொறுமையைச் சோதித்துவிட்டேனோ என எண்ணியதுண்டு.


அனுபவமும் மொழிக்கையாளுகையும் உடைய மறவன்புலோ அம்பலவாணரிடம் இருந்து ஆழமான வானொலிநாடகங்களை தொடர்ந்தும் நாம் எதிர்பார்ப்பதில் தவறில்லைதானே?.

அம்பலவாணருக்கு என் வாழ்த்துக்கள்.

**சி.மௌனகுரு**
**(பேராசிரியர் சி.மௌனகுரு)**
இல: 45/19 2ம் குறுக்கு வீதி,
சின்ன உப்போடை,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை



'யுத்தமே தொழினுட்ப வளர்ச்சிக்கு அத்திபாரம். தடைகளே தன்னிலை வெளிக்கொணர் தலுக்கும் தற்றுணிபுக்கும்; உந்துசக்தி'. இவை எழுதாத ஆனால் அனுபவ ரீதியாக உணரப்பட்ட நிறுவப்பட்ட உண்மைகள்.. இது எனது வாழ்விலும் நிரூபிக்கப்பட்ட உண்மை. அதன் அறுவடையைத்தான் இன்று 'சட்டத்தின் திறப்பு விழா'வாக உங்களிடம் சமர்ப்பிக்கிறேன்.

சிறுவயதிலிருந்தே நான் பிறந்த மண்வாசனை காரணமாக கலைகளின் மீது அலாதிப்பிரியம். பாடசாலைநிகழ்வுகள், சமயநிகழ்வுகள், தமிழ்மொழித்தினப் போட்டிகள் போன்றவற்றில் பங்கு பற்றியமையும் அவ்வப்போது பெற்ற வெற்றிகளும் பெற்றார், சகோதரங்கள் மற்றும் ஆசிரிய சமூகத்தின் உந்து சக்திகளும் என்னை என்னிலேயே நம்பிக்கைவைக்கத் தூண்டியது என்றால் மிகையாகாது.

கொழும்பு நோக்கி தொலைத்தொடர்புப் பொறியியல்துறைக்கான எனது பயணத்தைத் தொடரும்போது இவற்றுக்கெல்லாம் முற்றுப்புள்ளியிடும் காலம் வந்துவிட்டதாகத்தான் எண்ணினேன். ஆனால் அது திருப்புமுனையாக அமையும் என்பதே எழுதிய விதியாயிருக்கவேண்டும்.

1990 ஆனி மாதம். அண்ணாவின் வீடுகுடிபுகுதலுக்கு யாழ் நோக்கிய புகைவண்டியில் பயணம் செய்கிறேன். அதுதான் 20ஆம் நூற்றாண்டின் யாழ்ப்பாணத்திற்கான இறுதிப்புகைவண்டிப் பயணமாக அமையும் என நான் மட்டுமல்ல, யாரும் கனவிலும் நினைத்திருக்க வில்லை.. நானும் கொழும்பு திரும்ப முடியாது நான்கு மாதங்கள் வரையில் ஊரில் முடங்கவேண்டியதாயிற்று. வேலைக்கு சமூகமளிக்காமையினால் இடைநிறுத்தற்கடிதம் வேறு என்னைக் கலக்கிவிட்டது. எவ்வளவோ கஷ்டங்கள் மத்தியில் கொழும்பு வந்து அலுவலகத்திற்குச் சென்றால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீளவும் கடமைக்குச் சமூகமளிப்பதற்கான அனுமதிக்கடிதம் வரும்வரை காத்திருக்க வேண்டும். என்ன செய்வது.. வாடகை அறையில் தம்பியின் உழைப்பில் உண்டு உறங்கிக்கொண்டு வானொலியும் வாசகசாலையுமே தஞ்சமென்று கிடந்தேன்.

அப்போது சிறுவர்நாடகங்களுக்கான பிரதிதேவை என்ற வானொலி மாமா எழில்வேந்தன் அவர்களின் வானொலிமூலமான அறிவிப்புக்கு அனுப்பிய 'நீயே உனக்கு நீதிபதி' என்ற சிறுவர் நாடகமே வானொலி நாடகத் துறைக்கு எனக்கு அடித்தளமாக அமைந்தது. தொடர்ந்து இன்றைய முன்னணி வானொலிக் கலைஞர்கள் அன்று சிறுவர்களாக குரல் கொடுக்க திரு எஸ் எழில்வேந்தன் ஐயாவின் தயாரிப்பில் ஏறத்தாழ இருபத்தைந்து வரையான சிறுவர்நாடகங்கள் ஒலிபரப்பானமையை மகிழ்வுடன் பகிர்ந்துகொண்டேயாக வேண்டும்.

எனது அலுவலக நண்பனும், வானொலிநாடக எழுத்தாளருமாகிய திரு பெல்ப்ஸ் ஜெகநாதனின் எழுத்துருவில் ஜோர்ஜ் சந்திரசேகரன் ஐயா அவர்களின் தயாரிப்பில் இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகிவந்த 'அலைகடல் ஓடங்கள்' என்ற வானொலி தொடர்நாடகத்தில் மூன்று நண்பர்களில் ஒருவராகி அறிமுகமாகிக் குரல்கொடுத்து வந்ததை இன்றும் மகிழ்வுடன் நன்றியறிதலுடன் பெருமையுடன் நினைவுகூருகிறேன்.. அன்று என்னை ஜோர்ஜ் சந்திரசேகரன் ஐயாவிடம் அறிமுகம் செய்து வானொலிக் கலைஞனாகக் களம்புகுத்திய திரு. பெல்பஸ் ஜெகநாதன் அவர்களின் என்னைப் பற்றிய அறிமுகம் பின் அட்டையில் அமைத்திருப்பது மிகப் பொருத்தமானதென்றே நன்றியறிதலுடன் கூறத்தோன்றுகிறது.

ஓய்வு கிடைத்தபோது எழுதிவைத்திருந்த 'சட்டத்தின் திறப்புவிழா' என்ற நாடகப்பிரதியை ஒரு நாள் ஜோர்ஜ் சந்திரசேகரன் ஐயா அவர்களிடம் கொடுத்து வானொலிக்கு ஏற்றதாகத் திருத்தம் செய்து தருப்படி கேட்டேன். என்ன ஆச்சரியம். ஜோர்ஜ் சந்திரசேகரன் ஐயா அடுத்த கிழமையே ஒலிப்பதிவு செய்வதாக அறிவித்தார். அவர்களின் தயாரிப்பில் அன்றைய காலகட்டத்தில் மிகப் பிரபல்யமான கலைஞர்களின் குரலில் அது ஒலிபரப்பாகியதையிட்டு மிக மகிழ்ச்சியடைந்தேன். குட்டுப் பட்டாலும் மோதிரக்கையால் குட்டுப்பட வேண்டும் என்ற பழமொழிக்கிணங்க எனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் நாடகமே கண்டிப்புக்குப் பெயர்போன, அனுபவமுள்ள மிகச்சிறந்த தயாரிப்பாளரான திரு.ஜோர்ஜ் சந்திரசேகரன் ஐயா அவர்களினால் தயாரிக்கப்பட்டது என்பதையிட்டு நான் இன்றும் பெருமகிழ்வடைகிறேன். அதுவே என்னை என்மீது நம்பிக்கைவைத்து தொடர்ந்து எழுதத் தூண்டியது. சிறுவர் நாடகம் என்ற கட்டுப்பாட்டிலிருந்து வானொலி நாடகம் என்ற துறைக்கு திறப்பு விழாவாக அமைந்தது. அதனால்தான் முனைவர் லேனா தமிழ்வாணன் ஐயாவின் ஆலோசனையின்படி இந்நூலிற்கு அதே நாடகத்தின் தலைப்பான 'சட்டத்தின் திறப்பு விழா' என்று பெயரிட்டு வெளியிட்டு வைக்கிறேன். தொடர்ந்து திரு. வி. என். மதியழகன், திரு. இராசபுத்திரன் யோகராசா, திரு. லூக்கஸ் திருச்செல்வம், திரு. எஸ்.தக்கீசன் ஆகியோரின் தயாரிப்பிலும் எனது நாடகங்கள் ஒலிபரப்பாகி வந்திருக்கின்றன. வருகின்றன.

இதே காலகட்டத்தில் வானொலி நாடகக் கலைஞராகத் தெரிவு செய்யப்பட்டமையால் தற்போது எனது பெரும்பாலான நாடகங்களுட்பட ஏறத்தாழ எழுபத்தைந்து வரையான வானொலி நாடகங்களுக்கு குரல்கொடுக்கும் பாக்கியமும் எனக்குக் கிடைத்தது. அமரத்துவம் எய்திய 'வானொலிக் குயில்' என உலகளாவிய ரீதியில் அறியப்பட்ட திருமதி. ராஜேஸ்வரி சண்முகம் அம்மா அவர்களின் தயாரிப்பில் இருபதிற்கும் மேற்பட்ட நாடகங்களில் நடித்தமையையிட்டு (குரல் கொடுத்தமையையிட்டு) பெருமைப்படுகிறேன்.

2013ஆம் ஆண்டு றோயல்கல்லூரி தமிழ்நாடக மன்றம் அகில இலங்கை ரீதியில் நடாத்திய நாடகப்பிரதி எழுதும்போட்டியில் பங்குபற்றி **'அறுவடை'** என்ற நாடகம் முதலாவது இடத்தைப்பெற்று **'விம்பம்'** என்ற தொகுப்பில் இடம்பெற்றது.

2015ல் இலங்கை கலாசாரத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட திறந்த கையெழுத்துப்பிரதி - 2014 போட்டியில் 'கிராமியக்கலை' பிரிவில் என்னால் சமர்ப்பிக்கப்பட்ட '**பஞ்சாமிர்தம்**' என்ற பிரதிக்கு இரண்டாமிடம் கிடைத்தது. இது எனது கன்னிப்படைப்பாக 27.10.2015 அன்று வெளிவந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2016ஆம் ஆண்டு நாடு தழுவிய நாடகப்பிரதி எழுதும் போட்டியில் எனது 'சிலம்பு' என்ற கூத்து நாடகம் முதலாவது இடத்தைப் பெற்றது. இவைகள் எனது எழுத்திற்குக் கிடைத்த அங்கீகாரம் என்றே நான் கருதுகின்றேன்.

இன்று இலங்கை வானொலியில் 1992 முதல் 2015 வரை ஒலிபரப்பாகிய எனக்குப் பிடித்த எனது முப்பது நிமிட நாடகங்கள் ஒன்பதினை நூல்வடிவத்தில் தொகுத்து அதன் ஒலிவடிவத்துடன் **'சட்டத்தின் திறப்பு விழா'** என்ற பெயரில் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் அனுசரணையுடன் வெளியிட இறையருள் கைகூடி வந்துள்ளது.

இந்நூலிலுள்ள நாடகங்கள் ஒலிபரப்பாகி உயிர்பெறுவதற்கும் இந்நூல் உருவாகுவதற்கும் எத்தனையோ துறைசார் அனுபவசாலிகள், பெரியவர்கள், அறிஞர்கள் எனப் பலரும் பல வழிகளில் தமது ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் ஒத்துழைப்பையும் வழங்கியிருந்தார்கள். அவர்கள் அனைவருக்கும் சிரம் தாழ்த்தி உங்கள்முன் எனது இரண்டாவது நூலான 'சட்டத்தின் திறப்பு விழா'வினை அதன் ஒலிவடிவத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

மறவன்புலோ **செல்லம் அம்பலவாணர்**
தனபாலர் பிட்டி,
மறவன்புலோ மேற்கு,
சாவகச்சேரி.
Cell: 94714280809
Fax: 94112435550
email: ambalam@slt.com.lk
Facebook: sellam ambalam
27.10.2016.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே

1. சட்டத்தின் திறப்பு விழா 1

2. காயாத வடுக்கள் 27

3. இருபது ரூபா நோட்டு 55

4. செய்வினை 77

5. தகைமை 103

6. மயிர்க் கொட்டிகள் 127

7. பெட்டிசம் 153

8. பெறுமதி 181

9. அறுவடை 205

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. சட்டத்தின் திறப்பு விழா

## பாத்திரங்கள்

- சிவலிங்கம் – அரச உத்தியோகத்தர்
- கனகலட்சுமி – சிவலிங்கத்தின் மனைவி
- கணபதிப் பிள்ளை – ஆசிரியர்
- வள்ளிப் பிள்ளை – சிவலிங்கத்தின் ஒன்றுவிட்ட சகோதரி
- கயல்விழி – வள்ளிப்பிள்ளையின் மகள்

## காட்சி - 1

*இடம் : அருணாசலம் வீடு*

*பாத்திரங்கள் : கயல்விழி, கனகலட்சுமி, சிவலிங்கம்*

*கய* : (வந்துகொண்டு) மாமி.. மாமா வந்திட்டாரே.. அப்பா பொழுது படேக்கை நெல்லுக்குத்தவெண்டு உந்த மில்லுக்குப் போனவர். என்னும் காணேலை.

*கன* : பொழுதுபடேக்கையே போனவர் கப்பல் வெள்ளியும் இஞ்சை தலைக்குமேலை வந்திட்டுது. முன்னிருட்டு வேறை..

*கய* : ஓம் மாமி றேடியோவிலை நியூசும் முடிஞ்சு கனநேர மாச்சுது. மில்லும் ஏழரை எட்டுக்குப் பூட்டிப் போடுவாங்கள் அதுதான் மாமி பயமாயிருக்குது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கன* : (கோபத்துடன்) நீங்கள் மூண்டு பேர் இருக்கிறியள் தானே. உந்த உரலை நிமித்தி நாலு உலக்கை போட்டால் குறைஞ்சு போடுமே.. அந்தாளை இந்தப் பொழுதுபட்ட நேரத்திலை அதுகும் சைக்கிளிலை அனுப்பினனீங்களே...

*கய* : நாங்கள் சொன்னனாங்கள் மாமி.. அவர்தான் சந்திரன் கடைக்கும் போகவேணுமெண்டு வெளிக்கிட்டவர்.

*கன* : அவர் சங்கக்கடை சோட்டேஜ்வந்து கட்டினாப்பிறகு ஆளும் ஒருமாதிரி.. நானும் கனதரம் அவதானிச்சிருக்கிறன். இந்த பொழுதுபட்டநேரம் முன்னிருட்டு வேறை.. அதுசரி..சைக்கிளுக்கு லைற் தன்னும் இருக்கே கயல்

*கய* : ஓம் மாமி.. கையோடை ரோச்லைற்றும் கொண்டுதான் போனவர்

*கன* : (கூப்பிடுதல்) இஞ்சேருங்கோ.. இஞ்சேருங்கோ... உங்களைத் தான்.. உங்கை என்னப்பா செய்யிறியள். இஞ்சையொருக்கால் வாறியளே.

*சிவ* : (உள்ளுக்குள் இருந்து) கொஞ்சம் பொறப்பா.. கொஞ்சம் ஒவீஸ் கணக்கு வழக்கு பாக்கவேண்டியிருக்கு.. பிறகு அதிலை ஏதும் பிழைகிழை வந்து அவங்கள் பிடிச்சால் தாங்கேலாதப்பா.. ஏன் என்ன அவசரமே இந்த நேரத்திலை.

*கன* : இல்லையப்பா.. அது .. அது வந்து உவர் கயல்விழி யின்ரை தேப்பன் மில்லுக்குப் பொழுதுபடேக்கை போனவராம் அதுதான் ஒருக்கால்.

*சிவ* : (வந்துகொண்டு பதற்றப்பட்டு) எ. என் ..என்ன.. இப்ப அந்தாளுக்கு.. என்ன நடந்தது.. நான் ஒவீசாலை வரேக்கைதானே சைக்கிளிலை போனவர். அதுக்கிடையிலை இப்ப என்ன நடந்ததாம்..

*கன* : அதுதானப்பா.. இன்னும் வரேல்லையாம்.. இவள்பிள்ளை இப்பதான் வந்து சொன்னாள். நேரமும் நல்லாய்ப் போட்டுது மில்லும் பூட்டிக் கனநேரமாயிருக்கும் .. என்ன செய்யிறாரோ தெரியாது. ஒருக்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உந்தச் சைக்கிளை எடுத்துக்கொண்டு போய்ப் பாத்துக்கொண்டு வாருங்கோவன்.

*சிவ* : பிள்ளை உந்த ஒத்தாப்புக்கை சைக்கிள் நிக்குதடி மோனை.. ஒருக்கால் வெளியிலை எடுத்து முத்தத்திலை விடு. நான் பைலை எடுத்துவைச்சிட்டு சேட்டையும் போட்டுக்கொண்டு வாறன்.

*கய* : சரி மாமா.

*கன* : நிண்டு மினைக்கிடாதையுங்கோ..

*சிவ* : உந்த சேட்டை ஒருக்கா எடுத்து வாப்பா.

*கய* : (தூரத்தில்) மாமா! சைக்கிள் முன்சில்லுக் காத்துப்போய்க் கிடக்குது.

*சிவ* : ஓம் புள்ளை நான் மறந்துபோனன்.. ஒட்டவேணும் எண்டு நினைச்சனான் வேலை இருந்ததாலை அப்பிடியே விட்டிட்டன்.

*கன* : இந்த நேரம் எண்டு சைக்கிளும் இப்பிடியாய்ப் போச்சுது..

*சிவ* : உவன் அழகுவிட்டை ஒருக்காக் கேட்டுப் பாப்பம். .. நான் போட்டு வாறன் கனகம் படலையைத் தெண்டிப்போட்டு கயலோடை இருங்கள்.. நாங்கள் பாத்திட்டு வாறம்.

----- **காட்சி மாற்றம்** -----

## காட்சி - 2

*இடம் : அருணாசலம் வீடு.*

*பாத்திரங்கள் : கயல், கனகலட்சுமி, சிவலிங்கம், வள்ளிப்பிள்ளை*

*(நாய் குரைக்கும் சத்தம்)*

*கய* : மாமி ஏன் உந்தக் கண்ணன் குலைக்குது. படலேக்கையும் ஆரோ நிக்கினம் போலை கிடக்குது. அப்பாதான் வாறாரோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கன* : அவருக்கெண்டால் கண்ணன் ஏன்குலைக்குது.. உது ஆரேன் பிறத்தியாருக்குத்தான் உப்பிடிக்குலைக்கும். (யோசித்து) போய்ப்பாப்பமெண்டால்.. கொம்மானுமில்லாத நேரத்திலை. கும்மிருட்டு வேறை..

*கய* : ஓம் மாமி.. உந்த ரோச் எங்கை கிடக்குது...

*கன* : பிள்ளை .. உந்த ரேடியோக் கல்லிலை கிடக்குது.. ஒருக்கா எடுத்து வா ஆரெண்டு பாப்பம்.

*கய* : இந்தாங்கோ மாமி.

*கன* : நீ இருந்து கொள் . நான் பாத்துக்கொண்டு வாறன்.. படலை வேறை உள்ளுக்கை கொழுவி இருக்கு... உந்த லயிற்றை படலைக்கடி பிள்ளை. ஆரது.. நில்லுங்கோ வாறன். (போய்க் கொண்டு) வாறன் பொறுங்கோ.. கண்ணா.. கொஞ்சம் பொறு.. இஞ்சாலைவா.. (கதவு திறத்தல்).

*கய* : (தனக்குள்) அப்பா போலை தெரியேலை. ஆரோ நாலைஞ்சு பேராய்த் தெரியுது. மாமாவோ.. சீச்சீ அவராயும் தெரியேலை.. மாமிதான் தனிய வாறா... ஆ..அ.. மாமி ஆரது..

*கன* : (வந்துகொண்டு) (தழுதழுத்த குரலில்) அது வந்து கயல்.. எதுக்கும் வாறன் பொறு.

*கன* : (பயந்துகொண்டு) என்ன மாமி. சொல்லுங்கோ மாமி.. ஆரது.. என்னவாம். ..என்ன என்ன நடந்தது?

*கன* : அது வந்து.. வந்து.. கொப்பாவுக்கு ஏதோ சின்னக்காயமாம்.. ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயிருக்காம். அதுதான் சொல்ல

*கய* : (இடைமறித்து) ஐயோ.. காயமோ.. ஆஸ்பத்திரியிலையோ. (அழுதல்) அப்பா.. அப்பா.. அப்பாவுக்கென்ன மாமி..

*கன* : இப்ப என்னத்துக்குப்பிள்ளை அழுகிறாய்.. சின்னக்காயம்தானாம்.. அவளவு பிலனில்லையாம். ஆஸ்பத்திரியிலைதானாம் நிப்பாட்டியிருக்கு.. சுகமாயிருக்கிறாராம்.. அழாதை.. அழாதை..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வள்* : (வந்துகொண்டு) ஆரது.. ஏன்மச்சாள் கயல் அழுகிறாள்.

*கன* : அழாதை.. அழாதை பிள்ளை.. உந்தா அம்மாவும் வாறா..

*கய* : அம்மா.. அப்பாவுக்கு.. அப்பாவுக்கு காயமாம். அப்பா பெரியாஸ்பத்திரியிலையாம்.

*வள்* : (பதகளித்தபடி) என்ன மச்சாள்.. என்ன.. என்ன நடந்தது.. அவர் வரப்பிந்தேக்கையே நான் நினைச்சன்.. என்ன என்ன நடந்தது?

*கன* : அது வந்து .. சைக்கிள் என்னத்தோடையோ அடிபட்டு அவரை ஆஸ்பத்திரியிலை சேர்த்திருக்காம்..

*வள்* : (அழுது) ஐயோ.. அரசடிப் பிள்ளையாரே.. இதென்ன சோதனை.. என்ன மச்சாள் என்ன, எந்த ஆஸ்பத்திரி யிலை.. காயம் பிலனே.. கடவுளே..

*சிவ* : (வந்துகொண்டு) ஏன் இப்ப எல்லாரும் அழுது குழறுறியள்... சின்னக்காயம் எண்டுதானே பெடியள் சொன்னவங்கள். பிறகென்ன. ஆஸ்பத்திரியிலைதானே விட்டிருக்காம். அவங்கள் எல்லாம் வடிவாய் வைத்தியம் செய்வாங்கள்தானே.. சரி. சரி.. எல்லாரும் அழுது குழறினது காணும்.. ஆக வேண்டியதைப் பாருங்கோ.. நீ வா வள்ளிப்பிள்ளை.. உந்தச்சைக்கிளிலை ரெண்டு பேரும் ஆஸ்பத்திரிக்குப் போவம். இஞ்சேரும் நீரும் வீட்டைப் பூட்டிப்போட்டு அங்கை போய் பிள்ளையளோடை இரும்..

*கய* : நானும் வரட்டே மாமா.. அப்பாவுக்கு என்னவோ..

*சிவ* : (எரிச்சலுடன்) நீ ஒண்டு பிள்ளை .. இந்த நேரத்திலை... நேரம் காலம் தெரியாமல் கதைக்கிறாய்.. இந்த இரவிலை.. அதுவும் சைக்கிளிலை... எங்கை வர வெளிக்கிடுறாய். விடியவாற முதல் பஸ்ஸிலை மாமியையும் கூட்டிக்கொண்டு வாவன். நான் இப்ப கொம்மாவோடை போட்டு வாறன்.

*வள்* : அப்பாவின்ரை நீலக்கோடன் சாரத்தையும் துவாயையும் ஒரு பெற்சீற்றையும் எடுத்து உந்த கூடையுக்கை வைச்சுக் கொண்டா புள்ளை..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***கனக*** : கையோடை எங்கடை குசினியுக்கை கிழக்குப்பாட்டுக் குந்திலை சுடுதண்ணிப் போத்திலும் கிடக்குது. எடுத்து வா பிள்ளை..

***சிவலி*** : நிண்டு மினைக்கடாதபிள்ளை...

***கயல்*** : சரி மாமா.

**----- காட்சி மாற்றம் -----**

## காட்சி – 3

*இடம் : வள்ளிப்பிள்ளை வீடு.*

*பாத்திரங்கள் : கயல்விழி, வள்ளிப்பிள்ளை*

***வள்*** : அந்தாளும் தெய்வமாகி வரியமுமொண்டாகப்போகுது.. .. ஏதோ கூடப்பிறந்ததுகள் எண்டுதான் ஒருத்தரும் இல்லாட்டிலும் இரத்தத்திலை உள்ளது ஒண்டு இருந்ததாலை நாலு பேருக்கு தோல்வி தெரியாதபடி எல்லாம் நடந்து முடிஞ்சுது.. ம்.. (பெருமூச்சு) மூண்டு குமருகளோடை என்னை அந்தரிக்க விட்டிட்டுப் போட்டுது. என்ன செய்ய ..இப்பிடியே எங்கட காலமும் தேடுவாரில்லாமல் இழுபட்டுப்போகவேண்டியதுதான்.

***கய*** : என்னம்மா.. போன போன இடத்திலை சும்மாய் யோசிச்சுக் கொண்டு இருக்கிறியள். படைச்சவன் படியளக்காமலே விடப்போறான். உப்பிடி யோசிச்சுக் கொண்டிருந்து மூளையை எல்லோ விடப்போறியள். (உறுக்கி)ம் எழும்புங்கோ.. ஏதோ ஆகவேண்டியதைப் பாருங்கோ..

***வள்*** : அது சரி.. இப்பிடித்தன்னும் அண்ணையும் அவமச்சாளும் தங்கடை அலுவல்மாதிரி நிண்டு செய்வினமெண்டு ஆரோ நினைச்சமே, அது குடுத்து வைச்ச சீவன்.. கிடந்து அழுந்தாமல் மற்றவைக்குக் கரைச்சல் குடுக்காமல் போய்ச்சேர்ந்திட்டுது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கய* : அம்மா.. அப்பாவும் உப்பிடித்தான் சங்கக்கடையிலை வந்த சோட்டேஜ்ஜோடை.. தனிமையிலை யோசிச்சு யோசிச்சுத்தான் கடைசியிலை சைக்கிளிலை போய் அடிபட்டு ஆருமில்லாதவர் போலை ஆஸ்பத்திரியிலை கண்ணை மூடினவர். அதை நினைச் செண்டாலும் உந்த யோசனையைக் குறையுங்கோ.. யோசிச்சாப்போல ஏதும் நடந்திடுமே அம்மா..

*வள்* : என்னமோனை செய்யிறது.. நானும் நினைக்கிறனான்தான் .. மனசு கேக்குதில்லையே புள்ளை.. கொம்மானும் எந்தநாளும் எங்கடை குடும்பத்தைப் பாக்கிறதெண்டால் ஏலுமே.. ஏதோ கவுண்மேந்திலை வேலை செய்யிறதாலை இப்பிடியெண்டாலும் இடக்கண் வலக்கண் பாத்து சமாளிக்க முடியுது. இதுவும் எத்தினை நாளைக்கோ..

*கய* : ஓமம்மா.. உந்தச் சங்கக்கடையோடை மினக்கெட்டநேரம் அப்பா ஒரு பியோனாத்தன்னும் அரசாங்கத்திலை இருந்திருந்தால் இண்டைக்கு அவற்றை பென்சன் எண்டாலும் வரும்.

*வள்* : அதுதானே கோழிமேய்க்கிறதெண்டாலும் கோறணமேந்திலை மேய்க்க வேணுமெண்ணுறது. அதுக்குத் தலையிலை எழுதியும் எல்லோ இருக்கவேணும்.. எங்களுக்கும் தின்னக் குடிக்கப் பொசிப்பிருக்க வேணுமே..

*கய* : நடந்ததைக் கதைச்சு என்ன பிரயோசனம். எங்கடை விதி.. நாங்கள் குடுத்து வைச்சது அவளவுதானாக்கும்..

*வள்* : மாமாவைப் பார்.. அந்தாள் ஆருக்கு என்ன குறை வைச்சது.. எந்தக்கோயிலுக்கு என்ன தொண்டு செய்யேலை.. அல்லாட்டில் அவ மாமி.. மிரிச்ச இடத்துப் புல்லும் சாகாது.. அதுகளுக்கு கடவுள் குழந்தை விசயத்திலை ஓரவாங்கியம் செய்யேலையே.. இதுவும் அப்பிடித்தான்.

*கய* : தாரமும் குருவும் தலைவிதிப்படி எண்டு தெரியாமலே சொன்னது.. தலையிலை ஆராருக்கு என்னமாதிரி எண்டு பிரமன் எழுதின எழுத்தை அழிக்கேலுமே..?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வள்* : ம்.. ம்.. உதுகளை நினைச்சால் வயித்தைப் பத்தித்தான் எரியும் பிள்ளை.

*கய* : சரி.. சரி.. அதையே திருப்பித் திருப்பி நினைச்சுக் கொண்டிருக்கிறதை விட்டிட்டு நடக்கிறதைப் பாருங்கோ அம்மா..

*வள்* : பாத்தியே.. கதைச்சுக்கொண்டிருந்ததிலை மறந்து போனன். மாமி ஏதோ ஆட்டுக்குத் தண்ணிவாக்க வேணுமாம். உன்னை வரச்சொன்னவ

*கய* : ஓமம்மா.. பொழுதும் ஏறியிட்டுது.. அவையின்ரை பூச்சி ஆடும் குட்டி போட்டதெண்டு நேற்று பொழுதுபடேக்கை சொன்னவ. மாமாவும் வேலைக்குப் போட்டார். உந்த ஆலமரத்தில ரெண்டு கொப்புக் குழை வெட்டித் தூக்கிப் போட்டு அவவுக்கு தண்ணிவாக்க உதவிசெய்து போட்டு வாறன். பாவம், வாய்பேசாத பச்சை உடம்பு கிடந்து வாடும்.

----- காட்சி மாற்றம் -----

## காட்சி - 4

*இடம் : கனகலட்சுமி, வீடு.*

*பாத்திரங்கள் : கனகலட்சுமி, சிவலிங்கம், கணபதிப் பிள்ளை*

*கன* : இஞ்சாருங்கோ.. நான் ஒண்டு சொன்னாக் கேப்பியளே..

*சிவ* : (பகிடியாக) என்ன கனகலச்சுமி அம்மா.. இண்டைக்கு என்ன விசேசம்.. எண்டைக்குமில்லாதமாதிரி இண்டைக்கு மட்டும் இப்பிடி விசேசம். இந்த வீட்டிலை கனகலச்சுமி அம்மா நினைச்சு நடக்காத தென்ன இருக்குது... சரி.. கேட்ட விதத்தைப் பாத்தால் ஏதோ புளியங்கொம்பு போலைதான் கிடக்குது. சரி.. சரி.. சொல்லனப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கன* : இஞ்சையும் நாங்கள் இரண்டு பேரும்தான். குழந்தை குட்டியும் இல்லை.. அதுக்குத்தான் நாங்கள் குடுத்துவைக்கேலை...

*சிவ* : நீயும் தனிப்பிள்ளை.. நானும் தனிப்பிள்ளை எங்களுக்கும் பிள்ளையில்லை.. அது அவையவையின்ரை குடுப்பனவு .. இது ஊரே அறிஞ்ச கதை.. என்னப்பா திடீரென இண்டைக்கு விசேசமாய் உம்மடை கதை கிடக்கு.. ஏதேன் கனவு கினவு கண்டனீரோ.. அல்லது சம்பந்தரை மாதிரி ஏதேன் ஞானம் கீனம் கிடைச்சுதோ. உம்மடை கதை புதினமாய்க்கிடக்குது..

*கன* : அதப்பா.. வந்து...

*சிவ* : வந்தும் போயும்.. (கேலியாக) என்ன சோதனைக்குழாய்க் குழந்தைக்கு ஏற்பாடோ...

*கன* : (வெக்கத்துடன்) சும்மா போங்கோப்பா.

*சிவ* : வெளிநாட்டிலை 58 வயது தம்பதியளுக்கு சோதனைக்குழாய் குழந்தை பிறந்ததெல்லோ. அதுதான் நீயும் அதைப்பத்தி யோசிக்கிறாயாக்கும் எண்டு நினைச்சன்.

*கன* : அது வெளிநாட்டிலையப்பா.. அதுக்கு எத்தினை லச்சம் செலவாகுமெண்டு தெரியுமே...

*சிவ* : அப்ப என்னண்டு தான் பூடகம் போடாமல் சொல்லுமன். என்னை என்ன செய்யச்சொல்லுறீர்..

*கன* : (தயங்கி). இல்லை உவள் சின்னவள் கயலும் எங்களோடை நல்ல வாரப்பாடு.. தேப்பனில்லாததுகள். கூடப்பிறக்காட்டியும் எங்களுக்கு அதுகளைவிட்டால் ஆரும் இல்லை.. ஏன் அதுகளுக்கும் எங்களை விட்டால் ஆருமில்லை.. அவ வள்ளிப்பிள்ளை மச்சாளும் மூண்டு குமருகளோடையும் கஷ்டப்படுறா.. அதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சிவ* : அதுகளுக்கு இப்ப நான் என்ன குறைவைச்சன். தேப்பன் இல்லையெண்டு உணராமல் இருக்கவேணுமெண்டு என்ன செய்யேலை..

*கன* : அதை ஆர் இல்லையெண்டது.

*சிவ* : அப்ப

*கன* : உங்களுக்கும் பெஞ்சன் எடுக்க என்னும் என்ன ஒரு ஆறேழு வரியம் கிடக்குது.. இருந்திட்டு நானும் கண்ணை மூடிப்போட்டால் நீங்களும் ஆருமில்லாமல் அந்தரிச்சுப் போவியள்..

*சிவ* : என்னப்பா.. அப்பிடி ஒண்டும் நடவாது. சரி அப்பிடித்தான் உனக்கோ அல்லாட்டி எனக்கோ ஏதும் நடந்தால் மருமக்கள் விடப்போறாளவையே.. அல்லாட்டில் படைச்சவன்தான் விடப்போறானே..

*கன* : இல்லையப்பா.. உங்கடை பெஞ்சனும் எங்களுக்குப்பிறகு..

*சிவ* : இப்ப என்னத்துக்கு உதுகளை யோசிக்கிறீர்.. அந்தந்த நேரம் பாக்கலாம்தானே.

*கன* : (தயங்கி) இல்லை உவள் சின்னவள் கயல்விழியைத் தத்தெடுத்தமெண்டால் அவளின்ரை காலத்துக் கெண்டாலும் உங்கடை பெஞ்சன் அவளுக்குக் கிடைக்குமெல்லே.. அதுதான்..

*சிவ* : சீ.. என்ன கதை இது.. தேப்பனில்லையெண்டாப்போலை.. பெத்த தாய் உயிரோடை இருக்கேக்கை அவளைத் தாய் தேப்பனில்லாத பிள்ளை மாதிரி தத்தெடுக்கிற கதை.. மற்றவை என்ன சொல்லுவினம் எண்டு யோசிச்சுப்பாரும்.. ஏதோ இருக்குமட்டும் ஏலக்கூடியதை அதுகளுக்குச் செய்யிறது. நிலபுலத்தை வேணுமெண்டால் பாத்துச் செய்வம். அதை விட்டிட்டு தத்தெடுக்கிற கதை..

*கன* : காணி பூமியில்லையப்பா.. அது வேறை ஆருக்கு.. அதுகளுக்குத்தானே... உங்கடை பெஞ்சன் அதுகளுக்குக் கிடைக்க வேறை வழியில்லையேயப்பா..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கணபதிப்பிள்ளை வாத்தியார் வரல்)

*கண* : என்னது பெஞ்சன் கதை போகுது. என்ன கனகலிங்கம்.. ஆறேழு வரியமிருக்கேக்கையே பென்சன் பற்றிக் கதையோ..

*சிவ* : ஆர் வாத்தியாரே... வாங்கோ வாங்கோ... உப்பிடி இருங்கோ...

*கன* : (ரகசியமாய்) என்னஙகோ .. இதைப்பற்றி வாத்தியாரிட்டை ஒருக்காக் கேட்டுப் பாப்பமே.

*சிவ* : (எரிச்சலுடன்) அந்தாளிட்டைப்போய் இந்த நேரத்திலை உனக்கென்ன விசரே...

*கண* : என்ன இரண்டுபேரும் உங்களுக்கை புடுங்குப்படுறியள். என்ன நான் இசகு பிசகான நேரத்திலை வந்திட்டனோ...

*கன* : அப்பிடி ஒண்டுமில்லை வாத்தியார்.. அது வந்து...

*சிவ* : இல்லை மாஸ்ரர்.. கனகமென்னண்டால் என்ரை பென்சன் கடைசி காலத்திலை கிடைக்க வேணுமெண்டிறதுக்காக இவள் தங்கச்சியின்ரை சின்னவள் கயலைத் தத்தெடுக்கட்டாம். தேப்பனில்லையெண்டாப்போலை ஒரு அனாதைமாதிரித் தத்தெடுக்கிறது சரியோ... நீங்களே சொல்லுங்கோ வாத்தியார்..

*கன* : நானும்.. இன்னும் எத்தினை நாளைக்குத்தான். மனிசியாய் உலாவித்திரிஞ்சாலும் என்ரை உடல்நிலை எனக்கெல்லோ தெரியும்.. சலரோகம் பிறசர் அது இதண்டு.. (கேவி).. இருந்திட்டுக் கண்ணை மூடிப்போட்டால் உவரும் தனிச்சுப்போவார்...

*கண* : அடி சக்கை எண்டானாம்.. மாடு சாகேக்கை கண்டுக்குப் புல்லுத்தேடிவைச்ச கதையாய் எல்லோ கிடக்குது.. இதென்ன கதை... ஏன் மருமக்களைத் தத்தெடுக்காட்டி மாமனைப் பாக்காமல் விட்டிடுவாளவையே... நீ உதுகளுக்குப் போய் யோசிக்கிறியே கனகம்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கன* : அதைஇல்லையெண்டு சொல்லேலை... ஆனால் தத்தெடுத்த மெண்டால் எங்கடைகாலத்துக்குப்பிறகு உவற்றை பெஞ்சன் அதுகளுக்குக் கிடைச்ச மாதிரி இருக்குமெல்லே... அதுதான் பாத்தன்...

*கண* : ஓ..ஓ அதுவே சங்கதி.. இஞ்சைபார்.. கனகம் அப்பிடி யெண்டால் தத்தெடுத்துப் பிரயோசனமில்லை.. கலியாணம்தான் செய்யவேணும்..

*கன* : (குழைந்து)உங்களுக்கு எதிலையும் பகிடிதான் வாத்தியார்.. ஏதோ எனக்குத் தெரிஞ்ச மட்டிலை தத்தெடுத்தாக் கிடைக்குமெண்டு பாத்தன்... எனக்கு உந்தச் சட்டங்கள் எங்கை வாத்தியார் தெரியப்போகுது..

*சிவ* : இப்ப சரியே உனக்கு.. நானும் உதைத்தானே சொல்லுறன்.. சரி கதைச்சுக்கொண்டு நிண்டிட்டாய் .. வீட்டுக்குவந்த மாஸ்டருக்குத் தண்ணிவென்னியெண்டாலும் குடுக்கிற எண்ணமில்லையே...

*கன* : மறந்தே போனன்.. சரி..சரி.. கதைச்சுக்கொண்டிருங்கோ உடனை வந்திடுறன்..

*சிவ* : தெரியாமலே சொல்லுறது... பொம்பிளையளுக்கு கதைகண்ட இடம் கயிலாயமெண்டு.. (இருவரும் சிரித்தல்).

----- காட்சி மாற்றம் -----

## காட்சி - 5

*இடம்* : *கனகலட்சுமி வீடு.*

*பாத்திரங்கள்* : *கனகலட்சுமி, கயல்விழி*

*கய* : (பதட்டத்துடன்)என்ன மாமி.. என்ன நடந்தது. அவருக்கு இண்டைக்கு மாமா ரெலிபோனிலை சொல்லித்தான் தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கையெண்டாலும் நல்ல இடத்திலை காட்டினனீங்களே.. டொக்டர் என்ன சொன்னவர்..

**கன** : அப்பிடியொண்டுமில்லை மோனை... உந்த ஒட்டகப்புலத்திலைதான் பத்துப்போட்டது. அது பிலனில்லையாம். இதுக்குப் போய் நீ பதட்டப்பட்டு.... கயல் நீ இந்தக் குழந்தை வயித்தோடை கண்டபடி அலைஞ்சு திரியக் கூடாது. .. ஆ .. ஆ .. உப்புடி.. உதிலை இரு கயல். அவர் எப்பிடி இருக்கிறார்?

**கய** : அவர் நல்லாத்தான் இருக்கிறார் மாமி.. பின்னேரம் ரியூசன் முடிஞ்சு வரேக்கை இதாலை வாறனென்டு என்னை முன்னுக்குப் போகச் சொன்னவர். அது சரி எங்கை.. எப்பிடி.. மாமி விழுந்தனியள்.

**கன** : அண்டைக்கு சரியான வெயில் மோனை.. அந்தத் தொட்டியுக் கையும் தண்ணியில்லை.. கண்டுபோட்ட பெரிய வெள்ளைகொடிச் சிவாலிப் பசு தண்ணிவிடாயிலை தவிச்சு வந்துது.. நல்ல தண்ணிவிடாய்.. சின்னவாளிக்கை அள்ளி வைச்சன்.. ஒரு மிடறிலை குடிச்சு முடிஞ்சுது. பாவம் நல்ல தண்ணி விடாயிலை நிக்கு தெண்டிட்டு பெரிய வாளியிலை தண்ணியை அள்ளிப்போட்டுக் கொண்டுபோகேக்கை அந்த மூலேக்கை கிடந்ந பாசி வழுக்கிப்போட்டுது மோனை...

**கய** : நீங்கள் இந்த வயதுபோன நேரத்திலை... உதுகளுக்கு ஏன் வெளிக்கிடுறனியள். ஏன் தங்கச்சி நிண்டவள் தானே. ஒரு சொல்லுக் கூப்பிட்டிருக்கலாம்தானே மாமி..

**கன** : அப்ப கொஞ்சம் முந்தித்தான் அவள் உடுப்பும் கொண்டு உதாலை குளத்துக்குக் குளிக்கப் போனவள். அதுகுமில்லாமல் அந்தச் சரசுவதி தண்ணிக்கு நிண்டு தவிக்கேக்கை அடுத்தவையைக் கூப்பிட்டுக் கொண்டிருக்கேலுமே.

**கய** : வயது போன நேரத்திலை நீங்கள் கவனமாயிருக்கிறதை விட்டிட்டு ..ஏன் அந்தத் தொட்டியுக்கை அவள் தங்கச்சியிட்டைச் சொல்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமையே நிரப்புவிச்சிருக்கலாம்தானே..? இப்ப பாருங்கோ படுத்த படுக்கை..

**கன** : அவள் பிள்ளை விடிய நிரப்பித்தான் விட்டவள். இந்த வெக்கைக்கு .. எங்கட மாடுகள் மட்டுமில்லை.. எல்லாற்றையும்தான் வந்து குடிச்சுப் போட்டு போகுதுகள். ஆற்றையெண்டாலும் தண்ணிவிடாயிலை வாற வாய்பேசாப் பிறவியளைக் கலைச்சு விடேலுமே..

**கய** : சரி நடந்தது நடந்து முடிச்சிட்டுது. அதை விடுங்கோ மாமி.. சும்மா உந்த தமிழ் வைத்தியத்தை நம்பாமல் நல்ல டாக்குத்தராய்க் காட்டவேணும். போதாக்குறைக்கு சலரோகமும்வேறை இருக்கு. கவனமாய் இருங்கோ மாமி.. வாறமாதம் லீவு விட சின்னத் தங்கச்சியும் ஹொஸ்டலிலை இருந்து வந்திடுவாள்தானே.. நானும் ஏதோ நேரம் கிடைக்கேக்கை இடைக்கிடை வந்து போறன்..

**கன** : கயல். எனக்கொண்டும் பிலனில்லை எண்டுதானே ஒட்டகப் புலத்திலையும் சொன்னவை.. என்னை விட்டிட்டு உன்ரை உடம்பைப் பார். வீணாய் அலைஞ்சு திரியாதை.. ம்.. எங்கட பரம்பரைக்கே வரப்போற பேரப்பிள்ளைய எண்டாலும் கண்ணாலை கண்டிட்டுப் போனனெண்டால் அதுவே காணுமடி.. எனக்கேதும் நடந்தால்....

**கய** : அதுக்கேன் யோசிக்கிறியள் மாமி..நீங்கள் ஒண்டுக்கும் பயப்பிடாதையுங்கோ.. இதெல்லாம் கெதியா மாறியிடும்..

**கன** : எனக்கே நீ சொல்லுறாய் மோனை.. இது என்ரை அந்தியகாலத்துக்கு வந்த நசல் தான் பிள்ளை.. எனக்கு நல்லாய் விளங்குதடி மோனை.. என்னனண்டாலும் கிடந்தழுந்தாமல் மற்றவைக்கு கரைச்சல் குடுக்காமல் போனால் சரி.. (அழுது) எனக்கென்னண்டாலும் ஒண்டு நடந்தா அவர் மாமாதான் தனிச்சுப் போவார் மோனை.. கைவிட்டிடாதையுங்கோ.. உங்களைவிட்டால் அந்தாளுக்கு வேறை நிழலில்லையடி மோனை.. (அழுது) அவரை நினைச்சால் இந்தக்கட்டை செத்தாலும் வேகாதடி புள்ளை..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கய* : மாமி.. திரும்பத் திரும்ப ஏன் அதையே நினைச்சுக் கவலைப் படுறியள்.. வாற தைக்கு அவருக்கு ரான்ஸ்பறையும் எடுத்துக் கொண்டு இஞ்சைவந்த மெண்டால்.. பிறகென்ன.. உங்கடை பேரப்பிள்ளை உங்களோடைதானே.. இருந்து பாருங்கோ மாமி..

*கன* : கேக்கச் சந்தோசமாய்த்தான் இருக்குது, ஆனால் இந்தப்பாவி குடுத்துவைச்சிருக்க வேணுமல்லோ..

*கய* : மாமி மனசைத் தளரவிடாதையுங்கோ.. மனசு நிம்மதியாய் பலமாய் இருந்தாத்தான் வருத்தம் கெதியிலை மாறும் . அதை நினைவிலை வைச்சிருங்கோ மாமி..

*கன* : எப்பிடி எண்டாலும் நெஞ்சிலை கிடக்கிறதைச் சொல்லத்தானே வேணும் பிள்ளை.. அதுதானடி மனதுக்கும் நிம்மதி...

*கய* : அதுவும் ஒருவிதத்திலை சரிதான் மாமி...

----- காட்சி மாற்றம் -----

## காட்சி – 6

*இடம்* : *கனகலட்சுமி வீடு.*

*பாத்திரங்கள்* : *கணபதிப்பிள்ளை, சிவலிங்கம்.*

*கண* : என்ன சிவலிங்கம். யோசனை கூடப்போலை ..

*சிவ* : என்னத்தை மாஸ்ரர் சொல்ல.. நான் ஏதோ வழுக்கி விழுந்தது தானே எண்டு தமிழ்வைத்தியம் செய்விச்சன். ஆனால் அது உள்முறிவிருந்து ஏற்பாக்கி ஆளையே கொண்டுபோகுமெண்டு கனவிலையும் நினைச்சுப் பாக்கேலை மாஸ்ரர்..

*கண* : அந்தநேரமே பெரியாஸ்பத்திரியிலை காட்டி எக்ஸ்றே எடுத்திருந்தால் ஏதேனும் ஒழுங்கான வைத்தியத்தைச் செய்திருக்கலாம்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சிவ* : ஓம் .. உவள் பிள்ளை கயல்விழியும் எத்தனைதரம் சொன்னவள்.. அவ கேட்டாதானே..

*கண* : கனகம் கேட்டது கேக்கேலை ஒருபக்கம் வையுங்கோ.. அவ கடைசியிலை ஏலாதெண்டு புரிஞ்சவுடனை.. கடைசியிலை சம்மதிச்சவதானே..

*சிவ* : ஓம் மாஸ்ரர்.. நாங்கள் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகேக்கை அந்த நேஸ்மார் 'புக்கையே கட்டினனியள் ஏன் மோதகம் வடை கிடைக்கேலையே' எண்டு ஏளனம் செய்து.. டயபற்றிஸ் பேசன்ற் கவனமாயிருக்க வேண்டாம் எண்டு பேசிப்போட்டு எல்லாம் முத்திக் கடைசிநேரத்திலைதான் கொண்டாங்கோ எண்டு சீறி விழேக்கையே நான் விட்ட பிழையை உணர்ந்திட்டன்.

*கண* : ஏதோ கிடந்து அழுந்தாமல் ஒருத்தருக்கும் ஒரு சோலியும் வைக்காமல், மற்றவையிட்டை கடமைப்படாமல் போய்ச்சேர்ந்திட்டா. புண்ணியம் செய்த சீவன்.

*சிவ* : (அழுது) ம்.. அவள் புண்ணியவதி.. எனக்கு முந்தி போய்ச் சேர்ந்திட்டா.

*கண* : இஞ்சை சிவலிங்கம் .. நீர் ஆம்பிளை எண்டதை மறந்திட்டீர் போலை. இனி என்ன போறவையோடை மற்றவையும் கூடப்போறதே.

*சிவ* : மாஸ்ரர்.. என்ன சொல்லியும் என்ரை மனம் ஆறுதில்லையே..

*கண* : ஏதோ விதியெண்டு ஒண்டு இருக்குதே.. அதை ஆராலை மாத்தமுடியும். ஆ.. இஞ்சை தம்பியும் வாறார் போல.. தம்பி தனியவே வந்தனீர்.

*சிவ* : அங்கை கயலும் குழந்தையோடை வாறாள் மாஸ்ரர்.. வாங்கோ பிள்ளையள்.. உதிலை இருங்கோ..

----- காட்சி மாற்றம் -----

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி – 7

*இடம் : வள்ளிப்பிள்ளை வீடு.*

*பாத்திரங்கள் : கணபதிப்பிள்ளை, சிவலிங்கம். வள்ளிப்பிள்ளை*

***வள்*** : அண்ணை.. காசிருந்தால் ஒரு நூறு ரூபா தாறியேயண்ணை. நாலு கயித்து வளையம் வாங்கவேணும். மாட்டுக்காரர் திங்கக் கிழமை மாடு கொண்டு வாறதெண்டெல்லே சொன்னவங்கள்.

***சிவ*** : ஓம் நானும் அதை மறந்துபோனேன். எனக்கும் ஒரு ரெண்டு மூண்டு வளையம் கையோடை வாங்கி வா. .. வாங்கேக்கை நல்ல முறுக்காய்ப் பார்த்து வாங்கு.. பிறகு நாலு நாளிலை பிரிகுலைச்சுப்போட்டு அறுத்தெறிஞ்சு போட்டு நிக்குங்கள்.

***வள்*** : ஓ.. வயலுகள் வெட்டினாலும் சூடுகள் மிரிக்கும் மட்டும் கொஞ்சம் கவனமாய்த்தான் இருக்கவேணும்.

***சிவ*** : நான் சிலவேளை திங்கக்கிழமை வேலையாலை வரப் பிந்தினாலும் அப்பிடி மாடுகள் வந்துதெண்டால் உந்த பின்வளவுக்கை தென்னங்கண்டுகளிலை கட்டிப்போட்டு வைக்கலைப்போட்டுவிடு... வெளிப்பக்கம் கொண்டு வெளிக்கிடாதை. படலையை வடிவாய்க் கட்டிவிட்டாயெண்டால் கரைச்சலில்லை.

***வள்*** : ஓமண்ணை.. நான் நிக்கிறன்தானே.. பிறகென்ன.

***சிவ*** : உந்த ஆட்டுக் கோடியிலை ரெண்டு சின்னக்கயிறு வளையமாடி வைச்சனான். ஒருக்கா எடுத்துத் தாறியே.. சும்மாயிருக்கேக்கை கண்ணியெண்டாலும் திரிச்சு வைப்பம். கண்ணியில்லாட்டில் பிறகு ரெண்டு நாளிலை பிரிகுலைச்சுப்போட்டு நிக்குங்கள்.

***வள்*** : அதுதானண்ணை... கொஞ்சம் பொறுங்கோ எடுத்துத் தாறன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கண* : (வந்து கொண்டு) என்ன சிவலிங்கத்தார்.. கண்ணி திரிக்க ஆயத்தம் நடக்குது போலை.. எருமாடு எந்தளவிலை வருகுது.

*வள்* : ஓம் வாத்தியார் ..நாளை நாளையிண்டைக்கு மட்டிலை கொண்டு வாறமெண்டவங்கள்..

*சிவ* : இப்ப கொண்டந்தால் வரம்புப்புல்லை மேய்ஞ்சு கொஞ்சம் தெளிஞ்சிடுங்கள் எல்லே. அதுதான் கொஞ்சம் வேளைக்குக் கொண்டரச்சொன்னன். இனி கொண்டந்தாப் பிறகெல்லோ..

*கண* : உமக்கு இப்பவும் இந்த ஆடு மாட்டுப் பைத்தியம் விட்டுப் போகேல்லை என்ன..?

*சிவ* : ஓ.. எனக்கென்ன.. பிள்ளையோ குட்டியோ.. ஏதோ இதுகளோடைஎண்டாலும் பொழுது போகுது வாத்தியார்..

*வள்* : நீங்கள் கதைச்சுக்கொண்டிருங்கோ வாத்தியார்.. நான் தேத்தண்ணி ஊத்திக்கொண்டு வாறன்.

*சிவ* : ஓம் எனக்கு சீனி போடாமல் கொண்டு வா..

*கண* : இஞ்சேரும் சிவலிங்கம்..நீர் அடிக்கடி இடக்கண் வலக்கண் அதுகளின்ரை குறைநிறையளைப் பாக்கிறதாலை ரெண்டு குமர்ப்பிள்ளையளோடும் ஒருமாதிரிக் காலம் தள்ளிக்கொண்டு போகுதுகள். உம்மட காலத்துக்குப் பிறகுதான் கஷ்டப்படப் போகுதுகள்.

*சிவ* : எனக்கும் அதுதான் யோசினை.. ஏதோ இப்ப சம்பளம் வாறதாலை ஒருமாதிரி சரிக்கட்டிறம். நானுமில்லாக் காலத்திலை என்ன செய்யப் போறாளோ தெரியாது. சரி பிள்ளையளிலை ஒருத்திக்குத்தன்னும் எங்கையேன் செய்துவைக்கலாம் எண்டால் நல்லாய் ஒரு இடமும் அமையுதில்லை.. பிறகு வாறவங்கள் சுடுதண்ணி எண்டால் தாயும் தவிச்சுப் போவாளெல்லோ .. எல்லாத்தையும் யோசிக்கத்தானே வேணும்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கண** : ஓம்.. இப்பத்தையப் பெடியளையும் நம்பேலாது. ஆனால் மருமோன்காரன் ..அதுதான் கயலின்ரை புருஷன் பாப்பா னென்டுதான் நினைக்கிறன். அவன் சோலி சுறட்டில்லாத தானும் தன்ரைபாடுமெண்டு இருக்கிற தங்கமான பிள்ளை..

**சிவ** : என்ள மாஸ்ரர் செய்ய .. அவளும் சின்னவயசிலை கலியாணத்தைச்செய்து.. புருஷனையும் பறிகுடுத்திட்டு பிள்ளையளோடை படுற கஷ்டத்தைப்பாக்க கண்றாவிதான். வெறுங்கை முழமிடுமே.. நானும் ஏதோ என்னாலை இயண்டதைத்தானே செய்யலாம். இந்த நிலையிலை எனக்கேதாகுதுமொண்டு நடந்தால், அதுகளின்ரை நிலைமை என்னண்டமையுமோ எண்டு தான் யோசிக்கிறன்.

**கண** : ஓம்.. ஓம் மனிசன் சமாசாரம் மண்சட்டி பாத்திரம் போலையெல்லோ..

**சிவ** : சத்தியமாய் மாஸ்ரர்.. எனக்கு நித்திரைக்குப்போனாலும் உதுதான் நினைப்பு... என்ன செய்யிறது... சிலபேரை உந்தக் கார்ட் அட்டாக் ஒருதரத்தோடை கொண்டுபோகும். நான் முதல்தரம் தப்பிப் பிழைச்சுட்டன்.

**கண** : அதால.. அதாலைதான் நான் இப்ப உம்மோடை கொஞ்சம் கதைப்பமெண்டு வந்தனான்.

**சிவ** : அதுதானே மாஸ்ரர் அடுத்த அட்டாக் வரக்கிடையிலை என்னட்டைக் கிடந்தது எல்லாத்தையும் எழுதிக் குடுத்திட்டன். இதைவிட வேறை என்னத்தை என்னாலை செய்யமுடியும்.

**கண** : நீரும் இப்ப உத்தியோகத்திலை சேர்ந்து ஒரு இருபத்தெட்டு முப்பது வருசம் இருக்குமெண்டு நினைக்கிறன். றிட்டயர் பண்ணினால் மாசாமாசம் ஒரு முப்பது முப்பந்தைஞ்சு மட்டிலை வராதே..

**சிவ** : ஆர் அதை இல்லையெண்டது. .. இனி பென்சனெடுக்கேக்கை கொம்முயுற்றேற்றட் அது இது எண்டும் வரும். அதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துத்தான் உவள் நடுவிலாளின்ரை விசயத்தைப் பாப்பமெண்டு நினைக்கிறன்..

*கண* : அப்ப அதுக்காக இப்பவே றிட்டயர் பண்ணுற நோக்கமோ.

*சிவ* : வேறை என்ன மாஸ்ரர் செய்யலாம். பிறகு ஏதேன் ஒண்டு எனக்கு திடீரெண்டு நடந்தால் கிடைக்கிறதும் இல்லாமல் போயிடும். .. அதுகளும் நடுத்தெருவிலதான்..

*கண* : ஏன் சிவலிங்கம். உமக்கு என்னண்டாலும் ஒண்டு நடந்தாப்பிறகும் உம்முடைய தங்கச்சி தொடர்ந்தும் பெஞ்சன் எடுக்கக்கூடிய ஒழுங்கு செய்து தந்தால்...?

*சிவ* : அப்பிடி ஒரு வழி இருந்தால் உண்மையிலேயே நான் சந்தோசப்படுவன்... குறைஞ்சது அவள் ஒரு பத்து பன்னிரண்டு வரியமெண்டாலும் என்ரை பென்சனை எடுப்பள்..

*கண* : வழி இல்லாமலே.. நீர் ஒரு சின்ன வேலை செய்தால் சட்டப்படி வள்ளிப்பிள்ளை உம்மடை பென்சனை எடுக்கலாம்.

*சிவ* : என்ன விடுகதை போடுறியள் போலை கிடக்கு. என்னண்டு விபரமாய் சொல்லுங்கோவன்.

*கண* : குறைஞ்சது இன்னும் ஆறுமாதம் எண்டாலும் நீர் வேலை செய்ய வேணும்.

*சிவ* : அவள் தங்கச்சிக்கு பென்சன் கிடைக்குமெண்டால் ஆறுமாதமென்ன ஆறு வருசமெண்டாலும் நான் வேலை செய்வன். ஆனால் கண்டறியாத இந்த மாரடைப்பு வராமலிருந்தால் சரி...

*கண* : இன்னும் ஒரு சின்ன வேலை.. ஆனால் இது சட்டத்துக்கு மிக முக்கியமானது.

*சிவ* : என்னண்டுதான் சொல்லுங்கோவன் ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கண* : ஒரு கையெழுத்து. ஓம் உம்மட ஒண்டுவிட்ட தங்கச்சி வள்ளிப் பிள்ளையோடை ஒரு திருமண ஒப்பந்தத்திலை ஒரு கையெழுத்து.

*சிவ* : (ஆச்சரியத்துடன்) மாஸ்ரர்.. என்ன விளையாடுறியளே..

*கண* : என்ன .. விளையாட்டோவெண்டு ஏங்கிப்போனீர் போலை

*சிவ* : என்ன மாஸ்ரர் நீங்களே உப்பிடியெண்டால்?

*கண* : ஏன் .. ஏன்... இதிலை என்ன பிழை எண்டு கேக்கிறன்.

*சிவ* : (கோபத்துடன்) என்ன பிழையோ..

*கண* : எதுக்கும் அவசரப்படாமல் யோசிச்சுப் பாரும் .. எத்தினை பேர் கலியாணம் எழுதாமலேயே குடும்பம் நடத்தி பிள்ளை குட்டி பெத்து பிறகு பதியினம். சிலதுகள் கலியாணத்தை எழுதி தாலிகட்டிப்போட்டு நெடுக நாயும் பூனையும் மாதிரி சீவிக்குதுகள். சிலதுகள் கண்ட இடத்திலை மிதிச்ச சேறுமாதிரி எல்லாம் முடியவிட்டு கால் கழுவினமாதிரி கைவிட்டிட்டுப் போகுதுகள். அதைமாதிரித்தான் இதுவும் ஒரு ரகம்.. இதிலை என்ன பிழை?

*சிவ* : நீர் வள்ளிப்பிள்ளையை கலியாணம் எழுதிச் செய்யிற தெண்டாப்போலை உங்களை ஒண்டாய் புருசன் பெண்சாதியாய் குடும்பம் நடாத்தி ஒண்டாய் இருங்கோ எண்டே சொல்லுறன். ஒரு பேப்பரிலை அதுதான் கலியாணப் பத்திரத்திலை ஒரு கையெழுத்து.. அவளவு தான். மற்றப்படி நீங்கள் இப்ப இருக்கிற மாதிரியே இருக்கலாம். அதுக்காக உங்கடை உறவுமுறையளை மாத்தவேணுமெண்டில்லை. இருவருக்கும் வாழ்க்கைத் துணை இறந்தபடியால் சட்டப்படி மறுமணம் செய்வதற்கு சட்டத்தில் இடமுண்டு. நீங்கள் கையெழுத்து வைச்ச உடனை சட்டப்படி இருவரும் தம்பதியர். அவளவுதான். அதுக்காக எந்தக் கட்டத்திலும் உங்கடை வாழ்க்கைபற்றியோ உறவுமுறை பற்றியோ கேட்க சட்டத்திலை இடமில்லை.

*சிவ* : அது சரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கண* : என்ன சரியும் பிழையும். நீர் ஒமெண்டு சொன்னாக் காணும். பிறகு எல்லாத்தையும் முடிச்சுப்போட்டு மறீச்சேட்டிபிக்கற்றையும் கனகத்தின்ரை டெத்சேட்டிபிக் கற்றையும் ஒவீசிலை குடுத்தால் முதல் மனைவி இறந்ததாலை சட்டப்படி சேரவேண்டிய ஒவ்வொரு உரிமையும் சலுகையும் இரண்டாவது மனைவிக்குக் கிடைக்கும். கொம்முயுற்றேற்றட், பென்சன், வாறண்ட்.. அது இது மற்றதுகள் எல்லாம்..

*சிவ* : அது தெரியும் மாஸ்ரர்..

*கண* : அப்ப பிறகென்ன. நல்ல நாள் ஒண்டைப் பாத்து பதிவை முடிக்க வேண்டியதுதான். உங்கள் ரெண்டு பேற்றை கையெழுத்து ..மற்றது சாட்சிக்கு ரெண்டு பேர் தேவை.. அவளவுதான். அது நான் ஒண்டு... மற்றது இளையப்பாவிதானை வைக்கலாம் பிறகென்ன.

*சிவ* : நீங்கள் ஒண்டு மாஸ்ரர்... வசதியளைச் சொல்லி நீங்கள் நினைச்சதை முடிக்கிறதிலைதான் நிக்கிறியள். ஊருலகம் என்ன சொல்லும்.

*கண* : ஊருலகமோ.. கண்டறியாத ஊரும் உலகமும். நாங்கள் பட்டினி கிடந்தாக்கூட எட்டிப்பாக்காத சமூகம். பட்டினி கிடந்து செத்தாப்பிறகு அஞ்சலி நோட்டீஸ் அடிக்கிற சமூகம். மானம் காக்க கிழிஞ்ச உடுப்பை தைச்சு உடுத்தியிருக்க எத்தினை இடத்திலை பொத்தல் விழுந்திருக்கெண்டு எண்ணி ஏளனம் செய்யிற சமூகம். ஆற்றையேன் கையெழுத்தை வைச்சு கள்ளஉறுதி முடிச்சு அடுத்தவற்றை சொத்தை அம்பாளிக்கிற சமூகம். நாங்கள் என்ன கள்ளக்கையெழுத்தே வைக்கிறம் சமூகத்துக்கு பயப்பிட.. ம்.. நீர் இப்ப உதுகளைப் பற்றியே கவலைப்படுறீர்.. பயப்பிடுறீர்..

*சிவ* : உது நடக்கக்கூடிய அலுவலே மாஸ்ரர்.

*கண* : (சற்று கோபத்துடன்) ஏன் நடக்காது எண்டு சொல்லுறீர். நானென்ன மற்றவன்ரை பெண்சாதியைத் தூக்கிக் கொண்டு வா எண்டே சொல்லுறன். சட்ட பூர்வமான ஒரு உரிமையைத்தானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடுக்கச் சொல்லுறன். (கோபத்துடன்) சட்டத்துக்குத்தான் நீங்கள் கணவன் மனைவி. ஆனால் மற்றும்படி நீங்கள் ஒண்டுவிட்ட அண்ணன் தங்கை எண்டதை நான் மறுக்கேலை. ஒ..

*சிவ* : நான் அவள் வள்ளிப்பிள்ளைக்கு பென்சன் கிடைக்க வழி கேட்க நீங்கள் இப்பிடிச் சொன்னால்..??

*கண* : இப்ப இப்பிடித்தான் சொல்லுவீர். நல்லாய் யோசிச்சு முடிவைச் சொல்லும். ஊர் ஞாயத்தை மட்டுமில்லை உம்மட தங்கச்சியின்ரை.. தகப்பனை இழந்து எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கி நிக்கிற வாழவேண்டிய .. வாழத் துடிக்கிற ரெண்டு குமர்ப்பிள்ளையளின்ரை எதிர்காலத்தையும் யோசிச்சு முடிவைச் சொல்லும். முடிவை நல்ல முடிவாய்ச் சொல்லும். அப்ப ஆக வேண்டியதை நான் செய்துதாறன்.

----- காட்சி மாற்றம் -----

## காட்சி - 8

*இடம் : வள்ளிப்பிள்ளை வீடு.*

*பாத்திரங்கள் : கணபதிப்பிள்ளை, வள்ளிப் பிள்ளை*

*கண* : என்ன வள்ளிப்பிள்ளை நடையிலை. துலைப்பயணம் போலை. ..

*வள்* : ஓம் வாத்தியார். இண்டைக்கு பென்சனெல்லே ..அதுதான் பாங்குக்குப் போறன்.

*கண* : வேறை... எப்பிடிப்பிள்ளை உன்ரை பாடுகள் போகுது.

*வள்* : ஆண்டவனே எண்டு .. எனக்கு இண்டைக்கு என்ன குறை.. இருட்டும் நிலவும் மாறி மாறிவரும் எண்டதை என்ரை அனுபவத்திலை கண்டிட்டன். நான் அனுபவிக்காத கஷ்டமே.. இப்ப ஏதோ அவர் அண்ணையின்ரை புண்ணியத்திலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையளையும் ஒவ்வொரு கரையிலை விட்டாச்சு. அதுகளும் ஏதோ இருக்குதுகள்.

*கண* : இப்ப இருப்பு எங்கை மூத்தவளோடைதானோ..?

*வள்* : இப்பவும் மூத்தவளோடைதான் வாத்தியார் இருக்கிறன். அண்ணையின்ரை வீடும் அவளுக்குத்தானே எழுதிக் குடுத்தது. அவளவை என்னோடை வா உன்னோடை வா எண்டு ஆளாளுக்குள்ள அடிபுடி.

*கண* : (ஏளனமாக) ஓ.. எப்பிடியோ பென்சன் வருகுதெண்டு தெரியும்தானே..

*வள்* : அதை இல்லை எண்டு சொல்லுறனே வாத்தியார். அண்ணை இருக்கேக்கையும் தங்கச்சி பிள்ளையள் எண்டுதான் மாரடிச்சவர். ..அவர் செத்துத் தெய்வமாகியும் அவற்றை பணமும் சொத்தும்தான் என்னையும் என்ரை பிள்ளையளின்ரை குடும்பத்தையும் வாழவைக்கிது. இல்லாட்டி இந்த வயதுபோன நேரத்திலை எந்த வயோதிபமடமோ.. அல்லாட்டி அனாதைமடமோ (அழுது) அல்லாட்டி தெருத்தெருவாய் கைநீட்டி அலையுறதோ.. வாத்தியார் எத்தினையோ கடவுளுகள் இருக்கலாம்.. ஆனால் என்னைப்பொறுத்த மட்டிலை அவர்தான் என்ரை கண்ணாலை கண்ட... கண்கண்ட தெய்வம்.

*கண* : (சிரித்து) எல்லாரும் கணவனே கண்கண்ட தெய்வம் எண்ணுவினம். நீயும் அண்ணை எண்டாலும் அவரும் சட்டத்தின் பிரகாரம் கணவன் எண்டதாலை உப்புடிச் சொல்லுறாய் போலை..

*வள்* : உங்களுக்கு எதிலையும் பகிடிதான் வாத்தியார். என்ரை வாழ்க்கைக்கு புருஷனெண்டு அமைஞ்சவர் எங்கடை பரம்பரையைத் தழைக்கச் செய்தார்.. ஆனால் அண்ணையின்ரை உழைப்பும் பணமும் சொத்து சுகமும் தான்... எங்கடை முன்னேற்றத்திலை ஒவ்வொரு மூலை முடுக்கிலையும் சுவறியிருக்குது. அதை இல்லையெண்டு சொல்லேலுமே.. அதுக்கு சட்டத்தில இப்பிடியொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியுமிருக்குதெண்டு .. எங்கடை புது வாழ்க்கையை சட்டத்தின் மூலம் திறந்துவிட்ட உங்களை மறக்கேலுமே வாத்தியார்.

***கண*** : அப்ப நான் ஒழுங்கு பண்ணின உன்ரை ரெண்டாம்கலியாணம் சட்டத்தின் மூலம் உங்கடை குடும்பத்தின்ரை சந்தோசமான வாழ்க்கைக்கு வழிசமைத்த ஒரு சட்டத்தின் திறப்புவிழா எண்டு சொல்லு.

***வள்*** : ஓமெண்டு சொல்லுங்கோவன். (இருவரும் சிரித்தல்)

**----- காட்சி நிறைவு -----**

**--- முற்றும் ---**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. காயாத வடுக்கள்

## பாத்திரங்கள்

- உதயன்
- நாதன் : உதயனின் நண்பன்
- பத்மா : உதயனின் காதலி
- கந்தசாமி : பத்மாவின் தமையன்
- பொன்னம்மா : பத்மாவின் தாய்
- பார்வதி : உதயனின் தாய்
- உஷா : உதயனின் மனைவி

## காட்சி - 1

*பாத்திரங்கள் : உதயன், நாதன்*

*இடம் : தேநீர்க்கடை*

*உத* : மச்சான் நாதன்.. ஏஜென்சிக்கு குடுக்கிறதுக்கு குறைஞ்ச காசு ஒருமாதிரிக் கிடைச்சுட்டுதடா.

*நாத* : என்ன உதயன் நேற்று பின்னேரம்தான் ஏதோ 50, 60 குறையுது எண்டாய். அதுக்கிடையிலை எங்காலையடா.. சுரண்டல் லொத்தர் ரிக்கற் ஏதும் விழுந்ததே.

*உத* : நான் என்ன அந்தளவு அதிர்ஷ்டசாலியே மச்சான். அப்பிடி அதிர்ஷ்டமிருந்திருந்தால் இங்கை இலங்கையிலேயே இருந்து உழைச்சு இருப்பனே. இப்ப எல்லாரையும் விட்டுப்பிரிஞ்சு போக வேண்டிவருமே..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நாத* : அதெண்டால் உண்மைதான்.. அதுசரி காசு எங்காலை கிடைச்சதெண்டு சொல்லன்.

*உத* : உனக்குச் சொல்லாமலே.. அது எங்கட பாங்கிலை வேலை செய்யிற பிள்ளை ஒண்டு மாறித்தாறதெண்டது.

*நாத* : (கேலியாக) என்ன மச்சான் இது அட்வான்சோ..? அல்லாட்டி முழுப்பணமுமே முற்பணமாய்க் கிடைச்சிட்டுதோ..?

*உத* : உனக்கு எல்லாத்திலையும் பகிடிதான். கடனடா.. கடனுக்கடா வாங்கினது.

*நாத* : ஏதோ சொல்லிச் சமாளி. கேட்டஉடனை தாறதெண்டால் அப்பிடித் தானடா ஆரும் நினைக்க வேண்டிவரும்.. நான்மட்டுமில்லை ஆர் எண்டாலும் அப்பிடித்தானடா சொல்லுவினம். இப்ப வாங்கினது பிழைஎண்டு சொல்லவரேலை.. எண்டாலும்.. ஆள். ஆரடா

*உத* : சரி.. நீ எப்பிடி எடுக்கவேணுமோ.. அப்பிடி எடுத்துக்கொள் இப்ப சரிதானே. சுவிசிலை இருந்து நான் காசனுப்ப நீதானே கொண்டு போய்க்குடுக்க வேணும். கவலைப்படாதை. போகமுந்தி இன்ரடியூஸ் பண்ணிவிடுறன். ஓ.. கே

----- காட்சி மாற்றம் -----

## காட்சி – 2

*பாத்திரங்கள் : உதயன், பத்மா*
*இடம் : தேநீர்க்கடை*

*உத* : என்ன பத்மா.. இப்பிடி முகத்தை உம்மெண்டு வைச்சுக் கொண்டிருந்தால் நான் மட்டும் சந்தோசமாய் சுவிசுக்குப் போறன் எண்டு நினைக்கிறீரோ.. எனக்கும் உம்மை விட்டுப் பிரிஞ்சு போறது கஸ்டமாய்த்தான் இருக்குது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பத்* : உதயன்.. (சிணுங்கிக்கொண்டு)

*உத* : பல்லைக் கடிச்சுக்கொண்டு இருந்தால் இரண்டு வருசம் ரெண்டு நாள் மாதிரிப் போயிடும். பிறகென்ன..

*பத்* : ரெண்டு நாளாய் பறந்திடும் எண்ணுவியள். ரெண்டு யுகமாகிவிடும் எண்டதை மறந்திட்டியள். ஒவ்வொரு நாளையும் நான் எண்ணி எண்ணி பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்க வேண்டியதுதான் மிஞ்சுறதோ தெரியாது..

*உத* : பத்மா ஏன் அப்பிடிச் சொல்லுறீர்..

*பத்* : வேறை என்ன.. நாங்கள் ஒருத்தரை ஒருத்தர் காதலிக்கத் தொடங்கியே இப்ப மூண்டு வருசமாகிது..

*உத* : கள்ளி.. மூண்டு வருசமோ.. நான் உம்மைக் காதலிக்கத் தொடங்கி நாலு வருசம் தாண்டியிட்டுது. மறந்திடாதையும்.

*பத்மா* : அதாலைதான் யோசிக்கிறன் உதயன்.

*உத* : ஏன் பத்மா..

*பத்மா* : இந்த நாலு வருசமும் உங்கடை அம்மாவிட்டைச் சொல்லுற தைரியம் உங்களுக்கு வரேலை..

*உத* : வீட்டு நிலைமை அப்பிடி.. நான் என்ன செய்யிறது. தங்கச்சியின்ரை கலியாணத்துக்குப் பட்ட கடன் அப்பிடியே இருக்குது.. அதைஎல்லாம் செற்றில் பண்ணியிட்டனெண்டால் பிறகு நோ புறப்ளம். அதுதான் இப்ப வெளிநாடு போறனே.. இஞ்சை இருந்தால் பட்டகடன் குடுத்து முடியக்கிடையிலை தலை பஞ்சுப் பெட்டியாகிவிடும்.

*பத்* : உதயன்.

*உத* : ஓம் பத்மா.. கடன் குடுத்திட்டால் பிறகு எந்தவிதமான தடையும் இராது. அம்மா மறுப்புச் சொல்லமாட்டா.. பிறகு உம்மடை கடனடைக்க என்னையே உம்மட்டை ஒப்படைக்க வேண்டியதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பத்* : நீங்கள் லேசாய்ச் சொல்லிப்போட்டியள்.. வெளிநாட்டுப் பணம் வந்தாப்பிறகு அம்மா மாறினா.. ஏன் உதயன் இப்பிடிச் செய்தால் என்ன..

*உத* : என்ன செய்வம் எண்டு சொல்லுமன்

*பத்* : இப்ப அம்மாவிட்டைச் சொல்லி அற்லீஸ்ற் றெஜிஸ்ரேசனைத் தன்னும் முடிச்சிட்டுப்போனியளெண்டால்..

*உத* : (ஆச்சரியத்துடன்) பத்மா.. இந்தநேரத்திலை இதை நான் அம்மாட்டை போய்ச் சொன்னா.. அவ பத்திரகாளியாய்த்தான் நிப்பா.. பூகம்பம்தான் வெடிக்கும். (குழைந்து)என்ன .. என்னை.. என்னிலை நம்பிக்கையில்லையே.. இஞ்சைபாரும் பத்மா பிறகு அம்மாவை வழிக்குக் கொண்டுவாறது என்ர பொறுப்பு. ஒண்டுக்கும் யோசியாதையும் பத்மா.

*பத்* : (அழுது)எனக்கென்னவோ பயமாய்க்கிடக்குது உதயன்.

*உத* : என்ன பத்மா அபசகுனம் மாதிரி.. எல்லா ஆம்பிளையளையும் ஒரேமாதிரி எடைபோடாதையும்.. அம்மா சம்மதிச்சாலும் சம்மதிக்காட்டிலும்.. இந்த உதயன் பத்மாவுக்குத்தான். இதைப் படைச்ச பிரமனாலையும் மாத்தேலாது.

*பத்* : (அழுது)ம்.ம்.ம். நரம்பில்லாத நாக்காலை எதுவும் சொல்லுறது லேசு. ஆனால் அதைச் செய்யேக்கை எவளவு கஸ்டம்.. எவளவு பிரச்சனை..எண்டு பேஸ் பண்ணேக்கைதான் தெரியும்

*உத* : என்னாலை இந்த நிலைமையிலை வேறை என்ன செய்யமுடியும் பத்மா. சொல்லும் பாப்பம். இஞ்சை திரும்பும். கண்ணைத்துடையும். அங்கை பாரும்.. அந்த வெயிற்றர் எங்களைத்தான் பாக்கிறான். பத்மா.. பத்மா.. அழுறதை விட்டிட்டு நிமிர்ந்து பாரும்.

*பத்* : ம்..ம்..

*உத* : இனி ரெண்டுவருசத்துக்குப்பிறகுதானே சந்திக்கப்போறம்.. சந்தோசமாய் நாலுவார்த்தை கதைச்சுவிடுவம் எண்டில்லை. இப்பிடி அழுதுகொண்டிருந்தால். பத்மா..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பத்* : ம்..ம்.. சொல்லுங்கோ

*உத* : உப்பிடி அழுதுகொண்டிருந்தீர் எண்டால் உம்மடை அழுத முகம்தான் அங்கை என்ரை கண்ணிலை நிக்கும். நானும் கலங்கிக்கொண்டிருக்கத்தான் வேணும். இஞ்சையெண்டால் உமக்கென்ன.. அம்மா, அண்ணா சிநேகிதங்கள்.. அங்கை நான் தனிய.. புதுஇடம் வேறை.. இதை யோசிச்சுப்பாரும். என்ன இன்னும் ரெண்டு வருசம்தானே.. எங்கை பத்மா சந்தோசமாய் வழியனுப்பமாட்டீரே..

*பத்* : (சிணுங்கிக்கொண்டு)உதயன் என்னாலைபோலியாய் சிரிக்க முடியேலை. மனம் அழுகுதே உதயன். நான் என்ன செய்யிறது. என்னாலை கட்டுப்படுத்த முடியேலையே..

*உத* : வாரும் பத்மா..அந்தக் கடற்கரையிலை போய்க் கொஞ்சநேரம் இருந்து கதைப்பம்.. மனதுக்கும் நிம்மதியாய் இருக்கும்.

----- காட்சி மாற்றம் -----

## காட்சி – 3

*பாத்திரங்கள் : பொன்னம்மா, கந்தசாமி*

*இடம் : வீடு*

***பொன்*** : தம்பி கந்தசாமி.. குமரேசர் வந்தவர். முடிவுகேட்டுச் சொல்லச் சொன்னவர். அங்காலையும் வேறை பக்கம் ஒண்டு கேக்குதாம். இது பொருத்தம் எண்டதாலை தாங்கள் எங்கடை முடிவைக் கேட்டுத்தான் வேறை இடத்திலை கால்வைப்பம் எண்டு சொன்னதாம்..

*கந்* : அதைத்தானம்மா நானும் யோசிக்கிறன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***பொன்*** : உப்பிடி .. ஒவ்வொண்டுக்கும் ஒவ்வொண்டு சொல்லுவள். அவளின்ரை எண்ணப்படி விட்டால் கலியாணம் செய்யாமலே கிழடுபத்தவேண்டியதுதான்

***கந்*** : ஏனம்மா அப்பிடிச் சொல்லுறியள். நான் சரி ஏதோ சமாளிப்பம் எண்டு சம்மதம் சொல்லலாமெணடு தங்கச்சியைக்கேட்டால் தங்கச்சி சம்மதிக்கிறாளில்லையே.

***பொன்*** : அவளின்ரை பேச்சை விட்டிட்டு நீ போய் சம்மதமெண்டு தொடரச் சொல்லு.. ஏன் பெடியனுக்கு என்னகுறை.

***கந்*** : ஆனால்.. வாழப்போறது நானில்லையே.. பத்மா தானேயம்மா.. அவளுக்கு விருப்பமில்லாத சம்பந்தத்தை தலையிலைகட்டி அவள் வாழ்க்கை பூராவாய் என்னையே திட்டித்திட்டி கஷ்டப்பட்டு வாழுறதை கண்ணாலை பாத்து நாங்களும் கண்ணீர் வடிக்க வேணுமே அம்மா..

***பொன்*** : அதை இல்லையெண்டு சொல்லேலை கந்தசாமி.. ஆனால் அவள் நினைக்கிறமாதிரி நாங்கள் மாப்பிள்ளையை என்ன மாவிலையே பிடிக்கிறது. எல்லாத்துக்கும் முட்டையிலை மயிர் புடுங்கினால்.. அவளின்ரை மனசிலை வேறை ஆரையும் விரும்பிக் கிரும்பி இருக்கிறாளோ.. அதாலைதான் எல்லாத்தையும் தட்டிக் கழிக்கிறாளோவும் தெரியாது. அதையும் மனசிலை வைச்சுக்கொள்.

***கந்*** : அதை இல்லை எண்டு சொல்லேலை. ஆனால் அவளின்ரை போக்கு அப்பிடித் தெரியேலை.

***பொன்*** : எந்தப் புத்திலை எந்தப்பாம்பு இருக்குதெண்டு ஆருக்குத் தெரியும்.

***கந்*** : அப்பிடி ஏதுமெண்டால் ஊரிலை சாடைமாடையாய்த்தன்னும் கதைவருமம்மா.. அதுசரி முருகேசர் எங்கை வீட்டையே போறனெண்டவர்.

***பொன்*** : இல்லை அவர் முத்துத்தம்பி வாத்தியார் வீட்டை போறனெண்டவர்.

***கந்*** : ஏன்.. ஏதும் விசேசமாமே..ஏதேன் சொன்னவரே..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***பத்*** : இந்தாருங்கோ தேத்தண்ணியைக் குடிச்சுக்கொண்டு கதையுங்கோ கலியாணக் கதைகதைச்சுக் களைச்சுப் போயிருப்பியள்.

***பொன்*** : ஓம்.. ஓம்.. அவற்றை மகள் உஷாவின்ரை கலியாணமும் முற்றாம். அதுதான்.

***கந்*** : மாப்பிளை ஆராம்.

***பொன்*** : உந்த மருதடிச்சந்தி பார்வதியின்ரை சுவிசில இருக்கிற மகனாம். முந்தி இஞ்சைதான் எங்கையோ பாங்கிலை வேலை செய்த உதயனாம்.

***கந்*** : உதயன் முந்தி பத்மா வேலை செய்த பாங்கிலை தானாக்கும் வேலை செய்தது.

***பத்*** : (தடுமாறி) ஓம். ஆ. அண்.அண்ணா.. அந்த உதயனும் சுவிசோ கனடாவோதான் போனது.. ஒண்டு ஒண்டரை வரியமாகிது.

***பொன்*** : அப்ப அந்தப் பெடியன்தானாக்கும்.. வாத்தியாற்றை உஷாவுக்கு முற்றுக் கட்டியாச்சாம்.

***பத்*** : அ..அ.. அப்பிடி இருக்காதம்மா..

***பொன்*** : நீ என்னண்டு அப்பிடிச் சொல்லுவாய்.. வாற புதனோ அடுத்த புதனோ பிளையிற்றாம். விருந்துகூட முடிஞ்சுதாம்.

***பத்*** : ஆ. அப்பிடியே ..முருகேசர் சொன்னவரே. .. வந்து.. வந்து.. அப்பிடி நடக்காதேயம்மா..

***கந்*** : நீ ஏன் அப்பிடிச் சொல்லுறாய்.. ஏதேனும்..

***பத்*** : (சமாளித்து)இல்லை..ரெண்டுபேரும் வெவ்வேறை சாதியெல்லோ.. அதுதான்.

***கந்*** : நான் வேறை ஏதோ எண்டு நினைச்சன்

***பொன்*** : இப்ப உதுகளைத்தான் பாக்குதுகள்... மாப்பிளையே கிடைக்காத இந்த நேரத்திலை உதுகளைப்போய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பத்* : எண்டா.. எண்டாலும்.. உந்.. உந்தக்கலியாணம்..

***பொன்*** : நீதான் வாற ஒவ்வொரு கலியாணத்தையும் ஏதேன் ஒவ்வொரு சாட்டுச் சொல்லி வேண்டாம் எண்டு சொல்லுறாய் எண்டாப் போலை.. எல்லாரும் அப்பிடியே.. உதுகளையும் பாக்கத்தான் வேணும். ஆனால் எல்லாம் சரிவர வந்தமையுமே.. அதுகள் உலகம் புரிஞ்சதுகள்

----- காட்சி மாற்றம் -----

## காட்சி - 4

*பாத்திரங்கள் : பொன்னம்மா, கந்தசாமி*

*இடம் : வீடு*

*பொன்* : (கதவு திறக்கும் சத்தம்) பத்மா.. பத்மா.. எழும்படி பிள்ளை.. இது என்ன இவளவு நேரமும் படுக்கை.. எழும்பு. ஆ.. இதென்ன உடம்பெல்லாம் குளிருது. வாயாலை நுரை வேறை.. பத்மா.. பத்மா.. கடவுளே நான் இப்ப என்ன செய்யிறது.. (பதறியபடி) கந்தசாமி.. கந்தசாமி.. கெதியாய் வா

*கந்* : (வந்துகொண்டு) என்னம்மா.. கூப்பிட்டனீங்களே.. என்ன என்னத்துக்கு இப்ப பதறுறியள். என்ன நடந்ததெண்டு சொல்லுங்கோ..

*பொன்* : இஞ்சை வா.. உவள் பத்மாவைப் பார். உடம்பும் குளிருது. வாயிலை இருந்து நுரை வேறை.. எனக்கெண்டால் பயமாய்க்கிடக்குது கந்தசாமி.. என்னவோ, ஏதோ..

*கந்* : எதுக்கும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போவம். அதுதான் நல்லதம்மா..

----- காட்சி மாற்றம் -----

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - 5

*பாத்திரங்கள் : பொன்னம்மா, கந்தசாமி*
*இடம் : வீடு*

***பொன்*** : தம்பி .. ஏதோ கடவுள் செயலாலை அண்டைக்கு பத்மாவுக்கு

***கந்*** : (இடைமறித்து) அவள்தான் ஏதோ சுகமாய் தேறி வந்திட்டாளே.. பிறகும் பிறகும் அதையே ஏன் சொல்லிக்கொண்டிருக்கிறியள் அம்மா.. அவள் நித்திரைக்குளிசை போட்டதாலைதான் உப்பிடி நடந்ததெண்டு நீங்களே ஊர் முழுதாய் பறைபோடுவியள் போலை கிடக்குது.

***பொன்*** : அது சரி கந்தசாமி.. பத்மா தான் உதயனை விரும்பியிருக்கிற விசயத்தை முந்தியே சொல்லியிருந்தால் ..

***கந்*** : நியாயம்தான். ஆனால் நடந்தது நடந்து முடிஞ்சிட்டுது. இனி நடக்கவேண்டியதைப் பார்க்க வேண்டியதுதான்.. நல்லநாளாய்ப் பார்த்து ஒருக்கால் போய் உதயன்ரை தாயோடை கதைச்சுப் பார்ப்பம். ஏதோ அந்தமனிசி மனம்வைச்சால் சரி.

***பொன்*** : பெடியனுக்கும் கலியாணம் எல்லாம் முற்றாக்கிப் போட்டினம் எண்டு இடைக்கதை. அதுமட்டுமே அவ தாய்க்காறி சம்மதிச்சாலும் கேக்கிற சீதனம் எங்களாலை குடுக்கேலுமே..

***கந்*** : ஏதோ அவ சம்மதிச்சு வந்தால் நாங்களும் ஏதேன் நிலபுலத்தை வித்தெண்டாலும் பாக்கிறதுதான். (போய்க்கொண்டு) எதுக்கும் முதலிலை கதைச்சுப் பாப்பம். மிச்சமெல்லாம் பிறகெல்லோ..

----- காட்சி மாற்றம் -----

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - 6

*பாத்திரங்கள் : பார்வதி, கந்தசாமி*
*இடம் : வீடு*

*கந்* : (கூப்பிடுதல்) வீட்டுக்காரர்... வீட்டுக்காரர்.. பார்வதி அக்கா இருக்கிறாவே

*பார்* : (வந்துகொண்டு) ஆரது.. ஆ.. கந்தசாமியே.. என்ன கந்தசாமி கரடியனார் பிறைகண்டமாதிரி.. ஏது இந்தப் பக்கம்.

*கந்* : சும்மாய் ஒருக்கால் வந்தன் அக்கா

*பார்* : (கதிரை இழுத்து) ஆ.. இப்பிடி இருமோனை..எப்பிடிக் கொம்மாபாடு. சுகமாய் இருக்கிறாவே.. உன்ரை பாடு எப்பிடி.. பிள்ளையள் என்ன செய்யுதுகள்.

*கந்* : ம்.. ஏதோ படுக்கையெண்டு இல்லாமல் ஊசாடித் திரியிறா.. வீட்டுவேலையளோடையும் ஆடு மாடு கட்டிஅவிழ்க்கிறதோடையும் அவவின்ரை பொழுது போகுது.

*பார்* : ஏது இந்தப் பக்கம்.. கனகாலம் வராமல் இருந்தனி.. ஏதோ விசயமாய்த்தான் வந்திருப்பாய். என்னவெண்டு சொல்லன்.

*கந்* : (குழைந்து) அது.. வந்து.. வந்து.. உங்கடை மகனின்ரை விசயமாய்த்தான் கதைப்பம் எண்டு வந்தன்.

*பார்* : அப்பிடி என்ன விசயம் கந்தசாமி.?

*கந்* : அது.. தங்கச்சி பத்மாவுக்கு உங்கடை மகன் உதயனைக் கேட்டுப் பாப்பமெண்டு..

*பார்* : (இடைமறித்து)பகிடியே விடுகிறாய் மோனை.. உவர் முத்துத்தம்பி வாத்தியாற்றை மகள் உஷாவை முற்றாக்கி விருந்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாடியிருக்கிறம். கேள்விப்பட்டிருப்பியள்தானே.. பிறகென்ன கந்தசாமி

*கந்* : ஓம்.. ஓம்.. எண்டாலும் வந்து..

*பார்* : நல்ல இடம். வடிவான.. அம்சமான பிள்ளை ..தம்பி உதயனுக்கும் பிடிச்சுக்கொண்டுது. படிச்ச அடக்க ஒடுக்கமான பிள்ளை.. இனி வாத்தியாரும் ஒரே ஒரு பிள்ளைதானே எண்டு பாத்துப்பாராமல் காசும் பத்து வரையிலை தாறதெண்டவர். இனிக் குறிப்பும் நல்ல பொருத்தம். ஏதோ ஒரு பொருத்தம்தான் கொஞ்சம் குறைவாம். அதுக்கும் அம்மனின்ரை கழுத்திலை போட்டிட்டு.., கொடி கட்டச்சொல்லிச் சாத்திரியார் சொன்னார். இதுதான் நடக்குமெண்டு சாத்திரியார் அடிச்சுச் சொல்லுறார்.

*கந்* : அதுசரி

*பார்* : குறிப்பும் சரி நாங்கள் எதிர்பாத்ததும் சரி எண்டால் ஏன் தட்டிக்கழிக்கிறம். முற்றாக்கியே போட்டம்.வாற ஆவணியிலை எல்லாத்தையும் முடிக்கிறதெண்டு விருந்து கலந்துபோட்டம்.

*கந்* : எண்டாலும் பார்வதி அக்கா..

*பார்* : நீங்கள் விருந்துகொண்டாட முந்தியெண்டாலும் கேட்டிருந்தா பொருத்தத்தைப் பார்த்து ஏதோ யோசிச்சிருக்கலாம். இது எப்பிடிஎண்டாலும் முற்றாக்கின கலியாணம்எல்லே..எனக்கு இரண்டு நாக்கில்லை.. வேறை என்னத்தைக் கந்தசாமி சொல்லுறது.

*கந்* : உங்கடை மகன் ஒண்டும் சொல்லேலையே பார்வதி அக்கா.

*பார்* : அவன் தனக்கு பூரண சம்மதமெண்டு பிள்ளையை சுவிசுக்கு அனுப்பச் சொன்னவன். இனி அண்டைக்கு உஷாவோடை ரெலிபோனிலையும் கதைச்சவனாக்கும்.

*கந்* : அக்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பார்* : நான் அவனை என்ன கேக்கிறது. பிள்ளையைப் பிடிச்சுதெண்டால் சரிதானே.. வாத்தியாரும் ஒருவிதத்திலை எங்களுக்குத் தூரத்துச் சொந்தமெல்லே..

*கந்* : வந்து.. வந்து உங்கடை உங்கடை மகன்..மகன்

*பார்* : இப்பிடிக் கதைக்கிறதை அரைநாக்கிலை விழுங்கிக் கொண்டு கதைச்சால் எனக்கெங்கை கந்தசாமி நீ நினைக்கிறது புரியப் போகுது. சொல்ல வந்ததை விளங்கத்தக்கதாய் சொல்லன் மோனை..வேறை என்ன..?

*கந்* : அதுவும் சரிதான் எண்டாலும் இந்த நிலைமையிலை..

*பார்* : ஏன் என்ன.. என்னெண்டாலும் பரவாயில்லை ..இஞ்சை வேறை பிறத்தியார் ஆரும் இருக்கினமே, இல்லை தானே.

*கந்* : ம்..சரி.. விசயத்துக்கு வருவம்.. எப்பிடியோ எப்ப எண்டாலும் முடிவெடுக்க வேண்டியதுதானே. தங்கச்சி பத்மாவுக்கும் உங்கடை மகன் உதயனுக்கும் சுவிசுக்குப் போகமுந்தியே ஒரு அண்டர்ஸ்ரான்டிங் இருந்திருக்குது போலை.

*பார்* : என்ன..?

*கந்* : ரெண்டுபேரும் ஒருத்தரை ஒருதர் விரும்பியிருந்திருக்கினம்.

*பார்* : இதென்ன புதுக்கதை நான் கேள்விப்படாத ஒண்டு.. வீணாய்க் கண்கெட்ட கதைஎல்லாம் கதையாதை கந்தசாமி.

*கந்* : அப்பிடிச் சொல்லாதேங்கோ அக்கா.. நாங்களும் ஏற்கெனவே சாடைமாடையாத்தன்னும் கேள்விப்பட்டிருந்தால் இந்தக் கலியாணம் முற்றாக முந்தி முறைப்படி வந்து கேட்டிருப்பம். என்ன செய்யிறது

*பார்* : ஏன் இப்ப மட்டும் என்னவாம் நல்ல இடத்திலை கலியாணம் முற்றெண்டவுடனை இல்லாதபொல்லாததுகளைச் சொல்லி கல்லுக்குத்துவம் எண்டு பாக்கிறியள் போலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கந்* : சத்தியமாய் அக்கா நாங்கள் அப்பிடி நினைக்கேலை... உதயன் வெளிநாடு போகேக்கை ஏதோ காசு 50ஆயிரம் மட்டிலை குறையுதெண்டு அதுகூட பத்மா பாங்கிலை லோன் எடுத்துக்குடுத்ததாம். அதுகூட எங்களுக்கு இப்பதான் தெரியும்.

*பார்* : பயணம் போக காசுதேவை எண்டால் கடன்கிடன் வாங்கிறது தானே.. ஆனால் அதை வைச்சுக்கொண்டு காதலிக்கிறது அது இது எண்டு முழங்காலுக்கும் மொட்டந்தலைக்கும் முடிச்சுப்போடப் பாக்கிறியள்.

*கந்* : நீங்கள் எங்களைப்பற்றி தப்புக்கணக்கு போடுறியள்

*பார்* : நான் இல்லை நீங்கள்தான் கந்தசாமி தப்புக்கணக்குப் போட்டிட்டியள். எப்பிடிக் கந்தசாமி இதை நான் சொல்ல.. 50 ஆயிரத்தைக் குடுத்துப்போட்டு பொடியனை வளைச்சுப் போடுவம் எண்டு நினைக்கிறியள். நல்ல கதை மாப்பிளை பிடிக்கிறதெண்டால் இப்பிடியெல்லோ பிடிக்கவேணும். இறால் போட்டு சுறா பிடிக்கிறியள். கடவுளே! நல்லகாலம் இதுகளுக்கை உதயன் மாட்டுப்படாமல் போனது.

*கந்* : கோபப்படாதையுங்கோ.. இப்படி பத்மாவின்ரை அண்ணன் வந்து கதைச்சவரெண்டு கடைசியாய் ஒருக்காக் கதைச்சுப்பாருங்கோ.. அவர் சொல்லுறதையும் பாக்கலாம்தானே..

*பார்* : என்ன கேக்கிறது.. என்ரை பிள்ளையை நான் அப்படி வளக்கேலை.. நான் சொன்ன சொல்லைத் தட்டமாட்டான். அப்பிடித்தான் நான் வளர்த்து வைச்சிருக்கிறன். உங்களைமாதிரி அந்த இந்தப் பழக்கங்கள் பழக்கி வச்சிருக்கேலை கண்டியளோ..

*கந்* : என்ன செய்யிறதெண்டு நானும் பொறுத்துக் கொண்டிருக்க கதைகூடிக்கொண்டு போகுது.

*பார்* : நான் உண்மையைத்தான் சொன்னன். ஒரு குமர்ப்பிள்ளை என்ன துணிவிலை தன்ரை வீட்டுக்குத் தெரியாமல் ஒரு ஆம்பிளைக்கு காசுமாறிக் குடுக்கிறது. தளுக்கி மினுக்கிக்கொண்டு ஆம்பிளையளை மயக்கிறது மட்டுமில்லை இப்ப இப்பிடியும் வெளிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிட்டிட்டியளே.. ஒண்டு நான் சொல்லுறன் .. நான் முடிவெடுத்தால் எடுத்ததுதான். உதயனுக்கு உஷாதான் .. இதிலை எப்பவும் எந்த மாற்றமுமில்லை.

*கந்* : அப்ப கடைசியாய் என்ன சொல்லுறியள்.

*பார்* : சொல்லிப்போட்டனே..! இனி வேறை என்ன சொல்லக்கிடக்குது. அவன் வாங்கிய காசும் வட்டியும் நாதன் கொண்டந்து தருவான். அதைவிட வேறை எதிர்பார்ப்புகள் இருந்தால் அதை இண்டைக்கே ..இப்பவே விட்டிடுங்கோ..

----- **காட்சி மாற்றம்** -----

## காட்சி - 7

*பாத்திரங்கள் : பார்வதி, நாதன்*

*இடம் : வீடு*

*நாத* : என்ன பார்வதிமாமி.. படலையிலையே யோசிச்சுக் கொண்டு நிக்கிறியள்

*பார்* : உன்னட்டைத்தான் தம்பி ஆரையேன் அனுப்புவம் எண்டு பாத்துக்கொண்டு நிக்கிறன். அந்தத் தூரத்துக்கு நடந்துவர இந்த வெயிலுக்காலை முடிஞ்ச அலுவலே..

*நாத* : ஏன் ஏதேனும் அவசர அலுவலே மாமி..

*பார்* : இல்லை... நேற்று இரவு உதயன் கதைச்சவன்

*நாத* : (சிரித்துக்கொண்டு) உதயன் மட்டும்தானோ. அல்லாட்டி.

*பார்* : உனக்குப் பகிடிதான். உஷாவும் கதைச்சவ.. இப்ப சரிதானே.

*நாத* : என்னவாம்..? எப்படியிருக்கினமாம். புதுத் தம்பதிகள் இப்ப பிசியாய் இருப்பினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பார்* : ஓம். ஓம்.. தெரியாதே.. சுகமாயிருக்கினம். கலியாணவீட்டு வீடியோ கசற் ஆரோ அங்கையிருந்து வந்தவையிட்டை குடுத்து விட்டிருக்காம். விலாசம் தந்தவன். அதுதான் எடுப்பமெண்டு பாத்தன்.

*நாத* : உதயன் எந்தமட்டிலை போகச்சொன்னவன்

*பார்* : இண்டைக்கெண்டாலும் போய் எடுத்திட்டு வரட்டாம்

*நாத* : என்ன.. என்னை மறந்திட்டினமாமோ..

*பார்* : உன்னை மறக்காதபடியாலைதானே உன்ரை பேருக்கே அனுப்பி உன்னையே போய் எடுக்கச் சொன்னவை.

*நாத* : ம்.. கலியாணத்தை நிண்டு நடத்தத்தான் கிடைக்கேலை.. வீடியோவைத் தன்னும் பாப்பம்.

*பார்* : ஓம் நாதன். இண்டைக்கு பெத்ததுகளும் பிள்ளையளின்ரை கலியாணத்தை வீடியோவிலை பாக்கிற அளவுக்கு வந்திட்டுது.

*நாத* : பார்வதி மாமி.. கலியாணம் மட்டுமில்லை.. இப்ப செத்த வீட்டுக்கே பிள்ளையள் வராமல் வீடியோ எடுத்து வீடியோக்கொப்பியையும் சாம்பலையும் அனுப்புறதே பாசனாய்ப் போட்டுது.

*பார்* : (பெருமூச்சு) ம்.. என்ரை செத்தவீடும் அப்பிடித்தானோ.. எல்லாம் ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.

----- காட்சி மாற்றம் -----

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - 8

*பாத்திரங்கள் : உஷா, உதயன்*
*இடம் : வீடு (உதயனுக்கு கடுமையான சுகவீனம்)*

***உஷா*** : உதயன்.. என்ன செய்யுது.. இந்தாங்கோ.. எழும்பி வாயை இந்தத் தண்ணியாலை கொப்புளிச்சுப்போட்டு இதைக் குடியுங்கோ

***உத*** : உஷா ..எனக்கு ஒண்டும் செய்யேலை.. நீர் உதை உந்த மேசையிலை வைச்சிட்டுப்போம்.. நான் எழும்பிக் குடிக்கிறன்.

***உஷா*** : உப்பிடித்தான். நேற்றும் உங்டைசொல்லை நம்பி நான் வைச்சிட்டுப் போனது. பிறகு மாமி எடுத்து ஊத்தேக்கை எனக்கும் சேர்த்து ஏச்சு விழுந்தது. உதயன் சாப்பிடத்தான் ஏலாது எண்டாலும் சூப்பு, ரசம் அப்பிடி ஏதும் குடிச்சால் உடம்புக்குத் தெம்பாய் இருக்கும். உடம்புக்குத் தெம்பாய் இருந்தால்தானே குடிக்கிற மருந்து உடம்பிலை சுவறிப்பிடிக்கும். அதையும் வேண்டாமெண்டால். எழும்புங்கோ, எழும்பிக் குடியுங்கோ..ஆ.. ஆ.. இப்பிடி இருங்கோ

***உத*** : உஷா எனக்கு விருப்பமாயிருந்தால் நான் ஏன் வேண்டாம் எண்ணுறன். இப்ப சாப்பாட்டைக் கண்டாலே அடிவயித்தைக் குமட்டிக்கொண்டு வருகுது. வலோத்காரமாய்ச் சாப்பிட்டால் .. வருத்தத்தை அனுபவிக்கிறது நான்தானே.. பசி இல்லை எண்டு சொல்லேலை.. பசிக்குது. சாப்பாட்டைக் காண சாப்பிடவேணும் போலை ஆசையாய்க் கிடக்குது. ஆனால் உடம்பு ஏற்குதில்லையே உஷா..

***உஷா*** : இப்பிடி எத்தினை நாளைக்குத்தான் பட்டினி கிடக்கப்போறியள்..

***உத*** : என்ன உஷா.. நாலுமாதம் சுவிசிலை இருக்கேக்கை சரி.. இஞ்சை வந்து இந்த வருத்தம் தொடங்க முந்திஇருந்த இரண்டு மாதம் சரி..என்ரை சாப்பாட்டு நிலை தெரியும்தானே.. இயலுமெண்டால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானே கேட்டுவாங்கிச் சாப்பிடுவன்தானே.. சொன்னால் கேளும் உஷா..

***உஷா*** : அப்ப நெடுகலும் ஒண்டும் தின்னாமல் குடியாமல் சிவபட்டினிதான் கிடக்கிறதெண்டு முடிவெடுத்திட்டியள் போலை.. ஏதேன் சாப்பிட்டால்தான் எடுக்கிற மருந்தும் வேலை செய்யும்.

***உத*** : (ஏளனமாய்) இனி என்ன எடுக்காத மருந்தே.. போடாத இன்ஜெக்சனே.. ஒரு கொஞ்சம் தன்னும் குறைஞ்சுதே.. இப்பிடியே கிடந்து ஒரு நாளைக்கு கண்ணை மூடவேண்டியதுதான்.

***உஷா*** : (அழுது) உதயன்...

***உத*** : கலியாணம் செய்து ஒரு வருசம் கூட ஆகேலை.. சுவிவிசிலை இருந்து ஊர்போறமெண்டு எவளவு சந்தோசமாய் இஞ்சை வந்தம். நான் எப்பிடி எல்லாம் கனவுகண்டன். இப்ப நீர்.. படுக்கையிலை இருக்கிற எனக்கு பணிவிடைசெய்யவேண்டிய நிலை.. ம்.. என்ன செய்ய.. என்னாலை உமக்கும் கஷ்டம்தான்.

***பார்*** : (வந்துகொண்டு) தம்பி உதயன். பிள்ளை உஷா. பார்வைபாக்க கந்தையாப்பூசாரியார் வந்திருக்கிறார். முகத்தை சுடுதண்ணியிலை கழுவிப்போட்டு வா மோனை..

***உஷா*** : சரி மாமி.. அவர் முகம் கழுவிப்போட்டார்

***பார்*** : சனங்களின்ரை கண், கிண் பட்டுதோ எண்டுதான் நான் வரச்சொன்னனான் மோனை. பூசாரியார் மூண்டுநேரம் பார்வையும் பாத்து தண்ணி ஓதிக்குடுத்து நூலும் முடிஞ்சுவிட்டாரெண்டால் சரி..

***உஷா*** : மாமி..

***பார்*** : ஓம் பிள்ளை.ஏதேன் காத்துக் கறுப்பு (பேய் பிசாசு) சேட்டை எண்டாலும் வைத்தியங்கள் ஒண்டாலும் சரிவராது. உதுகளுக்கு அம்பலத்தாடிவைரவர் பூசாரியாரின்ரை பார்வைதான் கண்கண்ட மருந்து.. பூசாரியாரும் கோயிலுக்கு விளக்கு வைக்கிறதுக்குப் போறவர் .. மினைக்கெடாமல் வா மோனை..

----- காட்சி மாற்றம் -----

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - 9

*பாத்திரங்கள் : பொன்னம்மா, பார்வதி, பத்மா*

*இடம் : வீதி*

*பார்* : (ஏளனம் கோபத்துடன்) ம் தாயும் மகளும் போகினம் பார்.. அவையின்ரை சீலை என்ன? தலையிலை பூ என்ன? எடை பொட்டும் வைச்சு மினுக்கியிருக்கிறா போலை.. தாயும் மகளும் சேர்ந்து இன்னும் ஆராருக்கு மருந்து மந்திரம் செய்து மயக்கப் போறாளவையோ..

*பொன்* : பிள்ளை பத்மா நீ அவளோடை ஒண்டும் கதைக்காதை. பட்டது காணாதே.. முள்ளிலை சீலை விழுந்தாலும் சீலையிலை முள்ளு விழுந்தாலும் சேதம் சீலைக்குத்தான் எண்டது அனுபவப் பட்டனிதானே பத்மா..

*பத்* : ஓமம்மா அதை இல்லைஎண்டு சொல்லேலை. ஆனால். கேக்க வேண்டிய வசை வசனங்கள் எல்லாம்தான் கேட்டு முடிஞ்சுதே.. இனி என்ன மிச்சம் மீதியிருக்கே.. உவையளின்ரை திட்டுக்களைக் கேட்டு வாய்பொத்திக் கொண்டிருக்கிறதெண்டால் ரோசநரம்பு இல்லாமலெல்லோ நாங்கள் பிறந்திருக்க வேணும்.

*பார்* : இல்லாமலே.. ரோசநரம்பு இருந்திருந்தால் இவளவுதூரம் ஆடிமுடிஞ்சும் உடுத்திக்கொண்டு ஊரிலை வெளிக்கிட்டுத் திரியிறியளே..

*பத்* : உதை நீங்களில்லை.. நாங்கள்தான் கேக்கவேணும். எதையும் கதைக்கேக்கை அளந்து கதைச்சால் சரி..

*பார்* : எடை எனக்குக் கற்பிக்கிறியோ.. ஒண்டும் தெரியாத அந்தப் பெடியனை வசியமருந்து போட்டு மயக்கி வளைச்சுப்போட்டு.. கதையைப் பாரன் கதையை..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பத்* : (ஏளனமாக) ஓ..ஓ.. ஒண்டும்தெரியாத பெடியன். வெளிநாடு போக 50 ஆயிரம் குறையுது எண்டாப்போலை காதல் கதை சொல்லி மயக்கினது ஆரெண்டு தெரியேலை.

*பார்* : என்னடி சொல்லுறாய். என்னடி 50ஆயிரம் ஒருதூசுக்காசடி. இண்டைக்கு உப்பிடி எத்தினைஆயிரம் ..நீ குடுத்த வசிய மருந்தாலை செலவழிக்கிறான் எண்டு தெரியுமே.. உவன் கருணைச்சின்னவன் அடிக்கடி உங்கடை வீட்டுப்பக்கம் தலைகாட்டேக்கையே ஆருக்கோ ஏதோ வசியவேலைதான் நடக்குதெண்டு நினைச்சன். ஆனால் அது என்ரை மகன் உதயனுக்குத்தான் எண்டதை இந்தப் படுபாவி கனவிலையும் நினைக்கேலையடி.

*பத்* : என்னது..?

*பார்* : ஓமடி ஓ.. உதயனை மயக்க கருணைச்சின்னவனைக்கொண்டு வசிய மருந்து செய்விச்சு உதயனுக்குக் குடுத்தியள். அவன் படுறபாட்டை கண்கொண்டு பாக்கக்கூடியதாயே இருக்குது. உங்களுக்கென்ன ஒருத்தன்போனால் இன்னொருத்தனை வளைச்சுப் பிடிப்பியள். ஆனால் அவனை நம்பி வந்தவள்.. கலியாணம் செய்து ஆறு மாதத்துக்கிடையில் அந்தச் சீமாட்டி அவனோடை படுகிற பாடு.. கேப்பானடி எத்தனை நாள் செண்டாலும் கடவுள் கேப்பானடி..

***பொன்*** : பார்வதி வீணாய் தேவையில்லாத பழியை எங்களிலை போடவேண்டாம். நாங்கள் எங்கடைபாட்டிலை இருக்க வீணாய் ஏன் எங்களிலை பழிபோடுறியள்.

*பார்* : என்னடி உங்கடைபாட்டிலை இருக்கிறியளோ... மோளுக்கு மாப்பிளை எடுக்க குடுத்த வசியமருந்து இப்ப அவனுக்கு குடுக்கிற சித்திரவதை தெரியுமோடி. பெத்தவயிறு பத்தி எரியுதடி. படுற பாடு உனக்கெங்கையடி தெரியப்போகுது..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***பொன்*** : அப்ப.. நாங்கள்தான் வசிய மருந்து குடுத்து உதயனுக்கு வருத்தமெண்டு முடிவெடுத்தாச்சுது போலை..வைத்தியரும் தேவையில்லை.. றிப்போட்டுகளும் தேவையில்லை பிறகென்ன..

***பார்*** : ஓமடி.. நாங்களும் என்ன வருத்தமோ.. என்னவோ எண்டு செய்யாத மருந்தில்லை.. அம்பலத்தாடி வைரவர் கோயில் பூசாரி பார்வை பாத்தும் சரிவரேலை எண்டாப் பாரனடி. ஒண்டுக்கும் மாறேலை எண்டாப் போலை உவர் கணபதியார் சொன்னார்.

***பொன்*** : என்ன நாங்கள் வசியம் செய்ததெண்டோ..

***பார்*** : என்ன பகிடியே விடுறியள். ஓமடி கணபதியார் சொன்னதாலை தானடி முறிப்பிலை முத்தனிட்டை மூண்டு நேரப்பார்வை பாத்தெல்லோ கண்டுபிடிச்சது இது வசியம்தானெண்டு.

***பொன்*** : பார்வதி வீணாய்க் கண்காணாத கதைஎல்லாம் கதையாதை கண்டியோ..

***பார்*** : என்னடி.. செய்யிறதையும் செய்துபோட்டு ..பாரடி மாய்மாலத்தை.. உங்களுக்கு வந்து..வந்து (அடித்தல்)

***பொன்*** : ஆ.. ஆ.. அடியாதையடி .. அடியாதை பார்வதி..

***பார்*** : அடியாதையோ.. (மீண்டும் அடித்தல்) உதுகளை அவனுக்கு வசியம் செய்யேக்கை யோசிச்சிருக்க வேணுமடி.. உங்களை கொண்டால்தானடி என்ரை ஆத்திரமடங்கும். துரோகியள்.

***பொன்*** : ஐயோ.. பத்மா.. பத்மா..

***பார்*** : என்னடி ..மோளைக் கூப்பிடிறியோ..ரெண்டு பேரும் சேர்ந்து தானேடி அவனுக்கு அள்ளிவைச்சனியள்..

***பத்*** : விடு இஞ்சை.. விடு.. இனி அம்மாவிலை தொட்டாய் எண்டால் ..நடக்கிறது வேறை.. விடு இஞ்சை..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பார்* : ஐயோ.. என்னைக் காப்பாற்றுங்கோ.. தாயும்மோளும் என்னை அடிச்சுக் கொல்லுறாளவை.. என்னைக் காப்பாற்றுங்கோ.. வசியம் செய்து பொடியனை அணு அணுவாய்க் கொல்லுறாளவை.. இப்ப என்னை அடிச்சே கொல்லுறாளவை.. என்னைக் காப்பாற்றுங்கோ.. ஐயோ என்னைக் காதகியளிட்டையிருந்து காப்பாற்றுங்கோ..

----- காட்சி மாற்றம் -----

## காட்சி - 10

*பாத்திரங்கள் : நாதன், பார்வதி, உதயன், உஷா*

*இடம் : உதயன் வீடு*

*நாத* : மாமி .. சும்மா வசியம், மந்திரம், கண்ணூறு, பேய், பிசாசு, செய்வினை, சூனியம் இன்னும் என்னென்னவோ... ஒண்டொண்டைச் சொல்லி எவளவு காலத்தைப் போக்கிவிட்டியள். உதயன்ரை பாடு வரவர மோசமாகுதே தவிர குறைஞ்சபாடில்லையே!

*பார்* : ஓம் நாதன், உதயன்ரை வருத்தத்தை நாங்கள்தான் கூட்டினமோ எண்டு யோசிக்கவேண்டியிருக்கு. அவளவை..தே.. வருகுதுகண்டியோ வாயிலை.. என்னென்ன செய்தாளவையோ.. செய்தவைக்கும் செய்விச்சவளவைக்கும்தான் வெளிச்சம். கடவுளே

*நாத* : ஏன் மாமி அதுகளை இதுக்கை இழுத்துப் பேசிறியள்.

*உத* : ம்.. ஆ.. ஆ.. ஓம் நாதன்.. நானும் எத்தினை தரம் சொல்லிப்போட்டன் அம்மா கேட்டாத்தானே..

*உஷா* : அதைத்தான் நாதன் நானும் சொல்லுறன்.அவனாரோ சொன்னானெண்டு நாங்களும் சின்னப்பொடியை நம்பினம்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தாளும் இந்தா ஒரு மாதத்திலை சுகமாக்கிறன் கோழிதா.. குஞ்சுதா.. நீத்துக்காய்தா.. சாராயம் தா எண்டான். குடுத்தும்.. இண்டைக்கு அவன் பாவி எல்லாத்தையும் ஏலாதென்டு கைவிட்டுப்போட்டு.. மாசக்கணக்கில் இழுபட்டதுதான் மிச்சம். அயலுக்கை வீணாய் பகையைத் தேடினது தான்.

*நாத* : ஓம் உஷா.. பெரியாஸ்பத்திரியிலை சொன்னதுபோலை ஏன் ஒருக்கா கொழும்பிலை கொண்டுபோய் ஆரேன் நல்ல ஒரு ஸ்பெசலிஸ்ற்-ஐ கொண்டு செக் அப் பண்ணினால் என்ன? ஆனால் செலவுதான் எக்கச்சக்கமாய் பிடிக்கும் எண்டு நினைக்கிறன்..

*பார்* : இப்பவே பார் நாதன்.. ஒரு வரியமாகுது.. எவளவு காசை இறைச்சம்.. போதாக்குறைக்கு சின்னப்பொடி செய்வினை சூனியம் எண்டு மிச்ச சொச்சத்தையும் வறுகிக்கொண்டு போனான்.. வெளிநாட்டிலை அவன் ரத்தம்சிந்தி உழைச்சது இப்பிடிப் போகவேணுமெண்டு தான் செய்தவளவையாக்கும்.

*உஷா* : மாமி பேந்தும் பேந்தும் (பிறகும் பிறகும்) ஏன் ஆரையும் ஏசுறியள்.. அதுக்கென்ன வருத்தம் மாறி வந்தால் இப்பிடி எவளவை உழைக்கலாம். அதை யோசியாதையுங்கோ..அவர் சுகமாயிருந்தால் அதுவே போதும் மாமி. நாதன் நீங்கள் செலவைப்பற்றி யோசியாதையுங்கோ.. ஏதேன் ஒரு விதத்திலை நல்ல ஒரு டொக்டராய் ஒழுங்கு செய்யுங்கோ.. கொழும்பிலை எண்டால் எல்லா வசதியளும் இருக்குதுதானே..

*நாத* : தொடங்கின நேரமே கொண்டு போயிருந்தால் இவ்வளவுக்கும் வருத்தம் இருந்த இடமே தெரியாமல்போயிருக்கும்.

*பார்* : ஓம் நாதன்... அவையவைக்கும் குடுக்குமதியளை குடுக்கத்தானே வேணும்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***உஷா*** : நாதன் நீங்கள் ஏதோ செய்யவேண்டியதை இனி எண்டாலும் தாமதியாமல் செய்யுங்கோ.. முடிஞ்சதைப்பற்றி யோசிச்சு என்ன பிரயோசனம்.

----- காட்சி மாற்றம் -----

## காட்சி - 11

*பாத்திரங்கள்* : *நாதன், பார்வதி, உதயன், உஷா*

*இடம்* : *உதயன் வீடு*

***கந்*** : பெரியாஸ்பத்திரியிலை டொக்டர் குடுத்த கடிதத்தோடை போனதாலை கப்பலிலை போகக்கூடியதாக இருந்ததாம். பெண்சாதிக்கு மட்டும் தானாம் கப்பலிலை இடம் கிடைச்சது. தாயும் நாதனும் கிளாலியாலை தானாம் போனது.

***பொன்*** : போயும் 3 - 4 மாதமாகுது என்ன?

***கந்*** : ஓமம்மா..

***பத்*** : (வந்து - ஏளனத்துடன்) என்ன பெரிய பணக்காறற்றை கதை போகுது போலை. கொழும்பு வைத்தியத்தாலை பெட்டகத்துப் பணம் குறையுதாமே? என்ரை மனம் எரிஞ்சது..பட்ட வேதனை எனக்கும் ஆண்டவனுக்கும் தான் தெரியும். என்ர மனம் எரிஞ்சமாதிரி உவயின்ர பணம் மட்டுமில்லை வாழ்க்கையும்..

***பொன்*** : (இடைமறித்து-அதட்டல்) பத்மா.

***கந்*** : உனக்கு இன்னும் ஆத்திரம் தீரேலைப்போலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பத்* : இப்ப மட்டுமில்லை .. நான் சாகுமட்டும் தீராது.

*கந்* : றோட்டிலை கதைச்சினம். உதயனுக்கு வருத்தம் சரியான கடுமையாம். ஆள் எலும்பும் தோலுமாய் இருக்குதாம். வருத்தம் வரவரக் கூடுதே தவிர குறையிறதாய்க் காணேலையாம். என்ன வருத்தம்எண்டு டாக்குத்தர்மாராலையே கண்டுபிடிக்கேலா மலிருக்காம்..

*பத்* : அரசன் அண்டறுப்பான் தெய்வம் நிண்டறுக்கும் எண்டது அந்தக்காலம்..

*பொன்* : (இடைமறித்து-அதட்டல்) சும்மாயிரு பத்மா.

*பத்* : ஏனம்மா நான் குடுத்த வசியமருந்துதான் அவனாற்றையோ உடம்பிலை ஊறியிட்டுது அதாலைதான் வைத்தியம் செய்தும் சரிவராது எண்டு சொன்னது போலை நீங்களும் கவலைப் படுகிறியள் போலை..

*பொன்* : அவள் கிடக்கட்டும் நீ சொல்லு கந்தசாமி..

*கந்* : ஆரோ நாதனோடை வேலைசெய்த பெடியன் கொழும்பிலை இருக்கிறதாலை அந்தாள்தானாம் அங்கை எல்லாம் உதவி.. ஆரோ இப்பிடியான வருத்தத்துக்கு பேர்போன டாக்குத்தரிட்டை காட்டினதாம் .. நாதன் முதல்லை வாறதெண்டு கேள்வி

*பத்* : ஏன் அண்ணா.. கணபதியார்.. பூசாரி.. குறுமுனி.. அவையிவை ஒருத்தரும் போகேலையாமே..

*நாத* : (வந்துகொண்டு) பொன்னம்மாக்கா.. பொன்னம்மாக்கா..

*பொன்* : ஆரது.. தம்பி கந்தசாமி படலையுக்கை கூப்பிடுறது ஆரெண்டு பார் மோனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பத்* : (ரகசியமாக) உந்தா நீங்கள் கதைச்ச ஆள்தான் வருகுது போலை..

*பொன்* : ஆர் மோனை..

*பத்* : வேறை ஆர் நாதன் தானம்மா..

*பொன்* : தம்பி கந்தசாமி.. போடா போய் படலையைத் திறந்து விடு..

*கந்* : ஆ.. ஆர்.. ஆரது நாதனே.. வாரும் வாரும்.. எப்பிடி எப்ப கொழும்பாலை வந்தது.

*பத்* : என்ன வீடுமாறி வந்தாச்சுப் போலை..

*கந்* : பத்மா.. சும்மாயிரு.. வீட்டுக்கு வந்தவயளோடை வீண்கதை கதைக்கிறதை விட்டிட்டு போய்த் தேத்தண்ணி கொண்டுவா..

*நாத* : இப்பதான் குடிச்சிட்டு வந்தனான். வேண்டாம்.. வேண்டாம்.

*பத்* : (போய்க்கொண்டு) இஞ்சைவாற ஆம்பிளையளுக்கு நாங்கள் என்ன போட்டுக்குடுக்கிறனாங்கள் எண்டு தெரியும் தானே.. அதுதான் பயப்பிடுறார் போலை..

*கந்* : (அதட்டல்) உனக்கு பத்மா

*நாத* : கந்தசாமி.. தங்கச்சி பத்மா கோவிக்கிறதிலையும் நியாயம் இருக்குதுதானே.. உதயனாலை அந்தநாளிலை இருந்து இண்டைக்குவரை பாதிக்கப்படுறது அவதானே.. நினைச்ச விரும்பின வாழ்க்கைதான் அமையேலை.. அவை குடுத்த பட்டப் பெயருகள் வேறை.. எத்தினை பழிச்சொல்லுகள். எல்லாத்தையும் தாங்கிக்கொண்டு தனிக்கட்டையாய்.

*பொன்* : அது அவளின்ரை தலையெழுத்து. அது கிடக்கட்டும்.. ஏது.. ஏதிந்தப் பக்கம்.. எப்ப கொழும்பாலை வந்தனி தம்பி.. அங்கத்தைய விசேசங்கள் எப்பிடி..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நாத* : நேற்றுத்தான் கொழும்பாலை வந்தனானக்கா

*கந்* : போனவிசயம் எப்பிடி நாதன்.

*பத்மா* : இதுக்கை ஒண்டும் போடேலை.. வெறும் தேத்தண்ணிதான்.. எடுத்துக் குடியுங்கோ..

*பொன்* : பிறகும் பார்.. உதிலை வை பத்மா தேத்தண்ணியை.. அவளின்ரை கதையை விட்டிட்டு எடுத்துக்குடி தம்பி..

*நாத* : உதயன்ரை நிலைமை வரவர மோசம். எல்லாம் ரெஸ்ற் பண்ணினது. மெடிக்கல் றிப்போட் வருமட்டும் பாத்துக்கொண்டு நிண்டதாலைதான் பிந்தினது.

*கந்* : என்னவாம்.. மெடிக்கல் றிப்போட்டிலை என்னண்டு சொல்லுகினம்.. என்ன வருத்தமாம்..

*நாத* : அது வந்து .. வந்து.. உதயனுக்கு எய்டஸ் வருத்தமாம்.

*மூவரும்* : என்ன எயிட்ஸோ..

*நாத* : ஓம். எயிட்சாம்.. அதாலைதான் அது எந்த வைத்தியத்துக்கும் மாறேலையாம். மருந்தாலை மாத்தவும் முடியாதாம்.

*பொன்* : அப்ப மாத்தமுடியாதெண்டால் உப்பிடியே அனுபவிச்சு...

*நாத* : ஏன் பொன்னம்மாக்கா நிப்பாட்டிப்போட்டியள். ஓம்.. ஒருநாளைக்குப் போகவேண்டியதுதான்.

*பொன்* : கடவுளே..!

*நாத* : ஓம் பொன்னம்மாக்கா.. உதயன்ரை தாய் சொன்ன மாதிரி அது மருந்துமில்லை.. மந்திரமுமில்லை.. வசியமுமில்லை வாலாயமு மில்லை.. தானே தனக்குத் தேடிக்கொண்ட வியாதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பத்* : (நின்மதிப்பெருமூச்சுவிட்டு) ம் கடவுளே.. எனக்கு ஒவ்வொரு தோல்வியும் ஒவ்வொரு சோதனையளும் வரேக்கை நான் கொடுத்து வையாதவள், செய்த பாவத்துக்கு கடவுள் தண்டிக்கிறார், நான் கொடுத்து வைச்சது அவளவுதான் எண்டு கவலைப்பட்டன். கடவுளே நீ என்னைக் கைவிடேலை.. கைவிடேலை..

-----நிறைவு-----

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


காயாத வடுக்கள்
நாடக மாந்தர்களும் குரல் மூலம் உயிர்கொடுத்தோரும்
உதயன்
ஜெயரஞ்சன் யோகராஜா
நாதன்
ராசபுத்திரன் யோகராஜன்
கந்தசாமி
ஆர். பகவான்
பத்மா
கமலினி செல்வராசன்
பொன்னம்மா
மகேஸ்வரி
உஷா
வனஜா ஸ்ரீனிவாசன்
தயாரிப்பு
வீ.என். மதிஅழகன்
ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச்சேவையில் முதன் முதலாக 05.06.1996ல் ஒலிபரப்பப் பட்டது

# 3. இருபது ரூபா நோட்டு

## பாத்திரங்கள்

- மோகன் – அரச உத்தியோகத்தர்
- தயா – மோகனின் மனைவி
- இராசம்மா – கிழவி
- செந்தில் – மோகனின் நண்பன்
- விக்னேஸ் – மோகனின் மகன்
- லொத்தர் சீட்டு விற்பவர் – கொழும்பு சிங்களம்
- லொத்தர் சீட்டு விற்பவர் – வவனியா முஸ்லிம்
- லொத்தர் சீட்டு விற்பவர் – யாழ்ப்பாணம் தமிழ்

## காட்சி - 1

*இடம் : மோகனின் வீடு*
*பாத்திரங்கள் : மோகன், தயா, இராசம்மா, விக்னேஸ்*

*(அதிகாலை ஒலி - கூடவே நாய் குரைக்கும் ஒலி)*

*இராச* : பிள்ளை. பிள்ளை. பிள்ளை தயா.. இந்த நாயைப் புடி மோனை.. விடியக்காத்தாலை வலு வேகமாய் நிக்கிறார் போல..

*விக்* : அம்மா.. அம்மா.. இராசம்மா ஆச்சி கூப்பிடுறா.. ஜிம்மி விடுகுதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இராச* : ஓம் மோனை.. விடியக்காத்தாலை வலு வீராப்பாய் நிக்கிறார் போல.. மாறிக்கீறிப் பல்லுப் போட்டாலும். ஒருக்கா உதைப் புடி மோனை.

*தயா* : ஓம் இராசம்மா மாமி.. கொஞ்சம் பொறுங்கோ நான்வாறன் .. அது விக்னேஸ்ன்ர சொல்லு கேளாது. காத்தாலேல கட்டப் பிந்தினால் ஆள் கொஞ்சம் மோசம் தான்..நேற்று உவர் கந்தசாமி யற்றை சேவலிலையும் வாயை வைச்சிட்டுது.. கொஞ்சம் பொறுங்கோ... உவருக்கு (வந்துகொண்டு)..டேய்.. ஜிம்மி.. வா இஞ்சை.. வா.. உனக்கு.. எடு தம்பி விக்னேஸ்; எடுத்தவா அவற்றை சங்கிலியை.

*விக்* : பாருங்கோம்மா அவர் என்னைப் பாக்கிறதை.. சங்கிலியை கொண்டந்ததெண்டு கோவம்போல.. ஆ.. நீங்கள் வாங்கோ ஆச்சி இனிப் பயமில்லை.. ஆள்.. சங்கிலிக் கட்டிலை

*இராச* : மோனை நாயெண்டால் கடிக்கத்தானே வேணும்.. அப்பதானே கள்ளன் காடன் வராமலிருப்பான்.

*தயா* : அதாலைதான் இராசம்மா மாமி.. உதோட இந்தப்பாடு.. இவரும் அடிக்கடி கொழும்பு வவனியா எண்டு வெளியூர் போய் வாறவர்... அப்ப ஜிம்மிதானே வீட்டுக்கு உதவி. ஒரு புள்ளை மாதிரி..

*இராச* : ஓம் தயா அதுவும் நல்லதுக்குத்தானே.. புள்ளை

*தயா* : தம்பி ஆச்சிக்கு உந்த வெத்திலைத் தட்டை எடுத்துக் குடுமோனை.

*விக்* : ஓமம்மா..

*இராச* : ரெண்டு பொயிலைக் காம்பும் கொண்டுவா மோனை.

*மோக* : (வந்துகொண்டு) ஆ..ஆ.. இராசம்மா மாமியே.. இருங்கோ.. ஏனப்பா தயா.. மாமிக்குத் தேத்தண்ணியைக் குடுமனப்பா.. விடியக்காலத்தாலை வெத்திலைத் தட்டை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***இராச*** : சரி அப்ப கொஞ்சமாய் தேத்தண்ணியைத் தா பிள்ளை.. சீனி எப்பனாப் போட்டு..

***மோக*** : எப்பிடி மாமி.. இப்ப கால்என்ன மாதிரி.. அண்டைக்கு கைதடி ஆயுள் வேதத்துக்குப் போனதாய் தயா சொன்னா..

***விக்*** : (வெத்திலைத் தட்டை வைத்து ) இந்தாங்கோ ஆச்சி...

***மோக*** : உதிலை வை தம்பி.. ஆச்சி தேத்தண்ணியைக் குடிச்சிட்டுச் சப்பட்டுமன்.. ..அங்கை ஆயுள் வேதத்திலை என்ன சொன்னவை ஆச்சி

***இராச*** : ஓம் மோனை.. அது வந்து. வயது போன நேரம்.. வாதக்குணம் போல .. அந்த ஆயுள்வேத எண்ணெயப் பூசினா படுக்கையெண்டு கிடவாமல் ஏதோ இயங்கலாம்.. ம்.ம்.இனியென்ன காடு வா வா எண்டுது.. ஏதோ.. அதுகளும் தாய்தேப்பனைத் திண்டிட்டிருக் குதுகள்.. அதுகள் தாங்களாய்ப் புல்லுப்பிடிக்கும் மட்டுமெண்டாலும் இந்தக்கட்டை ஊடாடித் திரியவேணும்.

***தயா*** : (வந்துகொண்டு) காடு ஆரைத்தான் வரவேண்டா மெண்டுது.. குருத்தோடையே எத்தினையள் சரியுது.. எல்லாம் கலிகாலம். அதுவாற நேரம் வரட்டும். இந்தாங்கோ தேத்தண்ணியைக் குடியுங்கோ. விக்னேஸ்! உந்த வெத்திலைத் தட்டத்தை இதிலை கொண்டு வா.. பொயிலைக் காம்பு பெத்தாச்சியின்ரை பாய்ச்சுத்துக்கை கிடக்கும்.

***விக்*** : ஓமம்மா.. கொண்டு வாறன்

***இராச*** : பிள்ளை உவர் .. தம்பி மோகன் எப்ப கொழும்புக்குப் போறார் பிள்ளை.

***தயா*** : ஏன் மாமி நீங்களும் போகப் போறியளே.. என்ன திடீரெண்டு.. ஏன் ஏதும் விசேசமே..

***இராச*** : எனக்கார் கொழும்பிலை இருக்கிறாங்கள்.. எனக்கென்ன விசேசம். (பதிந்து) இல்லைப்பிள்ளை .. வந்து.. தம்பியிட்டை சொல்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சாமான் அங்கை கொழும்பிலை வாங்குவமெண்டு பாத்தன்.. அதுதான் கேட்டன்

***விக்*** : என்ன ஆச்சி அப்பிடி... இப்பதான் எல்லாம் யாழ்ப்பாணத்திலையும் கிடக்குதே.. இன்னும் சிலது அங்கத்தையிலையும் இஞ்சை மலிவு அது தெரியுமே உங்களுக்கு.

***இராச*** : ஓம் மோனை.. அது சரிதானடா.. ஆனால் இஞ்சைவாங்கிறதுக்கு விழாதாம். கொழும்பான் எண்டால் கட்டாயம் விழுமாம். அதுதான் ஒருக்காப் பாப்பமெண்டு நினைச்சன்

***விக்*** : என்ன ஆச்சி அப்பிடி... கொழும்பு விழும் யாழ்ப்பாணம் விழாது.. விளங்கத்தான் சொல்லுங்கோவன்.. அம்மா உங்களுக்குத் தெரியுமே..

***தயா*** : (ஏளனமாக) எனக்கோ... உனக்கடா.. நான்தான் வாய்ச்சன்.. ஊர்சுத்துற உனக்குத் தெரியாது. இஞ்சை அடுப்படியே தஞ்சமெண்டு கிடக்கிற என்னைத்தான் கேள்.. ஓ.

***இராச*** : இதுக்கேன் தாயும் மோனும் புடுங்குப்படுறியள். அது அது.. லொத்தர் ரிக்கெற்று ராசா.. ஓம் மோனை..அது வந்து இஞ்சை யாழ்ப்பாணத்திலை வாங்கிறதுக்கு விழாதாம். அப்பிடி விழுந்தாலும் ஒரு நூறு ஆயிரம் தானாம் விழும். கொழும்பிலை வாங்கிறதுக்கெண்டால் கட்டாயம் லச்சமெல்லாம் விழுமாம். கனபேருக்கு விழுந்துமிருக்காம். உங்கை ரி வி யிலை காட்டிறாங்கள்.

***விக்;***

***தயா*** : இருவரும் சிரித்தல் ..எட உதுவே சங்கதி.

***விக்*** : எட எனக்கு இண்டைக்குத்தானே இது தெரியும். ஆனால் உது பொய்க்கதை ஆச்சி நாங்கள் வகுப்பிலை நிகழ்தகவு எண்டொரு பாடம் படிச்சனாங்கள். அதிலை மாஸ்டர் சொல்லித் தந்தவர் விக்கிற ரிக்கெற்றின்ரை தொகையும் பரிசு கிடைக்க ஒரு காரணியே தவிர.. வேறொண்டுமில்லை. அங்கை கூட விக்கினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுகுது.. இழுக்கேக்கை யாழ்ப்பாணம் கொழும்பு என்னண்டு பாக்கிறது. யாழ்ப்பாண ரிக்கற்றும் கொழும்பு ரிக்கற்றும் பொய்க்கதை... நீங்களே சொல்லுங்கோ பாப்பம்.

*இராச* : உண்மைதான் தம்பி ஆனால் விழேலையே.. அது தான் ஒருக்கால் கொழும்பிலை ஒண்டை வாங்கி பாப்பமெண்டு...

*தயா* : நீயும் உன்ரை நிகழ்தகவும்.. உன்ரை மற்ஸ் மாஸ்டர் சொன்னாக் கிடக்கட்டும். ஒருமனிசர் கேட்டால் ஏலுமெண்டால், விருப்ப மெண்டால் செய்து குடுங்கோ அதை விட்டிட்டு அது இது எண்டு ஏன் தேவையில்லாத வியாக்கியானங்கள்..

*விக்* : இல்லையம்மா தவறைத் தவறெண்டு சொல்லத்தானே அம்மா வேணும். தெரிஞ்சு கொண்டு சொல்லாமல் விட்டால் அதுதான் பிழையம்மா.

*மோக* : (வந்துகொண்டு) ம். ம். உங்கள் ரெண்டு பேருக்கும் விடிஞ்சாப் பொழுதுபடும் வரைக்கும் உதுதான் வேலை.. அவா ஒண்டு சொல்ல அதுக்கு; இவரொண்டு சொல்ல... நல்ல சாடிக்கேற்ற மாதிரி மூடியும். வந்து வாய்ச்சியள்.

*இராச* : தாய் பிள்ளை எண்டா அப்பிடித்தானே இருக்கும் மோனை. அதிலையும் ஆம்பிளைப் பிள்ளையெண்டா.. அதுதான் தம்பி வாழ்க்கை.. தம்பி சொல்லிறன் எண்டு தப்பாய் எடாதை.. மோனை.. நானும்.. எத்தினையைக் கண்ணாலை கண்டன்.. (அழுது கொண்டு) ஏன் அதுகளின்ரை தாய் தேப்பனை கண்ணுக்கு முன்னாலை பறிகுடுத்து கிடங்கு கிண்டி தாக்கேக்கையே நான் பைத்தியமாய் மாறியிருக்க வேணும்.. நானும் அதுகளோடை போயிருக்க வேணும். ஏதோ அந்த மூண்டு குஞ்சுகளாலைதான் இண்டைக்கு உசிரோடை உலாவித்திரியிறன்.. (கண்ணைத் துடைத்து) தம்பி உள்ளதைச் சொன்னாலென்ன எங்கட வீட்டிலை உலை பொங்குதோ இல்லையோ.. அந்தக் குஞ்சுகளாலை.. எங்கட மனசில உவகைக்கு குறைவில்லை தம்பி..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மோக** : அதை ஆர் மாமி இல்லையெண்டிறது.. ஏதோ அப்பப்ப தெரியாதே.. சரி..சரி..கதையோடை கதையாய் நான்தான் இப்ப வீணாய் பழசுகளைக் கிண்டிப்போட்டன். அதுகளை விடுங்கோ..அது சரி நீங்கள் வந்தது ஏன்எண்டு அறியாமலே எங்கையோ போட்டம் இராசம்மா மாமி.. இருந்து கதைச்சுப் போட்டு எல்லாத்தையும் விபரமாய்ச் சொல்லுங்கோ தயாவிட்டை.. நான் வரப்போறன்.

**விக்** : ஆச்சிக்கு கொழும்பிலை லொத்தர்ரிக்கற் வாங்கி வரவேணும்.. அப்பிடித்தானே... எத்தினை வேணுமெண்டு சொல்லுங்கோ.. வேறையொரு தரகர்.. அதுதான்.. அம்மா தேவையில்லை நீங்கள் நிக்கேக்கையே விசயம் முடிஞ்சுது

**இராச** : அவன் வலு கெட்டிக்காரன்தான். உடனை புடிச்சிட்டான்.

**தயா** : ம்.ம். கெட்டிக்காரனோடை பட்டாத்தான் தெரியும் மாமி.. உவர் நாளைக்கு இரவுதான் வெளிக்கிடுறார். அடுத்த சனிதான் திரும்புற எண்ணம்.. பிந்துமோ.. பரவாயில்லைதானே..

**இராச** : இதென்ன நாள் நேரம்பாத்து அவசரமாய்ச் செய்ய வேணுமே.. (பதிந்து) ஏதோ நாலுபேர் சொல்லுகினம். அங்கை எங்கடை ஆக்களுக்கும் விழுந்ததாம். தம்பி மோகனும் கொழும்பு போறார்தானே எண்ணேக்கை ஒரு நப்பாசை அவளவுதான் தயா.. இந்தா புள்ளை இதிலை 20 ரூபாய்க் காசு இருக்கு.. பவுத்திரம்.. ஒரு ரிக்கற் காணும் .. ஆனால் தம்பி குறை நினைக்காதையும் ரிக்கற் கொழும்பிலதான் வேண்டவேணும்

**விக்** : (துடிப்புடன் நக்கலாக) அப்பதான் விழும்.. யாழ்ப்பாணம் விழாது.. கொழும்பு விழும் .. புத்தம் புது 20ரூபா நோட்டு. அம்மா இருந்து பாருங்கோ இலட்சம் கொண்டு வரும். (போய்க்கொண்டு) டட்டணாங்..

**இராச** : தம்பியின்ரை வாய் பொன்வாயாய் அமையட்டும்.. நான் சக்கரை போடுறனடா

----- காட்சி மாற்றம் -----

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - 2

*இடம்* : *மோகனின் வீடு*

*பாத்திரங்கள்* : *மோகன், தயா, விக்னேஸ், செந்தில்*

***தயா*** : விக்னேஸ் இந்தா... அப்பா வெளிக்கிட்டிட்டார்... எங்கை ஆச்சி தந்த காசு.. கொண்டந்து குடு அப்பாட்டை..

***விக்*** : (திரைக்குப் பின்) அம்மா.. (தமிழில்) அன்னையே அந்த இலட்சம் தரப்போகும் புத்தம் புதிய 20ரூபா நோட்டு எங்கேயோ தலைமறைவாகிவிட்டது. நான் என்னசெய்வேன்.. ஏதுசெய்வேன்.

***தயா*** : சும்மா பகிடியை விட்டிட்டு கொண்டந்து குடு.. விக்னேஸ் சும்மாய் காசோடை பகிடிவிடாதை

***மோக*** : சும்மாய் விடப்பா.. இராசம்மா மாமிக்கென்ன கொழும்பிலை ஒரு லொத்தர் ரிக்கெற் அவளவுதானே.. அது நான் வாங்கி வாரன்.. இப்ப அவனோடை ஏனப்பா பாயுறாய்

***தயா*** : இல்லையப்பா அந்தக் கிழவி அதை எவ்வளவு பக்குவமாய்த் தந்தது. ஏதோ ஒரு நம்பிக்கையிலை தந்தது.. ஏனப்பா .. இப்ப என்ன 20ரூபாய் இல்லாமலே.. கிழவி தந்ந காசிலையே கிழவிக்கு கொழும்பிலை ஒரு ரிக்கற் வாங்கி வாங்கோ.. அது விழுந்துதோ இல்லையோ பரவாயில்லை.. தம்பி கொண்டு வா அதை.. நீ அதைக் குடு..தேவையெண்டால் வேறை புது 20 ரூபாய் நோட்டு நான் தாறன்..

***விக்*** : அம்மா நீங்களும் ஆச்சி மாதிரி விழும் எண்டு சொல்லாமல் பிறைஸ் கிடக்கும் அல்லாட்டி வெற்றி பெறும் எண்டு சொல்லுங்கோ..

***தயா*** : (பொய்க் கோபத்துடன்) பிறகு திருத்து.. இப்ப காசைக் கொண்டந்து குடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***மோக*** : பயணம் வெயிக்கிடுறநேரமாய் ஏனப்பா அவனோடை புடுங்குப்படுறாய் ஒரு 20 ரூபாயுக்காக.

***விக்*** : (வந்துகொண்டு)அமைதி நிலவட்டும்..இந்தாருங்கள் அந்த ஆச்சி தந்த லட்சம் தரும் அபூர்வ 20ரூபா நோட்டு... ஜி..பும்பா... (மோட்டார் சைக்கிள் சத்தம்) இதோ செந்தில்மாமா வந்துவிட்டார் தங்களை பஸ்நிலையம் அழைத்துச்செல்ல. (நாய் குரைத்தல்).

***மோக*** : ஆ.. ஆ.. வா செந்தில் வா..

***செந்*** : சரிமச்சான் போவமே.. பயணம் போறது.. கொஞ்சம் வேளைக்காய் போறது எதுக்கும் நல்லது.. என்னவாம் விக்னேஸ் ஏதோ கொழும்பு யாழ்ப்பாணமாம்.. அது என்னகதை தம்பி

***விக்*** : ஒண்டுமில்லை செந்தில் மாமா.. யாழ்ப்பாணம் விழாது.. கொழும்பு விழும் புத்தம்புது 20 ரூபா நோட்டு.

***செந்*** : (சிரித்து) என்ன ராசம்மா ஆச்சியின்ரை கதையே.. அதுக்கே உந்தப்பாடு.

***மோக*** : அப்ப உனக்கும் தெரியும் போலை

***செந்*** : பாவமடா... கிழவி பட்டினி கிடந்தெண்டாலும் கிழமைக்கு ஒரு ரிக்கற் எடுக்காமல் விடாது..நாங்கள் டெயிலி பேப்பர் எடுக்கிறனாங்கள்தானே.. அதாலை றிசல்ட் பாக்க வரும்.

***தயா*** : எப்பவாவது விழுந்திருக்குதா.. செந்தில்;

***விக்*** : அம்மா!! விழுந்திருக்குதா இல்லை.. பிறைஸ் கிடைச்சிருக்கா அப்பிடிக் கேளம்மா. எத்தினை தரம் சொன்னாலும் கேளா.. உதைத்தானே நாய்வாலை நிமித்தமுடியாதெண்டிறது ...

***மோக*** : உதுதான் எப்பவும் இஞ்சை நடக்கிறது செந்தில்.. நாயும்.. வாலும்..

***செந்*** : ஓம்.. எப்பவேனிருந்திட்டு ஒரு 100ஓ 1000மோ கிடைச்சிருக்கு. நான்தான் ரவுணிலை எடுத்துவந்து குடுக்கிறனான்.. ஆச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டா நான்தான் சொன்னனான் கொழும்பிலை எடுத்தால் சான்ஸ் கூட எண்டு ..மற்றது நீயும் இந்தக் கிழமை போறாயெண்டு..

***மோக*** : (சிரித்து) அப்ப நீதான் கொன்ஸல்ரன்ற் எண்டு சொல்லு..

***செந்*** : எப்பிடியெண்டாலும் நீ சொல்லு.. பாவமடா.. எல்லாத்தையும் இழந்து ஒரு ஆதரவும் இல்லாமல் தட்டந்தனியனாய் தாய் தேப்பனைப் பறிகுடுத்த தன்ரை மூண்டு பேரப் பிள்ளையளோடை மனிசி படுற பாட்டுக்கு எப்பவெண்டாலும் ஒருநாள் கடவுள் கண் முழிப்பாரெண்டு கிழவிக்குமொரு நம்பிக்கை..நப்பாசை.. பாவமடா.. உனக்கேதேன் பாரமே.. இல்லைத்தானே.. பிறகென்ன.. கொழும்பிலையே வாங்கி வந்திடு.. கிழவி தந்த காசிலையே வாங்கு... உனக்குப் புண்ணியம் கிடைக்கும்.. மறந்திடாதை.. பாவமடா..

***விக்*** : செந்தில் மாமா.. நீங்கள் பயப்பிடாதையுங்கோ.. அப்பா கொழும்பிலை நிக்கேக்கை நான் நினைப்பூட்டிறன். அது என்ரை பொறுப்பு..

***மோக*** : ஓம் ஓம். நான் கொழும்பிலை வாங்கிவாறன் சரிதானே.. அலட்டினது காணும். வா செந்தில்; லேற்றாகுது.. பிறகு பஸ் வெளிக்கிட்டிடும். அப்ப தயா! தம்பி..!! அப்பா போட்டு வாறன். (போதல்) (மோட்டார் சைக்கிள் சத்தம்)

----- காட்சி மாற்றம் -----

## காட்சி – 3

*இடம்* : *மோகனின் வீடு*

*பாத்திரங்கள்* : *மோகன், தயா, விக்னேஸ், செந்தில்*

*(மேசையில் ரெலிபோன் மணி அடித்தல்)*

***தயா*** : ஹலோ .. ஆர்..ஆ.. நீங்களே. ஆ.சொல்லுங்கோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***மோக*** : வந்த அலுவலெல்லாம் சரி.. ஆனால் உம்மடை தங்கச்சி குடுத்துவிட்ட காசுதான் என்னும் வந்து சேரேலை.. டிலே ஆகும் போல கிடக்குது.. அதுதான்

***தயா*** : இஞ்சைகதைச்சவை.. ஒருகிழமை ஆகுமெண்டுதான் சொல்லிச்சினம்.. பாங்க் எக்கவுண்ட் நம்பர் குடுத்தனான். பிந்தினால் பாங்க்காலயும் அனுப்பலாமாம். உங்களுக்குக் கஸ்டமெண்டால்

***மோக*** : ஓமப்பா இனி சும்மாய் நிக்கிறதெண்டால் என்ரை சொந்த லீவிலைதான் போகும்.. அதுதான் யோசிக்கிறன்

***தயா*** : அதுதானப்பா.. இப்பவே இருக்கிற லீவை முடிச்சுப்போட்டு பிறகு ஒரு அவசரத்துக்கு ஒண்டும் செய்யேலாது. நீங்கள் வாருங்கோ .. நான் அவையிட்டை ரெலிபோனிலை சொல்லுறன் பாங்க்கிலை போடச் சொல்லி.. அப்பிடியெண்டால் இஞ்சையும் எடுக்கலாம்தானே..

***மோக*** : அப்ப.. நீர் சொல்லிவிடும்.. நான் இண்டைக்கு இரவு பஸ்ஸிலை வெளிக்கிடுறன்... தம்பி விக்னேஸ் என்னவாம்..

***தயா*** : நிக்கிறான் கொஞ்சம் பொறுங்கோ .. (கூப்பிடல்).. தம்பி..தம்பி. விக்னேஸ் அப்பா கதைக்கிறார்.. கதைக்கட்டாம். வா.. ஓடிவா

***விக்*** : (வந்துகொண்டு) வாறன்... அப்பா.. சொல்லுங்கோ.

***மோக*** : இண்டைக்கு இரவு வெளிக்கிடுறன். அதுதான் தம்பிக்கு ஏதும் வாங்கவேணுமோ எண்டு

***விக்*** : எனக்கொண்டும் வேண்டாம்.. ஆனால்

***மோக*** : ஆனால்...

***விக்*** : யாழ்ப்பாணத்திலை விழாது கொழும்பிலை விழும்.. 20 ரூபா நோட்டு. அதை.. ஆச்சி சொன்னதை மறந்து போகாதையுங்கோ.. பிறகு ஆச்சியும் ஏன் செந்தில் மாமாவும் சேர்ந்து இஞ்சை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களை இருக்க விடாயினம். திருப்பிபோகவேண்டி வரும்.. அதை மறந்திடாதையுங்கோ.. அது சரி..வாங்கிப் போட்டியளோ

***மோக*** : இல்லை இனித்தான் அதிலை கொழும்புக்கோட்டை றெயில்வே ஸ்ரேசனிலையே வாங்கலாம்..

***விக்*** : ஏதோ மறக்காமல் வாங்கிக்கொண்டந்தால் சரியப்பா.. பாவம் ஆச்சி.. அதே 20 ரூபா நோட்டு ..கொழும்பிலை ரிக்கற்.. அம்மா கதைக்கப்போறியளே .. ரெலிபோனை வைக்கிறன் பாய் அப்பா. (ரெலிபோன் வைக்கும் சத்தம்)

----- காட்சி மாற்றம் -----

## காட்சி - 4

*இடம்* : *கொழும்பு கோட்டை புகையிரத நிலையம்*

*பாத்திரங்கள்* : *மோகன், லொத்தர் சிட்டு விற்பவர்.*

***(புகையிரத நிலையச் சத்தம் சைக்கிளில் லொத்தர் விற்றுக்கொண்டு நிற்க வரல்)***

***மோக*** : மல்லி.. லொத்தர்.. மல்லி.. இங்.கை வா மல்லி.. ஒரு ரிக்கற் தா..

***லொத்*** : றுப்பியள் விஸ்ஸய்.. 20 ரூபாய் மாறுசல்லி கண்ட...ஆ..மென்ன ரிக்கற்... கமத்தி எக்கக் கண்ட.... இருபது ரூபா மாத்தின காசு எடுங்கோ... ஆ... இந்தாரும் ரிக்கற்.. விரும்பின ஒண்டை எடுங்க.

***மோக*** : ம் ஆச்சி சொல்லிவிட்டதுக்குச் சரி..ம்..ம்.. (தனக்குள்) சிலவேளை அவ சொன்னது உண்மையாயிருந்தால்.. நான் எனக்கும் ஒண்டை எடுத்துப்பாப்பம்... என்ன ஒரு 20 ரூபாய் தானே... இஞ்சை எடுத்த ரிக்கெற்றுக்கு ஆச்சிக்கு பிறைஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைச்சால் எனக்குக் கவலையாயிருக்கும் .. ஓம் ஓம்.. எனக்கும் ஒண்டு வாங்குவம்.. ம்.இது ஆச்சியின்ரை காசு.. இதுக்கு முதல் ரிக்கற்.. ஆச்சிக்கு .. இன்னொண்டு எனக்கு வாங்குவம்.. பிறைஸ் கிடைக்காட்டில் பரவாயில்லை.. தம்பி சொன்னமாதிரி ஒரு 20 ரூபாய்தானே.

***லொத்*** : றுப்பியள் விஸ்ஸய்.. 20 ரூபாய்.. மட்ட பறக்குவெனவா..

***மோக*** : தவ எகக்.. இன்னுமொண்டு தா மல்லி.

***லொத்*** : ஆ.. தோறண்ட.. எடுங்க .. தவ 20 ரூபா தாங்க

***மோக*** : ஆ.. இந்தா மல்லி .. ம். அது ஆச்சியுக்கு... இது எனக்கு... மாறுப்படாமல் வேறை வேறையாய் பேசுக்கை வைப்பம். என்ரை ரிக்கற் பேசுக்கை ஆச்சியின்ரை அடையாளஅட்டையோடை.. இப்ப சரி.

*(லொத்தர் விற்றுக்கொண்டு போதல்)*

----- காட்சி மாற்றம் -----

## காட்சி – 5

***இடம்*** : ***மோகன்வீடு***

***பாத்திரங்கள்*** : ***ஆச்சி, விக்னேஸ், தயா***

***ஆச்சி*** : (திரையின் பின்) பிள்ளை... பிள்ளை... தம்பி விக்னேஸ்.

***தயா*** : ஆர்... ஆச்சியே...என்ன ஆச்சி.. இந்த நேரம்

***ஆச்சி*** : சும்மா வந்தன் பிள்ளை.. கிணத்தடிக் கொய்யாவிலை இரண்டு பழம் கிடந்தது.. அதுதான் தம்பிக்குக் குடுப்பமெண்டு

***தயா*** : உங்கட வீட்டிலையும் குழந்தையள் இருக்குதுதானே.. அதுகள் பாவங்களெல்லே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***ஆச்சி*** : அதுகள் நெடுகத்தானே தின்னுதுகள்..

***விக்*** : (வந்து கொண்டு) என்ன ஆச்சி கூப்பிட்டனீங்களே

***தயா*** : மணப்பெடுத்து வந்திடுவான்

***விக்*** : மணப்பில்லை... குரல் கேட்டு..

***ஆச்சி*** : (முந்தானையை அவிழ்த்து ).. இந்தா ராசா.. மரத்திலை புடுங்கின கொய்யாப்பழம்...

***விக்*** : சா.. நல்ல பழம்... நல்ல மணம்..

***தயா*** : அதுதானே சொன்னன்... மணப்பெடுத்து வந்திடுவாய் எண்டு.. கழுவிப் போட்டு சாப்பிடு..

***விக்*** : ஆச்சி.. தங்க் யு ..அப்பா கதைச்சவர்.. ஆச்சியின்ரை இருபது ரூபாவுக்கு கொழும்பிலை லொத்தர் ரிக்கற் வாங்கியாச்சாம்.. ரெலிபோனிலை கதைச்சவர்.. (போய்க் கொண்டு) இருபது ரூபா நோட்டு. கொழும்பில் லொத்தர் ரிக்கற்... ஆச்சிக்கு ஒரு லட்சம் பரிசு.. டட்டணாங்... (மறைதல்)

***தயா*** : நான் சொன்னன்.. அவனுக்கு எப்பவும் எதிலையும் பகிடிதான்.

----- **காட்சி மாற்றம்** -----

## காட்சி - 6

***இடம்*** *: வவனியா புகையிரத நிலையம்*

***பாத்திரங்கள்*** *: மோகன், லொத்தர் சிட்டு விற்பவர்.*

***(புகையிரத நிலையச் சத்தம். இயலு மாயின் யாழ்தேவிப் பாட்டு ..(லொத்தர் ரிக்கற் விற்றல் - ஆனால் முஸ்லிம் தமிழில்)***

***மோக*** : அப்பாடா... ஒருமாதிரி வவனியா வந்தாச்சு..உம் நேரை யாழ்ப்பாணம் எப்ப றெயின் போகப் போகுதோ....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***லொத்*** : (சைக்கிளில் வந்து) லொத்தர்... லொத்தர்... இண்டைக்கு அந்திக்கு இழுக்கிறது.. 20 லெச்சம் பரிசு.. கடைசி ரிக்கற்...

***மோக*** : (தனக்குள்) இஞ்சையும் லொத்தர் ரிக்கற் விக்கிறாங்கள்.. ம்..ம்..உண்மையிலை தம்பி சொன்ன மாதிரி கொழும்பிலை வாங்கின ரிக்கற் விழுந்து ஆச்சிக்கு லட்சம் கிடைச்சா.. ம் அந்த ரிக்கற்றை நான் எடுப்பம் இஞ்சை ஒண்டை வாங்கி ஆச்சிக்குக் குடுப்பம்.. என்ன இன்னும் ஒரு 20 ரூபா தானே..சீச்சீ.. வேண்டாம். ம் ம் அது நம்பிக்கைத் துரோகம்.. அதுமட்டுமே எனக்கும் ஒரு ரிக்கற் கொழும்பிலை வாங்கினனான் தானே.. விழுகிறதென்றால் எனக்கு லக்கிருந்தால் அதுக்கு விழும் தானே. ம்..கொழும்பிலை வாங்கின ரிக்கற் விழுந்து ஆச்சிக்கு லட்சம் கிடைச்சா.. வேண்டாம்.. ஓம்.. ஓம்;.. அது தான்சரி.. அவவுக்கு கொழும்பிலையோ வவுனியாவிலையோ வாங்கினதெண்ட விசயம் எப்பிடித் தெரியவரும். இப்பிடிச்செய்வம். கொழும்பிலை வாங்கின இரண்டு ரிக்கற்றையும் நான் எடுப்பம்.. இஞ்சை வவனியாவிலை ஒண்டை வாங்கி ஆச்சிக்குக் குடுப்பம்.

***லொத்*** : என்னய்யா யோசிக்கியள்.. இருபதுரூபாக்கு 20 லச்சம்...

***மோக*** : தம்பி எனக்கொரு ரிக்கற் தாரும்..ம..இல்லையில்லை ரெண்டு ரிக்கற் தாரும்.ம்..

***லொத்*** : ஆ.. .. எடுங்க .. 40ரூபா தாங்க

***மோக*** : கொழும்பு ரிக்கற் ரெண்டும் எனக்கு.. வவனியா ரிக்கெற் ஒண்டு எனக்கு மற்றது ஆச்சிக்கு

----- காட்சி மாற்றம் -----

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி – 7

*இடம் : யாழ் பஸ் நிலையம்*

*பாத்திரங்கள் : மோகன், லொத்தர் சீட்டு விற்பவர்.*

*(ரிக்கற் விற்றல் தமிழில்)*

*மோக* : (பாக்கைத் தோளில் போட்டுக்கொண்டு வந்து)... ம்.. இஞ்சையும் லொத்தர் ரிக்கற் விக்கிறாங்கள்.. ம்..ம்..உண்மையிலை அவன்; சொன்னமாதிரி கொழும்பிலை வாங்கின ரிக்கற் விழுந்து ஆச்சிக்கு லட்சம் கிடைச்சா..சீச்சீ..அது தானே வவனியாவிலை ஆச்சிக்கு வாங்கியாச்சே..சீ.. அதுக்கு விழுந்தால். இருக்காதும் சிலவேளை வவனியா ரிக்கற்றுக்கு விழுந்தால். இஞ்சை ஒண்டை வாங்கி ஆச்சிக்குக் குடுப்பம்.. என்ன இன்னும் ஒரு 20ரூபா தானே. பரவாயில்லை. .சீச்சீ.. வேண்டாம். ம் ம் அது நம்பிக்கைத் துரோகம்.. அதுமட்டுமே எனக்கும் ஒரு ரிக்கற் கொழும்பிலை வாங்கினனான் தானே.. விழுகிறதென்றால் எனக்கு லக்கிருந்தால் அதுக்கு விழும் தானே. ம்..வவுனியாவிலை வாங்கின ரிக்கற் விழுந்து ஆச்சிக்கு லட்சம் கிடைச்சா.. வேண்டாம்.. ஓம்.. ஓம்;.. அது தான்சரி.. அவ கொழும்பிலையோ வவுனியாவிலையோ யாழ்ப்பாணத்திலை வாங்கினதெண்ட விசயம் எப்பிடிக் கண்டுபிடிக்கப் போகிறா.. அது தெரியவரவே வராது. இப்பிடிச்செய்வம். கொழும்பிலைவாங்கின இரண்டு ரிக்கற்றையும் நான் எடுப்பம்.. அங்கை வவனியாவிலை வாங்கினதையும் நான் எடுப்பம்.. இஞ்சை யாழ்ப்பாணத்திலை ஒண்டை வாங்கி ஆச்சிக்குக் குடுப்பம். ஆச்சிக்கு நம்பிக்கைத் துரோகம் செய்யிறனோ.. இல்லையில்லை.. அவவுக்கு எப்பிடியெண்டாலும் ஒரு ரிக்கற் குடுத்தால் சரிதானே ம். தம்பி. தம்பி.. லொத்தர் தம்பி..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***லொத்*** : சொல்லுங்க ஐயா.. இருபது ரூபாவுக்கு 20 லட்சம்.. அதிர்ஷ்டம் அழைக்குது ஐயா... எத்தினை ரிக்கற் வேணும்... யோசிக்காமல் எடுங்க.

***மோக*** : தம்பி எனக்கொரு ரிக்கற் தாரும்..ம்.. (வாங்குதல்)

கொழும்பு ரிக்கற் ரெண்டும் எனக்கு.. வவனியா ரிக்கெற்றும் எனக்கு.. இது.. இந்த யாழப்பாணத்திலை எடுத்த ரிக்கெற் ஆச்சிக்கு.. (பெருமூச்சு) ம் இன்னொரு 20ரூபா நோட்டு.

----- **காட்சி மாற்றம்** -----

## காட்சி - 8

***இடம்*** : ***மோகனின் வீடு***

***பாத்திரங்கள்*** : ***மோகன், தயா, இராசம்மா, விக்னேஸ்***

***(அதிகாலை ஒலி - நாய் குரைக்கும் ஒலி)***

***மோக*** : (நாயை அதட்டி) டேய் ஜிம்மி.. டேய். அங்காலைபோ.. நான்தான் வந்திட்டனே. ஆ.. விலத்து.. வா. வா. எங்கை அம்மா..

***தயா*** : (வந்துகொண்டு) ஆ.. வாங்கோ.. வாங்கோ. இண்டைக்கு வேளைக்கே பஸ் வந்திட்டுது போல..

***மோக*** : ஓம் தயா..இப்ப என்ன முந்தி மாதிரியே.. ஒவ்வொரு றைவரும் தான் நினைச்ச மாதிரி..எல்லாம் போட்டி.. றேஸ் ஓட்டம்..முந்தி எண்டால் ஒரு..ஒரு வாகனம் திருமுறிகண்டிப் பிள்ளையாரிட்டை நிப்பாட்டாமல் வருமே.. இப்ப ஆர் அதைக் கணக்கெடுக்கிறான்.. ஆயிரத்திலை ஒருத்தன்.எங்கடை பஸ்காரனுக்கு முறிகண்டிப் பிள்ளையார் எங்கையிருக்கிறார் எண்டு தெரியுமோ தெரியாது.. ஒரே இழுவை..இரண்டரை மணித்தியாலத்திலை வவனியா யாழ்ப்பாணம் எண்டால் பாரனப்பா..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***தயா*** : உதாலைதானே எந்த நாளும் அக்சிடென்ற் அது இது எண்டு எத்தினை அசம்பாவிதங்கள்.. சரி அதை விடுங்கோ. நானோ நீங்களோ கதைச்சு உதுகளைத் திருத்தலாமே.. நடக்கிறதைப் பாக்கிறதுதான். வாங்கோ பயணக்களைப்பு. கைகாலைக் கழுவிப்போட்டு வாங்கோ..

***மோக*** : சரி.. தம்பி எங்கை..

***தயா*** : என்னும் ரியூசனாலை வரேலை..ஏனப்பா இராசம்மா மாமியின்ரை ரிக்கற் குடுத்துவிடவே.. வாங்கியந்தனீங்கள்தானே.

***மோக*** : (தடு தடுத்து)ஓமப்பா..நான் மறப்பனே.. (தனக்குள்) யோசிச்சு முடிவெடுப்பம்..ம் இந்தாரும் இந்த பாக்கை வையும்.. (போதல்) தம்பி வரட்டுமன் இராசம்மா ஆச்சியின்ரை ரிக்கற்றைக் குடுத்து விட..

*(விக்னேஸ் திரைக்குள்ளிருந்து வரல்)*

***தயா*** : இஞ்சை அவனே வந்திட்டான்.. தம்பி; சேட்டைக் கழட்டமுந்தி உவ இராசம்மா ஆச்சியிட்டை அப்பா கொழும்பிலயிருந்து வாங்கி வந்த ரிக்கெற்றைக் குடுத்திட்டு வா அப்பன்.

***விக்*** : என்னம்மா யாழ்ப்பாணம் விழாது... கொழும்பு விழும்.. 20 ரூபா நோட்டு அப்பிடித்தானே..

***மோக*** : (தனக்குள்) கிழவி விட்டாலும் இதுகள் விடாது போலை.. ம்.. இதுரெண்டும்.. கொழும்பு..குடுப்பமோ வேண்டாம். இது.. வவனியா குடுப்பமோ. சிலவேளை விழுந்தால்... வேண்டாம்.. குடுப்பம்.. பாவம்.. துரோகம் செய்யக்கூடாது.. கடவுளே மன்னிக்கமாட்டார்.. சீ.சீ. வேண்டாம்..நான் என்ன ஆற்றையேன் சொத்தைத் தட்டிப்பறிச்சனானே.. களவெடுத்தனானே.. பயப்பிட.. ம்.. இதைக் குடுப்பம்.

***விக்*** : என்னப்பா உங்கடைபாட்டிலை முணுமுணுக்கிறியள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மோக* : (படபடத்து) இல்லையப்பா. (தனக்குள்) நடக்கிறது நடக்கட்டும் யாழ்ப்பாணத்திலை வாங்கினதைக் குடுப்பம்..(கூப்பிட்டு) தம்பி இந்தா இதைக் கொண்டு போய்க் குடுத்திட்டு வாதம்பி.

*விக்* : சரி தாங்கோ (சிரித்துக்கொண்டு) அப்பா..ஓ யாழ்ப்பாணம் விழாது. கொழும்பு விழும்.. (போய்க் கொண்டு) இதோ கொழும்பு ரிக்கற்.. (போதல்)

----- காட்சி மாற்றம் -----

## காட்சி - 9

*இடம்* : *மோகனின் வீடு*

*பாத்திரங்கள்* : *மோகன், ஆச்சி, விக்னேஸ், செந்தில், தயா*

*மோக* : ஆ... பேப்பரிலை லொத்தர் றிசல்ரைப் பாப்பம். (எரிச்சலுடன்) ச்சீ.. அநியாயம். (பேப்பரைக் கையில் வைத்துக்கொண்டு) இந்தா கொழும்பு ரிக்கற்.. எனக்கெண்டு ஒண்டு எடுத்தன். அதுக்குமில்லை.. இந்தா மற்றது.. கிழவிக்கெண்டு எடுத்தது.. அதுக்குமில்லை.. வீண். வேலை.. பேசாமல் கிழவியின்ரை காசிலை வாங்கினதைக் கிழவியிட்டையே குடுத்திருக்கலாம்.. நப்பாசை.. தேவையில்லாத ஆசை.. அந்தா அடுத்தது.. .இது.. வவனியா விலை எடுத்தது.. போ. அதுகும் போச்சு.. அற்ப நப்பாசையாலை அறுபது ரூபாய் வீண் .. அது மட்டுமே. அந்த அப்பாவி ஆச்சியையும் ஏமாத்திப் போட்டன்.. சீச்சீ.. நான் பெரிய பிழைவிட்டுட்டன். ஆச்சியின்ர ரிக்கற் நம்பரை எழுதி வைக்கவும் மறந்திட்டன். அதுக்கு விழுந்ததோ எண்டு பாத்திருக்கலாம்.. சான்ஸே இல்லை இதுகளுக்கேயில்லை அது யாழ்ப்பாணத்திலை வாங்கினது. (பெருமூச்சுடன்)சரி.. இனியென்ன .. நடந்தது நடந்ததுதான்.. தெரியாமலே 'கறந்த பால் முலைக்கேறுமே எண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழமொழி இருக்கு'.. ம்.. எல்லாத்தையும் முந்தியே யோசிச்சிருக்க வேணும்.. என்ன செய்ய.

***இராச*** : பிள்ளை. பிள்ளை. பிள்ளை தயா.. .நாய் கட்டியே இருக்கு..

***மோக*** : (தனக்குள்) இந்த நேரம் பாத்து கிழவி செந்திலையும் கூட்டிக் கொண்டு வருகுது ..பேசாமல் பாத்றூம் பக்கம் போவம்.. (கூப்பிட்டு)..தயா .உந்தத் துவாய் எங்கையப்பா.. நான் ஒருக்கால் குளிச்சிட்டு வாறன்

***தயா*** : அங்கை பாத்றூம் காங்கரிலைதான். என்ன இண்டைக்கு வேளைக்கே..

***மோக*** : (பாத்றூம் பாதிக்குப் போதல்) இல்லை ஒரு மீற்றிங் இருக்குது வேளைக்குப் போக வேணும். (தனக்குள்) கிழவியைக் கண்டவுடனை என்ரை மனப்புழுக்கம் ஆருக்குத் தெரியும். தலையிடியும் காய்ச்சலும் தன்தனக்கு வந்தால்தான் தெரியும்

***தயா*** : ஆ.. சரி.. ஆர் கூப்பிட்டதெண்டு பார் விக்னேஸ்..

***விக்*** : (மேடைக்கு வரல்) அம்மா.. (அப்போ ஆச்சியும் செந்திலும் வரல்)

***ஆச்*** : அது நாங்கள் புள்ளை.. நானும் தம்பி செந்திலும்.

***விக்*** : அம்மா..இராசம்மா ஆச்சி வந்திருக்கிறா.. செந்தில்மாமாவும் கூட பேப்பரோடை.

***தயா*** : (மேடைக்கு வரல்) ஆ.. வாங்கோ.. மாமி.வாங்கோ..வாங்கோ செந்தில் எங்கை ரெண்டு பேரும் என்ன ஒண்டாய் வெளிக்கிட்டிருக்கிறியள்..

***மோக*** : (பாத்றூமினுள்) வேறை என்ன! கிழவி சாட்சியோடையே வந்திருக்குது.. யாழ்ப்பாண ரிக்கற் எண்டு கண்டு பிடிச்சிட்டுது போல.. அப்பிடியெண்டா.. மாறித்தந்திட்டன் எண்டு சொறி சொல்லி விழாத கொழும்பு ரிக்கற்றைக் குடுப்பம். எதுக்கும் குளிக்கிறமாதிரி பாத்றூமுக்கை நிண்டு நடக்கிறதைக் கேப்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***இராச*** : வா ராசா.. வா என்ரை செல்லக்குட்டி.. என்ரை பிள்ளையின்ரை வாய் பொன்வாயே தான்.. மகராசா.. என்ரை செல்லக்குஞ்சு. பிள்ளை அண்டைக்குச் சொல்லேக்கையே நான் நினைச்சன்.. அதுமட்டுமே பிறகு கொண்டந்து தன்ரை கையாலை ஆச்சியிட்டைத் தந்து இந்தாங்கோ கொழும்பு ரிக்கற் எண்டு சொல்லித் தரேக்கையே பிள்ளையாற்றை மணிஅடிச்சது நினைச்சன்.. எல்லாம் நல்ல சகுனம்.. நிச்சயம் விழுமெண்டு.. தம்பி ராசா.. ஒரு லச்சமடா.. ஒரு லச்சம்.. அப்பா கொழும்பிலை யிருந்து வாங்கிவந்த ரிக்கற்றுக்கு ஒரு லச்சமடா செல்லம்.. கடவுள் கண் திறந்திட்டாரடா..

***தயா*** : அப்பிடியே..சந்தோசம்.. வடிவாய்ப் பாத்தனீங்களே ஆச்சி.

***செந்*** : ஓம் அன்ரி.. இஞ்சை பாருங்கோ.. நான் கையோடை பேப்பரையும் கொண்டந்தனான்.. என்ரை கண்ணையே நம்பமுடியேலை.. உண்மையிலையே ..பாத்தியளே கொழும்பு ரிக்கற் எண்டால் விழுமெண்டு சொல்லுறது உண்மைதான்

***விக்*** : அம்மா.. சொல்லுங்கோவன். 20ரூபாய் நோட்டுக்கு.. யாழ்ப்பாணம் விழாது.. கொழும்பெண்டால் விழும்..

***செந்*** : அப்பா எங்கை போட்டார் விக்னேஸ்?

***தயா*** : இண்டைக்கேதோ மீற்றிங் இருக்குதெண்டு வேளைக்கு ஒவீஸ் போகவேணுமெண்டு பாத்றூமுக்குக் குளிக்கப் போட்டார்;

***மோக*** : சவுக்காரம் போட்டபடி இருக்கச் சொல்லும் வாறன்.. (தனக்குள் சிரித்துக்கொண்டு) ம்.. ம். இராசம்மா ஆச்சி உங்களுக்கெண்டது உங்களுக்குத்தான்.. என்னாலை மட்டுமில்லை எவையாலும் தட்டிப் பறிக்க முடியாது.. இந்த இருபது ரூபா நோட்டு எத்தனையைச் சொல்லித் தந்தது தெரியுமே..! முதலாவது அடுத்தவன்ரை சொத்துக்கு ஆசைப்படக்கூடாது... மற்றது.. மற்றவையை ஏமாத்த வெளிக்கிட்டால்.. ஏமாறுறது நாங்களேதான் மற்றவையில்லை.. எல்லாத்துக்கும் மேல அவைஅவைக்கு கிடைக்கவேணும் எண்ட நியதியிருந்தால் எவளவு வஞ்சக வேலை செய்தாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கிறதை மற்றவையாலை தட்டிப் பறிக்க முடியாது... (பெருமூச்சு விட்டு) ஆச்சி! ஓம்.. நீங்கள் சொன்ன மாதிரி இந்த இருபது ரூபா நோட்டு மூலம் கண்திறந்தது உங்களுக்கு மட்டுமில்லை... எனக்கும் தான்.. கடவுள்தான் என்னையும் காப்பாற்றி விட்டார்.. இப்ப என்னைத் தேடுகிறியள் சந்தோசம் பகிர.. உண்மை தெரிஞ்சிருந்தால்... தேடியிருப்பினம்தான்; ஆனால்.. உதுக்கில்லை என்னை ஏமாத்துக்காரன் எண்டுபட்டஞ் சூட்ட.. ஆண்டவனே உன் கருணையே என்னையும் காப்பாற்றினது.

----நிறைவு----

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. செய்வினை

பாத்திரங்கள்

- செல்லப் போடியார் – தகப்பன்
- ராசம்மா – தாய்
- சோதி – மகள்
- கந்தசாமி – மாமா
- பூசாரி பூங்காவனம் – வைரவர்கோவில் பூசாரி

## காட்சி - 1

*இடம்* : *செல்லப்போடியார் வீடு.*

*பாத்திரங்கள்* : *செல்லப்போடியார், ராசம்மா, கந்தசாமி, சோதி*

***செல்*** : இஞ்சாரும் ராசம்மா.. உங்களுக்கு எத்தனை தரம் சொன்னாலும் நீங்களும் கேட்டபாடில்லை.. வயதுக்குவந்த பிள்ளையை வைச்சிருக்கிற நாங்கள்தான் உதுகளிலை அவதானமாயிருக்க வேணும்.

***ராச*** : என்ன விடுகதை போடிறியள். என்ன நடந்ததெண்டு மற்றவைக்கு புரியத்தக்கதாய் சொன்னாலெல்லோ நான் என்னத்திலை அவதானமில்லை அல்லாட்டில் உங்கடை சொல்லைக் கேட்கேலை எண்டு தெரியும்.

***செல்*** : உங்களுக்கு எல்லாம் வெட்டிக் கிழிச்சுச் சொன்னாத்தான் புரியும். எல்லாம் பட்டுத் தெளிஞ்சபிறகுதான் அவையவைக்கும் தெரியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ராச* : (எரிச்சலுடன்) ஏனப்பா என்ன நடந்தது. ஆர் என்ன செய்ததெண்டு விவரமாய் சொல்லுங்கோவன்.

*செல்* : இஞ்சை ஆரேன் இண்டைக்கு வந்தவையோ.

*ராச* : என்னப்பா அயலட்டை .. சொந்த பந்தம் .. எண்டிருந்தால் நாலு பேர் வரப் போகத்தானே செய்வினம். அதுக்கென்னப்பா.. எத்தினைபேர் வந்து போயிருப்பினம்.. உங்களுக்குப் பிடிக்காத ஆர் வந்தது எண்டதை வடிவாயத் தெளிவாய்ச் சொன்னாலெல்லோ வந்ததோ வரேலையோ அல்லாட்டில் வந்திருந்தால் ஏன் வந்தவை எண்டு சொல்லலாம்...

*செல்* : அயலட்டையை நான் வரவேண்டாமெண்டே சொல்லுறன். ஆனால் இவன்.. இவன்.. வந்து கெட்டவனப்பா..

*ராச* : (சிறிது கோபத்துடன்) இஞ்சை பார் பிறகும்... இந்த மரமண்டையுக்கை ஏறுதில்லை எண்டு திருப்பித் திருப்பிக் கேக்கிறன்... ஆரெவனெண்ட கதையில்லை.. இப்ப அவன் கெட்டவனாம். இந்தாளை திருத்தவே ஏலாது

*சோதி* : (வந்துகொண்டு) இதுக்கேனம்மா கோவிக்கிறியள். நான் சொல்லுறனம்மா.. அப்பு.. கெட்டவன் .. ஏன் வந்தவன் எண்டு சொல்லேக்கையே தெரியாதே... வேறை ஆரை... நானெண்டால் சொல்லுறன் தேவாங்கு தேவேந்திரனைத்தான் அப்பு கேக்கிறார்.

*ராச* : ஓமடி புள்ளை .. இந்த மரமண்டையுக்குப் புரியலையே பார்..

*சோதி* : அந்தாளைத்... தெரியாமலே தேவாங்கு தேவேந்திரன் எண்டு சொல்லுறது. தேவாங்குக் கண்ணீரிலை வைச்ச சூனியத்தை எடுத்து சாகக்கிடந்த முதலித்தம்பியை எழுப்பினதெல்லே...

*ராச* : நான் ஏதோ வா எண்டு வெத்திலை வைச்சுக் கூப்பிட்டனானே அவனை. அல்லாட்டில்... ஏன் இஞ்சை ஆரேன் பேய்பிடிச்சுக் கிடக்கினமே அவன் வந்தெழுப்ப... நீங்களே சொல்லுங்கோ பாப்பம். வீடுதேடி வாறதுகளை வரவேண்டாம் எண்டு சொல்லவே ஆ.. அப்பதான் அவனுக்கு இன்னும் ஏறிக்கொண்டு வந்து, உந்த தேவாங்கையோ அலவாங்கையோ ஏவிவிடுவான்.. அதை நினைவிலை வைச்சிருங்கோ... ஏதோ உதாலை போகேக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்புளிக்குது வெத்தில சப்பவெண்டு வந்தான்.. உதிலை துப்பின வெத்திலைத் துப்பலக் கண்டுதான் உவளவு சி ஐ டி வேலை யெண்டு இந்த .. இந்த மரமண்டைக்கு ஏறேலையே பார்.

***செல்*** : உதுதான்.. உதுதான் உன்னிலை எனக்குப் பிடிச்சது. இஞ்சை பார் சோதி கொம்மாக்கு சொல்லப்போனால் வந்திடும் சன்னதம். பிறகு கத்திக் குழறி ஊருக்கே எடுத்துரைப்பா.. பிள்ளை. அவன் தேவேந்திரன் சூனியத்தை எடுக்கிறது மட்டுமில்லை வைக்கிறதிலையும் பெரிய கெட்டிக்காறனெண்டது இந்த ஊருக்கே தெரியும். அது மட்டுமே வசியம் மருந்து மந்திரத்திலும் ஆள் விண்ணன் .. தான் நினைச்சதை செய்து முடிப்பான். அதுதான்..

***ராச*** : (இடைமறித்து) ஓ.. அதுதான் அவனை எடுத்தெறியாமல் கொழுவல் குண்டணி இல்லாமல் இருக்க வேணுமெண்டிறன்.

***செல்*** : அதை நான் இல்லையெண்ணேலையப்பா

***ராச*** : (இடைமறித்து) இல்லையெண்டுதான்.. வந்தால் படலையைப் பூட்டு அல்லாட்டில் அடிச்சுக் கலை எண்டிறியளோ...

***சோதி*** : ஏதோ அந்தாள் வந்து போட்டுது... இனி ரெண்டுபேரும் உங்களுக்கை புடுங்குப்பட்டு என்ன நடக்கப்போகுது.

***செல்*** : குமர்ப் பிள்ளையை வைச்சிருக்கிறனாங்கள். நாங்கள்தான் மடியிலை நெருப்பைக் கட்டிக்கொண்டிருக்க வேணும் எண்டு சொன்னன். அதைவிட அவனுக்கும் எனக்கும் வேறை என்னப்பா வில்லண்டம்.

***ராச*** : (கோபத்துடன்) இஞ்சை பாருங்கோ உந்தச் செய்வினையும் சூனியமும் ஆக்கள் நிக்கேக்கைதான் கொண்டு வந்து வைக்க வேணுமெண்டில்லை..

***செல்*** : (இடைமறித்து) அது எனக்கும் தெரியும் ராசம்

***ராச*** : (கோபத்துடன்) (இடைமறித்து) அப்பிடியெண்டால் நான் நிக்கேக்கைதான் கொண்டு வந்து வைப்பன் எண்டமாதிரியெல்லோ உங்கடை கதை கிடக்குது. இது நல்ல கதை... (உரத்து) இனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் எப்ப எண்டாலும் நான் நிக்கேக்கை உந்தப் படுபாவி இந்தப் பக்கம் வந்தானெண்டால் .. படலையைத் தெண்டிப்போட்டு முத்தத்திலையும் மிதிக்காதை எண்டு கலைப்பன். ஓ. கண்டறியாத கதை கதைக்கினம் ஏதோ நான் தான் கூப்பிடுமாப் போலை...

***சோதி*** : அம்மா சும்மா விதண்டாவாதம் செய்யிறது வலு சுகம். ஆனால் ஏறுக்கு மாறாய் ஏதும் நடந்தால் பிறகு மற்றவையிலை நொந்து கத்திக் குழறிப் பிரயோசனமில்லை. அடிச்சுக்கலைக்கச் சொல்லேலை.. எதுக்கும் அப்பு சொன்ன மாதிரி நாங்களும் கவனமாயிருந்தால் சரி.. கதையை வளக்கிறதை விட்டிட்டு ஏதோ நடக்க வேண்டியதைப் பாருங்கோ.. ம் (பெருமூச்சு) அப்பிடித் தான் ஒரு பலனெண்டால் அதை அந்த ஆண்டவனாலையும் மாத்தேலாது..

----- காட்சி மாற்றம் -----

## காட்சி - 2

*இடம் : செல்லப்போடியார் வீடு.*

*பாத்திரங்கள் : செல்லப்போடியார், ராசம்மா, கந்தசாமி, சோதி;*

*(மழைபெய்து காலை விடிதல்)*

***சோதி*** : (கூப்பிடல்) அம்மா.. அம்மா.. இஞ்சை பாருங்கோ.. இங்கை வாருங்கோ.. அப்பா.. ஓடிவாங்கோ.. வந்து பாருங்கோ.. இந்த கடவானுக்கை பாருங்கோ..

***செல்*** : இஞ்சாரப்பா.. அவள் பிள்ளை கிணத்தடியில கத்திறது கேக்கேலையே.. உனக்கு குசினிக்கை போனால் வெளியிலை வரத்தெரியாது.. ராத்திரி சரியான மழை வேறை... என்ன பிள்ளை என்ன .. பொறு மோனை வாறன்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ராச* : இந்தா வாறன். கஞ்சி வடிச்சுக்கொண்டிருக்கிறன்... கொஞ்சம் பொறு.

*செல்* : (வந்துகொண்டு) என்ன என்ன பிள்ளை என்னத்துக்கு இந்தக் கத்து கத்திறாய்.. என்ன... என்ன சோதி நடந்தது

*சோதி* : (பதகளித்து) இஞ்சை.. இஞ்சை.. இஞ்சை பாருங்கோ.. ராத்திரி பெய்த அடைமழைக்கு இதாலை தண்ணி பாயேக்கை... பாருங்கோ மேலை கிடந்த மண்ணரிச்சுக் கொண்டு போனவுடனை தாண்டு கிடந்த எல்லாம் வெளியிலை வந்திருக்குது.. வெள்ளை வெள்ளையாய்... எல்லாம் முட்டைபோலை கிடக்கு.. இஞ்சை பாருங்கோ அப்பு..

*செல்* : ஓமடி பிள்ளை.. கொஞ்சம் வித்தியாசமாய்த்தான் கிடக்குது... கையைக் கிய்யை வைக்காதை.. இஞ்சாலை விலத்து வடிவாய்ப் பாப்பம்..

*சோதி* : இஞ்சை பாருங்கோ அப்பு.. ஒண்டு .. ரெண்டு.. மூண்டு.. எத்தினை முட்டைஎண்டு.. ஒரு ஏழெட்டு வருமப்பு.. பாருங்கோ...

*ராச* : (வந்துகொண்டு) என்ன முட்டையோ.. எங்கையப்பா.

*செல்* : (எரிஞ்சுகொண்டு) முட்டையோ கொட்டையோ.. அவவுக்கு இப்பதான் விடிஞ்சுது.

*ராச* : என்னிலை ஏனப்பா பாயுறியள்.. நான் இந்த அடைமழையுக்கை ஈரவிறகோடை அடுப்போடை மாரடிச்சுப்போட்டு வாறன்.. நீங்களென்னண்டா என்னிலை பாயுறியள்..

*செல்* : உன்னிலை இப்ப ஆரப்பா பாயுறது.. பிள்ளை இது வித்தியாசமாய்த்தான் கிடக்குது.. ஆரோ ஏதோ செய்து போட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வந்து தாட்டது தான். இராத்திரி அடைமழைக்கு மண்கழுவுப்பட்ட உடனை வெளியிலை தெரியுது.

*ராச* : இதென்னப்பா சின்ன முட்டையாய்த் தெரியுது..

*செல்* : சின்னனும் பெரிசும்.. உனக்கு நான் சொல்லித் தரவேணுமே.. கன்னிக்கோழி முட்டை சின்னனாய் ஒரு பாக்குக் கணியத்திலை தான் இருக்குமெண்டு தெரியாதே.. ஆரோ தேடி எடுத்து கன்னிக்கோழி முட்டையிலை ஏதோ செய்து போட்டுத் தாட்டிருக்கிறாங்கள்..

*ராச* : முட்டைதான் தனிய இருக்குமோ?

*செல்* : வேறையும் இருக்கும்.. சிலவேளை மழைத்தண்ணியோடை கழுவுண்டும் போயிருக்கும்.. அல்லாட்டில் கீழைதான் கிடக்குதோ வும் தெரியாது.

*ராச* : ஓமப்பா..

*சோதி* : மம்பட்டியை எடுத்து வரவே அப்பு முழுத்தாய் கிண்டிப்பாப்பம்.

*செல்* : சீ.. என்ன மோட்டுக் கதை கதைக்கிறாய்.. செய்வினை செய்து தாட்டதை வெறுங்கையாலை தொடுறதோ.. மம்பட்டியாலை கிண்டிறதோ.. சிலவேளை கிணறுவெட்ட பூதம் வெளிக்கிட்ட கதையாய்த்தான் முடியும்.

*சோதி* : அப்ப என்னப்பு செய்யுறது..

*செல்* : ஆரேன் மருந்து மந்திரம் செய்யுறவங்களைக் கூட்டியந்தாத்தான் தெரியும்.

*ராச* : உவன் தேவாங்கு தேவேந்திரனைக் கூட்டியந்து காட்டுவமே..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***செல்*** : இஞ்சைபார் கொம்மாவை.. தாட்டவனையே கூட்டியந்து காட்டப் போறாவாம். அப்பதான் ஏதேன் கொஞ்ச நஞ்சம் தவறிப்போனாலும் அவன் அதையும் சேத்து முடிப்பான்.

***ராச*** : ஏனப்பா கண்கெட்ட கதை கதைக்கிறியள். கண்ணாலை காணாததை கண்டமாதிரிச் சொல்லாதையுங்கோ..

***சோதி*** : வேறை ஆரம்மா இந்த ஊரிலை உந்த வேலைசெய்யுறது..

***ராச*** : அப்ப தேப்பனும் மோளும் சேர்ந்து தேவாங்கு தேவேந்திரன்தான் செய்வினை செய்து வைச்சதெண்டு முடிவெடுத்திட்டியளோ

***சோதி*** : அம்மா..

***செல்*** : அவவுக்கு இன்னும் நம்பிக்கையில்லை.. சாட்சி வேறை வேண்டிக்கிடக்குது போலை.. இதுகளெல்லாம் சாட்சியை வைச்சுக்கொண்டு செய்யுற வேலையில்லையப்பா..

***ராச*** : அது தெரியும்.. ஆனால் கண்ணாலை காணாததைக் கதைக்க வேண்டாம் எண்டுதான் சொல்லுறன். றோட்டாலை போற ஆற்றையேன் காதிலை பட்டு.. அவன்பாவிக்கு ஆரென் போய்க்கீய்ச் சொன்னால்.. துலைஞ்சுது.. பிறகென்ன சண்டமாருதம்தான்...

***செல்*** : என்ன ராசம்.. உனக்கும் ஆசையாய்க் கிடக்கோ..

***ராச*** : உள்ளதைச் சொன்னால் உடம்பெல்லாம் குத்துதோ உங்களுக்கு

***சோதி*** : இனித் தொடங்கியிட்டியள்.. ரெண்டு பேரும்... எப்ப விழும் பொறுக்கிறதெண்டிருப்பியள்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கந்* : (வந்துகொண்டு) என்ன அக்காள் குடும்பமே கிணத்தடியிலை கூடிநிக்கிறியள்.. என்ன ராத்திரிப் பெய்த மழைக்கு ஏதேன் புதையல் கிதையல் கிடைச்சிருக்கோ..

*ராச* : (எரிச்சலுடன்) ஓ.. இஞ்சை புதையல்தான் கிடைச்சிருக்கு வா.. வந்து பார்.. எந்த அறுவானோ அள்ளிவைச்சிருக்கிறான்.. வா நீயும் வந்து பார்.

*செல்* : ஏனப்பா இப்ப கத்திக் குழறி ஊரைக் கூட்டுறாய்.. கொஞ்சம் அமைதியாய்க் கதையப்பா.. நீ வீண் சோலியை வீணாய் விலைக்கு வாங்கிறனெண்டு நிக்கிறாயப்பா...

*சோதி* : ஏன் சோதி என்ன நடந்தது?

*செல்* : இஞ்சாலை வா மச்சான். வந்து நீயே பார்.. கொக்காளுக்குச் சொல்லப்போனால் கோவம் பொத்துக் கொண்டு வருகுது

*ராச* : எனக்கிஞ்சையொண்டும் பொத்துக்கொண்டு வரேலை.. அது ஆரெண்டாலும்.. ஆரையெண்டாலும் கண்ணாலை காணாதததைக் கண்டதெண்டு சொல்லவேண்டாம் எண்டுறன். ஓ அவளவுதான்.

*சோதி* : இஞ்சை பாருங்கோ மாமா.. இதைத்தான்.. நான் கண்டு பயந்து போனன்..

*செல்* : பார் மச்சான். நீயே சொல்லு.. ஆரோ கன்னிக்கோழி முட்டையிலை செய்து போட்டுக் கொண்டந்து தாட்டிருக்கிறாங்கள். அது எங்கடை நல்ல காலமோ கெட்ட காலமோ தெரியாது.. நேற்று பெய்த மழைக்கு மேலை கிடந்த மண் கழுவுப்பட வெளியிலை வந்திருக்குது.. உவள் புள்ளைதான் விடியக்காத்தாலை முகம் கழுவ வரேக்கை கண்டு கத்தினவள். நல்ல காலம் கால் கீல் படேலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கந்* : ஓமக்காள் இது வித்தியாசமாய்த்தான் கிடக்கு.. கையைக் காலை பட விடாமல் ஒரு காவோலையாலை மூடிப்போட்டு வாங்கோ வீட்டுக்கை போயிருந்து மெதுவாய்க் கதைப்பம். சும்மாய் கிணத்தடியிலை நிண்டு ஆள்காட்டிப் பிரசித்தம் போடாதை யுங்கோ... இது கன்னிக்கோழிமுட்டை போலைதான் கிடக்குது.. கன்னிக்கோழிமுட்டையும் காலடி மண்ணும் எண்டால் கைமேலை பலன் எண்டெல்லே சொல்லுறவை..

*செல்* : உதுக்கை காலடி மண்ணோ சுடலை மண்ணோ கிடக்கு தெண்டு ஆர்கண்டது.. எந்தப் படுபாவி .. என்னத்திலை செய்து .. எதை ஏவி விட்டு .. என்ன கூத்துப் பாக்க ஆசைப்பட்டவனோ.. இருக்கிற சோலி சுறட்டுக் காணாதெண்டு இதுவேறையொண்டு...

*சோதி* : இன்னும் என்ன கீழை கிடக்குதெண்டு கிண்டிப் பாக்கவும் அப்பு விடுறாரில்லை பயப்புடுத்திறார். பேய் பிசாசு வெளிக்கிட்டிடுமாம் மாமா.

*கந்* : சும்மாய் விசர்க்கதை கதையாதை கண்டியோ.. தாட்டவன் ஆசு மாசு பார்க்கவும் வருவான். நாய் பூனை மிதிச்சாலும் .. ஆள் அரவம் காட்டாமல் உந்தா அதிலை கிடக்கிற அந்தக் கரப்பாலை வடிவாய் மூடிப்போட்டு வா.. முட்டையெல்லே.. காகம் கீகம் கண்வைச்சால் எல்லாத்தையும் சிதிலமாக்கிப்போடும்.

*செல்* : உதைச்சொல்லப்போகத்தான் கொக்காளுக்கு மூக்குக்கை வருகுது..

*ராச* : ஏன் பொய் சொல்லுறியள்.. தேவாங்கு தேவேந்திரன்தான் செய்திருப்பன் எண்டு கண்ணாலை கண்டமாதிரிச் சொன்னதுக்கெல்லோ நான் கண்காணாமல் மற்றவையைக் குற்றம் சாட்டவேண்டாம் எண்டு சொன்னனான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*செல்* : வேறை ஆரப்பா இந்த ஊரிலை உதுகளைச் செய்யிறதிலை கெட்டிக்காரன். நீயே சொல்லு பாப்பம்.

*ராச* : சரி.. கெடுகுடி சொல் கேளாது. செய்வினை செய்தவன் ஆரோ எவனோ.. அவன் இவன் எண்டு சும்மாய் கண்டவனெல்லாரையும் இழுக்காமல் இனி அடுத்ததாய் ஆகவேண்டியதைப் பாருங்கோ..

*கந்* : ஓம் அக்காள்.

*சோதி* : இஞ்சை ஊருக்கை எண்டால் தேவாங்கு தேவேந்திரன் தான்...

*செல்* : (இடைமறித்து) அதைத்தானே வேண்டாம் எண்டிறன்.. பிறகும் பிறகும்..

*கந்* : ஓம். அவன் கெட்டவன் பிள்ளை.. வேறை உவர் அம்பலத்தாடி வைரவகோவில் பூசாரி பூங்காவனமும் கெட்டிக்காரன். ஆனால் ஆள் ஊருக்கை காட்டிக் கொள்ளுறேலை..

*செல்* : ஆளுக்கு வைரவர் வாலாயமும் இருக்கு..

*ராச* : அந்தாளை சம்மதிக்க வைக்கிறதெண்டால் கஸ்டம்.

*கந்* : ஓம் அக்காள் ..இனி அந்தாள் இதுகளை நேரை கதைக்கிறதையும் அவளவாய் விரும்புறதில்லை..

*செல்* : அப்பிடியெண்டால் ஒரு பூக்கட்டி வைச்சுப் பாக்கிற மாதிரி போவம். பிறகு விசயத்தைச் சொல்லுவம்

*கந்* : ஓம் அதுதான் நல்லது. அந்தாள் பூசைக்கு வர ஒன்பது மணி வரையாகும். குளிச்சு வெளிக்கிட்டு நில்லுங்கோ. நானும் வாறன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***செல்*** : பிள்ளை.. உந்த பூமரத்திலை இரண்டு மூண்டு வெள்ளைப்பூவும் சிவத்தைப்பூவும் புடுங்கு புள்ளை.. கையோடை ஒரு ஊதுபத்திப் பெட்டியும் இரண்டுபைக்கற் கற்பூரமும் எடுத்து வை..

***கந்*** : (போய்க்கொண்டு). நானும் வரப்போறன். நிண்டு மினைக் கிடாதையுங்கோ.. உதை நான் சொன்னமாதிரி உந்தக் கரப்பாலை மூடிவிடு..

----- காட்சி மாற்றம் -----

## காட்சி – 3

*இடம் : வைரவகோவில்.*

*பாத்திரங்கள் : செல்லப்போடியார், கந்தசாமி, பூசாரி பூங்காவனம்*

*(கோவில் மணி ஓசை கேட்கின்றது)*

***பூசாரி*** : என்ன மச்சானும் மச்சானுமாய் சோடி சேர்ந்து வந்திருக்கிறியள். இண்டைக்கு செவ்வாய் வெள்ளியும் இல்லை .. விசேச நாளுமில்லை..

***கந்*** : அது வந்து பூசாரியார். வந்து.. ஒரு பூக்கட்டி வைச்சுப் பாப்பமெண்டு வந்தனாங்கள். .

***பூசாரி*** : நல்லது.. நீங்கள் பூக்கட்டி வைச்சுப்பாக்க வந்ததாலை நான் ஏன் எதுக்கெண்டு கேக்கக்குடாது. அம்பலத்தாடியானோடை கிடந்து மாயுற உங்களுக்கு ஒருநாளும் கெடுதல் வராது.. சரியோ பிழையோ அவன் விடுறவழியே செய்வமெண்டு நினைச்சுக்கொண்டு.. கொண்டு வந்த பூக்களைத் தாங்கோ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*செல்* : இந்தாருங்கோ ஐயா.. இதிலை கற்பூரமும் ஊதுபத்தியும் கிடக்கு.

*பூசாரி* : உந்தத் தேங்காயை ஒருக்கா உடைச்சுத் தாங்கோ.

*கந்* : இஞ்சை தாங்கோ அத்தார். நான் உடைச்சு வாறன்.

*பூசாரி* : சரி.. இதைத்தொட்டுக் கும்பிடுங்கோ..

*பூசாரி* : மந்திரம் சொல்லிக்கொண்டு (பூசை நடத்தல்)

*ஓம் ஏம் ஐம் க்லாம் க்லீம் க்லூம்*
*ஹ்ராம் ஹ்ரீம் ஹ்ரும் சகவம்ஸ*
*ஆபதுத்தோரணாய அஜாமின*
*புந்தநாய லோகேஸ்வராய*
*ஸ்வர்ணாகர்ஷண பைரவாய*
*மமதாரித்ரிய வித்வேஷணாய*
*ஓம் ஸ்ரீம் மஹாபைரவாய நமஹ*

*பூசாரி* : சரி.. இந்தாங்கோ.. வீபூதியைப் பூசிக்கொண்டு நல்லாய் மனசிலை நினைச்சுக்கொண்டு போடியார் ஒண்டை எடுங்கோ..

*செல்* : சரி ஐயா... (அவிழ்த்து).. ஆ.. வெள்ளைப்பூவந்திருக்குது ஐயா...

*பூசாரி* : பிறகென்ன போடியார். நீங்கள் நினைச்சது நடக்கும். நினைச்சது நன்மையாயே நடக்கும்.. பயப்பிடாமல் காரியத்திலை இறங்குங்கோ.. எதுக்கும் கந்தசாமி மற்றப்பூவையும் எடுத்துப் பாரும்.

*கந்* : என்ன ஐயா உங்களிலை நம்பிக்கை இல்லாமலே..

*பூசாரி* : இஞ்சே கந்தசாமி... நானில்லை சிலவேளையளிலை வைரவரே மாத்தியிருப்பார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***கந்*** : சிவப்புத்தான் ஐயா

***பூசாரி*** : சரி.. பிறகென்ன.. போடியார்.. ஒண்டுக்கும் பயப்படாதையும்..

***செல்*** : ஐயாவிட்டைச் சொன்னாலென்ன.. இண்டைக்கு காலமை எங்கட பிள்ளை குளிக்கப் போகேக்கை வித்தியாசமாய்த் தாட்டுக்கிடந்த முட்டையள் கொஞ்சத்தைக் கண்டவள்.

***கந்*** : ஆரோ கன்னிக்கோழிமுட்டையிலை ஏதோ செய்து கொண்டந்து தாட்டிருக்குப் போல கிடக்குது.. அது தான் நாங்கள் காதும் காதும் வைச்சமாதிரி நேரையே வைரவரிட்டை வந்தனாங்கள்

***பூசாரி*** : இஞ்சை பாருங்கோ .. அதாலை எந்தத் தீங்குமில்லை எண்டு வைரவர் சொல்லிப்போட்டாரே.. பிறகென்ன.. உது நினைக்கிறது மாதிரி இல்லை, வேறை ஏதேனுமாய்த்தானிருக்கும்.. ஒண்டுக்கும் பயப்பிடாதையுங்கோ..

***கந்*** : எண்டாலும் ஐயா கண்ணாலை கண்டதெல்லோ.. ஐயாவும் ஒருக்கா வந்து பாத்தால் நல்லதெண்டு நினைக்கிறம்.. அதுதான்.

***பூசாரி*** : நானென்னத்துக்கு.. அதுதானே வைரவர் ஒண்டுமில்லை எண்டிட்டாரே..

***செல்*** : அது சரி. வைரவர் கைவிடார் எண்டது தெரியும். ஆனாலும் ஐயா பெண்பிரசுகள் ஊசாடிற இடமெல்லே.. ஒருக்கா வந்து அதைப்பாத்து எடுத்து விட்டால் நல்லதெண்டு நினைக்கிறன் ஐயா..

***பூசாரி*** : செல்லப்போடியார் அதுவும் ஒருவிதத்திலை பாக்கேக்கை உண்மைதான். இஞ்சேரும் நான் இப்ப நேரமில்லாததாலை உதுகளைக் கைவிட்டிட்டன். இனி கோயில்வேலையள் செய்யேக்கை உதுகளையும் செய்தால் கும்பிடவாறதுகளும் மாந்திரிகனெண்டெல்லே என்னைப் பாக்குதுகள்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கந்* : இதுகளைக் கண்டவையோடையும் கதைக்கேலாது தானே ஐயா.. அதுதான்.. நீங்களெண்டால்.. அல்லாட்டில் ஐயாவுக்குத் தெரிஞ்ச நம்பிக்கையான வெளியூராக்களாரேன் எண்டாலும்..

*பூசாரி* : விளங்குது கந்தசாமி.. சரி எனக்குத் தெரிஞ்ச நம்பிக்கையான ஒரு ஆள் உந்தக் கச்சாய்த் துறைமுகத்தடியிலை இருக்குது. ஆனால்; ஆள் முந்தநாள்தான் மட்டக்கிளப்புக்கு உப்பிடி ஒரு அலுவலுக்குத்தான் போயிருக்கு. வர எப்பிடியும் ஒரு நாலைஞ்சு நாளாகும்

*கந்* : அது பரவாயில்லை... இப்பவே போனிலை கதைச்சு வைச்சியளெண்டால் வந்தகையோடை தாமதிக்காமல் காதும் காதும் வைச்சமாதிரி அலுவலை முடிச்சிடலாம்.

*செல்* : கண்ணாலை கண்டிட்டு அதை வைச்சுக்கொண்டு இருக்கிறதும் ஒரு அசௌகரியம்தானே ஐயா... இனி நாலுபேர் வந்து போற.. பெண்பிரசுகள் புழங்குற இடமுமெல்லே.. இனி அவன் தேவாங்கு தேவேந்திரன் அல்லும் பகலும் அதாலைதான் போய் வாறவன்.. இப்பிடி நாங்கள் கண்டிட்டம் எண்டறிஞ்சால் ஏறுக்கு மாறாய் பிறகும் ஏதும் செய்துபோடுவான்..

*பூசாரி* : எனக்கும் உம்மட ஆதங்கம் புரியுது போடியார்.. வைரவரே சொன்னாப்பிறகு.. பிறகுமேன் தேவேந்திரனைப்பற்றியே கதைச்சுக்கொண்டு நிக்கிறீர்..

*செல்* : அது வந்து..

*பூசாரி* : வந்தும் போயும்..சரி..சரி..செல்லப்போடியார்..எல்லாம் மனிச மனம்தானே... சரி வினையிருக்குதெண்டு வைரவரிட்டை வந்தனீர்.. அடைக்கலம் எண்டு வந்தால் அவர் காப்பாற்றுவார் தானே...

*செல்* : கண்ணுக்குமுன்னாலை நிண்டாடிற குலதெய்வமெல்லே ஐயா..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பூசாரி* : நீரும் விடுற பாடாய்த் தெரியேலை. சரி.. ம் குல தெய்வங்களும் நம்பி தேடிவந்தவையை விடுறதில்லை... எதுக்கும்.. வைரவற்றை கோமுகையாலை அபிசேகத் தண்ணி ஓடுற வழியிலை இருக்கிற மண்ணிலை கொஞ்சத்தை அள்ளிக்கொண்டு போய் வெளியாலை தெரியாமல் மூடும்.

*செல்* : சரி ஐயா..

*பூசாரி* : நானும் கொஞ்சத் தண்ணி ஓதித் தாறன். உம்மடை மனிசிக்காரி ராசம்மா சுத்தமாய் குளிச்சு விடியக்காத்தாலை இதிலை ஒரு கிண்ணத்தை எடுத்து ஒரு செம்புத்தண்ணியிலை கலந்து அந்த மூடின மண்ணுக்கு மேலை ஒரு ஐஞ்சு நாளைக்கு தெளிக்க வேணும். அதுவே முறையான காவலாயிருக்கும். ஒரு பாதகமும் வராது..

*கந்* : சரி ஐயா.. நல்லது அப்பிடியே செய்யிறம்.

*பூசாரி* : நானும் நேரம் கிடைச்சால் ஒருக்கால் வந்து பாக்கிறனே

*செல்* : நல்லது ஐயா..

*பூசாரி* : சும்மாய் மனதைப்போட்டு அலையவிடாதையும்.. அது ஒண்டுமில்லை எண்டு பெரியவர்தான் விடைசொல்லிப் போட்டாரே... ஒண்டும் நடவாது மனதைத் திடப்படுத்திக் கொள்ளும்.

**செல்லப்**
**இருவரும்**: சரி ஐயா.. நாங்கள் வாறம்.

----- காட்சி மாற்றம் -----

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - 4

*இடம் : செல்லப்போடியார் வீடு.*
*பாத்திரங்கள் : கந்தசாமி, சோதி*

***சோதி*** : மாமா.. பூசாரி பூங்காவனத்தார் ஒண்டுமில்லை எண்டுதானே சொன்னவர். பூவும் நீங்கள் நினைச்சமாதிரி வெள்ளை யாய்த்தானே வந்தது. ...

***கந்*** : ஓம் பிள்ளை பயப்பிடுறதுக்கு ஒண்டுமில்லை எண்டுதான் சொன்னவர்

***சோதி*** : அப்ப பிறகென்ன மாமா... உது என்னவோ ஏதோ.. சும்மாய் தண்ணி ஊத்திக்கொண்டிராமல் கை கால் படாமல் மம்பட்டியாலை அள்ளி பெரிய நார்க்கடகத்துக்கை போட்டுக்கொண்டு போய் சுடலையடிக் கடலிலை கொட்டிவிடுவம். விடியவிடியக்காத்தாலை அம்மா தண்ணி ஊத்திறதை ஆரேன் கண்டாலும் சிரிக்கப் போகுதுகள்

***கந்*** : அதெண்டால் சரிதான்.. கொப்பரெல்லே நாண்டு கொண்டு நிக்கிறார்..

***சோதி*** : அவரை விடுங்கோ மாமா.. நீங்கள் பயந்தால் சொல்லுங்கோ நான் எல்லாம் செய்து தாறன் நீங்கள் கொண்டு போய்க் கொட்டுங்கோ..

***கந்*** : எடி.. எடி.. நீ பெடியனைப்போல.. அக்காளுக்கு பெடியனாப்பிறக்க வேண்டியனீ.. தவறிப் பெட்டையாய் பிறந்திட்டாய்.. உதைக் கொப்பர் கேள்விப்பட்டாரெண்டால் இப்ப தேவாங்கன் வாறதுக்கு கொம்மாவோடை துள்ளுறது மாதிரி என்னையும் இந்தப்பக்கம் வர விடார். அதுகிடக்கட்டும்.. இன்னுமென்ன ரெண்டொருநாளிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசாரியாற்றை ஆள் வந்திடுவான்தானே.. பொறுத்தனாங்கள் தானே.. கொஞ்சம் பொறுப்பம்.

***சோதி*** : பூசாரியாற்றை ஆள்வருகுதோ இல்லையோ.. அம்மா ஊத்திற தண்ணியிலை அந்தச் செய்வினையோ சூனியமோ செய்து வைச்ச கன்னிக்கோழிமுட்டை .. முளைச்சாலும் முளைச்சிடும். அதை நினைப்பிலை வைச்சிருங்கோ..

***கந்*** : கொப்பர் ஒருபக்கம் பொறியிலை அம்பிட்ட எலிமாதிரி முழிசிக்கொண்டு திரியிறார். கொம்மா என்னடா எண்டால் இடி விழுந்தது மாதிரி அண்டையிலையிருந்து பேச்சு மூச்சில்லாமல் திரியுறா.. நீ என்னடா வெண்டால் முட்டை முளைச்சிடும் எண்டு முசுப்பாத்திபண்ணுறாய். ம் (பெருமூச்சு).. இளங்கண்டு பயமறியாது எண்டு தெரியாமலே சொல்லுறது..

----- காட்சி மாற்றம் -----

## காட்சி – 5

*இடம் : செல்லப்போடியார் வீடு.*

*பாத்திரங்கள் : செல்லப்போடியார், ராசம்மா, கந்தசாமி, சோதி.*

***ராசம்*** : (கூப்பிடுதல் - பதகளித்து) பிள்ளை சோதி.. சோதி.. இஞ்சாருங்கோ இஞ்சை வாங்கோ.. ஒருக்கா ஓடிவாங்கோ.. சோதி.. இஞ்சாருங்கோ

***செல்*** : என்னப்பா என்ன.. கிணத்தடியிலை நிண்டு கத்திறாய் விடியக் காத்தாலை.. அவள் பிள்ளை மாமனார் வீட்டை போட்டாளப்பா.. (வந்து கொண்டு).. என்னப்பா என்ன விசேசம்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கந்* : (தூரத்தில்) சோதி.. சோதி.. பிள்ளை கொம்மா கூப்பிடு மாப்போலை கிடக்குது.. கிணத்தடியிலை இருந்து உன்னைத்தான் கூப்பிட்டவ.. இஞ்சாலை வா .. போய் என்னண்டு கேட்டுப்பார்.

*ராசம்* : சோதி.. கூப்பிட்டது காதிலை விழேலையே.. கொம்மானையும் கூட்டிக்கொண்டு கிணத்தடிக்கு வா மோனை..

*சோதி* : (தூரத்தில்) வாறனம்மா.. மாமா உங்களையும் கூட்டிக்கொண்டு தான் வரட்டாம்..

*கந்* : வாறனெண்டு சொல்லு பிள்ளை..

*ராசம்* : என்னப்பா .. என்னப்பா நீங்கள் செய்யிறியள்.. அவள் வரட்டும்.. நீங்கள் தன்னும் ஒருக்கா வாங்கோவன்.. ஒரு ஆத்திரம் சம்பத்தெண்டால் இந்த மனிசன் நகரவே நகராது.. என்னப்பா நான் கூப்பிடுறது கேக்குதே..

*செல்* : (வந்துகொண்டு) கேட்டதப்பா கேட்டது .. நீ எப்ப கூப்பிடுவாய் ஓடிவருவமெண்டு என்ன கியர் போட்டுக் கொண்டே நிக்கிறது. (கிட்டவந்து) என்னப்பா தண்ணி ஊத்தின குறையிலை அப்பிடியே நிண்டிட்டாய் .. என்னண்டு இனித்தன்னும் சொல்லனப்பா ..இந்தா பிள்ளையும் மாமனோடை வந்திட்டாள்..

*சோதி* : என்னம்மா.. ஏன் என்ன நடந்தது..

*கந்* : என்னக்காள்.. ஓடிவா ஓடிவா எண்டு கத்திக்குழறினாய். இப்ப எல்லாரும் வந்து என்னண்டு கேட்டால் வாயைப் பொத்திக்கொண்டு நிக்கிறாய்..

*ராசம்* : இஞ்சை... இஞ்சைபாருங்கோ... அந்த கன்னிக்கோழி முட்டையள்..

*சோதி* : என்னம்மா... இருக்கிறது வளர்ந்திட்டுதோ.. அல்லாட்டி வேறையும் தாட்டிருக்கோ.. என்னண்டு சொல்லம்மா..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ராசம்* : உனக்கடீ... பகிடியை விட்டிட்டு வந்து பாருங்கோ..

*சோதி* : மாமா.. அப்பு. இஞ்சைபாருங்கோ .. இஞ்சை ..அது ஏதோ.. முட்டைக்குள்ளையிருந்து ஏதோ குஞ்சு பொரிச்சிருக்குது... நிறையக் குஞ்சுகள். இஞ்சை பாருங்கோ..

*செல்* : கை.. கை.. கையை வையாதை.. என்னவோ எதுவோ தெரியாது.. குஞ்சுகளிலையும் செய்யுறவங்கள்.. கையை எடு... முட்டையிலை செய்தது வெளிச்சிட்டு தெண்டு இப்ப குஞ்சிலை ஏவிவிட்டிருக் கிறாங்கள் போல.. பிள்ளை இஞ்சாலை வா.. எழும்பு.. கையிலை காலிலை பட்டாலும்.. உனக்கு எதிலையும் பகிடிதான். இஞ்சாலை வா.. சொன்னாக் கேள்பிள்ளை.

*ராசம்* : கவனம் மோனை கொப்பர் சொல்லுறதைக் கேட்டுநட

*சோதி* : நான் தொடாமல் பாக்கிறனம்மா. என்னண்டு பாப்பம்.

*கந்* : தொடுறியோ இல்லையோ.. ஏன் மோனை வீண்சோலியை விலைக்கு வாங்கிறாய்.. அப்பா அம்மா சொல்லுறதைக் கேள்.

*சோதி* : சின்னதுகள் ஊருது போலை கிடக்குதம்மா.. கோழிக்குஞ்சிலை ஏவிவிட்டிருந்தால் குஞ்சுகள் கத்துமெல்லே அப்பா.. இது கத்தேலையே.. வேறை ஏதோ..

*செல்* : மாந்திரீகம் எண்டுறது உப்பிடித்தான் பிள்ளை.. மயக்கிறதுக்கு என்னென்னவெல்லாமோ செய்வாங்கள்.. (ஆத்திரத்தில்) உவன் தான் தான் முட்டையிலை செய்தது வெளிச்சிட்டுதெண்டு இப்ப என்னவோ ஊருறதிலை செய்திருக்கிறான் போலை.. பிள்ளை இஞ்சாலை வா .. கிட்டத்திலையும் போகாதை... பிள்ளை குஞ்சோ கோழியோ எண்டு ஆராய்ச்சி செய்யிறதுக்கு இது நேரமில்லை.. மனிசர் சொல்லுற பறையிறதைக் கேள்மோனை..

*ராசம்* : பிள்ளை சொன்னாக்கேக்கவேணும்.. பூனைக்கு விளையாட்டாம் சுண்டெலிக்கு சீவன் போகுதெண்டது போலை நாங்கள் என்னமோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோ எண்டு பதறிறம் நீவேறை..(அதட்டி) இஞ்சாலை எழும்பி வா

***சோதி*** : நீங்கள்தானே.. ஓடியா ஓடியா .. போதாக்குறைக்கு மாமாவையும் கூட்டிவா எண்டு கத்திக்குழறிப்போட்டு இப்பவந்து அதை என்னண்டு பாப்பமெண்டால் .. ஒவ்வொண்டு சொல்லிக்கொண்டு.. மாமா.. இஞ்சை பாருங்கோ முட்டைக்கோதுகளும் கிடக்குது..

***செல்*** : அதைத்தானே சொன்னன்.. செய்வினை சூனியம் எண்டால் உப்பிடித்தான் .. கோதுமட்டுமில்லை.. இன்னும் எத்தினையோ விநோதம் காட்டும்..

***கந்*** : ஓம்பிள்ளை .. நாங்கள்தான் கவனமாயிருக்கவேணும்.. சொல்லுறதைக்கேள்

***சோதி*** : நான் அண்டைக்கே பூங்காவனம் பூசாரியார் ஒண்டுமில்லையெண்டு பூக்கட்டி வைச்சுப் பாத்தாப்பிறகு சொல்லேக்கை இதுகளை அள்ளிக்கொண்டு போய் சுடலையடிக் கடலிலை கொட்டுங்கோ எண்டன்.. கேட்டியளே.. இப்ப கோது.. ஏதோ ஊருது.. சரியாய்ப் பாக்கவும் விடிறியளில்லை.. எத்தினை நாளைக்குத் தான் உத்தரிக்கிறது சொல்லுங்கோ.. கண்டறியாத மூடநம்பிக்கை..

***ராசம்*** : அது சரிபிள்ளை.. நான் அதை இல்லையெண்டேலை.. எண்டாலும்.. உண்மையோ பொய்யோ.. சரியோ பிழையோ.. சில சிலதுகளை நாங்களும் அனுபவத்திலை கண்டனாங்கள். நம்பேலாட்டிலும் உதுகளை முற்று முழுதாய் மூடநம்பிக்கை எண்டு சொல்லேலாது மோனை...

***கந்*** : இண்டைக்கோ நாளைக்கோ ஐயரும் அந்தாள் மட்டக்கிளப் பிலிருந்து வந்திடுவரெண்டும் கூட்டிக்கொண்டு வாறனெண்டும் தானே சொன்னவர். அதுக்கிடையிலை இண்டைக்கு இப்பிடி நடக்குமெண்டு ஆர்நினைச்சது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***செல்*** : சரி.. ஏதோ வைரவர் விட்ட வழி.. நடக்கிறது நடக்கட்டும்.. உவன் தேவாங்கன் முட்டைமாறி கோழிமாறி.. இன்னும் என்னென்ன செய்வனோ.. ஐயற்றை ஆளும் எப்ப வருவானோ.. உதுகள் ஊர்ந்து கீர்ந்து கால்வழியை உழக்குப்படும் .. பிறகு வீடுகளுக்கையும் புகுந்திடும். பிள்ளை நீ சொல்லுறதும் சரிதானடி. எடுத்துக்கொண்டு வா உந்த மண்வெட்டியை..

***ராசம்*** : பயமாய்க் கிடக்குதப்பா...

***செல்*** : என்ன.. ஏன் பயப்பிடறாய்.. ஏதேன் நடந்தால் எனக்குத் தானே ராசம்மா.. எப்பவோ நடக்கிறது நடக்கட்டும்.. அவன் தேவாங்கனும் விட்டபாடில்லை .. அவன் ஏதோ முடிக்கவேணும் எண்டு நினைச்சு ஒண்டுமாறி ஒண்டாய் ஏவிவிட்டுக்கொண்டே இருக்கிறான். ஐயற்றை ஆளும் வந்தபாடில்லை.. என்னத்துக்கு உந்தப் படுபாவி செய்தானோ தெரியாது.

***ராசம்*** : (அழுதுகொண்டு) ஏனப்பா அப்பிடிச் சொல்லுறீங்க.. அது வைரவர் விடாரப்பா.. கையெடுத்துக் கும்பிடுற கடவுள் அப்பிடி நடக்க விடார்.

***கந்*** : என்னத்துக்கு அத்தார் இப்ப அவசரப்படுறியள்.

***செல்*** : வேறை என்னத்தைச் செய்யச் சொல்லுறியள்..

***சோதி*** : (ஆச்சரியத்துடன்) அப்பா.. படலேக்கை பாருங்கோ ஆர் வாறதெண்டு..

***செல்*** : ஆர்மோனை .. இந்த நேரத்திலை..

***கந்*** : வாங்கோ .. வாங்கோ .. வாங்கோ ஐயா

***சோதி*** : (மெதுவாக) அது வைரவர்கோயில் ஐயரப்பா..

***ராசம்*** : வாங்கோ ஐயா.. வாங்கோ.. கும்பிடப்போன தெய்வம் குறுக்கை வந்த மாதிரி..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*செல்* : இந்த இடியப்பச் சிக்கலை எப்பிடி அவிழ்ப்பம் எண்டு திண்டாடிக்கொண்டு நிக்கேக்கை வைரவர் அனுப்பின மாதிரி நீங்களே வாறியள் ஐயா வாங்கோ.

*பூசாரி* : அதுதானே அண்டைக்கு வெள்ளைப்பூவைக் காட்டி ஒண்டுமில்லை எண்டு சொல்லிப்போட்டாரே வைரவர்.. பிறகென்ன..

*செல்* : அது அண்டைக்கு ஐயா.. ஆனால் இண்டைக்கு

*கந்* : இண்டைக்கு வேறை என்னத்திலையோ ஏவி விட்டிருக்கிறான்; தேவாங்கு தேவேந்திரன்... ஏதோ ஊர்ந்து திரியுதுகள்.

*சோதி* : ஏன் மாமா தேவாங்கு தேவேந்திரன் ஏவி விட்டிருக்கிறான் எண்டு கண்டமாதிரிச் சொல்லுறியள். கண்ணாலை காணாமல் கைவிரல் நீட்டிக் குற்றம் சாட்டாதேங்கொ.. கடவுளே மன்னியாது.. அது மட்டுமில்லை அந்தாள் செய்யாமலிருக்க நீங்கள் உப்பிடிச் சொல்லுறியள் எண்டு கேள்விப்பட்டால் சும்மாய் இருக்கிறவனும் செய்ய நினைப்பான். நீங்கள் தான் அவனை தூண்டுகிறியள்

*பூசாரி* : பிள்ளை சொல்லுறதெண்டாச் சரிதான். இதுகளை நாங்கள் கவனமாய் கையாளவேண்டும். சரி.. வாருங்கோ அது எங்கை கிடக்குதெண்டு பாப்பம்.

*செல்* : இஞ்சாருங்கோ .. ஐயா.. பாருங்கோ ஊரத் தொடங்குதுகள். உதுதான் இராத்திரி ஏவிவிட்டது.

*பூசாரி* : (ஆறுதலாகப் பார்த்து) ம்.. ம்.. என்னது.. வந்து.. ம். இதிலை கோது வேறை கிடக்குது.. ம் இது இது வந்து .. வந்து.. அப்பிடி ஒண்டுமாய் வித்தியாசமாய் தெரியேலை.. ம் ஊருறவிதத்தைப் பார்த்தால்.. ஆ.. ஆ .. ம் அப்பிடிப்போலைதான் கிடக்குது.. பிள்ளை உதிலை ஒரு சின்னத் தடி ஒண்டு எடுத்து வா மோனை

*சோதி* ; சரி ஐயா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***பூசாரி*** : ம்.. கோதும் சாடையாய் அப்பிடித்தான் கிடக்குது.. ஊருற விதமும் அதேமாதிரித்தான் இருக்குது. தடிவரட்டும் மிச்சமும் தெரியவரும் தானே...

***சோதி*** : இந்தாங்கோ ஐயா.. இந்தத் தடி காணுமோ.. அல்லாது விட்டால் இந்தாங்கோ இது பெரிய தடி..

***பூசாரி*** : இதென்ன பாம்படிக்கவே.. அந்தச்சின்னத் தடியைத் தா பிள்ளை. இவை ஆரெண்டு பாப்பம்.

***சோதி*** : இந்தாங்கோ ஐயா

***பூசாரி*** : ம்.. ம்.. எங்கை எங்கை.. ம். அதுதானே பாத்தன்.. நினைச்சது சரிதான். பிள்ளை இஞ்சை பார். . கந்தசாமி பாத்தியே.. செல்லப்போடியார். இப்ப தெரியுது தானே இவை ஆராக்கள் எண்டு

***செல்*** : விளங்கேலையே பூசாரியார்.

***பூசாரி*** : உமக்கெங்கை செல்லப்போடியார் எப்பவும் தேவாங்கு தேவேந்திரன்ரை நினைப்புதான். இஞ்சை பாரும் தடியாலை மெல்லமாய்த் தட்டினவுடனை தலையை உள்ளுக்கை இழுக்கினம். காலுகளையும் இழுத்திட்டினம்... ஊரவும் இல்லை.. நிப்பாட்டிப்போட்டினம்.

***சோதி*** : ஆமைக்குஞ்சுகளே.. பூசாரியார்...

***பூசாரி*** : சரியாச் சொன்னாய் பிள்ளை.... ஊருறவை அவைதான் .. பாருங்கோ.. தடியாலை மெல்லமாய்த் தட்டினஉடனை .. தலை .. மற்றது நாலு காலுகளையும் இழுத்தினம்.. இப்ப பாருங்கோ கொஞ்சம் கொஞ்சமாய் எட்டிப் பாக்கினம்..ஆமைக்குஞ்சுகள்தான்.. அதிலை எந்த ஐமிச்சமும் இல்லை..

***கந்*** : ஓம் பூசாரியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*செல்* : அப்ப அந்த முட்டையும் ஆமைமுட்டையோ..

*பூசாரி* : (கேலியாக) என்ன செல்லப்போடியார்.. கன்னிக்கோழி முட்டையிலை இருந்து ஆமைக்குஞ்சு வருமே... பொறுங்கோ பாப்பம்.. கந்தசாமி.. உந்த மம்பட்டியாலை முட்டையள் கிடந்த மற்றப் பக்கத்திலை தண்ணி ஓடத் தக்கதாய் வெட்டிவிடும்.. எல்லாம் கழுவிக்கொண்டு போகட்டும். செல்லப்போடியாற்றை மனப் பயத்தையும் சேர்த்து..

*ராசம்* : நான் அப்பவே சொன்னனான். உவர்தான் கேக்கமாட்டன் எண்டு ஒற்றைக்காலிலை நிண்டார்

*பூசாரி* : இஞ்சை பாருங்கோ கொஞ்சம் விட்டவுடனை பிள்ளை தண்ணி ஊத்த ஈரத்துக்கு அவை வெளிக்கிட்டிட்டினம்.. எண்ணு பிள்ளை..

*சோதி* : 1..2..3..4....8..9 ஐயா 9 குஞ்சுகள் ஐயா..

*கந்* : கோதுகளும் ஒன்பதுதானையா கிடக்குது..

*ராசம்* : (சிரித்து) பாத்தியளே ஒன்பது கோது.. ஒன்பது குஞ்சு... அப்ப உந்த ஆமைக்குஞ்சுக்கே நான் விடிய விடியக் காத்தாலை ஒரு கிழமையாய் மினைக்கெட்டுத் தண்ணி ஊத்தினனான்.

*பூசாரி* : வேறை என்ன.. அதுதானே அண்டைக்கே வைரவர் ஒண்டுமில்லை எண்டு சொல்லிப்போட்டாரே.. அதைத்தான் நானும் சொல்லுறன்.

*கந்த* : அப்ப பூசாரியார்

*பூசாரி* : ஓம் கந்தசாமி.. இஞ்சை பாரும் செல்லப் போடியார்.. இது செய்வினையுமில்லை.. சூனியமுமில்லை.. மந்திரமுமில்லை.. மாயமு மில்லை.. எல்லாம் வீண் மனப்பிராந்தியாலை வந்தது. இஞ்சை பாருங்கோ.. இது கிணத்தடி.. அது மட்டுமில்லை இந்த இடம் நெடுக நீங்கள் குளிக்கேக்கை போகேக்கை தண்ணி ஓடுற இடம்.. நல்ல குளிர்மையாய் இருந்திருக்குது.. ஆரோ ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமைப்பிள்ளையார் இந்த ருசியைக் கண்டு பிடிச்சிட்டார்.. அவர் சத்தப்படாமல் ஒண்டு ரண்டில்லை குறைஞ்சது ஒன்பது முட்டையை வழமைபோலை மண்ணைக் கிண்டி இட்டிருக்கிறார்.. நல்ல மழை பெய்து தண்ணி வாரடிச்சுப் பாய மேல் மண் கழுவுப்பட்ட உடனை முட்டை வெளியிலை தெரிஞ்சிருக்கு. அதைத்தான் நீங்கள் கண்டிருக்கிறியள்.

***செல்*** : கன்னிக்கோழிமுட்டை மாதிரி இருந்ததே..

***பூசாரி*** : இஞ்சை பாரும்.. ஆமைமுட்டைக்கு கோதுதான் கொஞ்சம் வித்தியாசம்.. இஞ்சை பாரும் பொரிச்ச முட்டையின்ரை கோதை.. (சிரிச்சு) நீங்கள்தான் தொட்டே பாக்கேலையே.. மனதிலை தேவாங்கு தேவேந்திரன் இருந்தானே தவிர கொஞ்சம் விவரமாய் ஆராய்ஞ்சிருந்தால்.. இப்பிடி பயப்பிட்டிருக்கத் தேவையில்லை.. சரி கந்தசாமியார். உந்த வாளியைக் கொண்டு வாரும்.. இவையளை கொண்டுபோய் எருக்கலங்குளத்திலை விட்டிட்டு வாரும். அவை சுதந்திரமாய் வளரட்டும்

***சோதி*** : நான் எத்தினை தரம் சொன்னனான்.. அள்ளிக் கொண்டு போய் கொட்டுவம் எண்டு கேட்டினமே.

***ராசம்*** : கொப்பர் விட்டாரே... கொண்டந்து வைச்சதைக் கண்ணாலை கண்டமாதிரி அவன் தேவேந்திரனை திட்டித் தீர்த்துக் கொண்டிருந்தாரே... ஒருக்காலே.. ரெண்டு தரமே.. எத்தினை தரம் சொல்லுங்கோ பாப்பம்..

***பூசாரி*** : (சிரிச்சு) என்ன போடியார் மூச்சையே காணேலை.. இஞ்சை பாரும் இது உமக்கு தேவாங்கு தேவேந்திரன் செய்த செய்வினை இல்லை .. நீர் தேவேந்திரனுக்கு செய்த வினை எண்டு சொல்லும். (அனைவரும் சிரித்தல்)

----- காட்சி முற்றும் -----

----- நிறைவு -----

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்வினை

நாடக மாந்தர்களும் குரல் மூலம் உயிர்கொடுத்தோரும்



செல்லப்போடியார்
செ.அம்பலவாணர்



பூசாரி பூங்காவனம்
ஏ.எஸ் எம். பீலிக்ஸ்



கந்தசாமி
ஜெயரஞ்சன் யோகராஜ்



இராசம்மா
ஏ. எம். சி. ஜெயஜோதி



சோதி
ரஜனி பொன்னம்பலம்



தயாரிப்பு
லாக்கஸ் திருச்செல்வம்

இ.ஒ.கூ. தமிழ்ச்சேவையில் முதன் முதலாக 06.07.2013 ஒலிபரப்பப் பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. தகைமை

பாத்திரங்கள்

- புவனா – தாய்
- காந்தன் – தகப்பன்
- குரு – மகன் (சிறுவன்)
- பார்த்திபன் – அதிபர்
- கணேஸ் – பஸ்கண்டக்டர்

## காட்சி - 1

*பாத்திரங்கள் : புவனம், காந்தன்.*
*இடம் : வீடு*

*புவ* : என்னப்பா செய்யிறியள்.. நாளைக்கு தம்பிக்கு முதலாம் வகுப்பு அட்மிசனுக்கு இன்ரவியு எல்லே... இந்த மனிசனுக்கு எப்ப வெண்டாலும் .. ஒருநாளெண்டாலும்.. வீட்டைப்பற்றி எண்ணம் இருக்கோ சொல்லுங்கோ பாப்பம்.. போனால் ஒவீஸ்.. வந்தால் வயல்.. என்ன பிறப்பப்பா நீங்கள். பன்னிரண்டு வருசம் தவமிருந்து பெத்த பிள்ளை முதல் முதலில பள்ளிக்குடம் போகுது.. ஒரு புது காச்சட்டை சேட்டு எடுப்பமெண்டில்லை.. வேலையாலை வந்தார்.. மூக்கு முட்ட சாப்பிட்டார் ... வெளிக்கிட்டிட்டார்... மண்வெட்டியையும் தூக்கிக் கொண்டு வயலுக்கு.. என்ன மனிசனப்பா நீங்கள்.. (அதட்டி) மம்பட்டியை இறப்பிலை கொழுவிப் போட்டு வெளிக்கிடுங்கோ அவனுக்கு ஒரு சோடி உடுப்பு எடுத்திட்டு வருவம்..

*காந்* : நல்ல மழைபெய்ததெல்லோ .... வானம் பாத்த பூமியிலை கமம் செய்யிறனாங்கள். ஒரு துளி தண்ணியெண்டாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாக்கவேணுமப்பா.. வயல் வரம்பிலை எங்கையேன் அகிழான் புத்துக்காலை தண்ணி பாய்ஞ்சு கடவான் கிடவான் கிடந்தாலும் பாத்திட்டு வந்து நான் சைக்கிளிலை போய் வாங்கி வாரன்.

*புவ* : கண்டறியாத கடவான் கட்டிற நேரத்தைப் பாரன். நீங்கள் கடவான் கட்டிப்போட்டு வர பஸ்சும் போகிடுமெல்லே..

*காந்* : அதுக்கென்ன புவனம் நான் சைக்கிளிலை போய் எடுத்து வாறன்.

*புவ* : (ஏளனமாக) ம்..க்கும்.. சைக்கிளிலை போய் எடுக்கப் போறாராம். தனக்கே ஒரு சேட்டு எடுக்கத் தெரியாத மனிசன் பிள்ளைக்கு சேட்டுக் காச்சட்டை எடுக்கப்போறாராம். (அதட்டி).. மம்பட்டியை வைச்சுப் போட்டு வெளிக்கிடுங்கோ..

*குரு* : அப்பா.. எனக்குத்தானே காச்சட்டையும் சேட்டும்.. நானும் வாறனப்பா... அப்பதான் அளவானதாய் எடுத்துவரலாம்;..

*காந்* : நீ ஏன் தம்பி இந்த மழை இருட்டுக்கை.. அளவுசேட்டைத் தாருங்கோ நான் அளவாய் எடுத்து வாறன்.

*புவ* : எக்கணம் எடுப்பாய்த்தான் இருக்கும். அவர் கிடக்கிறார். நீ முகத்தைக் கழுவிப்போட்டு வா.. அம்மா வெளிக்கிடுத்திவிடுறன். அம்மாவும் வாறன்.. மூண்டு பேருமாய் போய் தம்பிக்கு உடுப்பு எடுத்திட்டு வருவம்.

*குரு* : அம்மாதான் நல்ல அம்மா.. பஸ்ஸிலைதானே போறது.

*காந்* : ஒரு கழிசான் சேட்டு எடுக்க மூண்டு பேரேனப்பா.. சுண்டக்காய் காற்பணம் சுமைகூலி முக்காப்பணம் எண்டமாதிரியெல்லோ உங்கடை கதை கிடக்குது..

*புவ* : அது எல்லாம் நான் பாக்கிறன். நீங்கள் கவலைப்படத் தேவையில்லை.. சும்மாய் வாயை வைச்சுக்கொண்டு வெளிக்கிட்டு வந்தாக் காணும். ஓ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*காந்* : சரி... இப்ப நான் மாட்டனெண்டு சொன்னாப்போலை நீ என்ன விட்டுவைக்கவே போறாய். ஏதோ நிண்டாடுறாய் .. சரி.. வெளிக்கிடு.

*புவ* : வேண்டா வெறுப்பாய் ஏனப்பா பயணம் போவான்.. சந்தோசமாய் ஓமெண்டு வெளிக்கிடுங்கோவன். பிள்ளை பள்ளிக்கூடத்துக்கு வடிவாய்ப் போகவேணுமெண்டு தன்னும் நினைக்க வேண்டாம்.. மற்றவை சொன்னால் அதுக்கும் மூஞ்சையை நீட்டிக்கொண்டு. இதுகள் .என்ன பிறப்போ தெரியாது..

*காந்* : சும்மாய் மனிசனை நச்சரிக்கிறதை விட்டிட்டு வெளிக்கிடப்பா.. தம்பி இஞ்சை வா அப்பா கழிசான் போட்டு விடுறன். அம்மா வெளிக்கிடட்டும். போற தெண்டால் கெதியாய் வெளிக்கிடுங்கோ.. பஸ்போனாப்பிறகு றோட்டிலை நிண்டு கத்திக்குழற வேண்டாம்.

----- காட்சி மாற்றம் -----

## காட்சி - 2

*பாத்திரங்கள்* *: புவனம், காந்தன், குரு,*
*இடம்* *: பஸ்*

*காந்* : தம்பி .. கவனம் கையைப்பிடிச்சுக் கொண்டு கெதியாய் நடந்து வா.. அம்மா பிள்ளையின்ரை சேட்டையும் காச்சட்டையும் கொண்டு வரட்டும்.

*புவ* : என்னப்பா பம்பரம் மாதிரி ஆடிக்கொண்டு நிக்கிறியள். காலிலை என்ன சில்லே பூட்டியிருக்கிறம். மழைபெய்த தண்ணி அங்கையும் இஞ்சையுமாய் நிக்கேக்கை என்னண்டு ஒடி வாறது .. சொல்லுங்கோ பாப்பம்

*காந்* : உதுக்குத்தானே நான்; சைக்கிளிலை தம்பியோடை வந்து வாங்கிக்கொண்டு வாறனெண்டு சொன்னனான். கேட்டியளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை எண்டது மாதிரி .. வரவும் வேணும் கெதியாய் நடக்கவும் ஏலாது. தண்ணிபடவும் கூடாது.. பஸ் போட்டுதெண்டா எல்லாம் தெரியும் .. பிறகு நடராசா தான்.. ஓ..

*குரு* : அம்மா பாக்கை நான் கொண்டுவாறன்.. நீங்கள் கெதியாய் வாங்கோ..

*புவ* : மழைஇருட்டானதாலை இருண்ட மாதிரிக் கிடக்குது. பஸ்சுக்கு நேரம் கிடக்குதப்பா.. ஏன் அவசரப்படுறியள். அவன் தம்பிக்கு குடிக்க ஏதேன் சோடா கீடா வாங்கிக் குடுப்பம் எண்டில்லை.. உந்தாளோடை ஒரு பயணம் வெளிக்கிட்டால் காணும். புறுபுறுப்பும் கறகறப்பும். கிணத்துக் கட்டிலை குழந்தையைக் கிடத்திப்போட்டு வந்தது போலை கொறை இழுவேலை இழுத்துக்கொண்டு ஓடுறியள்..

*காந்* : சரி.. சரி.. முதல்லை பஸ் நிக்குதோ எண்டு பாத்திட்டு நீரும் தம்பியும் சீற்றைப் பிடிச்சுக்கொண்டு இருங்கோ. நேரம் இருந்தால் நான் வாங்கித்தாறன்.

*குரு* : ஓம் அம்மா எனக்கு சோடா வேண்டாம். பஸ்ஸிலை நிண்டு போகேலாது .. காலுழையும்.. வேளைக்குப்போய் சீற்றிலை இருப்பம்.

*புவ* : சரி.. சரி.. சாடிக்கேற்ற மூடி மாதிரி தகப்பனுக்கு மகன்.. நான் வாறன் நீங்கள் முன்னுக்குப்போங்கோ...

----- காட்சி மாற்றம் -----

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - 3

*பாத்திரங்கள்* : *புவனம், காந்தன், கணேஸ், குரு, பார்த்திபன்*

*இடம்* : *பஸ்*

***கணே*** : வாருங்கோ வாருங்கோ.. வெளிக்கிடுற நேரமாச்சு.. சீற் இருக்குது.. தனங்கிளப்பு, மறவன்புலோ.. கோயிலாக்கண்டி .. தச்சன்தோப்பு, நாவற்குழி... ஏறுங்கோ ஏறுங்கோ.. பஸ் வெளிக்கிடப் போகுது..

*புவ* : உப்பிடித்தான்.. ஏத்தும் மட்டும் வெளிக்கிடப்போகுது இந்தா வெளிக்கிட்டிட்டுது எண்டு உறுமுவாங்கள். ஏறினாப்பிறகு மணித்தியாலக்கணக்காய் எடுக்காங்கள். மனிசர் கிடந்து புழுங்கி அவிய வேண்டியதுதான்.

***கணே*** : விரும்பினா ஏறுங்கோ.. விருப்பமில்லாட்டில் இறங்குங்கோ.. இறங்கிநிண்டு நல்லாய் காத்து வாங்குங்கோ.. ஆசை தீர காத்து வாங்குங்கோ.. பிறகு சீற்றில்லை எண்டு குழறவேண்டாம். ஒண்டரை மணித்தியாலம் நிண்டுகொண்டுதான் போகவேண்டி வரும். அப்பதான் அருமைதெரியும். நீங்கள் மூண்டு பேரும் வரேலை எண்டால்போல பஸ்ஓடாமல் விடப் போறதில்லை.. அதை மறந்திடாதையுங்கோ..

*புவ* : ஆக்களில்லாததாலைதானே இலையான் கலைக்கிறீர். நாங்கள் ஓம், அதுதான் சனங்கள் வராட்டில் பஸ்ஸை கட்டையிலை தான் ஏத்திவிட வேண்டிவரும் ..மறந்திடாதையும்.. கதைக்கிறாராம்.. கதை.

***காந்*** : சரி.. சரி.. கதையை விட்டிட்டு ஏறப்பா... எங்கை ஆர் கதை தருவங்கள் சண்டைபிடிக்க எண்டு காத்துக் கொண்டிருக்கிறனீர் போலை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*புவ* : என்னைத் திருத்திறது சரி. பாக்கைக் கவனமாய் கொண்டு வாங்கோ .. பிராக்குப் பாத்து சாமானைக் கைவிடாமல் ஏறுங்கோ.. வீட்டை வந்து அதைக் காணேலை இதைக்காணேலை எண்டு புறுபுறுத்தியள் .. பிறகு தெரியும் என்னை ஆரெண்டு..

*காந்* : தம்பி கவனம்.. கவனமாய் ஏறு.. விழுந்து கிழுந்து போவாய்

*புவ* : என்னிலை முடிஞ்சு இப்ப அவனிலை தொடங்கி விட்டார். அவன் தானே ஏறுவான்.. விழமாட்டான்.. எதுக்கெடுத்தாலும் அதைச் செய்யாதை.. இதைச்செய்யாதை எண்டு நச்சரிக்கிறதை விட்டிட்டு விடுங்கோ அவனை ஏறட்டும். நீ ஏறு தம்பி... சீற்போகமுந்தி நல்ல சீற்றாய் ஒண்டிலை இரு. அம்மா வாறன்...

*கணே* : உங்கடை சண்டையை வீடுகளிலை போய்ப்பிடியுங்கோ... இப்ப ஏறுறதெண்டால் ஏறுங்கோ.. இல்லாட்டில் மற்றவைக்கு வழியை விடுங்கோ.. உப்பிடி எல்லாரும் ஆடிக்கொண்டு நிண்டால் இண்டைக்கு பஸ் எடுத்தமாதிரித்தான்.. ஏறக்கூடியாக்கள் முன்னாலையும் ஏறுங்கோ.. சீற் இருக்குது.. தனங்கிளப்பு, மறவன்புலோ.. கோயிலாக்கண்டி .. தச்சன்தோப்பு, நாவற்குழி.. ஏறுங்கோ ஏறுங்கோ.. சீற்இருக்குது.. பஸ் வெளிக்கிடப் போகுது.. போறநேரமாகுது.. போறாக்கள் ஏறுங்கோ...

*குரு* : அம்மா .. நான் இந்த கோணர் சீற்றிலை இருக்கிறன். கண்ணாடிக்காலை எல்லாம் எட்டிப்பாக்கலாம். திறந்து கிடக்குது.. காத்தும் பிடிக்கும்.

*காந்* : தலையைக், கையை வெளியிலை நீட்டிறதில்லை.. தம்பி.. சும்மா அங்கை இஞ்சை ஓடித் திரியாமல் இஞ்சை வா.. ஒரு இடத்திலை இரு.. வந்து அப்பாவோடை மடியிலை இரு.

*புவ* : ஆசைப்படுறான் பிள்ளை .. இருக்கட்டுமன். நீ அதிலை கரைச்சீற்றிலை இரு குரு.. அம்மாவும் வாறன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கணே* : (தூரத்தில்) ரிக்கற் எடுக்காதாக்கள் ரிக்கற் எடுங்கோ.. மாத்தின காசாய் சில்லறையாய் வைச்சிருங்கோ...

*புவ* : இப்பவே மிச்சக்காசு தராமல் விட அத்திவாரம் போடுறான்.. பாருங்கோ ஆளின்ரை கதையை. மினிபஸ் நடத்துறதெண்டால் மிச்சக்காசு தரவும் ஆயித்தமாயெல்லோ இருக்க வேணும்..

*காந்* : புவனம் உனக்கு .. அவன் கொண்டக்டர் பெடியன் மிச்சக்காசு தராட்டி நீ கேட்டு வாங்கனப்பா.. நீ ஏனிப்ப வில்லங்கத்தை வீணாய் விலைக்கு வாங்கிறாய்

*புவ* : நான் மாத்தின காசு கணக்காய் வைச்சிருக்கிறன். நீங்கள் இருங்கோ...

*கணே* : அண்ணை பின்னுக்கு சரி.. முன்னுக்கு பாத்து எடுங்கோ

*புவ* : தம்பி பஸ் வெளிக்கிடப்போகுது.. கம்பியைக் கவனமாய்ப் பிடி.. தலையை உள்ளுக்கை எடு.. பிறகு றோட்டாலை போற வாகனங்கள் தலையைக் கொண்டு போகிடும்

*குரு* : இந்தாங்கோ தொப்பி.. இதை வைச்சிருங்கோ.. காத்துக்குப் பறந்திடும்.

*கணே* : தலைபோனாலும் தொப்பி பவுத்திரம் அம்மா... அம்மா ரிக்கற்.. எங்கை போறது... மாத்தின காசாய்த் தாங்கோ..

*புவன* : மறவன்புலோ ரெண்டு முழுசு.. இந்தா இரண்டு தர பன்னிரண்டு இருபத்திநாலு.. இருபது.. ரெண்டு.. ம்.. ரெண்டு.. இந்தா நீ கேட்டபடியே சில்லறை இருபத்திநாலு ரூபாய். சரிதானே

*கணே* : ரெண்டு முழுரிக்கற் சரி.. மகனுக்கு ஆர் ரிக்கற் எடுக்கிறது.?

*புவ* : என்ன மகனுக்கோ..?

*கணே* : ஓம்.. பக்கத்திலை ..சீற்றிலை இருக்கிறது உங்கடை மகன்தானே..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*புவ* : ஓ எங்கட மகன்தான்.. இன்னும் நாலு வயசே ஆகேலை.. அவனுக்கும் ரிக்கற்றோ... இதென்ன பகல் கொள்ளையாக் கிடக்கு..

*கணே* : ஏனம்மா பொய் சொல்லுறியள்.. பிள்ளையைப்பாக்க நாலுவயசுப் பிள்ளை மாதிரியே கிடக்கு.. கொஞ்சமெண்டாலும் மனச்சாட்சியோடை கதையுங்கோ.

*புவ* : கொண்டக்டர் தம்பி நீ எனக்கு மனச்சாட்சியைப் பற்றிப் படிப்பிக்கிறியோ.. நாங்கள் வயசுபோயிருக்கிறம் எண்டாப்போலை அவனுக்கும் வயசு போட்டுது எண்டு நினைச்சியோ... பன்னிரெண்டு வருசம் குழந்தையில்லாமலிருந்து கிடைச்சதெண்டது உனக்கெங்கை தெரியப்போகுது.

*கணே* : இல்லை அம்மா.. நான் உங்கடை வயசைப் பாக்கேலை.. எவளவுகாலம் குழந்தை இல்லாமல் இருந்தனீங்களெண்டு பாக்கேலை .. பிள்ளையின்ரை தோற்றத்தைப் பாத்துத் தான் கதைக்கிறன்.

*புவ* : நானும் திருப்பித்திருப்பிச் சொல்லுறன் . நீயும் அதைத்தான் திரும்பச் சொல்லுறாய். பிள்ளையிலை கண்ணீறு பட்டிடும் போலை இருக்கு.. கனகாலம் குழந்தையில்லாமலிருந்து கிடைச்சதாலை ..ஒரே பிள்ளை செல்லப்பிள்ளை.. அதாலை கொஞ்சம் வாட்டசாட்டமாய் துடியாட்டமாய் இருக்கிறான். நீ என்னடா எண்டால்... கதைக்கிற கதையைப் பாத்தால்... நாலு வயசுப் பிள்ளைக்கு முழு ரிக்கற் எடுக்கச் சொன்னாலும் சொல்லுவாய் போலை கிடக்கு. எல்லாம் கலிகாலம்.

*கணே* : என்னம்மா நீங்கள்.. ஐயா நீங்கள் தன்னும் சொல்லுங்கோவன்.

*காந்* : புவனம் என்னப்பா நீ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*புவ* : சும்மாய் இருங்கோ நீங்கள்.. அது நான் கதைக்கிறன். அவரை என்ன பிறப்புச்சேட்டிபிக்கற்றே கேக்கிறாய். நான் சொல்லுறதைக் கேள்.

***கணே*** : எனக்கேனம்மா உங்கடை பிறப்புச்சேட்டிபிக்கற் .. நான் அதைக்கேக்கவோ பாக்கவோ வரேலை.. ரிக்கற் எடுக்கச் சொல்லித்தான் கேட்டன். பிள்ளையை மடியிலை வைச்சிருந்தாலும் பரவாயில்லை.. தனிசீற் வேறை.. அரை ரிக்கற் எடுக்கச் சொன்னால் நீங்கள் ஏதேதோ ஆயிரம் கதை கதைச்சு சும்மா வீணான பிரச்சினையைக் கிளப்புறியள்.

*புவ* : என்ன... நான் பிரச்சினையைக் கிளப்புறனோ..?

***கணே*** : வேறை ஆர்..

*புவ* : இது நல்ல கதையாயிருக்கு.. உந்தத் தேசத்துக்கு... இஞ்சையிருந்து மறவன்புலோ வரைக்கும் ஒண்டரை ரெண்டு மணித்தியாலம் பிள்ளையை மடியிலை வைச்சிருக்கச் சொல்லுறீரோ...

***கணே*** : ஒண்டில் பிள்ளையை மடியிலை வைச்சிருங்கோ... அல்லாட்டில் அரை ரிக்கற் எடுத்துப்போட்டு வடிவாய் சீற்றிலை இருக்கச் சொல்லுங்கோ. அதைத்தான் சொல்லுறன்.. பிள்ளையைப் பாக்கவே வடிவாய்த் தெரியுது அஞ்சாறு வயசெண்டு.. மடியிலை வைச்சிருந்தாலும் ரிக்கற் எடுக்கத்தான் வேணும்.. பிளயின்ஸ்கோட் வந்து பாய்ஞ்சால் என்ரை தொழில்தான் போகும்..

***காந்*** : தம்பி இஞ்சை வா .. அப்பான்ரை மடியிலை இரு.. ஒருத்தருக்கும் ஒரு பிரச்சினையுமில்லை..

*புவ* : அவன் என்னோடையே இருக்கட்டும். அது வாற கோட்டுக்கு நான் பதில் சொல்லுறன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***காந்*** : புவனம் இதென்னப்பா .. ஆறுரூபாய்க்காக தேவையில்லாத பிரச்சினை..

***புவ*** : ஆறுருபாய் என்ன சின்னக்காசோ.. சும்மா குடுக்க என்ன மரத்திலை புடுங்கிறதே....

***கணே*** : நான் சும்மா தரச்சொல்லிக் கேக்கேலை.. ரிக்கற்றை எடுத்து அதுக்கான காசைத்தான் கேக்கிறன். நான் ரிக்கற் தாறன்தானே. பிறகென்ன ..ஐயா நீங்களே சொல்லுங்கோ.. இது சரியே ஐயா..

***பார்த்*** : நாங்கள் என்னத்தைச் சொல்லுறது .. எல்லாத்தையும் பாத்துக்கொண்டுதான் இருக்கிறம். இது எங்கைபோய் நிக்குமெண்டு பாப்பம்.

***புவ*** : நாவற்குளி மட்டும்போய் நிக்கும். யோசிக்காதேங்கோ.. ஆளின்ரை மூஞ்சையும் முகரக்கட்டும்.. எல்லாத்தையும் பாத்துக்கொண்டிருக் கிறாராம் அவர். ம்...

***கணே*** : ஏனம்மா நீங்கள் சும்மாயிருந்த ஆளிலை பாயுறியள்.

***புவ*** : நான் தேவையில்லாமல் பாயேலை.. தன்ரை அலுவலைப் பாத்துக்கொண்டு பஸ்ஸிலை வந்தமோ போனமோ எண்டிருக்காமல் எங்கடை விசயத்திலை உமக்குச் சார்பாய் கதைச்சதாலைதான் கேட்டனான்.

***கணே*** : என்ரை சார்பாகவோ...? அவர் ஞாயத்தைத்தானே கதைச்சவர்..

***புவ*** : எது ஞாயம். நீர் கேக்கிறது.. சொல்லுறது.. அவருக்கு சரியாய்.. நியாயமாய்த் தெரிஞ்சால் என்னைத் திருத்திறதை விட்டிட்டு ஒரு ஆறு ரூபாயை உம்மட்டைத் தந்திருக்கலாம் .. அதைவிட்டிட்டு நியாயம் கதைக்கிறாராம்.. நியாயம்... பெரிய நியாயவாதி.

***காந்*** : ஏனப்பா எங்கட பிள்ளைக்கு ஆரேன் ரிக்கற் எடுக்கவேணும். என்ன விசர்க்கதை கதைக்கிறீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*புவ* : நீங்கள் சும்மாய் கிடவுங்கோ.. நாய் பாக்கிற வேலையை நாய் பாக்க வேணும் .. கழுதை பாக்கிற வேலையை கழுதை பாக்க வேணும்.. பஸ்ஸிலை ஏறினால் தன்ரை வேலையைப் பாக்கிறதுக்கு.. மற்றவைக்கு நியாயம் கதைக்கிறாராம் நியாயம்.. என்னட்டைக் காசில்லை கிடந்தாலெல்லோ குடுக்கிறதுக்கு.. நான் குடன். அவர் நியாயம் தெரிஞ்சவர் கிடந்தாக் குடுத்திட்டு நியாயம் அநியாயத்தைக் கதைக்கட்டும்.. கதைக்கிறாராம் கதை..

*பார்த்* : தம்பி கொண்டக்டர்; .. இஞ்சை வாரும் .. இதிலை பத்து ரூபா இருக்கு .. ஆறுரூபாயை எடுத்திட்டு மிச்சக்காசைத் தாரும். ஓம் தம்பி நாய் பாக்கிற வேலையை கழுதை பார்க்கக்கூடாதுதான். இந்தாரும். கதையை மேலும் வளர்க்காமல் மற்ற மிருகங்களையும் இஞ்சை கூப்பிடாமல் இதோடை கதையை நிப்பாட்டும்.

*கணே* : சேர்.. வேண்டாம் சேர்.. என்னாலை நீங்கள்தான்.. உங்களுக்கு வீணான மனக்கஷ்டம். மன்னிச்சுக் கொள்ளுங்கோ.. நீங்கள் உங்கடை காசை வைச்சருங்கோ.. பிளயின்ஸ்கோட் வந்தால் நடந்ததைச் சொல்லுவம்.. (ஏளனமாக) அது ரிக்கற் எடுக்காமல் குழந்தை முழு சீற்றிலை இருந்து உல்லாசமாய் வரட்டும்.

*பார்த்* : தம்பி காசு எடுக்க விருப்பமில்லை எண்டால் சரி. என்னை இதிலை இறக்கிவிடும். நான் நடந்து போறன்.

*கணே* : ஏன் சேர் அப்படி சொல்லுறியள். என்னிலைதான் சேர் பிழை.. நாலு வயது எண்டு சொல்லேக்கை நம்பியிருக்க வேணும்.. கனக்கக் கதைச்சு உங்களுக்கும் மனஸ்தாபத்தை ஏற்படுத்திப் போட்டன். என்னை மன்னிச்சுக்கொள்ளுங்கோ சேர். இந்தாங்கோ உங்கடை காசை வைச்சிருங்கோ சேர். ஆற்றையேன் பிரச்சனைக்காக நீங்கள் ஏன் இறங்கிப்போகவேணும்.

*பார்த்* : பிழைசரி கிடக்கட்டும். காசை எடும் தம்பி; நாங்கள் மரியாதையாய் பஸ்ஸிலை மனிசராய்ப் போய் வரவேணும். கழுதையளாய் இல்லை..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***கணே*** : சரி சேர்.. நீங்கள் ஒண்டுக்கும் இழகுறியள் இல்லை.. என்னாலைதான் உங்களுக்கு மனக் கஷ்டமும் பண நட்டமும். மன்னிச்சுக் கொள்ளுங்கோ.. ம்.. இந்தாங்கோ மிச்சக்காசும் ரிக்கற்றும்.

*பார்த்* : தாரும் தம்பி.. (சிரித்துக்கொண்டு) இஞ்சேரும் இனி எந்த பிளையின்ஸ்கோட் வந்தாலும் நீர் போர்த்சேட்டிவிக்கற் காட்டத் தேவையில்லை.. உம்மடை வேலைக்குப் பழுதில்லை.. சரிதானே

*இருவரும்* : சிரித்தல்

*புவ* : (முணுமுணுத்தல்) ஒரு ஆறு ரூபாயைக் குடுத்திட்டு ஏதோ பெரிய கோடிக்கணக்கிலை கொட்டிக்குடுத்தது மாதிரி அவற்றை சிரிப்பைப்பார். அவர் பெரிய கொடைவள்ளல். ஆளின்ரை சறக்கட்டுக்கும் எண்ணைவழியுற மூஞ்சைக்கும்... ம்.. நான் சொன்னதுக்கு .. அவருக்கு ரோசம் பொத்துக்கொண்டு வந்திட்டுது.. பெரிய பாரிவள்ளல் பரம்பரை எண்ட நினைப்பு...

**----- காட்சி மாற்றம் -----**

## காட்சி – 4

*பாத்திரங்கள் : பார்த்திபன், புவனம், காந்தன். குரு.*

*இடம் : பாடசாலை*

*புவ* : தம்பியின்ர நம்பர் என்னப்பா.. நேரம் 10.00 மணி எண்டிருந்தது.. இப்ப 10.20 ஆச்சுது.. இப்பதானே 337 போட்டுக்கிடக்குது. எங்கட போட்டுதோ என்னவோ... ஆண்டவனே... வெளிக்கிட்டா வருவாங்களே பஸ்காரர்.. சந்திக்குச் சந்தி மணித்தியாலக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்கிலை எல்லே மறிச்சு வைச்சு ஆக்களை ஏத்துறாங்கள். உதுகளை நம்பினா உப்பிடித்தான்.

*குரு* : அதுதானே அம்மா ஒட்டோவிலை வருவமெண்டா நீங்கள் வேண்டா மெண்டிட்டியள். மினிபஸ்காரர் உப்பிடித்தான்எண்டு தெரிஞ்சு கொண்டும்; பிறகேனம்மா அதிலை வருவமெண்டனீங்கள்.

*புவ* : ஒட்டோ எண்டாப்போலை சும்மாயே.. சுளையாய் 400ரூபாய் மட்டிலை எல்லே கறக்கப்பாக்கிறாங்கள்.

*காந்* : அவன்ர நம்பர் 345. என்னும் நேரம் கிடக்குதப்பா.

*புவ* : 10.00 மணி எண்டு போட்டிருந்தது. இப்ப 12 மணிக்கும் கூப்பிடாங்கள் போலைஎல்லோ கிடக்குது. நாங்கள் வரப் பிந்தினால் விடுவாங்களே.. இப்ப பாருங்கோ.. இன்ரவியு நடத்துகினமாம் இன்ரவியு.

*காந்* : இஞ்சேரும்.. அவங்களே கூப்பிட்டவங்கள் எங்களை.. நல்ல பள்ளிக்கூடமெண்டு எங்கடஒவீசிலை வேலை செய்யுற எஞ்சினியர் சொன்னதாலை அப்பிளிக்கேசன் போட்டம். இப்ப இன்ரவியுக்கும் வந்திருக்கு. எங்களுக்கு இந்த இடமும் புதிசு .. அதிபரையோ ஒரு வாத்தியாரையோ கூடத் தெரியாது பிடிச்சு ஏதும் செய்யிறதுக்கு. பிந்தி வந்தாலும் கூப்பிடேலையே எண்டு சந்தோசப்பட்டு வந்த களைப்புத்தீர கொஞ்சம் ஆற அமர இருப்பமெண்டில்லை. வந்த உடனையே சன்னதம் ஆடத் தொடங்கியிட்டீரப்பா..

*புவ* : என்ரை வாயை மூடிப்போடுங்கோ. உள்ளதைச் சொல்ல விடாதையுங்கோ

*காந்* : இந்த அலுவல் முடியுமட்டுமாவது கொஞ்சம் அமைதியாயிரப்பா.. நீரும் ரென்சனாகி மற்றவையையும் ரென்சனாக்கி.. எல்லாத்துக்கும் மேலை தம்பியையும் பயங்காட்டி.. கொஞ்சம் சொல்லுறதைக் கேளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*புவ* : தம்பிக்கு எல்லாம் தெரியும்... எல்லாம் நான் நல்லவடிவாய்ச் சொல்லிக் குடுத்திருக்கிறான். அவன் பயப்பிடான். நீங்கள் சும்மாய் அவனைப் பயங்காட்டாதேங்கோ

*காந்* : ஆனால். அது வந்து..

*புவ* : எங்களுக்கு கிட்ட இருக்கிற ஒரே பள்ளிக்கூடம். எல்லா டொக்குமென்சும் சரியாய் இருக்கு. தம்பியும் நல்லாய் எல்லாம் சொல்லுவான். நீங்கள் பிறகேன் உங்களுக்கை பயந்து சாகிறியள்.

*காந்* : (தனக்குள்) நான்சொல்லி ஏதேன் நடக்கப்போறதே.. ஏதோ என்ரை மனச்சாட்சி வேறை என்னவோ உறுத்துது.. சொன்னன். அதுக்குப்போய்... நாய் வாலை நிமித்தேலாதெண்டு இண்டைக்கு நேற்றே தெரியும். (சரி.. சரி) அந்தா அடுத்ததா 345.... எங்கடை இலக்கம்தான் போட்டிருக்குது..

*புவ* : ஓமெண்ணுறன். இடையிலை இருக்கிற நம்பர்கள் இன்ரவியுக்கு கூப்பிடேலைப் போலை.. அதுதான்.. சரி உள்ளுக்கை இருக்கிற ஆக்கள் வந்ததும் நாங்கள் போவம்.. தம்பி! அம்மா சொல்லித்தந்தது எல்லாம் ஞாபகம்தானே.. எல்லாம் வடிவாய்ச் சொல்லவேணும்.. அப்பதான் இந்தப் பெரிய்ய பள்ளிக்கூடத்துக்கு வரலாம்..

*குரு* : ஓம் அம்மா... நீங்கள் ஒண்டுக்கும் பயப்பிடாதையுங்கோ..

*புவ* : கெட்டிக்காரன்.

*குரு* : எங்கடை நேசறி இந்தப் பள்ளிக்கூடத்தின்ரை ஒரு றூம் மாதிரி என்னம்மா... அங்கை பாருங்கோ எவளவு பெரிய கிறவுண்ட்... அண்ணாமார் கிரிக்கற் விளையாடுறாங்கள். இந்தப் பெரிய பள்ளிக்குடத்திலைதான் படிக்க எனக்கு ஆசை.. கிரிக்கெற்றும் விளையாடலாம்.

*புவ* : அதுக்குத்தானே பிள்ளையைக் கூட்டிவந்தது..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*குரு* : அப்ப பஸ்ஸிலையே ஒவ்வொரு நாளும் வந்து போகவேணும்.

*புவ* : இல்லைதம்பி.. ஸகூல் வானிலை பிள்ளை வரலாம் தானே..

*காந்* : அங்கை பாருங்கோ .. உள்ளுக்கை இருந்தாக்கள் வந்திட்டினம். நாங்கள் போவம். பைலைத் தாப்பா

*புவ* : இந்தாங்கோ.. டொக்குமென்சுகள் கவனம்.. கொட்டிக் கிட்டிப் போடாதையுங்கோ..

*காந்* : சரி.. சரி..

*பார்த்* : வாங்கோ.. வணக்கம்.. திரு காந்தரூபன்.. ஆ.. இருங்கோ.. இல 345 பிள்ளையின்ரை பெயர்.. காந்தரூபன் ரூபதாஸன் .. அப்பிடித்தானே..

*காந்* : வணக்கம் சேர்..

*புவ* : தம்பியின்ரை பேர் ரூபதாஸன் இல்லை ..ரூபகதாஸன்.. முழுப்பெயர்.. காந்தரூபன் ரூபகதாஸன்.

*பார்த்* : அதுதானே பார்த்தன்.. காந்தரூபன் ரூபகதாஸன். சரிதானே.

*புவ* : சரிசேர் .. உப்பிடித்தான்.. கனபேர் தம்பியின்ரை பேரை பிழையாய்த்தான் சொல்லுறவை..

*பார்த்* : ஆ..அப்பிடியே.. நீங்கள் அதை வடிவாய்த் திருத்தியிருக்க வேணும்.. உங்களை மாதிரிப் பெற்றோர்தான் எல்லாத்துக்கும் முன்மாதிரியாய் இருக்க வேணும்.

*புவ* : ஓம் சேர் உவர் வாயைப் பொத்திக்கொண்டிருப்பர்.. நான் விடுறதில்லை..

*பார்த்* : நான் நினைச்சன்.. அப்பிடித்தான் இருக்கவேணும் .. நல்லதம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*காந்* : (தனக்குள்) சும்மாய் வாயைக் குடுத்துக்கொண்டு.. ம்.. இந்தக் குரலை எங்கையோ கேட்டமாதிரிக் கிடக்குது.. சிலவேளை ஒவீசுக்கு ஏதேனும் அலுவலாய் வந்தவரோ தெரியாது... அப்பிடியெண்டால் எங்கடை எஞ்சினியரிட்டைச் சொல்லிக் கதைச்சுப் பாக்கலாம். எதுக்கும் பொறுத்திருந்து பாப்பமன்..

*பார்த்* : என்ன .. மிஸ்ரர்.. ஆ... காந்தரூபன்.. உங்களுக்கையே கதைச்சுக்கொண்டிருக்கிறியள்..

*காந்* : இல்லை.. அது.. வந்து.. இவ.. ஒண்டுமில்லை சேர்..

*பார்த்* : இன்ரவியூக்கு வந்திருக்கிறியள். அதுவும் அப்பாவும் அம்மாவுமாய்.. பிள்ளைக்கு புதுசேட்டும் சோட்சும் போட்டுக்கொண்டு. பிறகேன் தடுமாறுறியள்.. பதட்டப்படுறியள். கெற் றிலக்ஸ்..

*குரு* : ஓம் பிறின்சிப்பல் சேர் ..புதுச் சேட்டுத்தான்.. நேற்றுப் பின்னேரம் சாவகச்சேரியிலை அப்பா அம்மாவோடை போய் வாங்கினது.

*பார்த்* : கெட்டிக்காரன்... நல்ல பிள்ளை..

*புவ* : ஏ. பீ சீ டீ.. சற் மட்டும் சொல்லுவான். இங்கிலிஸ் பாட்டும் பாடுவான். கதையும் சொல்லுவான்.

*குரு* : 1 . 2 . 3 நூறு மட்டும் எண்ணுவன் சேர்.. தேவாரமும் தெரியும்..

*பார்த்* : பிறகென்ன.. நல்ல கெட்டிக்காரன்போலைதான் கிடக்குது.. ஆனால் ஆள்தான் சின்னவராய்க் கிடக்குது.. எத்தினை வயது இருக்கும்.. என்ன ஒரு நாலு வயதுக்கும் குறையத்தானிருக்கும் போலை..

*புவ* : இல்லை சேர் நாலு முடிஞ்சு ஐஞ்சு வயது நடக்குது.. அதாலைதானே முதலாம் வகுப்புக்கு சேர்க்க அப்பிளிக்கேசன் போட்டனாங்கள்.

*பார்த்* : ஆ.. அப்பிடியே..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*புவ* : இஞ்சாருங்கோ.. உந்த தம்பியின்ரை பைலை பிறின்சிப்பல் சேரிட்டைக் கொடுங்கோ..

*காந்* : இந்தாங்கோ சேர். தம்பியின்ரை பேர்த்சேட்டிவிக்கற், எங்கடை அடையாள அட்டைகொப்பி மற்றது வோட்டேர்ஸ் லிஸ்ற் நீங்கள் கேட்டடொக்குமென்றஸ் எல்லாம் இருக்கு. போட்டோக்கொப்பியும் வேறையாய் இருக்குது சேர்..

*பார்த்* : நல்லது.. தாங்கோ.. ம்.. அடையாள அட்டை.. சரி.. அட்ரசுக்கு கிட்டவுள்ள வேறை ஸ்கூல் ம்.. அதுவும் சரி.. வோட்டேர்ஸ் லிஸ்ற். ம்.. அதுவும் சரி.. பிரச்சனையில்லை.. ஜி எஸ் சேட்டிபிக்கற்.. அதுவும் பிரச்சனை யில்லை.. கரண்ட்பில் அதுவும் ஓ.. கே.. பிறந்தது..

*புவ* : அதுதானே சொன்னனே ..அஞ்சு தொடங்கி நாலுமாதமாகுது...

*பார்த்* : நம்பேலாமல் இருக்குதே.. அப்ப அரைரிக்கற் வயதெண்டு சொல்லுங்கோவன்.

*புவ* : பகிடி விடுறியளே சேர்.. நீங்கள் பேர்த் சேட்டிபிக்கற்றைப் பாருங்கோ...

*காந்* : (தனக்குள்) ம்.. இவர்.. அவரோ... குரல் கேட்டதாய்த் தான் இருக்குது.. தோற்றம்தான் அடையாளமே காணேலாமல் கிடக்குது.

*பார்த்* : உங்கட விவரங்களின்படி உங்கடை பிள்ளைக்கு அட்மிசனுக்கு தேவையான தகுதி தகைமை எல்லாம் இருக்கு.. ஆனால்

*காந்* : ஆனால் என்ன சேர்.

*புவ* : தம்பியையும் ரெஸ்றபண்ணிப் பாக்கில் பாருங்கோ சேர். எங்களுக்கு தம்பியை இஞ்சை சேர்க்கத்தான் விருப்பம்.. அவனுக்கும் அப்பிடித்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பார்த்* : எங்கடை ஸ்கூல்லை சேருறதுக்கு வாற அப்பிளிக்கேசன்ல நாலு கிளாசுக்கும் நாலு தர முப்பத்தைந்து நூற்றிநாப்பது பிள்ளையளைத்தான் எடுக்கலாம். ஆனால் இந்தமுறையும் 500 பேருக்கு இன்ரவியுக்கு கடிதம் அனுப்பினனாங்கள். இப்பிடி போட்டி இருக்கேக்கை உங்கடை பிள்ளையைச் சேர்க்கிறதைப் பற்றி யோசிக்கத்தான் வேணும்.

*புவ* : ஏன் சேர் தம்பிக்கு எல்லாத் தகைமையும் சரியாய் இருக்குதெண்டு நீங்கள்தானே சொன்னனீங்கள். பிறகென்ன சேர்..

*பார்த்* : டொக்குமென்றிலை இருக்கிற தகுதி மட்டுமில்லை நாங்கள் பெற்றாரின்ரை தகைமைகள் அவையள் எப்பிடியானவை, பிள்ளை யளுக்கு எப்பிடியான பழக்க வழக்கங்களை பழக்கியிருப்பினம் எண்டதையெல்லாம் ஆராயத்தானே வேணும். அந்தத் தகைமை களையும் வைச்சுத்தான் இறுதி முடிவெடுப்பம். உங்களுக்கும் தெரிஞ்சிருக்கும். வளரும் வழி எவ்வழியோ வாழும்வழி அவ்வழியே எண்டு பழமொழியும் இருக்குதெல்லே.. அதுகளைப் பார்த்து எடுத்தால்தான் நாங்கள் எங்கடை பள்ளிக்குடத்தின்ரை பேரையும் காப்பாற்றலாம்.

*காந்* : நானும் ஒரு கவண்மென்ற் சேவன்ற்தான் சேர். எங்கடை டிப்பாட்மென்ரிலை தந்த லெற்றரும் பைலிலை இருக்கு.

*பார்த்* : ஓம் மிஸ்ரர் காந்தன். எல்லாத்தையும் வடிவாய்ப்பாத்தன். அதாலைதான் டொக்குமென்ஸின்படி பிள்ளைக்குச் சகல தகைமையுமிருக்குதெண்டு சொன்னன். ஆனால் அட்மிசன் தாறதுக்கு பேறன்ற்சின்ரை நிலைமயையும் பாத்துத்தான் இறுதி முடிவெடுக்கலாம் எண்டும் சொல்லுறன்.

*புவ* : ஏதேன் பள்ளிக்குடத்துக்கு டொனேசன் குடுக்க வேணுமெண்டால் நாங்கள் தாறம் சேர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பாத்* : தருவியள் ... தருவியள்.. ஓ நீங்கள் பெரிய பாரி வள்ளல் பரம்பரையிலை வந்தனீங்கள் எல்லே.. ஒரு ஆறு ரூபா குடுக்கமாட்டாமல் ஒரு அப்பாவியோடை மல்லுக்கட்டினதை என்ரை ரெண்டு கண்ணாலையும் பாத்தனே.. அப்பிடியான நீங்கள்தான் பள்ளிக் கூடத்துக்கு டொனேசன் தரப்போறியளோ.. அல்லது தருவியள் எண்டதை நான் எப்பிடி நம்புறது.

*புவ,*

*காந்* : சேர்.. நீங்கள்

*பார்த்* : ஓம் நானும்.. நேற்று பின்னேரம் நீங்கள் வந்த பஸ்ஸிலதான் வந்தனான்.. எல்லாத்தையும் வடிவாய்ப் பாத்தன்...

*புவ* : ஆனால் நாங்கள் பாக்கேலையே...

*பார்த்* : ம்.. ஆனால் என்ரை முகரக்கட்டையை வடிவாய்ப் பாத்தியள்தானே. நீங்கள் என்னை நானாய்ப் பாத்திருந்தால் நேற்று உங்களை, உங்கட சுயரூபத்தை என்னாலை பாக்க முடியாமலிருந்திருக்குமே...

*புவ* : அது வந்து.. சேர்

*பார்த்* : வந்தும் போயும் ஒரு ஆறுரூபாய்க்காக.. அதுவும் பிளயின்ஸ்கோட் வந்தா தன்ரை வேலை போயிடும் எண்டு அந்த அப்பாவி பஸ்கொண்டக்டர் பெடியன் சொல்லவும் கொஞ்சமாவது மனம் மாறினியளே..

*புவ* : உங்களுக்குத் தெரியாது சேர்.. அவன் நெடுக உப்பிடித்தான்..

*பார்த்* : சரி.. அவன்தான் பிழை.. அதைவிடுவம்... மகனுக்கு நாலு வயது.. தேவையெண்டால் பேர்த் சேட்டிபிக்கற்றும் கொண்டு வந்து தாறமெண்டு சொன்னது போலை கேட்டுது.. அப்ப .. அவனுக்குக் காட்டிறமெண்ட சேட்டிபிக்கற் பொய்யோ.. இல்லை இஞ்சை 5 வயசாகியிட்டுது எண்டு காட்டக் கொண்டுவந்த இந்த பையிலுக்கை கிடக்கிற சேட்டிபிக்கற் பொய்யோ.. எதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் நம்புறது.. அல்லாட்டில் பஸ்சுக்கொரு சேட்டிபிக்கற் பள்ளிக்கூடத்துக்கொரு சேட்டிபிக்கற் வைச்சிருக்கிறியளோ..

*காந்* : பையிலுக்கை கிடக்கிற சேட்டிபிக்கற் உண்மையானது. பொய்யில்லை சேர். நம்புங்கோ சேர்.. உந்த அம்பலத்தாடி வைரவர் மேலை சத்தியம் சேர்.

*பார்த்* : என்னை என்னண்டு நம்பச் சொல்லுறியள். ஆறு ரூபாய்க்காக எவளவு பொய்யைச் சொல்லி அந்த பஸ்ஸையே அமர்க்களப்படுத்தினனீங்கள் தெரியுமே.. நாளைக்கு இன்னும் எத்தினை பொய்யைச் சொல்லி என்னையும் இந்த பள்ளிக் கூடத்தையும் ஏமாத்த மாட்டியள் எண்டு என்ன உத்தரவாதம். ம்;. இப்பிடியான உங்களை நம்பி உங்கடை பிள்ளையை எப்பிடிச் சேர்க்க முடியும். எங்கடை பள்ளிக்குடத்தின்ரை பெயரை உங்கடை பிள்ளை பாதுகாப்பான் எண்டு எப்பிடி நாங்கள் நம்பி எடுக்க முடியும். யோசிச்சுப் பாருங்கோ..

*காந்* : சேர்.. அப்பிடிச் சொல்லாதையுங்கோ சேர்..

*புவ* : உந்தச் சின்ன ஒரு சம்பவத்தைவைச்சு எல்லாத் தகைமையும் இருக்கிற எங்கடை அப்பிளிக்கேசனுக்கு அட்மிசன் இல்லையெண்டு சொல்லிப் போடாதையுங்கோ சேர்..

*பார்த்* : இஞ்சை பாருங்கோ... இதை ஒரு சின்னச் சம்பவம் எண்டோ நினைக்கிறியள். ஊசி எடுக்க வெளிக்கிட்டுத் தான் உலக்கை எடுத்த கதை கேள்விப்பட்டனீங்கள்தானே. .

*புவ* : சின்னனோ பெரிசோ.. எங்கையோ பஸ்ஸிலை நடந்ததை வைச்சு தகைமை இல்லை எண்டு அட்மிசன் இல்லையெண்டு என்னண்டு சொல்லமுடியும். நீங்கள்தானே எல்லாத்தகைமையும் இருக்குதெண்டு சொன்னனீங்கள் சேர்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பார்த்* : நீங்கள் செய்ததை நினைச்சுப்பாருங்கோ.. வயசைக் குறைச்சு ஒரு அப்பாவிப் பொதுமகனை ஏமாத்தினது.. அவன்ரை தொழிலுக்குப் பாதகம் வரப்போகுது எண்டு தெரிஞ்சும் அதைப்பற்றி அக்கறைப்படாமல் விடாப்பிடியாய் நிண்டது. அதைப்பாத்து பஸ்ஸிலை வந்த ஒருபொதுமகன் உங்கடை காசைக் குடுக்கேக்கை அதைக் கேவலமாய்ப் பாத்தது.. பொதுமக்கள் பிரயாணம் செய்யிற பஸ்ஸிலை அநாகரிகமாய் நடந்தது.. இப்பிடி எத்தினையோ அடுக்கிக்கொண்டு போகலாம். இதுகள் உங்கடை மேலதிக தகைமைகள் எண்டு நினைக்கேலையோ.. பள்ளிக்குடத்திலை சேர்க்கேக்கை நாங்கள் இந்தத் தகைமை களையும் பாக்கிறது தவறில்லைத்தானே.. ஏனெண்டால் என்ரை காலத்திலை மட்டுமில்லை எப்பவும் பள்ளிக்கூடத்தின்ரை பேர் கெட்டுப்போகக்கூடாது.

*காந்* : (தனக்குள்) நான் அப்பவே நினைச்சன் இவரை எங்கையோ கண்டதெண்டு.. இப்பதான் நினைக்கிறன் .. இவர்தான் எனக்குப் பக்கத்திலை இருந்து காசு குடுத்தவர் போலை.. இவரைத்தான் புவனம் பாரியின்ரை பரம்பரை எண்டு சீறிப்பாய்ஞ்சவ. ம்.. பேசாமல் ஆறு ரூபாயைக் குடுத்து ரிக்கற் எடுக்கத் தெரியாமல் இப்ப ம்..கறந்த பால் முலைக்கேறுமே..

*பார்த்* : என்ன காந்தன்.. பக்கத்திலை தலைப்பாக்கட்டோடை இருந்த மூஞ்சை இப்ப முழுக்கைச்சேட்டும் ரையும் போட்டுக்கொண்டு வந்து உங்கடை தகைமைகளை புட்டுப்போடுது எண்டு நினைக்கிறியளோ..

*காந்* : அது வந்து.. ஏதோ தெரியாத்தனமாய் நடந்து போச்சுது.. பெரிய மனசுவைச்சு மன்னிச்சுக்கொள்ளுங்கோ சேர். அவவின்ரை குணமே அப்பிடித்தான். ஆனா மனசிலை வஞ்சகமில்லாதவ..

*பார்த்* : ஒரு பானை சோத்துக்கு ஒரு சோறு பதம் எண்டது போலை உங்களை அளவிடுறதுக்கு இது ஒண்டே போதும். அதுதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கடை வைவ்வின்ரை பாசையிலை சொல்லப்போனால் இந்தச் சின்னச் சம்பவம் ஒண்டே உங்கடை தகைமையை அளக்கப் போதுமானது.

**காந்** : மன்னிச்சுக் கொள்ளுங்கோ சேர். அவவோடை கூடப்பிறந்த குணம் அது. என்ன செய்யிறது.. அவசெய்த தவறுக்கு எங்கடை பிள்ளையின்ரை எதிர் காலத்தை பதம்பாக்காதேங்கோ சேர்.

**பார்த்** : நீங்கள் உங்கடை பிள்ளையின்ரை தகைமையைப்பற்றி, எதிர்காலத்தைப் பற்றி கதைக்கிறியள்.

**காந்** : அவன்தானே படிக்கப்போறவன். அதாலைதான் கெஞ்சிக்கேக்கிறன் சேர். அம்மா செய்தது தவறு தான். நான் ஒருக்காலும் அதைச் சரி எண்டு சொல்லேலை. சேற்றிலை செந்தாமரை முளைக் கேலையே.. அதைமாதிரி தவறான பெற்றோருக்கு நல்ல பிள்ளை அமையக்கூடாதே.. அப்பிடி எடுத்துக் கொள்ளுங்கோ சேர். தம்பியின்ரை எதிர்காலம் சேர். வளரத் துடிக்கிற ஒரு இளங்குருத்தை வாமுற இடத்தை வைச்சு கருக விட்டிடாதையுங்கோ சேர்.

**பார்த்** : நான் எந்தக் கட்டத்திலையும் இளங்குருத்தை சிதைக்கமாட்டன். ஆனால் அதே நேரத்திலை வளர்ந்து கிளைபரப்பி நிக்கிற பாரிய மரத்திலை நச்சுப் பூச்சிகள் புகுந்து சீரழிக்கவும் விடமாட்டன்.

**காந்** : சேர்..

**பார்த்** : ஓம் மிஸ்ரர் காந்தன். நீங்கள் உங்கடை பிள்ளையின்ரை எதிர்காலத்தைப்பற்றி மட்டும் நினைக்கிறியள், கதைக்கிறியள். நான் எத்தினை ஆயிரம் பிள்ளைகளை நல்ல பிரஜைகளை உருவாக்கிய, உருவாக்கவேண்டிய, பள்ளிக்குடத்தைப் பற்றிக் கதைக்கிறன்.

**காந்** : (அழுது) அப்ப பிள்ளைக்கு அட்மிசனே இல்லையே சேர்.. இந்தப் பள்ளிக்குடத்துக்கு சேருற தகுதியே இல்லையே சேர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பார்த்* : சட்டத்தின்படி உங்கடை பிள்ளைக்கு இந்த ஸ்கூலிலை சேருறதுக்கான சகல தகைமையும் இருக்குதுதான்.

*காந்* : சேர்.

*பார்த்* : ஆனால் ஸ்கூலிலை பிள்ளைளையை உள்வாங்கிறதுக்கு வேண்டிய தகைமை இருக்குதோ எண்டுதான் யோசிக்கிறன். ஓம் ஆலமரம்போல உலகம் முழுதும் தன்ரை மாணவச் செல்வங்களைக்கொண்ட இந்த பள்ளிக்குடத்தின்ரை எதிர்காலத்தைப் பற்றி யோசிக்கிறன். (பெருமூச்சு விட்டு) மிஸ்ரர் காந்தரூபன் நீர் சொன்ன மாதிரி சேற்றிலைதான் செந்தாமரையும் முளைக்கிறது அதேபோல குளத்தில் விழுந்த ஒரு துளி விஷம்தான் சிலவேளைகளில் அந்தக் கிராமத்துக்கே உலைவைத்துவிடுகின்றது. அதையும் நாங்கள் நினைவில் வைத்திருக்கவேண்டும். இந்தச் சந்தர்ப்பத்துக்கு எந்தத் தகைமை முக்கியமானது எண்டு தீர்மானிச்சு உங்களுக்கு கடிதம்போடுறம். நன்றி.

--- நிறைவு----

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. மயிர்க்கொட்டிகள்

பாத்திரங்கள்

- ஹரி
- மேகலா – ஹரியின் காதலி [சிங்களப் பெண்]
- கந்தையா – ஹரியின் தந்தை
- சுதன் – ஹரியின் பெறாமகன்
- ஆனந்தி – கந்தையாவின் தங்கை
- காசிநாதன் – கந்தையாவின் தங்கையின் கணவன்

[குறிப்பு: மேகலா என்பது சிங்களப் பாத்திரம். அதன் உரையாடல்கள் சிங்களத்தில் இடம்பெறும் போது அடைப்புள் தமிழாக்கம் தரப்பட்டுள்ளது.]

## காட்சி – 1

*பாத்திரங்கள் : காசிநாதன், மேகலா, ஹரி, அனந்தி, சுதன்*

*இடம் : வீடு*

*காசி* : அப்பப்பா... இந்தப்பயணம்.. என்ன முழுவியளத்திலை வெளிக்கிட்டமோ தெரியாது.. அங்கை றெயினுக்கு புக் பண்ணி பிறகு அங்கையிருந்து பஸ்ஸிலைவந்து பிறகு ஸ்ரேசன்ல தூங்கிக்கொண்டு நிண்டு.. பிறகு இஞ்சாலையும் இப்பிடி இடிவிழும் எண்டு தெரியுமே.. பேசாமல் ஸ்ரேசனுக்கு முன்னாலை ஒரு லொட்ஜிலை நிண்டு ஆருக்கும் தெரியாமல் அலுவலை முடிச்சிட்டு காதும் காதும் வைச்ச மாதிரிப் போயிருக்கலாம். மரியாதையாயு மிருந்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஆனந்* : ஏனப்பா.. இப்ப எங்கை மரியாதை இல்லை எண்டு எரிஞ்சு விழுறியள். ம். ம். அந்தக் காலத்திலை கிளாலி. கொம்படி எண்டு திரிஞ்சு கை நடையாய் கால்நடையாய் நடந்து மாட்டு வண்டிலிலையும் தோணியிலையும் அலைஞ்சு வந்ததை மறந்திட்டியள்...

*காசி* : அதை ஆர் இல்லையெண்டது. ம் (மழுப்பி) உவன் ஒட்டோக்காரன் .. ஏதோ மீற்றர் ரக்சி எண்டு எழுதிப் போட்டு எத்தினை தரம் மாலுக்கடை, கொச்சிக்கடை, பொன்னம்பலவாணேசர் கோயில் எண்டு காட்டினான். சொல்லுபாப்பம்.. ஒரு மணித்தியாலமாய் உள்ள எல்லா ஒழுங்கையளையும் காட்டி .. மீற்றரைக்காட்டி 403 ரூபாயாம்.. ம் அறாக்காசு.. உதுக்குத்தான் சொல்லுறது மற்றவையை நம்பியிருக்கக் கூடாதெண்டு.. தெரியாமலே சொல்லுறது.. ஆசை மாமி... மாமாவோடை வாறாவெண்டு தெரியும்.. ஸ்ரேசனுக்குத்தான் வரவேண்டாம்... ரெலிபோனைத் தன்னும் தான் ஆன்ஸர் பண்ணி யிருக்கலாமில்லை.. நீயும் உன்னடை மருமோனும்..

*ஆனந்* : ஒட்டோக்காரனோடை கதைக்க வக்கில்லை .. பேப்பே எண்டிருந்து போட்டு.. அவன் போனாப்பிறகு இப்ப எனக்கு வண்டவாளம் காட்டிறியளே. சுளையாய் 400ரூபா எடுத்துக்குடுக்கேக்கை சும்மா இருந்துபோட்டு இப்ப என்ரை அண்ணேன்ரை மோனை இதுக்கை இழுத்துக் குலைச்சு என்ன பிரயோசனம். உதுக்கும் அவன் ஹரிக்கும் என்னப்பா சம்பந்தம் அதுகளுக்கும் என்னென்ன சோலியோ என்ன வேலையோ ஆர்கண்டது...

*சுதன்* : (வந்துகொண்டு) வாங்கோ.. வாங்கோ.. என்ன அத்தை றெயினாலை வந்து உள்ளுக்கை வரேலை மாமாட்டைக் கணக்குக் கேக்கிறியள் போலை...

*ஆனந்* : வேறை என்னடா சுதன். கேக்க வேண்டியவன் நிக்கையிக்கை யெல்லோ கேட்டிருக்க வேணும். அவன் ஒட்டோக்காரன் போனாப்பிறகு என்னிலை எரிஞ்சு விழுந்து கொக்கரிச்சா..?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சுதன்* : இஞ்சை உப்புடித்தான் அத்தை.. தெரிஞ்சாக்களுக்கே திறீவீலர்க்காரங்கள் கயிறுதிரிக்கிறாங்கள். நீங்கள் யாழ்ப்பாணத்திலை இருந்து வாறியள் எண்டு தெரிஞ்சா பிறகு சொல்லவும் வேணுமே...

*காசி* : (சிறிது கோபத்துடன்) நாங்கள் யாழ்ப்பாணத்திலை இருந்து வாறமெண்டு தெரிஞ்சால் அவங்கள் மட்டுமில்லை எல்லாரும் கயிறு திரிப்பினம். ஒ.. அதுதான் திரிக்கினம்.

*சுதன்* : என்ன மாமா ஒரு மாதிரிச் சொல்லுறியள்.. ஏன்.. என்ன நடந்தது..

*ஆனந்* : அது வந்து சுதன்.. றெயினாலை இறங்கி மாமா ரெலிபோன் எடுத்தவர். அப்ப ஹரி எடுக்கேலையாம்.

*காசி* : (இடைமறித்து) எடுக்கேலையோ.. என்ன நடந்தது எண்டு உனக்குத் தெரியுமே.. அவ ஒருத்தி கேள்விக்குப் பதில் சொல்லுறாவாம் பதில். .. நானும் மினைக்கெட்டு விரல் நோக அடிச்சன். . ஒரு தரமே எத்தினை தரம். .. ஆரோ ஒரு சிங்காரி.. ம்.. சிங்களத்துச் சிங்காரி ஒருத்தி எடுத்து..ஸொறி ..ஹரி இப்ப பிஸி.. பிறகு எடுங்கோ எண்டு .. அரைத்தமிழிலை .. எனக்குச் சொல்லுறா..

*சுதன்* : அது வந்து..

*ஆனந்* : என்னடா இது புதுக்கதை.. ரெலிபோன் எடுக்கிறானில்லை எண்டார்... இப்ப என்னடா எண்டால்.. சிங்காரி .. வெங்காளி எண்ணுறார்.

*காசி* : அவவுக்கு எல்லாம் விலாவாரியாய் சொல்லித் துலைக்கவேணும் அவதான் தன்ரை அண்ணேன்ர மகன் எண்டு உருகிறா. அங்கை அவள் இளையவள் கவிதா வேறை மச்சான் மச்சான் எண்டு இவருக்காகக் காத்திருக்கிறாள். இஞ்சை என்னண்டா இப்ப ஹரி பிசியாம். ஆரோ ஒரு சிங்களப்பெட்டை பிசியாம். ஒண்டு மட்டும் சொல்லிப்போட்டன் சுதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சுதன்* : (இடைமறித்து) அது மாமா

*காசி* : மாமா எண்டு சொல்லாதை. அப்பிடியொரு மரியாதை இருந்திருந்தால் இண்டைக்கு இப்பிடி நடந்திருக்குமே.. இப்பிடி அலைஞ்சிருப்பமே..

*ஆனந்* : ஆற்றையேன் கோவத்தை ஆரிலை ஏன் காட்டுறியள்... ஆரோ ஒரு சிங்களப் பெட்டை ரெலிபோனை ஆன்ஸர் பண்ணியிட்டாள் எண்டாப்போலை ஏன் முழங்காலுக்கும் மொட்டந்தலைக்கும் முடிச்சுப்போடுறியள். ஹரி வரட்டுமன் கேட்டுப் பாப்பம். சும்மா தெருவிலை நிண்டு கத்தாமல் உள்ளுக்கை வாங்கோ.. இது ஊரில்லை.. கொழும்பு அதை மறந்திடாதையுங்கோ..

*சுதன்* : அது சரி மாமா.. வாங்கோ உள்ளுக்கை.. வந்தகளை ஆற போய்க்குளியுங்கோ.. சித்தப்பா வந்தபிறகு ஆறுதலாய் விபரமாய்க் கதையுங்கோ.. எல்லாரும் பாக்குதுகள். வாங்கோ உள்ளுக்கை..

*ஆனந்* : அவர் கிடக்கிறார். சுதன் நீ பாக்கைக் கொண்டு உள்ளுக்கை போ..

*காசி* : கொழும்பெண்டு பாக்கிறன். அதாலை வாறன்.. இப்ப ஊரெண்டால் தெரியும் காசிநாதன் ஆரெண்டு.. குளிச்சிட்டு வாரன் (கதவு திறக்கும் சத்தமும். கார் வரும் ஒலியும்)

*ஆனந்* : ஆர் சுதன்.. கார் வந்து நிப்பாட்டுறது.. ஆர் சித்தப்பாவின்ரை காரே.

*சுதன்* : (மேகலாவும் வருவதைப்பார்த்து திடுக்கிட்டு - தனக்குள்) ஆ.. இவ ஏன் இந்த நேரத்திலை.. நீங்கள் உள்ளுக்கை போங்கோ மாமி.. அவற்றை கார்தான் .. உங்கடை கோல் வந்ததெண்டு போனிலை பாத்திருப்பார். அதுதான் வந்தவர் போலை..

*ஆனந்* : பொம்பிளைப் பிள்ளையொண்டும் வருகுது போலை கிடக்குது.. ஆர்.. அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*காசி* : (உள்ளுக்குள் இருந்து) வேறை ஆர்.. நான் சொன்னன்.. அந்தச் சொறி ஹரி பிஸி சிங்காரியாத்தான் இருக்கும். வெக்கமில்லாமல் வாயாலை கேக்கிறியே.. கண்ணாலை நீயே பார் அந்த கண்றாவியை..

*ஆனந்* : சும்மாய் கண்கெட்ட கதை கதையாதையுங்கோ.. குளிச்சிட்டு வேளைக்கு வாங்கோ.. வந்தவை வரட்டும் கேட்டுப் பாரன்..

*காசி* : இனி ஒரு கேள்வி வேறை, விளக்கம் வேறை வேண்டிக் கிடக்கு.. கைப்புண்ணுக்கு என்ன கண்ணாடியே வேணும்

*சுதன்* : அது வந்து மாமி.. அந்தச் சாப்பாடு தாறஅன்ரியின்ரை மகள். அவயின்ர வீட்டிலைதான் காலையிலையும் இரவுக்கும் சாப்பாடு எடுக்கிறனாங்கள்

*ஆனந்* : ஆ.. அப்பிடியே .. சாப்பாடு எடுக்கிறது சரி.இரண்டு பேரும் ஒண்டாய்க் காரிலை வருகினம். அதுகும் முன்சீற்றிலை பக்கத்திலை இருந்து...!

*சுதன்* : சித்தப்பா ட்றைவ் பண்ணேக்கை அவ பின் சீற்றிலை இருந்தால் இஞ்சை கொழும்பிலை பாக்கிறவை அவ முதலாளி எண்டும் இவர் அவயின்ரை ட்றைவர் எண்டும் நினைப்பினம் அதுதான்..

*ஆனந்* : அதுதானே பாத்தன்.. இஞ்சை அப்பிடியே சரி.. சரி..

*ஹரி* : (வந்து கொண்டு) என்ன மாமி.. எப்பிடிப் பயணம்.. மாமா கதைச்சதாய் மேகலா சொன்னா.. நான் அப்ப ஒரு மீற்றிங்கிலை இருந்தனான். மேகலாதான் ரெலிபோனை ஆன்ஸர் பண்ணினவ..

*சுதன்* : ஓம் சித்தப்பா.. நீங்களும் வரேலை .. ஏதோ திறீவீலர் ட்றைவரும் ஏமாத்திப்போட்டான் என்டு மாமா கோபத்திலை நிக்கிறார்.

*ஹரி* : மாமான்ரை கோவம் பட்டாசு மாதிரி வெடிக்கும் எண்டது தெரிஞ்ச விசயம்தானே. ஸ்ரேசனுக்கு வரேலையெண்டு எனக்கும் மங்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்திருக்கும். இஞ்சை பாருங்கோ மாமி வேறை ஏதும் எண்டா சமாளிச்சுப்போட்டு வரலாம். ஆனா மீற்றிங் எண்டால் ஒண்டும் செய்யேலாது.

*ஆனந்* : பறவாயில்லை ஹரி.

*ஹரி* : மேகா..! மம கிவ்வா மெயா தமாய் நந்தம்மா.. தாத்தாகே நங்கி (நான் சொன்னன்... இவதான் மாமி... அப்பான்ரை தங்கச்சி)

*மேக* : (சிங்களத் தமிழில்) வாங்க மாமி.. ஒங்களப் பத்தி ஹரி நித்தம் சொல்லுறது. ட்றவல் பண்ணினது தானே.. ரயேட்டாயிருக்கும். வாஸ்பண்ணியிட்டு வாங்க .. எங்க அம்மா காம.. சாப்பாடு தந்தது.. சாப்பிடுங்க.. சுதன்.. மாமா எங்க..

*சுதன்* : அவர் குளிக்கிறார்.

*ஹரி* : மாமா நல்ல கோபத்தில இருக்கிறாராம். ஹொந்தட்ட கேந்தி கீல இன்னுவாலு...

*ஆனந்* : தமிழிலையும் கதைக்கிறாள் பாவி. என்னையும் மாமி முறை கொண்டாடுறாள். விடுப்புப் புடுங்கிறாள். உவள் சாப்பாடு குடுக்கிறது மட்டும்தானோ அல்லாட்டில் அவர் சொன்னது போலை ஏதும்.

*ஹரி* : என்ன மாமி.. பேச்சையே காணம். அப்பிடியே நிக்கிறியள்.

*மேக* : எயாட்ட மஹன்சி அத்தி .. (அவவுக்கு களைப்பாக்கும்) களைச்சுப் போனது தானே.. நீங்க வாங்க..

*ஆனந்* : (முணுமுணுத்தபடி) சாப்பாடு குடுக்குறதெண்டால் இப்பிடியே.. வீட்டுச்சொந்தக்காரர் போலை எல்லோ கதைக்கிறாள்.. ரெண்டு கலியாணம் செய்யாத இளந்தாரியள் இருக்கிற வீட்டுக்கை இப்பிடிச் சுதந்திரத்தோடை திரியுறாள். உண்மையிலை அப்பிடி ஏதும் இருக்குமோ... (பதில்) ஆ நான் வாறன் தம்பி..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***மேக*** : எனக்கு கொஞ்சம் தமிழ் தெரியும்.. ஹரி யவ்னாவிலையிருந்து வரேக்கை சிங்களம் ஒண்டும் தெரியாது. நாங்கதான் சொல்லிக் குடுத்தது. இப்ப நம்மளப்போல கதக்கும். ..ஹரி மட்ட அமதக்குண.. கிரி பக்கற் கத்ததா.. இஸ்ஸறா கடைவலின் அறங் எண்ட... மம மாமாட்ட தே தாள தென்னங்... (மறந்துட்டன். பால் பைக்கற் வாங்கினதா? முன்கடையிலை வாங்கி வாரும் மாமாவுக்கு தேத்தண்ணி போட்டு குடுப்பம்)

***ஹரி*** : மாமி நான் உந்தக் கடையிலை பால் பக்கற் ஒண்டு வாங்கியிட்டு வாறன்

***ஆனந்*** : சரி தம்பி..

***மேக*** : ஹரி சொன்னது. உங்க வீட்டிலை நிறைய பசுமாடு நிக்குதாமே.. நீங்க பாம்பிட்டி (பால்மா) குடிக்கிறதில்லையாம் எண்டு.

***காசி*** : (வந்து கொண்டு) அவர் இதெல்லாம் உரஞ்சியிருக்கிறார் போலை.. அதெல்லாம் மட்டும்தான் ஒதினாரோ.. அல்லாட்டி

***மேக*** : மாமா சரியான கோவம் போல..

***காசி*** : இதுகளைப் பாக்கேக்கையும் கேக்கேக்கையும் வேறை என்ன சந்தோசமே வரும். சாப்பாடு குடுக்கிறம் குடுக்கிறமெண்டு சாப்பாட்டிலையே மருந்தோ மந்திரமோ போட்டுக் குடுத்து அவனை மயக்கிப் போட்டுதுகள் போலை. அதாலைதான் மாமா மாமி வந்தருக்கினம் எண்டு தெரிஞ்சும் ஸ்ரேசனுக்கு வரேலை. பரதேசியள்.அவனை வளைச்சுப் போட்டாளவை.

***மேக*** : தறாவெண்டேப்பா.. (கோவிக்க வேண்டாம்) நாங்க அப்பிடி ஆக்களில்லை மாமா.

***காசி*** : அப்பிடி இல்லைஎண்டால் .. வேறை எப்பிடி .. வசியம் செய்து போட்டாளவை.. அவனை மயக்கி மடியுக்கை போட்டிட்டாளவை.. கெட்ட சாதியள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஆனந்* : கொஞ்சம் அமைதியாய்க் கதையுங்கோ.. துள்ளாதையுங்கோ...

*காசி* : ஒமடி.. அவள் அங்கை ஏங்கிக்கொண்டிருக்க இஞ்சை இதுகள் உள்வீட்டுக் காறியாகிவிட்டுதுகள். .. அடுப்படி மட்டும் வந்திட்டுதுகள்..இஞ்சை எத்தினை லச்சம் சிங்களப் பெடியள் இருக்கேக்கை எப்பிடித்தான் தேடிப்பிடிச்சு ஹரியை அமத்தினதுகளோ..?

*சுதன்* : மாமா..!

*காசி* : என்னடா மாமா கீமா எண்டு.. எல்லாம் தெரிஞ்சு கொண்டுதான் நீயும் நடிச்சனியோ.. அல்லாட்டில் சித்தப்பனுக்கு மாமா வேலையோ..?

*மேக* : (அழுதுகொண்டு) பலண்ட சுதன்.. மாமா அபிவ கத்த விதிய கியணுவா நே... (பாரும் சுதன்... எங்களைக் கேவலமாய்க் கதைக்கிறார்... என்ன)

*காசி* : சிங்களம் தெரிஞ்சிருந்தால் தந்திருப்பன் உனக்கு விளங்கத் தக்கதாய். உண்மையைச் சொன்னால் என்ன உடம்பெல்லாம் நோகுதோ.. ஓ.. ஊரிலை சாடை மாடையாய்க் கதைக்கேக்கை நான் உசாராயிருந்திருக்க வேணும். இப்ப ஒண்டும் தெரியாத மாதிரி மாசாலம் கொட்டுறியோ.. ஆனந்தி தாயில்லாப் பெடியனெண்டு தாய்க்குத்தாயாய்ப் பாத்து வளத்து ஆளாக்கிவிட இஞ்சைவந்து என்ன ஆட்டம் ஆடுறான் எண்டு பார்..

*ஆனந்* : எதுக்கும் அவசரப் படாதையுங்கோ.. ஏன் சும்மாய் ஆரேன் பிள்ளையயோடை .. ஆற்றையேன் பிள்ளையளோடை .. அதுவும் பாசை தெரியாததுகளோடை வீணாய்ப் பிரச்சனையை வளர்க்கிறியள். பால் வாங்கப்போன ஹரி வரட்டுமன். தீர விசாரிச்சுப்போட்டு கதையுங்கோ..

*காசி* : இஞ்சைபார் உன்ரை ஆசைமருமோன் வாங்கிவாற பாலைக்குடிக்க விருப்பமெண்டால் நீ நிண்டு ஆசைதீரக் குடி.. அவள் பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதா அங்கை இவரை நினைச்சு மனப்பாலைக் குடிக்கட்டும். ஆனந்தி நான் மானஸ்தன். இனி இஞ்சை ஒரு நிமிசமும் நிக்கமாட்டன். சுதன் அந்த பாக்கை எடு. ஆனந்தி நீ வாறதெண்டா நீ இப்பவே என்னோட வா.. இல்லை உரிஞ்ச சீலையோடை தான் நிக்கவேணுமெண்டால் நில் ..நான் வாறன்

***மேக*** : (அழுது) என்னாலதானே எல்லாம்.. சுதன் நா போறன் ஹரி வந்தப்புறம் மாமாவ அவங்ககிட்ட பேசிட்டு போகச் சொல்லுங்க..

***சுதன்*** : மாமா.. ஒரு சின்ன சம்பவத்தை மாத்திரம் பாத்திட்டு முடிவெடுக் காதையுங்கோ.. சித்தப்பா வந்தாப்பிறகு அவரோடை கதைச்சிட்டுப் போங்கோவன்.. அத்தை நீங்கள் தன்னும் சொல்லுங்கோவன்.

***காசி*** : என்னடா.. இது சின்ன சம்பவமோ.. இன்னும் என்ன கிடக்கு.. சித்தப்பனோடை சேர்ந்தா நீமட்டுமென்ன விதிவிலக்கே.. உங்களுக்கு அது சின்னதாய்த் தெரியுதோ.. ம்.. முந்தநாள் முளைச்ச நீ எனக்கு முடிவெடுக்கக் கற்றுத்தாறீரோ.. இஞ்சைபார் நீ சித்தப்பனோடை சேர்ந்து நல்லாய் முடிவெடு. வெளிக்கிடு ஆனந்தி.. கோடியுள்ளவனுக்கு ஒரு கோடி.. கோடியில்லாதவனுக்கு ஆயிரம்கோடி.. கொழும்பிலையே தங்கஇடமில்லை.. அவை இஞ்சைநிண்டு நயனபாசை பறைவினம். நாங்கள் அதைக்கேட்டு ரசிச்சுக்கொண்டு பதில் சொல்லிக்கொண்டு.. நிக்கவேணும். கொழும்பாய் போச்சு.. ஊரெண்டால் இப்ப இதிலை ஒரு கொலையே விழுந்திருக்கும். ஓம்.. பெத்தபிள்ளைக்காக ஒரு கொலையே செய்திருப்பன்.

***மேக*** : (அழுது) சுதன்.. நீங்க ஒண்டும் பேசாம நிக்கிறீங்க மாமி.. ஹரி வந்தப்புறமா அவங்ககிட்ட பேசிட்டுப் போங்க.. நா போறன்

***சுதன்*** : நான் என்னத்தைச் சொல்லுறது. இந்த நிலைமையிலை நான் என்ன சொன்னாலும் ஆரும் எதுவும் கேக்கப்போறதில்லை.. (பெருமூச்சுவிட்டு) சரி போகத்தான் வேணுமெண்டால் போட்டுவாங்கோ மாமா..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம்..ம்.. மாமா
ஓம் மாமா
நீங்கள் ஊரிலை வரம்புகள் கட்டுறது - வயல்புலத்தில்
ஆனால் நாங்களோ எங்கள் வார்த்தைப்புலத்தில்
நாங்கள் வரம்பு போடுவது
எங்கள் வார்த்தைக் களத்தில்

----- காட்சி மாற்றம் -----

## காட்சி - 2

*பாத்திரங்கள் : மேகலா, ஹரி*
*இடம் : காலிமுகத்திடல் (கடலலைகளின் ஒலி)*

*மேக* : (அழுது) ஹரி என்ன ஒண்டும் பேசாம நிக்கிறீங்க.. மாமா மாமி வந்திட்டுப்போனாப்பிறகு நீங்க இஸ்ஸறா வகே நமே.. முந்திப்போல இல்ல.. எல்லாம் என்னாலை தானே எண்டு நினைக்கிறீங்க ஹரி .. ஒக்கொம மாவ நிசா கியள மாத்தெக்க தறாவத.. (எல்லாம் என்னாலைதானெண்டு என்னோடை கோவமா?) நம்மோடை கோவம்தானே.

*ஹரி* : இல்லை.. மேகலா..ஒயா நிசா நமே.. நீரெண்டபடியாலை இல்லை..

*மேக* : மம சிங்கள நிஸா நேத ஒயாகே மாமா ரண்டுவுணா.. (நான் சிங்களமெண்டுதானே மாமா கோவிச்சது) நா தமிழெண்டால் ஒமெண்டு சம்மதிச்சிருப்பினம்தானே.

*ஹரி* : இல்லை மேகலா.. சிங்களமோ தமிழோ இல்லை.. எங்கட சமூகத்திலை லவ் மறேஜ்ஜை ஒருநாளும் அக்சப்ற் பண்ணாயினம்.

*மேக* : அப்ப..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***ஹரி*** : அதுமட்டுமில்லை .. புறப்போசல் மறேஜ்ஜுக்கே தமிழெண்டாலும் சாதி, சமயம், நாடு, தீவு, ஏற்றம், இறக்கம், கிழக்கு, மேற்கு, அது இதெண்டு எத்தினை ஆயிரம் பாப்பினம். லவ் எண்டால் கியள வடக் நா மேகலா.. (சொல்லி வேலையில்லை)

***மேக*** : அப்ப அபே ஜீவிதய.. சரிவராது எண்டு தெரிஞ்சும் ஏன் நம்மட லவ்வுக்கு சம்மதிச்சனீர்.. தங் தென்னட்டம பிறஸ்னயக் நேத.. (இப்ப இருவருக்கும் பிரச்னை)

***ஹரி*** : மேகலா .. நான் உம்மை அப்பமட்டுமில்லை.. இப்பவும் எப்பவும். லவ் பண்ணுறன். அத்தட்டம மேகலா மம ஒயாட்ட வித்தறாய் ஆதரய்.. (உண்மையிலேயே நான் உம்மை மட்டும் தான் காதலிக்கறன்) இங்க பாரும் லவ் எண்ணுறது சிங்களம் தமிழ் பாத்தோ.. சாதி மதம் பணம் பகட்டு பாத்தோ வாறதில்லை. ஏன் லஸ்ஸனய்த கியல பலல என்னத் நா.. இப்ப பாரும் கொழும்பில வந்து நான் சந்திச்ச முதல் பொம்பிளை நீரே.. எத்தினை பேரைப் பாத்திருப்பன் .. உண்மையைச் சொல்லப்போனால் உம்மிலும் பாக்க வசதியான வடிவான எத்தினை பொம்பிளையளைக் கண்டிருப்பன். ஆனால் அவையிலை காதல் வரேலையே..

***மேக*** : ஹரி! அத்தட்டம.. (உண்மையாய்)

***ஹரி*** : மம அத்தக் கியணுவானங் உம்மில தான் என்ட மனம் ஈர்த்தது.. நீரும் அதே நிலையில் தான் இருந்தீர். அதுக்காக நீர்தான் எல்லாத்திலையும் எல்லாரையும்விட பெஸ்ற் எண்டு ஒருநாளும் சொல்லமாட்டன்.

***மேக*** : ஹரி

***ஹரி*** : என்னைப்பொறுத்த வரைக்கும் லவ்..மறீஜ் எண்டுறது அது ஆண்டவனாலை நிச்சயிக்கப்பட்டது ஒண்டு. அபி கிதல கரண்ட பா.. நாங்கள் நினைச்சு லவ் பண்ணவும் ஏலாது. விலத்திப்போகவும் ஏலாது. பொடி சிந்துவக் தியனவா.. (பாட்டு இருக்குது) இன்னார்க்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னாரெண்டு எழுதி வைச்சானே தேவன் அன்று எண்டு.. எனக்கு நீர் உமக்கு நான் .. இது நாங்கள் தேடிஎடுத்தது இல்லை.. ஆண்டவன் எழுதினது. அவளவுதான். அதை மாமா மாமியாலை மட்டுமில்லை.. அப்பாவாலை ஏன் என்னாலையோ உம்மாலையோ கூட மாத்த முடியாது.

*மேக* : ஒயா மொணவதக் கியண்ணே.. ஒங்க மாமா என்னயக்கண்டிட்டு .. றண்டு பிடிச்சிட்டு.. மாமியையும் இழுத்திட்டுப் போச்சுது.. நம்ம குடும்பத்தைப்பத்தி நறக்க விதியக் கத்தாக்கறா.. இப்பிடியிருக்க ஒங்க றிலேசன்ஸ் எப்பிடியெல்லாம் சொல்லுவாங்க..

*ஹரி* : அது மேகலா ..பாப்பம்.

*மேக* : ஒயா பலன்னங் கியண்ட... உங்க மாமா சொன்ன மாதிரி அவங்கட யங்கெஸ்ற் டோட்டருக்கு பிக்ஸ் பண்ணி எல்லாத்தையும் முடிச்சா நா (அழுது) அத்த கியணுவானங் மம மரண்ணா. நா ஒருநாளும் சுசைட் பண்ணப் போறதில்லை.. வேறை யாரையும் கலியாணம் செஞ்சுக்கவும் மாட்டன். இப்பிடியே பிக்குணியாத்தா மாறுவன். அத மறந்திட வேணாம்..

*ஹரி* : (சிரித்து) கோவலன் கிடையாத மாதவி மாதிரி.. ஹொந்தய்.

*மேக* : அய் ஹினாவென்னே.. சிரிக்கிறது. பொய்யில்லை சத்தியமா நடக்கும்.

*ஹரி* : மேகலா.. எனக்கு நீர் உமக்கு நான். எச்சறய். அவளவுதான். சுதன் யாழ்ப்பாணம் போனது தானே எல்லாம் நம்ம அப்பாகிட்ட சொல்லுவான். அப்பா என்ன சொல்லுறார் எண்டு பாப்பம்.

*மேக* : எப்பா கிவ்வுத்.. தாத்தா வேணாம் எண்டால்

*ஹரி* : எனக்குத் தெரியும் என்ரை அப்பாவைப் பற்றி.. எண்டாலும் மாட்டனெண்டு சொன்னா.. ஹொந்த தவசக் பலண்ட.. நல்ல நாளைப் பாரும். றெஜிஸ்ரார் மறிச் பண்ணுவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***மேக*** : (ஆச்சரியமாய்) ஹறி மே மொக்கத்த.. (இதென்ன?)

***ஹறி*** : ஒவ்.. ஒயா ஹறினம் ஹறி தாமதிச்சால் இன்னும் பிரச்சனை.. றெஜிஸ்ரார் மறிஜ் முடிஞ்சால் எல்லாரும் கொஞ்ச நாளைக்கு அப்பிடி இப்பிடிக் கதைப்பாங்கள். பிறகு எல்லாம் சரிவரும். உமக்கு சரிதானே..

***மேக*** : (அழுது) எனக்குச் சரிதான். ஆனால் அய் ஹறி .. என்ர அம்மா.. றிலேசன்ஸ் எல்லாரும் சம்மதம்தானே.. சரிதானே.. பிறகு ஏன் நாம தனியா அநாதமாதிரி றெஜிஸ்ரார் மறிஜ் பண்ணவேணும்.

***ஹறி*** : அதுதான் எங்களுக்கு கடவுள் தந்ததெண்டால் .. ஐ கான்ற் சே எனிதிங் மேகலா.. பிளீஸ் அண்டஸ்ராண்ட் த சிற்றுவேசன். ஓகே.. என்ர அப்பா ஓமெண்டால் சரி. இல்லையெண்டால் உம்மட றிலேசன்சும் வேண்டாம். என்ர ஆக்களும் வேண்டாம். வேறை ஒருத்தரும் வேண்டாம். என்ர பொஸ்சும் உம்மட பொஸ்சும் விற்னெஸ்.. சாட்சி போட நாங்கள் றெஜிஸ்ரார் மறேஜ் பண்ணுவம் சரிதானே.. நோ ஸ்பெசல் இன்விற்றேசன்.. நோ எனி பங்ஸன். வர விருப்பமானவை வரட்டும். சரிதானே..

----- காட்சி மாற்றம் -----

## காட்சி – 3

*பாத்திரங்கள் : கந்தையா, சுதன், காசிநாதன், ஆனந்தி.*

*இடம் : கந்தையாவீடு*

***ஆனந்*** : என்னண்ணை.. கடைசியாய் என்னதான் சொல்லுறியள்.. வடிவாய் யோசிச்சுச் சொல்லுங்கோ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கந்* : என்னத்தைச் சொல்லச் சொல்லித் திரும்பத் திரும்பக் கேக்கிறாய் தங்கச்சி. இஞ்சைபார் நான் ரெட்டை நாக்குக்கதை கதைக்க விரும்பேலை ஆனந்தி

*ஆனந்* : அண்ணை

*கந்* : ஒம் .. இது அண்ணன் தங்கச்சி விசயமில்லை. தம்பி ஹரியின்ரை வாழ்க்கைப் பிரச்சனை. அவன்ரை சொந்தப் பிரச்சனை. வாழப்போறது நானில்லை அவன். அவன்ரை பிரச்சனைக்கு அவன்தான் முடிவெடுக்க வேணும்.

*காசி* : என்ன மச்சான் எல்லாம் வடிவாய் யோசிச்சுத்தான் சொல்லுறியளோ.. எல்லாம் தெரிஞ்சுதான் கதைக் கிறியளோ.. அவள் ஒரு சிங்களப் பெட்டை.. எங்கடை சாதி என்ன.. சந்ததி என்ன ..அதுகள் எங்கடை சபை சந்திக்குச் சரிவருமே.. அதுகள் அருவருக்கத் தக்கதுகள்.. அண்டக் கூடாததுகள்.. மசுக்குட்டியைப்போல அருவருப்பு மட்டுமல்ல பட்டால் கழட்ட முடியாதமாதிரி ஒட்டிக் கொள்ளுங்கள்.

*கந்* : இஞ்சைபார் மச்சான்.. எப்பிடிஇருந்தாலும் ஹரி தன்ரை வாழ்க்கைக்கு சரிவருமெண்டு தெரிஞ்சுதானே இந்த முடிவெடுத்திருக்கிறான். அவனும் வயதுக்கு வந்தவன். நல்லது கெட்டது தெரிஞ்சவன். நாலு பேரோடை புழங்கிறவன். அவனுக்கும் சபை சந்திபற்றித் தெரியும் தானே மச்சான்.

*காசி* : பிள்ளை வழிமாறிப் போறான் எண்டால் புத்திசொல்லித் திருத்த வேண்டியது பெற்றாற்றை கடமை. பெரியாக்களின்ரை கடமை. நான் கண்ணால கண்டது. ஹரி கூடாத கூட்டம் சேர்ந்து கெட்டுப்போறான்.

*கந்* : மச்சான்.. பழத்தைப்பற்றி கிளியைக் கேக்கத் தேவையில்லைல.. கிளையைக் கேட்டால் போதும். அதை மனதிலை வைச்சிருங்கோ.. என்ரை பிள்ளையைப்பற்றி எனக்குத் தெரியும். மற்றவை சொல்லித் தெரிய வேணுமெண்டில்லை..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஆனந்* : அண்ணை அது சரிதான். ஆனால் சிறுபிள்ளை வேளாண்மை வீடுவந்து சேருமே சொல்லண்ணை. அதுகள் சின்னஞ்சிறிசுகள். நீங்கள் பெரியவங்கள்.. நாலும் தெரிஞ்சவங்கள்தான் புத்தி சொல்லவேணும்

*கந்* : புத்தி தெளிவில்லாததுக்களுக்குத்தான் புத்திசொல்லவேணும். அதுகள் ரெண்டு பேரும் நல்லபுத்தியோடைதான் இருக்குதுகள். இதைவிடவேறை என்னவேணும்.

*காசி* : அவளவை சாப்பாடு குடுக்கிறம் குடுக்கிறம் எண்டு ஹரிக்கு ஏதோ மருந்தோ மந்திரமோ செய்துபோட்டு வசியம் செய்து போட்டாளவை.. அதுதான் அவனும் எங்களை மாமன் மாமி எண்டுகூட மதியாமல் பேசினவன். அதை நினைவிலை வைச்சிருங்கோ..

*கந்* : என்ன மச்சான் .. ஹரி உங்களை மதியாமல் பேசினவனோ.. எங்கை உம்மடை நெஞ்சிலை கையை வைச்சுச் சொல்லும். எங்கை பால்பைக்கற் வாங்கின கடையிலையோ வைச்சுப்பேசினவன்.

*காசி* : (தடுமாறி) அது பால்கடையிலை ..இல்லை .. இல்லை ரெலிபோனிலை கதைக்கேக்கை கண்டபடி ஏதோ கத்தினான்.

*கந்* : கத்தினவனோ.. இஞ்சைபார் மச்சான் எனக்கு எல்லாம் வடிவாய்த் தெரியும். கூடநிண்ட ஆளே எல்லாம் விபரமாய்ச் சொன்னது. .

*காசி* : வேறை ஆர் உவன் சுதன்தான். அவனும் சித்தப்பனோடைசேர்ந்து..

*கந்* : அவனைப் பேசாதையும்.. நடந்ததை சுதன் சொல்ல வேண்டாம் ..உம்மடை மனிசியையே கேட்டுப்பாரும். அதுவும் வேண்டாம். நீரே உமது மனச்சாட்சியைக் கேட்டுப் பாரும்.

*ஆனந்* : நடந்தது நடந்து போச்சு.. சும்மாய் அவர் சரி இவர் சரி எண்டு விளக்கம் வைக்கிறதை விட்டிட்டு விசயத்துக்கு வாங்கோ.. இஞ்சைபார் அண்ணை.. காதும் காதும் வைச்சதுபோலை ஹரியை வரச் சொல்லுங்கோ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கந்* : வரமாட்டனெண்டு அவன் சொன்னால்..

*ஆனந்* : உங்களுக்கு கடும் வருத்தமெண்டு அறிவிச்சால் கட்டாயம் ஹரி வருவான்.

*சுதன்* : (வந்துகொண்டு) இந்தாங்கோ அத்தை.. மாமா.. தேத்தண்ணியைக் குடியுங்கோ..

*காசி* : (தனக்குள்)இப்ப உதொண்டுதான் இல்லாத குறை.. உதிலை வை சுதன் நான் எடுத்துக் குடிக்கிறன்.

*கந்* : என்னிலை கோபமெண்டால் தேத்தண்ணியோடை ஏன் கோபிக்கிறியள். சரி.. ஆனந்தி சொன்னமாதிரி ஹரி வந்தால்.?

*காசி* : வந்தால்.. ஒருநல்ல நாளாய்ப் பாத்து கதைச்சு வைச்ச மாதிரி இளையவள் கவிதாவுக்கு கட்டி வைச்சமெண்டால் பிறகென்ன.. எல்லாம் சரி.. கட்டினாப்பிறகு ரெண்டு நாளிலை எல்லாம் சரிவந்திடும். பிறகு அந்தச் சிங்களப் பெட்டையை ஹரி மறந்தே போயிடுவன்.

*ஆனந்* : ஓமண்ணை.. பிறகு ஹரி கொழும்புக்குப் போகாட்டிலும் பரவாயில்லை.. இங்கினேக்கை நல்ல ஒரு ஏஜன்சியைப் பிடிச்சு ரெண்டுபேரையும் அவுஸ்திரேலியாவுக்கோ கனடாவுக்கோ அனுப்பிவிட்டால் சரி..

*கந்* : நல்ல திட்டத்தோடைதான் வந்திருக்கிறியள்.. நல்லது.. பிறகென்ன?

*ஆனந்* : எல்லாம் சரியாய் வந்தால் வயிரவருக்கு அன்னதானம் செய்யிறதெண்டும் நேத்தி வைச்சிருக்கிறன்.

*கந்* : அப்ப வைரவரையும் வளைச்சு கையுக்கை போட்டிட்டியள் எண்டு சொல்லுங்கோ..

*காசி* : இல்லை மச்சான் குலதெய்வமெல்லே.. அதுதான்

*சுதன்* : (சிரித்தல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*காசி* : என்னடா சுதன்.. என்ன சிரிப்புவேண்டியிருக்குது.. என்ன நக்கலா யிருக்குதோ?

*சுதன்* : இல்லை.. குலதெய்வம் அன்னதானத்துக்கு மசிஞ்சுது.. ஆனா சித்தப்பா உங்கட திட்டத்துக்கு மசியவேணுமே..

*கந்* : சித்தப்பனை விடு.. இந்தக் கந்தையன். முதலிலை ஒமெண்ணவேணுமே..

*காசி* : அப்ப மச்சான் இவளவுநேரமும் கேட்டுக்கொண்டிருந்தது..

*கந்* : அதாலைதானே உங்கடை அன்னதானத்தையும் கேக்க முடிஞ்சது

*காசி* : பேந்துமென்ன இழுவல் கதை. இரண்டிலை ஒண்டு.. வெட்டொண்டு துண்டிரண்டு .. கடைசியாய்க் கேக்கிறன். உங்கடை முடிவென்னண்டுதான் சொல்லுங்கோ..

*கந்* : நானும் வெட்டொண்டு துண்டு ரெண்டாத்தான் சொல்லுறன். சொன்னது சொன்னதுதான். நான் ஹரியின்ரை விருப்பத்துக்கு எதிராய் எதுவும் சொல்லப் போறதுமில்லை. ஏமாத்து சுத்துமாத்து வேலையளுக்கு உடன்படப் போறதுமில்லை.. வடிவாய்க் கேட்டுக் கொள்ளுங்கோ..

*ஆனந்* : அப்ப உதுதான் கடைசி முடிவாய்ச் சொல்லுறியளோ அண்ணை.

*காசி* : மச்சான் வடிவாய் யோசிச்சுத்தான் சொல்லுறியளோ.

*கந்* : ஓம்.. பிறகும்.. பிறகும்.. அதையே கேட்டுக்கொண்டு.. சரி.. உங்கடை வசனத்திலை சொன்னால் அதுதான் வெட்டொண்டு துண்டிரண்டாய்ச் சொன்னால் .. நான் ஹரியின்ரை விருப்பத்துக்கு மாறாய் எதுவும் செய்யப் போறதில்லை...

*ஆனந்* : கூடப்பிறந்த தங்கச்சி புருசனிலும் பாக்க எங்கையோ இருக்கிற சிங்களச் சிங்காரி பெரிசாய்ப்போனாவோ..

*கந்* : அப்பிடிச் சொல்லாதையுங்கோ.. என்ரை வருங்கால மருமகள்தான் பெரிசாய்ப்போச்சுதெண்டு சொல்லுங்கோ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*காசி* : (கோபத்துடன்) ஆனந்தி.. அவளவு தூரத்துக்கு வந்தாப் பிறகு .. பிறகுமேன் நிக்கிறாய்..இஞ்சை பாரும் ஒண்டை மட்டும் நினைவிலை வைச்சிரும் மச்சான், இண்டைக்கு உமக்கும் மோனுக்கும் உது இனிக்கலாம்.. பிறகு யோசிப்பியள். ஒருத்தரும் இல்லாமல் தனிய நாயாய் அலையேக்கை தெரியும். இனசனம் எண்டு ஆரும் இல்லாமல் தனியக் கிடந்து காயேக்கை யோசிப்பியள். அந்த நேரம் தங்கச்சி குடும்பம் பெரிசோ சிங்களக் குடும்பம் பெரிசோ எண்டு தெரியும். எக்கணம் அவவின்ரை ஆக்கள்தான் அங்கையிருந்து வந்து தூக்கி நிமித்துவினம்... படுத்த படுக்கையிலை கிடந்து புழுக்கேக்கைதான் புரியும் தங்கச்சி குடும்பத்தின்ரை அருமை..

*கந்* : அது நான் புழுக்கிறனோ.. ஆர் தூக்குகினமோ அந்தந்த நேரம் பாப்பம்.. கேட்ட கேள்விக்கு மறுமொழி சொன்னாப்பிறகும் வீண்கதை ஏன்.

*காசி* : அப்படியே உங்கடை ஞாயம். அப்ப எங்கடை உறவும் இப்பவே இஞ்சையே இண்டையோடையே முறிஞ்சுது எண்டு நினையுங்கோ.. வா ஆனந்தி.. அண்ணை அண்ணை எண்டு பாசத்தைப் பொழிஞ்சாய். பார் இதுதான் கொண்ணற்ற சுயரூபம். வஞ்சகன்.. நய வஞ்சகன். இனிச் செத்த வீடும் இல்லை கண்டியளோ.. வா..வா.. ஆனந்தி.. அங்கை அவர் மோன்காரன் கொழும்பிலை தன்ரை விலாசத்தைக் காட்டினார். இஞ்சை தேப்பன்காரன் தன்ரை திமிரைக் காட்டுகிறார். நீயும் உன்ரை ஆக்களும். இதுதான் கடைசி முத்தம் அதை மறந்திடாதை.

*கந்* : ஆனந்தி.. எதையும் அளந்து.. அளந்து கதையுங்கோ..

*ஆனந்* : (அழுது) அண்ணை.. அண்ணை... ஏனண்ணை.. இப்பிடி ஒரு குண்டைப்போட்டிட்டு அளந்து கதைஎண்டால்.. சொந்த மருமோளின்ரை எதிர்காலத்தை யோசிச்சுப் பாருங்கோ அண்ணை..

*காசி* : வாடி.. பிறகும் பாரடி இவளை.. குரங்குப் புண்ணை மருந்துக்குக் கேட்டால் கொப்புக் கொப்பாய்க் கொண்டு திரியும் எண்டமாதிரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்குதடி கொண்ணற்றை கதை.. ம்.மருமோள் எண்டது அவருக்குத் தெரியுமோ தெரியாது. இனியும் என்ன கிடக்கு.. வாடி போவம். அண்ணனாம் கண்டறியாத அண்ணன். இண்டையோடை நீ அவருக்குத் தங்கச்சியுமில்லை.. அவர் உனக்கு அண்ணையுமில்லை.. செத்தவீடும் இல்லை.. இந்த முத்தம் இண்டைக்குத்தானடி கடைசி..

***கந்*** : ம்.. என்ன செய்யுறது. நீர்அடிச்சு நீர்பிரியிறதில்லை.. ஏதோ இண்டைக்கு நீதான் மச்சான் கெட்டிக்காரன். போங்கோ.போட்டு வாங்கோ.. ம் (பெருமூச்சு)

***சுதன்*** : தாத்தா.. கவலைப்படாதையுங்கோ..நான்உங்களுக்குச் சொல்லுறது சரியில்லை. மனதை இந்தமாதிரி நேரத்திலை தான் திடப்படுத்த வேணும்.. எங்கையோ நான் படிச்ச ஒரு கவிதை ஞாபகம் வருகுது..

***கந்*** : சொல்லு சுதன்

***சுதன்*** : கணநேர கதியில்
நிலைமாறும் விதியில்
புரண்டோடும் ஆற்றின்வழியில்
தடைக்கற்களானோம்...
தடைக்கற்களால் நாம்
ஆற்றின் கிளைகளாய்த்தான் பிரிகின்றோம்..
கானல் நீராய் அல்ல...

----- காட்சி மாற்றம் -----

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - 3

*பாத்திரங்கள் : மேகலா, ஹரி, கந்தையா*
*இடம் : ஹரியின் வீடு. கொழும்பு*

*கந் :* பிள்ளை மேகலா ஆஷா மொண்டசறிக்குப் போகேலையே.. நேரம் எட்டு மணியாகுது..

*மேக :* ஹரி போகேக்கை தான் காரிலை விடுறதாய்ச் சொன்னது. நானும் ஹரியோட ஏர்லியாய்ப் போகணும். இப்ப ஒஸ்ரேலியாக்கு கடலாலை போய்ப் பிடிபடுறாக்கள் கூடத்தானே.. நம்மளுக்கும் வேலை கூட. அதுவும் நா சீனியர் ரான்சிலேற்றரானாப்பிறகு தலக்குமேல வேல குவிஞ்சு கிடக்கு.. கடல்ல போறதில பிடிபடுறது மிச்சம் தமிழாக்கள்தானே.. அதாலை நம்மளுக்குத்தானே வேலை கூட. பாவங்கள் மெச்சறசல்லி தீல உசிரைப் பணயம் வெச்சி போய் கடசீலை அநாவஸ்ய பிரச்சனை. விசாரண அது இதெண்டு கரச்சல் வேறை. பாவங்கள். சிலபேர் சரியான றீசன் சொல்லாட்டி றிமாண்டுக்கும் போடுவினம். அதிலயும் பொம்புளப் புள்ளயளெண்டா கறுமம்.. கறுமம். ஏ தான் அதமாதிரி றிஸ்க் எடுக்கிறாங்களோ தெரியாது..

*கந் :* அது இப்ப ஒரு பாசனாப் போச்சுது பிள்ளை. யாழ்ப்பாணத்திலை இருக்கிற நம்மட தமிழ்ப் பொம்பிளைப் பிள்ளயள் கவுண்மேந்து உத்தியோகக்காரனை விரும்பின காலம் போய் இப்ப வெளிநாட்டு மாப்பிளை எண்டாத் தான் செய்வனெண்டு ஒற்றைக்காலிலை நிக்கிற காலம் வந்திட்டுது.. அங்கை அதுகள் என்ன பாடு படுகுதுகளோ.. இஞ்சை இதுகள் டொலர் கனவிலை மிதக்குதுகள்.

*மேக :* ஓம் தாத்தா.. உவர் சுதனும் பொறின் எண்டா ஒற்றக்காலிலை தான் நிண்டாரு. அவற்ற ஒஸ்ரேலியா ஸ்கொலசிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்வந்தாப்பிறகு.. சும்மா விசா வந்தாலும் தான் போகப்போறதில்லையாம்.

*கந்* : ஓம்பிள்ளை தன்ரை பச்மேற் அங்கை செய்யிற வேலையைச் சொல்லிச் சிரிச்சான். எல்லாம் கலிகாலம்

*ஹரி* : (வந்துகொண்டு) என்ன மாமனும் மருமோளும் ஒஸ்ரேலியா பயணமோ.. நானெண்டா மாட்டன். ஆனா ரூறிஸ்டா எண்டா வாறன். ஆஷாவும் அப்பிடித்தான்.

*கந்* : எடை.. ஹரி என்ன பகிடியே விடுறாய்.. என்னை காடு வா வா எண்டுது வீடு போ போ எண்டுது. இப்பவோ எப்பவோ எண்டிருக்கிறன். நீ என்னடா எண்டால் ஒஸ்ரேலியா அனுப்பப் பாக்கிறாய்.

*ஹரி* : இல்லை அப்பா. இப்ப எயர்போட்டிலை போய்ப் பாக்க வேணும். உங்களை மாதிரி ஆக்கள்தான் கூடப் பயணம் போறது. பிள்ளையள் கூப்பிடுறது..

*கந்* : என்னை ஆர் கூப்பிடுறது. அதுதானே நீங்களே தஞ்சமெண்டு உங்களோடையே கொழும்புக்கு வந்திட்டன். பிறகென்னடா..?

மேக : (வந்துகொண்டு) ஹரி ..ஆர் யூ ரெடி.. ஈவினிங் வந்து மிச்சப் பயணத்தைக் கதையுங்கோ. ஐ ஆம் கெற்றிங் லேற் .. ஆஷாக்குட்டி சே.. பாய்.. போற் தாத்தா.. ஹரிஅப்.. தாத்தா சாப்பாடு எல்லாம் ரேபிளிலை இருக்கு.. சுதன் நைற் ட்யூட்டி முடிஞ்சு ரென் மட்டிலை வந்திடும். கதவ லொக் போட்டுகிட்டு இருங்கோ..

----- காட்சி மாற்றம் -----

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - 4

*பாத்திரங்கள்* : *மேகலா, ஹரி, கந்தையா, ஆனந்தி, காசிநாதன், சுதன்.*

*இடம்* : *ஹரியின் வீடு. கொழும்பு*

***ஆனந்*** : வெட்கத்தை விட்டுச் சொல்லுறன் அண்ணை... உங்கடை மருமகள் மட்டும் எங்கடை இளையவளின்ரை ஸ்ரேற்மென்ரை றான்சிலேற் பண்ண அதிலை போகாமலிருந்தால் எங்கடை குமர்ப்பிள்ளையின்ரை வாழ்க்கை நாசமாய்ப் போயிருக்கும்.. மறியல், கோடு, எண்டு மானமே ஏறியிருக்கும். நினைக்கவே தலையுக்கை ஏதோ செய்யுதண்ணை..

***கந்*** : மருமோள் எல்லாம் விபரமாய்ச் சொன்னவ.. இஞ்சை நாங்கள் இனசனத்தைப் பற்றிக் கதைக்கேக்கை உங்கடை விபரத்தையும் கதையோடை கதையாய்ச் சொன்னனாங்கள்.

***ஹரி*** : அதுமட்டுமில்லை மாமி.. கவிதாமச்சாள் எனக்காகக் காத்திருக்கிறா எண்டு இஞ்சைவந்து மாமா ஏசிப்போட்டுப் போகேக்கை கவிதாவின்ரை போட்டோவைத் தான் பாக்கவேணுமெண்டு ஒற்றைக்காலிலை நிண்டவ.

***சுதன்*** : சித்தப்பா உங்களுக்குத் தெரியாது. சித்தி தன்ரை பேசுக்கை உங்கடை பமிலிபோட்டோவோடை கவிதாச்சித்தியின்ரை போட்டோவையும் வைச்சிருந்தவ..

***காசி*** : சுதன்

***சுதன்*** : ஓம் மாமா.. தான் சந்திச்சது ஒரு விபத்து போலை எண்டும் இல்லாட்டில் கவிதாச்சித்திதான் சித்தப்பாவைச் செய்திருப்பா எண்டும் சொல்லிக் கவலைப்பட்டு கவிதாசித்தியின்ரை போட்டோவையும் வைச்சிருந்தவ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***மேக*** : ஓம் மாமி.. ஒங்க ஹஸ்பண்ட் ஏசிட்டுப் போனதுதானே.. அப்போ ஏண்ட மனசாட்சி உறுத்திச்சு. நா ஹரியிட்டை சொன்னன் நீங்க கவிதாவைச் செய்யுங்க எண்டு..

***ஆன*** : ஆமா மாமி.. ஒங்க இதிகாசத்தில வாற கோவலண்ட மாதவி மாதிரி நா சந்தோசமா பிக்குணியாகி நம்மட மதத்துக்கு சேவ செய்யுறனெண்டு..

***சுதன்*** : சித்தப்பாதான் சம்மதிக்கேலை

***மேக*** : தாத்தாவோட நா கதச்சதுதானே. அப்போ தாத்தா சொன்னது. நாம ரெண்டு பேரும் சரி எண்டா தானும் சம்மதமெண்டு. அப்புறம்தான் பைனல் டிசிசனெடுத்தம்.

***ஆன*** : நாங்கள் தான் உங்கடை கள்ளம் கபடமில்லாத மனத்தைப் புரிஞ்சு கொள்ளாமல் ஏதோ எல்லாம் சொல்லிப்போட்டம்

***காசி*** : (கவலையுடன்) ஏதோ ஏதோ எல்லாம் இல்லை.. பிள்ளை... எலும்பில்லாத நாக்காலை என்ன என்ன எல்லாம் சொல்ல முடியுமோ அவளவத்தையும் கொட்டினன். ம். அப்ப் கண்மண் தெரியேலை. உங்கட நல்ல குணத்துக்கு, மனத்துக்கு முன்னால நீங்கள் ஒரு சிங்களப்பிள்ளை எண்டதும் என்ர மகளுக்குக் கிடைக்கவிருந்த வாழ்க்கையை .. அதுதான் ஹரியைத் தட்டிப் பறிச்சனியள் எண்டதும்தான் எல்லாத்தையும் மறைச்சு நிண்டது..

***மேக*** : அது வந்து..

***காசி*** : என்னைக் கதைக்க விடு பிள்ளை அப்பதான் என்ரை மனது ஆறும். நான் செய்த பாவம் கொடுமை ஏழேழு ஜென்மம் எடுத்தாலும் கழுவமுடியாத கறுமம்.

***மேக*** : அப்பிடிச் சொல்லாதீங்க மாமா..

***காசி*** : மனிதம் எண்ணுறது சாதி, மதம், இனம் எல்லாத்துக்கும் அப்பாற்பட்டது எண்டதை உணர்த்திவிட்டியள். அதையே ஊதிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிசாக்கி பிரளயத்தையே உருவாக்கின நான் உங்களுக்கு முன்னாலை சின்னவனாய் நிக்கிறன். (அழுது) உண்மையிலேயே உங்களிட்டை மன்னிப்புக் கேட்கக்கூட அருகதையில்லாமல் உங்களுக்கு முன்னாலை கூனிக்குறுகி நிக்கிறன்.

*ஹரி* : நடந்ததை விடுங்கோ.. மறவுங்கோ.. ஆத்திலை கரைச்ச புளி எண்டு நினையுங்கோ..

*காசி* : ஹரி.. நீ லேசாச் சொல்லிப்போட்டாய். என்ர மனச் சாட்சியே என்னை உறுத்துது. அண்டைக்கு கொப்பா மனச் சாட்சியைத்தொட்டுச் சொல்லு எண்டு எனக்குச் சவால் விடேக்கை, சிங்களப் பெட்டையைச் செய்யுறதாலை செத்தவீட்டுக்கும் வரன்எண்டு வீறாப்புக்காட்டி மாமியையும் இழுத்துக்கொண்டு மானஸ்தன் எண்டு வந்தன். ஆனா ..ஆனா இண்டைக்கு அதே.. அந்த சிங்களப்பிள்ளைதான் எங்கட மானத்தைக் காப்பாற்றினது. இஞ்சைதானடா நான் தவற விட்டிட்டன். ஓமடா.. கவிதாவைக் கூட்டுக்கை போட்டிருந்தால் ..பிறகு வாழ்ந்தென்ன. செத்தென்ன.. தற்கொலைதான் செய்திருப்பம்.

*கந்* : மச்சான் ..அதுதான் எல்லாம்முடிஞ்ச கதை ஆச்சே.. மருமோள் காறிலை கொண்டந்து கவிதாவை இறக்கிப்போட்டு தாத்தா உங்கட மருமோளைப் பாருங்கோ எண்டு சொல்லேக்கை நானும் ஒருக்கா ஆடித்தான் போனன்.

*ஆன* : எங்கட ரத்தம் மேகலாவிலை ஓடுதோ அல்லாட்டில் ஏதோ முற்பிறப்புச் சொந்தமோ போல.. அதாலைதான் அவவிலையே கவிதா வந்து சந்திச்சு ..அவவே பொறுப்பெடுத்துக் கொண்டு வந்து சேர்த்தவ.. (அழுது) அவ நாங்கள் கையெடுத்துக் கும்பிடுற தெய்வத்துக்குச் சமன் தம்பி..

*சுத* : (சிரித்து) அதாலைதான் சித்தப்பாவும் யாழ்ப்பாணத்திலை இருந்து வந்து இஞ்சை பெஸ்ற் அற்றாக்கிலையே (First attack) விழுந்தவர் போலை..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மேக* : சும்மா போங்க சுதன். எப்பவும் கவிதையும் பகிடியும் தா ஒங்களுக்கு.. இந்த சின்ன விசயத்துக்கு நீங்க எல்லாரும் ரொம்ப ரொம்ப பெரிசெல்லாம் சொல்லவேண்டாம். நம்மளாலை தான் ஒங்க பமிலி பிரிஞ்சிருக்கு எண்டு நினைக்கேக்கை கவலையாயிருந்திச்சு. நா உங்கட.. அதுதா எங்கட குடும்பம் எல்லாரும் ஒத்துமயா இருக்கணும் எண்டு வேண்டாத கடவுள் இல்ல. இப்பதான் கடவுள் கண்திறந்திச்சு.. நம்ம பாவத்தக் கழுவியிடுச்சு.. நீங்க எல்லாரும் பழசுமாதிரி ஒற்றுமையா சந்தோசமாயிருக்கிறதாலை நம்ம மனசு ரொம்ப நிறைஞ்சிருச்சு..

*காசி* : என்னடா சுதன் சும்மா நிக்கிறாய்.. ஒவ்வொரு சிற்றுவேசனுக்கும் அதுக்கேற்றமாதிரி கவிதையிலை கலக்குவாய். எங்கையடா இண்டைக்கு காணேலை

*சுத* : சரி மாமா.. இது எங்கையோ சுட்டதுதான்..
மயிர்க்கொட்டியைக் கூட சபிக்காதீர்கள்
ஏனென்றால் நாளை அதுவே
அழகான பட்டாம் பூச்சி ஆகின்றது...

*கந்* : உது காசிமாமாவுக்கு எல்லோ.. எனக்கில்லையே சுதன்.

*சுதன்* : தடைக்கற்களால் கிளைகளாகப் பரிந்த ஆற்று வெள்ளம் இன்று இணைந்ததனால் பொங்கிப் பிரவாகிக்கின்றது.

(அனைவரும் சிரித்தல்)

---- நிறைவு---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மயிர்க்கொட்டிகள்
நாடக மாந்தர்களும் குரல் மூலம் உயிர்கொடுத்தோரும்
ஹரி
ஜெயரஞ்சன் யோகராசா
மேகலா
ரதனி சிந்துஜா
ஆனந்தி
ஏ. எம். சி. ஜெயஜோதி
காசிநாதன்
லொக்கஸ் திருச்செல்வம்
கந்தையா
காசிலிங்கம் பிரசன்னா
சுதன்
ஸ்ரீஸ்கந்தராஜா தர்சன்
தயாரிப்பு
லொக்கஸ் திருச்செல்வம்
இ.ஒ.கூ. தமிழ்ச்சேவையில் முதன் முதலாக 19.02.2014ல் ஒலிபரப்பப் பட்டது

# 7. பெட்டிசம்

## பாத்திரங்கள்

- நாகம்மா – பேரம்பலத்தின் மனைவி
- சஞ்சயன் – அயல்கிராமத்தவர்
- குரு – சஞ்சயனின் நண்பன்
- நடராசா – பேரம்பலத்தின் நண்பன் அயல்வீடு
- சுந்தரி – நடராசாவின் மனைவி

## காட்சி - 1

*பாத்திரங்கள் : நாகம்மா, சுந்தரி, நடராசா*
*இடம் : மரணவீடு*

*நாக : (ஒப்பாரி வைத்து அழுதல். இயலுமாயின் பறைமேளத்தின் பின்னணி)*

*என்ரை ராசா.. என்ரை துரைஞ்*
*பென்சன் வருமெண்டு என்ரைதுரை நீயும்*
*பெருநாளாய்க் காத்திருந்தாய்*
*பென்சனுமோ வரவில்லை என்ரை துரை உனக்கு பெரியஓலை வந்ததென்ன*
*என்ரை ராசா.. என்ரை துரை...*

*சுந் : அக்கா*
*அறுவது வயசு வரை ஆசைஅக்கா அண்ணர்*
*கவுண்மேந்து வேலையெல்லோ*
*கவுண்மேந்து வேலைசெய்து*
*அண்ணர் கண்டமிச்சம் என்ன அக்கா*
*என்ரை செல்லம்.. என்ரை அண்ணை...*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாக : *கண்டமிச்சம் என்ன எண்டால்.. எடி*
*கண்டமிச்சம் என்ன எண்டால்*
*தாலிகட்டி வந்த என்னை கூட்டிவைச்ச கூத்திளண்டு உலகு கூவி உரைச்ச தெல்லோ..*
*தாலிகட்டி வந்த என்னை கூட்டிவைச்ச கூத்திளண்டு இந்த ஊரே உரைச்ச தெல்லோ..*

சுந் : *அக்காள் ஊருக்கே உலை வைச்ச*
*உத்தமனார் உந்தனத்தார்*
*இப்ப ஊர்வாயை மூடாமல் இண்டைக்கு*
*இந்த உலகைவிட்டே போனதுமேன்..*

நட : சரி.. சரி.. கொஞ்சம் விலத்துங்கோ... ஐயர் போறதுக்கு ஒதுங்கி வழிவிடுங்கோ.

நாக : *என்ரை ராசா.. என்னைத் தனிய விட்டிட்டுப் போட்டியே.. அண்ணை.. என்ரை*

என்ரை துரையை இப்ப கிரியை செய்து அனுப்பப்போறியே அண்ணை. அண்ணை
*நிலவோ நிலவுதவி என்ரை ராசா எனக்கு நிலவு பட்டால் ஆருதவி*
*பொழுதோ பொழுதுதவி என்ரை துரை இனி எனக்கு பொழுதுபட்டால் ஆருதவி*
அண்ணை.. நடராசா அண்ணை என்னைத் தனியாய்த் தவிக்க விட்டிட்டுப் போட்டாரண்ணை.. அண்ணை..எல்லாரும் சேர்ந்து பெட்டிசனைப்போட்டு அந்தாளை இப்ப பெட்டியிலை அடைச்சு அனுப்பிப் போட்டியள். நல்லாயிருக்க மாட்டியள்..
*பெட்டிசன் தான் போட்டு என்ரைதுரையை*
*பெட்டியிலே அடைச்சதென்ன*
*நெட்டி முறிக்கமுதல் என்ரை ராசா நீயும்*
*நெடும்தூரம் போனதென்ன*
*என்ரை ராசா.. என்ரை துரை... என்னை விட்டிட்டுப் போட்டியே ஐயா*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நட* : நாகம்மா.. என்ன மோனை செய்யிறது..

*நாக* : அண்ணை என்ரை துரை... என்னை தனிய விட்டிட்டுப் போட்டார் அண்ணை

*(பின்னணியில் அழுகைச்சத்தப் அன்றேல் பறைமேளம் சிறிது உரத்து);*

*நட* : அவற்றை பலன் அவளவுதான். ஆரைக்குறை சொல்லியும் பிரயோசனம் இல்லை.. நாகம்மா.. விதி எதுவோ அதுதான் நடக்கும்.. நடந்திட்டிது.. இனி நடக்கவேண்டியதைப் பாப்பம்.

*நாக* : (அழுகை குறைதல்) என்ரை ராசா.. என்ரை துரை... என்னை ஒருக்காத் தன்னும் நினைச்சியே.. ராசா..என்ரை துரை

*நட* : இஞ்சாலை விலத்துங்கோ.. பெட்டியைத் தூக்குங்கோ... ஐயா கிரிகை செய்ய ஒழுங்கு செய்ய வேணுமெல்லே சரி.. பாட்டுக்காரரரை அந்தப்பக்கமாய் அதிலை இருக்க விடுங்கோ தம்பி கிரியைச் சாமான்களை வை இதிலை... ஐயா இப்பிடி வாங்கோ இந்தப் பாயிலை இருங்கோ..

----- காட்சி மாற்றம் -----

## காட்சி - 2

*பாத்திரங்கள்* : *நாகம்மா, சுந்தரி, நடராசா சஞ்சயன்*

*இடம்* : *நாகம்மாவீடு*

*நட* : நாகம்மா.. உப்பிடியே இருந்து என்ன செய்யப் போறாய்.. போனது போனதுதான்... நீ தின்னாமல் குடியாமல் இருந்தாப்போலை போனது திரும்பி வரப்போகுதே.. நீயே சொல்லு பாப்பம்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நாக* : அதை இல்லையெண்டு சொல்லேலை நடராசா அண்ணை.. ஆனால்.. ஆனால்.. அவர் என்னாலை தானண்ணை செத்தவர். அதாலைதான் என்ரை மனசாட்சி விடுகுதில்லை

*நட* : என்ன நாகம்மா சொல்லுறாய்.. காட் அற்றாக் வந்ததுக்கு நீ ஏன் உன்ரை தலையிலை போடுறாய்.

*நாக* : தொட்டுத் தாலிகட்டினவளைக், கூட்டிவந்து வைச்சிருந்தவள் எண்டு பெட்டிசம் போட்டு அந்த பென்சன் பேப்பரே இல்லை எண்டு போனாப்பிறகு ஆடிப்போனார். ஒரு வசனம் பேசேலை... கடிதத்தைக் கண்ட உடனை விறைச்சுப் போய் நிண்டார். கண்ணாலை கண்ணீர் வழிஞ்சுது. ஒரு கதையில்லை.. அப்பிடியே கடிதத்தோடை சாய்ஞ்சவர் சாய்ஞ்சவர்தான்... (அழுது கொண்டு) பிறகு நாகம்மா எண்டு ஒரு பார்வை பாத்தார்.. அதுதானண்ணை கடைசி.. பக்கத்திலை நிண்டும் ஒரு சொட்டுத் தண்ணி பருக்கக் குடுத்துவைக்காத பாவி நான்... ஆரண்ணை நினைச்சது இப்பிடி வரும் எண்டு.

*நட* : நாகம்மா..

*நாக* : எந்தப் படுபாவி உந்த எளிய வேலை செய்தானோ அவன்தான்.. அவங்கள்தான் அவருக்கு இயமனண்ணை... ஒரு வருத்தம் துன்பம் நோய்நொடி எண்டு ஒருநாள் பாயிலை படுத்தறியார்.. உந்தக் கண்டறியாத பெஞ்சனாலை இப்பிடியாய்ப்போட்டுதே..

*நட* : தலையிடியும் காய்ச்சலும் தன்தனக்கு வந்தால்தான் தெரியுமெண்டு தெரியாமலே சொல்லுறது. சொல்லுறனெண்டு கோவிக்காதை .. அக்கா குறைநினைக்காதை... சனம் தெரியாமலே பெட்டிசன் பேரம்பலம் எண்டு சொல்லுறது.. வினை விதைச்சால் வினையைத்தானே அறுக்க வேணும், வேறை என்ன தினையையே..

*நாக* : அதை இல்லை எண்ணுறனே.... உண்மை தானண்ணை. அவருக்கென்ன .. குடுத்து வைச்ச மனிசன். கிடந்து அழுந்தாமல் கொள்ளாமல் பொசுக்கெண்டு போட்டார். இப்ப நானெல்லோ நடுத்தெருவிலை.. நான் போய்த்துலைஞ்சு அந்தாள் இருந்தனுபவிச்சாலும் செய்த கறுமத்துக்கு அனுபவிக்குது எண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லலாம். இது நானெல்லோ கிடந்தனுபவிக்கவேண்டிக் கிடக்குது.

*நட* : நீ தன்னும் அப்பிடி இப்பிடி எண்டு சொல்லித் திருத்தியிருந்தா உவளவு நிலைமைக்கு வந்திராது.

*நாக* : சொல்லித் திருத்திறதோ... நாய்வாலை நிமித்தினாலும் நம்ம மனிசனைத் திருத்தேலாதண்ணை.. திருந்த சனமும் விடாதுகள்... நானும் எத்தினை தடவை சொல்லியிருப்பன். கேட்டாரே.. என்ரை ஆய்க்கினை தாங்காமல் நான் இனிமேலைக்கு உந்தவேலை செய்யன் எண்டிட்டு இருப்பர்.. ஆனால் சனம் இருக்க விட்டால் எல்லோ.. சொல்லிச் சூடாறமுன்னம் ஆரேன் வந்தால் வெளிக்கிட்டிடுவர் பேனையையும் பேப்பரையும் கொண்டு கடித எழுத்துக்கு...

*நட* : கடிதம் எழுத இல்லை.. பெட்டிசம் எழுத எண்டு சொல்லு..

*நாக* : அண்ணை

*நட* : அந்திரட்டியும் முடியேல்லை செத்த சீவனைப்பற்றி குற்றம் சொல்லுறது கூடாதுதான்.. ஆனால் உள்ளதை உள்ளபடிதானே சொல்லவேணும்..

*நாக* : அதை ஆரண்ணை இல்லையெண்டது.. அறுதல்தொழில் செய்ய வெளிக்கிட்டது உப்பிடி குறுக்காலை போறதுக்குத் தானாக்கும். செய்யிற கிளாக்கு வேலைக்கு கிடைக்கிற சம்பளத்தை எடுத்து வயலிலை வாற விளைச்சலையும் பாத்துக்கொண்டு தானும் தன்ரை வேலையும் எண்டு இருக்கத் தெரியாமல் சமூகத்தைத் திருத்தவெளிக் கிட்டவர்.. திருத்த.. இப்ப

*நட* : அவற்றை பெஞ்சனுக்கே ஆப்பு வைச்சிட்டாங்கள். பாத்தியளே..

*நாக* : என்னை நடுத்தெருவிலை நிக்க வைச்சிட்டாங்கள். உந்தாள் செய்த வேலைக்கு எவனொருத்தன் உதவி செய்வான் சொல்லுங்கோ பாப்பம்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட : (குழைந்து) வித்தியாசமாய் நினைச்சுப்போடாதை.. செத்தவீட்டுக்கு வந்த ஒவீசிலை வேலை செய்யிறாக்களும் சொல்லிக் கவலைப்பட்டினம். அங்கையும் உதே தொழில் தானாம்.. அங்கை கொழும்பிலை ஹெட்ஒவீசிலை கடிதத்தைப் பாத்திட்டே சொல்லுவினமாம் இது பேரம்பலத்தாற்றை வேலை எண்டு... அவளவுத்துக்கு அவற்றை எழுத்து கொழும்பு மட்டும் பேமஸ் எண்டா பாருங்கோவன்

நாக : உண்மைதானண்ணை... உங்களுக்குச் சொன்னால் என்ன... உந்த நிசா சூறாவளி வந்து ஏதோ அவங்கள் அழிவோ ..இழவோ.. நிவாரணமோ எண்டு குடுத்தவங்களாம்.. அதிலை தெரியாதே.. ஆரோ ரெண்டு மூண்டு பேர் அப்பிடி இப்பிடிச் செய்தவையாம். இந்தாள் அதுக்குப் பெட்டிசன் எழுதேக்கை தான்தான் எழுதினதெண்டு மற்றவைக்குப் பிடிபடாமல் தனக்கெதிராயும் பெட்டிசன் போட்டிருக்குதெண்டால் பாருங்கோவன். அவங்கள் இஞ்சை வீடு பாக்க வந்ததுகள் சொல்லியெல்லோ எனக்கும் தெரியும்.

நட : அப்பிடியே சங்கதி. உந்த அம்பலத்தாடி வயிரவர் சத்தியமாய் அவங்கள் சொல்லேக்கை நான் துளிகூட நம்பேலை.

சஞ் : (கூப்பிடுதல்.. வந்துகொண்டு..)அன்ரி.. அன்ரி.. நாகம்மாக்கா நிக்கிறாவோ...

நட : நிக்கிறாதம்பி. வாரும்

நாக : வந்து.. நீர்.. எனக்கு ஆளை சரியாய் அடையாளம் தெரியேலைதம்பி..

சஞ் : நான் சஞ்சயன் எண்டு.. அங்கிளிட்டை ரெண்டு மூண்டுதரம் வந்து போயிருக்கிறன்.

நாக : ஆ அப்பிடியே..

நட : (தனக்குள்) வேறை என்ன ஏதேன் பெட்டிசனாய்த்தான் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சஞ்* : அங்கிளுக்கு இப்பிடி நடக்குமெண்டு கனவிலையும் நினைக்கேலை.. அதுவும் பெஸ்ற் (First Attack) அற்றாக். நான் விடியத்தான் கொழும்பிலை இருந்து வந்தனான்.. கேள்விப்பட்ட உடனை என்னாலை நம்பவே முடியேலை. பிந்தினாலும் வந்திட்டுப் போவமெண்டிட்டு வந்தனான்.

*நட* : ஆ .. அப்பிடியே.. இரும் தம்பி. காலம் வந்தால் பெஸ்ற் (First attack) அற்றாக் செக்கண்ட் அற்றாக் எண்டு பாக்குமே தம்பி..

*சஞ்* : அங்கிள்

*நட* : ஓம் தம்பி.. அதுசரி.. தம்பி என்ன செய்யிறீர்

*சஞ்* : கொழும்பிலை பென்சன் டிப்பாட்மென்ரிலை வேலை செய்யிறனான்.

*நட* : இஞ்சை எவடம்..

*சஞ்* : நான் உதிலை மறவன்புலோ வாசிகசாலையடி...

*நட* : எது அந்த கலையாபரணன் வாசிகசாலையோ அல்லது வடக்கை இருக்கிறதோ...

*சஞ்* : சரியாய்ச் சொன்னியள் அங்கிள். கலையாபரணன் வாசிக சாலையடிதான்.

*நாக* : அந்தக் கிறவுண்ட் விசயமா.. (இழுத்தல்)

*சஞ்* : ஓம் அன்ரி நாங்கள்தான் அந்த விசயமா அங்கிளிட்டை ரெண்டு மூண்டு தரம் வந்தனாங்கள். இண்டைக்கு நாங்கள் அதிலை விளையாடுறம் எண்டு சொன்னால் அது அங்கிளாலைதான்.. அதை மறக்கேலுமே அன்ரி...

*நாக* : (தனக்குள்) அதாலைதான் இண்டைக்கு பெஞ்சனுமில்லாமல் அறுதலியாய் நிக்கிறன்...

*சஞ்* : என்ன அன்ரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நாக* : (சமாளித்து) இல்லை தம்பி அதுவந்து..

*நட* : அதாலைதான் உந்த கச்சேரியிலை வேலைசெய்யிற அவடத்தார் எங்களுக்கும் அசுக்கிடாமல் வேலைபாத்து இப்ப பெஞ்சனும் கைவிட்டுப்போய்....

*சஞ்* : (இடைமறித்து) அவற்றை காலம் அங்கிள். அதுக்கும் இதுக்கும்.. நீங்கள் போய் முடிச்சுப் போடுறியள்.. வேளைக்கே மெடிக்கல் செக்அப் செய்திருந்தால் பைபாஸ் தன்னும் செய்திருக்கலாம். அவர் தன்ரை உடம்பிலை கவனமெடுக்கேலை..

*நாக* : உதுகளுக்கெங்கை அந்தாளுக்கு நேரகாலம் கிடக்குது.. ஊர்த்துளவாரம்... உதவாத பெட்டிசன் எண்டால்... ஒற்றைக்காலிலை நிண்டாடுவர்..

*சஞ்* : அன்ரி நீங்கள்...

*நட* : அவ.. அவர் திடீரெண்டு செத்ததாலை நொந்து போயிருக்கிறா.. அவவின்ரை கதையை விடும் தம்பி...

*சுந்* : (கூப்பிடுதல்) இஞ்சேருங்கோ.. என்ன.. உங்களைத்தான்.. இஞ்சை ஒருக்கா வாருங்கோ..

*நட* : கொஞ்சம் பொறப்பா.. வாறன்.. தம்பி நிண்டு கதைச்சிட்டுப் போம்.. மனிசி கூப்பிடுறா நான் வரப்போறன்.

*சஞ்* : சரி அங்கிள். நானும் போட்டுவாறன். பிறகு ஆறுதலாய் வாறனே... அன்ரி இதிலை என்ரை ரெலிபோன் நம்பர் இருக்குது.. ஏதேன் தேவையெண்டால் கதையுங்கோ.. நான் அடுத்தமுறை வரேக்கை ஆறுதலாய் வாறனே...

------ காட்சி மாற்றம் -----

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - 3

*பாத்திரங்கள் : நாகம்மா, சுந்தரி, நடராசா*
*இடம் : நாகம்மாவீடு*

*சுந்* : (சிறிது கோபத்துடன்) அந்தாள் எடுத்ததெல்லாத்துக்கும் பெட்டிசன் எழுதி பெட்டிசன் பேரம்பலம் எண்டு பட்டப்பேரையே வச்சிருந்த மனிசன்.

*நட* : உது நீ சொல்லியே நான் தெரிய வேணும்.. உலகத்துக்கே பிரசித்தம் தானே..

*சுந்* : ஒரு பெட்டிசன் எண்டால் ஒருபக்கத்துக்கு சந்தோசம் வாற அதேநேரம் மற்றப்பக்கத்துக்கு எதிராய் முடியேக்கை அதுகளின்ரை சாபம் சும்மாய் விடாதப்பா.

*நட* : ஆரை.. அது எழுதுறவையையும் எழுதுவிக்கிறவையையும் எல்லோ.... எனக்கென்னப்பா.. ஏதோ அவற்றை பெட்டிசன் எழுத்தை தொடருறது நான் எண்டது போலையெல்லோ உன்ரை கதை கிடக்குது.. சிவசத்தியமாய்.. நான் உந்தவேலைக்கு ஒருநாளும் போகமாட்டன்..

*சுந்* : (சிரித்து) நீங்கள் வெளிக்கிட்டாலும்.. நான் நாகம்மாக்கா மாதிரி எல்லாத்தையும் பாத்துக்கொண்டிருப்பனெண்டு மட்டும் நினைக்காதையுங்கோ.. எனக்கு நீங்களும் வேணும் உங்கடை பெஞ்சனும் வேணும். நான் தாலியோடை பாடைக்குப் போகவும் வேணும்.

*நட* : நீ ஏனப்பா பயப்பிடுறாய். உனக்கு பென்சன் கிடைக்கும். இஞ்சைபார் .. நான் உன்னை லைன் பண்ணினாலும் கொப்பர் வந்து கேட்டு எல்லாம் கலியாண எழுத்தெழுதி முறை முறையாய்த்தான் செய்தனான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந் : அது எனக்கும் தெரியும்.. இல்லாட்டில் நான் ஓமெண்டு சம்மதிச்சிருப்பனே.

நட : பிறகென்ன பிரச்சனை...

சுந் : அதுவந்து..

நட : வந்தும் போயும்.. விபரமாச் சொன்னாலெல்லோ தெரியும்.

சுந் : செத்த வீடு எண்டு கேள்விப்பட்டால் கண்டவங்களும் வருவாங்கள். இஞ்சை பாருங்கோ.. நல்லவனும் வருவான். நடிக்கிறவனும் வருவான். அனுதாபத்தோடையும் வருவாங்கள்... அரசல் புரசல் பாக்கவும் வருவாங்கள்... எதுக்கும் நாங்கள்தான் கவனமாய் இருக்கவேணும்.

நட : அது செத்த வீட்டையல்லோ. எங்கடை வீட்டையில்லையே..?

சுந் : ஓம்.. ஆனால் நீங்கள் அங்கை வாறபோறதுகளோடை கதைநொடியை வைச்சு..

நட : (மறித்து) எடியப்பா நான் ஆரையும் தேடிப்போகேலை.. அயலெண்டிருக்கிறம்.. செத்தவீடு நடந்து ஒரு கிழமையாகேலை.. இடக்கண் வலக்கண் பாக்க வேணுமப்பா.. மனிசியும் இடிஞ்சு போயிருக்குது..

சுந் : நான் போகவேண்டாம் எண்ணேலை.. கவனமாய் இருக்கச் சொல்லித்தான் சொல்லுறன்.

நட : (ஏளனமாக) எனக்கு நீ படிப்பிக்கிறாய். ம்..ம்... சரி.. சரி நானும் அவதானமாயிருக்கிறன்.

சுந் : அதுதான் ஆற்றையேன் அலுவலாலை நாங்கள் ஏன் வீணாய் பிரச்சனையைத் தேடுவான் எண்டுதான் சொன்னன்.

நட : இப்ப சரிதானே.. பிறகென்ன..

சுந் : பெருமூச்சுடன் ஆண்டவனே.. ம்.ம்..

நாக : (கூப்பிடுதல்) சுந்தரி.. சுந்தரி..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந் : இஞ்சை பாருங்கோ நாகம்மாக்காவும் வாறா.. வாங்கோ அக்கா..

நாக : ஓம் சுந்தரி.. ஆ இஞ்சை தம்பியும் நிக்கிறார் போலை..

நட : ஓம் அக்கா.. இண்டைக்கு சனிக்கிழமைதானே ... லீவுதானே..

நாக : அதாலைதான் நானும் வந்தனான்.

நட : சொல்லுங்கோ அக்கா.

நாக : இதுகள் வீட்டிலை கதைக்கவும் ஏலாது..

சுந் : ஏன் அப்பிடி என்ன பிரச்சினை அக்கா

நாக : பிரச்சினை எண்டு இல்லை..

நட : அப்ப

நாக : எந்தப் புத்துக்கை எந்தப் பாம்பு இருக்குதெண்டு ஆருக்குச் சுந்தரி தெரியும். அந்தாள் போய்ச் சேர்ந்திட்டுது. செத்தவீட்டைச் சாட்டி எவனெவன் என்னத்துக்கு வாறானெண்டு தெரியேலை..

சுந் : அதுதான் நாங்களும் கதைச்சுக்கொண்டிருக்கிறம். எதுக்கும் நாங்கள்தான் அவதானமாய் இருக்கவேணும்.

நாக : அந்தாள் செய்த வேலையாலை பென்சனும் போய் அவரும் போட்டார். இப்ப செத்தவீட்டுக்குத்தான் வாறாங்களோ.. அல்லாட்டி ஆர் எவன் வாறான் எண்டு அசுகை பாக்க வாறாங்களோ தெரியாது. அல்லாட்டில் இன்னும் என்னென்னத்துக்கு அள்ளிவைக்க வாறாங்களோ தெரியாது.

நட : உதைத்தான் சுந்தரியும் சொன்னா அக்கா..

சுந் : அண்டைக்கு உந்த மறவன்புலோப் பெடியன் ஒண்டு வந்து நிண்டுது.. அவங்கடை பக்கம் கொஞ்சம் பிழையான ஆக்கள், அவங்களாலைதான் மற்றப் பக்கம் சூடேறி அவற்றை பென்சனுக்கு அள்ளிவைச்சவங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட : ஓம் அக்கா.. வடக்கத்தைப் பக்கத்தார்.. பெட்டிசன் பேரம்பலத்துக்கே பெட்டிசன்போட்டு பென்சனை நிப்பாட்டின வங்களெண்டால் பாருங்கோவன்

நாக : நானும் அதைத்தான் சொல்லவாறன். அந்தப் பெடியன் நெடுக நெடுக ரெலிபோன் பண்ணிக் கேட்டபடி.. வாய்திறக்கவே பயமாய்க் கிடக்குது.

சுந் : ஓம் அக்கா நானும் இவருக்கு உதைத்தான் சொன்னனன்

நட : இஞ்சை பாருங்கோ.. எல்லாரையும் ஐமிச்சப்பட்டால் நாங்கள் மனிசராச் சீவிக்கேலாது. நாங்கள்தான் உதவிக்கு வாறவனையும் உவத்திரத்துக்கெண்டு வாறவையையும் வித்தியாசப்படுத்தவேண்டும்

நாக : உண்மைதான் அண்ணை.. அவர் பெட்டிசன் எழுதினவர் தான் .. அதாலைதான் இண்டைக்கு இந்த நிலை.. ரெண்டுங்கெட்டானாய்..

நட : ஆனால் அதாலை நன்மைகிடைச்சவையள் நன்றி மறக்காமல் அவரை மதிக்குதுகள் எண்டு நினைச்சுப் பாருங்கோ.. அப்பிடி அந்தப் பெடியனையும் நினையுங்கோவன்.

சுந் : இந்தக் காலத்திலை உப்பிடி நினைக்காதையுங்கோ.. பெடியனுக்கு என்னும் ஏதேன் பெட்டிசம் எழுதித் தாறனெண்டவரோ அல்லாட்டில் பெடியன் குடுத்த தகவல் ஏதேன் அவரிட்டைக் கிடந்ததோ தெரியாது.. அது தான் நல்ல பிள்ளைக்கு விளையாடி கிடந்தால் எடுப்பமெண்டு பாக்கிறானோ தெரியாது..

நாக : அப்பிடியும் சந்தேகப்படவேண்டிக் கிடக்கு.

நட : இஞ்சை பாருங்கோ.. பெட்டிசம், மொட்டைக் கடிதம் எண்டுறதை நாங்கள் பிழை எண்டு சொல்லேலாது தானே.. ஆரோ ஏதோ ஒருவிதத்திலை விடுற பிழையைச் சுட்டிக்காட்டுறது எண்டும் எடுக்கலாம்தானே..

சுந் : (கோபத்துடன்) என்ன பிழையில்லையோ.. இஞ்சேருங்கோ எந்த வாயாலை உப்பிடிச் சொல்லுறியள்.. தங்கடை ஒரு சின்னக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழுவலுக்கே அவன் பூனை இவன் எலி எண்டு பெட்டிசன் போட்டு எத்தினை அப்பாவியள் மண்ணுக்கையும் மண்ணிலையும் தவிக்குதுகள் தெரியும் தானே.. ஒவ்வொருநாளும் றேடியோவிலையும் ரிவி யிலையும் பாக்கிறியள்தானே..

*நட* : இஞ்சேரப்பா.. உன்னோடை கதைச்சு வெல்லேலாதெண்டு தெரியும்.. நான் எல்லாம் சரிஎண்டு சொல்ல வரேலை... ஞாயமும் இருக்குதெண்டுதான் சொல்ல வந்தன்

*சுந்* : என்ன.. உண்மையைச் சொன்னால் உங்களுக்கும் உடம்பெல்லாம் குத்துதே..

*நாக* : இஞ்சேருங்கோ என்ரை அலுவலாலை நீங்கள் புருஷன் பொஞ்சாதி புடுங்குப்படுறியள்.. ஏதோ என்ரை காலத்துக்கு நடந்ததுக்கு..

*சுந்* : இல்லை நாகம்மாக்கா.. அவர் சரி எண்டார் நான் இல்லை மற்றப்பக்கத்தையும் அதுதான் பாதிக்கப் படுறவையும் இருக்கினம் எண்டு சொல்ல வந்தன்.. அவளவுதான். இதிலை என்ன புடுங்குப் பாடு.

*நாக* : என்னாலைதானே உங்களுக்கை உந்த வியாக்கியானம் தன்னும்..

*நட* : ஏன் அப்பிடி நினைக்கிறியள்?

*சுந்* : (சமாளிச்சு).. அது.. வந்து.. வந்து.. நா.. னு..ம்.. நாங்களும் எதுக்கும் கவனமாய் இருக்கவேணும் .. எல்லாரையும் கண்ட உடனை நம்பவேண்டாமெண்டுதான் சொல்லவந்தன்.. வேறை ஒண்டுமில்லை.. நீங்கள் அதை வேறை... பெரிசுபடுத்தி..

*நாக* : சரி.. சரி.. அதுக்கென்ன.. என்னை விடுங்கோ நான் பிறத்தியாள்.. நீங்கள் புருஷன் பொஞ்சாதி புடுங்குப்படவேண்டாமெண்டுதான் சொன்னன்.. சரி மேலும் கதையை வளர்க்காமல் இருங்கோ. நான் வாறன்..

----- காட்சி மாற்றம் -----

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - 4

*பாத்திரங்கள் : நாகம்மா, சஞ்சயன், குரு*
*இடம் : நாகம்மாவீடு*

*சஞ்* : அம்மா.. நீங்கள் சொல்லுறது முற்று முழுதாயச் சரி... நாங்கள் அதை இல்லை எண்டு சொல்லேலை..

*நாக* : தெரிஞ்சு கொண்டும் பிறகும் பிறகும் ஏன் தம்பியவை வாறியள். வந்து எனக்குக் கரைச்சலைத் தாறியள்.

*சஞ்* : அது வந்து அம்மா

*நாக* : தம்பியவை.. அவர் பெட்டிசன் எழுதத் தொடங்கின காலத்திலையிருந்து.. அயலட்டை சொந்தபந்தம் ஏன் சிநேகிதங்கள் கூட கதைநொடியைக் கொஞ்சம் கொஞ்சமாய் குறைச்சுப் போட்டுதுகள். ஏதோ தீண்டத்தகாத பிறப்புகள் மாதிரி எங்களைக் கண்டால் அடுத்த பக்கமாய் முகத்தைத் திருப்பிக்கொண்டு போங்கள்.

*குரு* : அம்மா.

*நாக* : அவர் பெட்டிசன் பேரம்பலம் எண்டு சனம் கூப்பிட்டதாலை பெருமைப் பட்டாரோ இல்லையோ இதுகளாலை என்ரை மனம் எனக்குள்ளையே புழுங்குகினது கடவுளுக்குத் தான் தம்பி தெரியும்.

*குரு* : ஓம் மாமி.. அங்கிள் சாடைமாடையாய் முந்தியே சொல்லிக் கவலைப்பட்டவர்.

*சஞ்* : அதாலைதான்... அந்த வெறுப்புத்தான் அவற்றை பென்சனுக்கும் உலைவைச்சு.. கடைசியிலை அவற்றை சாவுக்கும் காரணம் எண்டும் கேள்விப்பட்டனாங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நாக* : ஏதொ ஒரேவேலி எண்டிட்டு உவர் நடராசர்தான் ஓடும் புளியம்பழமும் போலை இருந்தவர். செத்த வீட்டையும் நிண்டு நடத்தினவர்.

*குரு* : நாங்கள் பாத்தம் மாமி.

*நாக* : நீங்கள் செத்தவீட்டுக்குப் பிறகு அடிக்கடி வரத் தொடங்கினாப்பிறகு அவையும் வரத்துப் போக்கைக் குறைச்சுப் போட்டினம்.

*சஞ்* : நானும் கவனிச்சன்.. அண்டைக்கு என்னை எவடமெண்டு கேட்டிட்டு நான் பதில் சொல்ல அவற்றை முகம் போன போக்கு எல்லாத்தையும் வடிவாயக் காட்டிச்சுது.

*நாக* : எல்லாம் தெரிஞ்சு வைச்சிருக்கிறியள். படிச்சு நல்ல உத்தியோகத்திலையும் இருக்கிறியள். பிறகும் ஏன் தம்பி எனக்கு கரைச்சலைத் தாறியள்.

*சஞ்* : உங்கடை நிலைமையிலை நாங்கள் வாறது கரைச்சலாய்த் தான் இருக்கும். மன்னிச்சுக்கொள்ளுங்கோ.. நான் இண்டைக்கு கொழும்புக்குப் போறன். அதுதான் குருவை இன்ரடியூஸ் Introduce பண்ணி வைச்சால் ஏதேன் தேவையெண்டால் உதவியாயிருக்கும் எண்டு நினைச்சன்.

*நாக* : (மனதுக்குள்) கடவுளே ஒரு உபத்திரவம் துலையுது.. ஆனால் புதிசொண்டு வருகுது

*குரு* : அம்மா..! ஏதேன் தேவையெண்டா இந்த நம்பருக்குக் கதையுங்கோ...

*சஞ்* : வந்து போனால்தானே கரைச்சல் .. மற்றவைக்குத் தெரியவரும்.. போனிலை கதைக்கலாம்தானே...

*குரு* : கேட்ட டீற்றெயில்ஸ்சையும் Details டொக்குமென்ற்ஸையும் Documents எடுத்திட்டு போன் பண்ணுங்கோ அம்மா..

*நாக* : (வேண்டா வெறுப்பாக) ம்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*குரு +*
*சஞ்* : சரி நாங்கள் அப்ப போடடு வாறம்..

*நாக* : (வேண்டா வெறுப்பாக) ம்.. சரி தம்பியவை..

*(மோட்டார் சைக்கிள் செல்லும் ஒலி)*

----- காட்சி மாற்றம் -----

## காட்சி - 5

*பாத்திரங்கள் : நடராசா, சுந்தரி, நாகம்மா*
*இடம் : நடராசா வீடு*

*சுந்* : (அவசரப்பட்டு - வந்துகொண்டு) இஞ்சேருங்கோ.. என்னப்பா.. எங்கை நிக்கிறியள்.. இந்தாளுக்கு.. பேப்பரை விரிச்சுதெண்டால்.. உலகமே கவிண்டாலும் தெரியாது..

*நட* : என்னப்பா சங்கக் கடைக்குப் போறனெண்டு போனாய்.. இப்ப சன்னதத்திலை வந்து நிக்கிறாய்..

*சுந்* : ஒரே வேலிக்கை இருந்து கொண்டு... அக்கம் பக்கத்திலை அடுத்த கிடுத்த வீட்டிலை என்ன நடக்குதெண்டு பாக்கவேண்டாம்..

*நட* : ஊரிலை உலகத்திலை என்ன நடக்குதெண்டுதானே பேப்பரிலை பாக்கிறன்.

*சுந்* : அயல் வீட்டிலை நடக்கிறதைப் பாராமல் எங்கையோ நடக்கிறதைப் பாத்து என்னப்பா பிரயோசனம்.

*நட* : உனக்கு அயல்வீட்டுப்புதினம் தான் திறில் எண்டால் .. என்ன நடந்ததெண்டு சொல்லனப்பா.. உதுகள் பேப்பரிலை வராது.. சொல்லு.. சொல்லு என்ன நடந்தது .. நானும் அறிவம்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந் : உண்மையிலை சொல்லுங்கோ.. உங்கை நாகம்மாக்கை வீட்டை மோட்டச் சயிக்கிள் வந்து போன சத்தம் கூட கேக்கேலையே

நட : அந்தாள் செத்து ஒருகிழமையாகேலை... சுகதுக்கம் விசாரிக்க இனசனம் சிநேகிதங்கள் எண்டு வருங்கள். ஆர் வருகினம் எவை வருகினம் என்னத்திலை வருகினம் எண்டு நாங்கள் கேட்டுக்கொண்டு பாத்துக்கொண்டு இருக்கேலுமே.. அது அதுகளின்ரை பிறைவசி அப்பா..

சுந் : அதை நான் இல்லை எண்டு சொல்லேலை.. ஆனால் மோட்டச்சைக்கிளிலை வந்தது ஆரெண்டு தெரியுமே..

நட : தெரிஞ்சால் இவளவு நேரம் உன்னோடை மல்லுக்கட்டிக் கொண்டு நிக்கிறனே..

சுந் : அவன் தானப்பா அந்த கொழும்பிலை பெஞ்சன் ஒவீசிலை வேலைசெய்யிறதெண்டு.. அண்டைக்கு வந்தான். உந்த மறவன்புலோ கலையாபரணன் வாசிகசாலைப் பக்கத்துப் பெடியனொண்டு வந்ததெல்லே..

நட : ஓம் அவன் சஞ்சயன்

சுந் : ஓ அவன்தான்.. அவன் இண்டைக்கு இன்னொருத்தனோடை அதுவும் மோட்டச் சைக்கிளிலை வந்தவன்... அவ நாகம்மாக்காவும் 32 பல்லையும் காட்டிச் சிரிச்சுகதைச்சு.. வாசல் மட்டும் வழியனுப்பினா எண்டாப் பாருங்கோவன்...

நட : வீட்டைவாறதுகளை என்ன கலைக்கச் சொல்லுறியே .. அல்லாட்டிப் பல்லைக் கழட்டி வைச்சுப்போட்டுச் சிரிக்கச் சொல்லுறியோ..!

சுந் : நீங்கள் எப்பவும் அவவுக்குச் சப்போட்தான்.. அந்தாள் இருக்கேக்கை செய்த அநியாயத்தாலை இப்பவும் ரெண்டு வாசிகசாலைப் பக்கமும் கீரியும் பாம்பும் போலைதான்.. பிறகும் அவங்களேன் இஞ்சை வருவான்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட : அந்தாள் எழுதின பெட்டிசத்தாலை கிடைச்சுதோ இல்லையோ முடிஞ்சதைப் பற்றி ஏனப்பா இப்ப கிளறிறாய்

சுந் : உங்களுக்கு சூடுசுரணை இல்லை .. கெட்டவங்கள் வந்துபோறதைப் பாத்துக் கொண்டிருக்கச் சொல்லிறியளே .. உது தொடர்ந்து செண்டால் இனி நானும் வெளிக்கிடத்தான் வேணும்

நட : என்ன சொல்லுறாய்... நானும் வாறதோ... எங்கை என்னத்துக்கு வெளிக்கிடப் போறாய் எண்டு சொன்னால் நானும் வரலாமெண்டால் வாறன்...

சுந் : இஞ்சேருங்கோ பல்லிலை பட்ட நரி வளையிலையும் கிடக்காது எண்டு தெரியாமலே பழங்கதை கிடக்குது. உவங்கள் உந்த வாசிகசாலைக்காணியை உவர் பேரம்பலம் அண்ணையைக்கொண்டு பெட்டிசன் போட்டு தங்களுக்காக்கினது போதாதெண்டு இப்ப பக்கத்துக் காணியை தங்கடை கிறவுண்ட் ஆக்கிறதுக்கு பெட்டிசன் போட ஏதேன் அவற்றை ஆயத்தங்கள் கிடக்குமெண்டு வந்து போறாங்கள் போலை..

நட : அவங்கள் எதுக்கு வந்தாங்களோ.. நீ ஏன் இப்ப முழங்காலுக்கும் மொட்டந்தலைக்கும் முடிச்சுப் போடுறாய்..

சுந் : நான் சொல்லுறது உங்களுக்கு ஏறாது எண்டு தெரியும்..

நட : அதாலைதான் நீ இப்ப வெளிக்கிடுறியோ..

சுந் : (ஆணவத்துடன்) ஓ.. ஒரு கடுதாசி எடுத்து நாலு எழுத்தெழுதி பொலிசுக்கோ ஆமிக்கோ போட்டால் தம்பியவை முட்டிக்கு முட்டி வாங்கேக்கை தெரியும் எப்பிடி எண்டு;. அதுக்குப் பிறகு இந்தப் பக்கம் தலைகூடி வைச்சுப் படுக்காயினம்.

நட : எடியப்பா இதென்ன கதை.. உனக்கென்ன விசரே பிடிச்சிருக்கு.. கனவிலையும்... இஞ்சேர் கனவிலையும் ..உதை நினையாதை.. நாங்களும் பிள்ளைகுட்டி வைச்சிருக்கிறனாங்கள்.. உந்த கேடுகெட்ட வேலைசெய்து ஆருக்கேன் அள்ளிவைக்கிறதெண்டு ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெத்ததுகளுக்கு பாவத்தைத் தேடிவைக்காதை.. பிள்ளைகுட்டி மட்டுமில்லை... அடுத்த பிறப்புக்கும் கூடவரும். அதை மறந்திடாதை.

*சுந்* : நான் ஒருத்தருக்கும் தேவையில்லாமல்... அல்லாட்டில் இல்லாததைப் பற்றி எழுதேலை.. உள்ளதைத்தானே எழுதிறன். பிறகென்ன.. நீங்கள் உங்கடை அலுவலைப் பாத்துக்கொண்டிருங்கோ.. வாறது எனக்கு வரட்டும்.

*நட* : இஞ்சைபார்சுந்தரி.. உதைத்தான் கெடுகுடி சொற்கேளாது எண்ணுறது. அயல் வீடப்பா... ஆரேன் வினை விதைச்சவன் வினையை அறுக்கட்டும். உனக்கேன் தேவையில்லாத வேலை

*சுந்* : நாய் வாலை நிமித்தவும் ஏலாது உங்களை மாத்தவும் ஏலாது.. உதாலைதானே உங்களை ஒருத்தரும் சபைக்கும் எடுக்கிறதும் இல்லை ..

*(நாய் குரைத்தல்)*

*நட* : சரி.. சரி.. கொஞ்சம் மெல்லமாய்க் கதை சுந்தரி.. நீ நாய்வாலைக் கதைக்கேக்கை நாய்வேறை குலைக்குது. றோட்டாலை ஆக்கள் போற வாற இடம் யோசிச்சு கதையப்பா.

*நாக* : (வந்துகொண்டு) சுந்தரி... சுந்தரி...

*சுந்* : (மெதுவாக) இஞ்சாருங்கோ.. அவதான் .. நாகம்மாக்கா தான் வாறா.. உங்களுக்கு சூடுசுரணை இருந்தா ஏதேன் உதவி கேட்டால் மாட்டனெண்டு சொல்லிப்போடுங்கோ.. இப்ப உள்ளுக்கை போங்கோ.. துக்கம் விசாரிக்க எண்டு மோட்டச் சைக்கிளிலை வந்து போறவையிட்டைச் சொல்லிச் செய்விக்கேலும் தானே.. அவங்கள் குடிகெடுக்கிறவங்கள்... இப்ப வாறா இஞ்சை .. (கோபத்துடன்) போங்கோ இப்ப உள்ளுக்கை ..போய் மாட்டுக்குத் தவிட்டை வையுங்கோ.. நான் கதைக்கிறன் அவவோடை

*நாக* : (அருகில் வந்துகொண்டு) சுந்தரி... சுந்தரி..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நட* : (போய்க்கொண்டு) இஞ்சேரப்பா.. ஆரோ படலையுக்கை கூப்பிட்டுக் கேக்குது.. ஆரெண்டு பாருமன்.. நான் இஞ்சைமாட்டுக் கொட்டிலிலை அலுவலாயிருக்கிறன்.

*நாக* : (வந்துகொண்டு) அது நான் நாகம்மா...

*சுந்* : (வேண்டா வெறுப்பாய் வந்துகொண்டு) ஆ நாகம்மாக்காவே.. அதுதானே பாத்தன்.. குரல் கேட்டது.. குசினிக்கை அலுவலாய் நிண்டிட்டன்.. ஆ... வாங்கோ வாங்கோ.. என்ன இந்த நேரம்.. திடீரெண்டு...

*நாக* : (தயங்கி) நான் உவர் தம்பியிட்டைத்தான்... இந்தப் பென்சன் போமை நிரப்புவிப்பம் எண்டு வந்தனான்.

*சுந்* : பென்சன்தானே உங்களுக்கு இல்லையெண்டு அவர் உயிரோடை இருக்கேக்கையே வந்திட்டுதே. பிறகென்ன பென்சன் போம்.. பிறகேன் அதோடை வீணாய் மினைக்கெடுறியள்

*நாக* : அதுவந்து... உந்த வாசிகசாலையடிப் பெடியன் கொழும்பிலை எங்கையோ பென்சன் ஒவீசிலையாம் வேலைசெய்யிறது. அதுதான் ஏதோ போம் தந்து நிரப்பிப் போட்டு மற்றப் பெடியனிட்டைக் குடுத்து விடச்சொன்னது.

*சுந்* : நான் அண்டைக்கே சொன்னன். உவங்கள் ஏமாத்துக் காறங்கள்.. உதை அதைச் சொல்லி தொடருவாங்கள். தங்கடை அலுவல் முடியும் மட்டும் நல்ல பிள்ளைக்கு நடிப்பாங்கள்..

*நாக* : அப்பிடித் தெரியேலை சுந்தரி..

*சுந்* : அப்ப... தந்தவையே போமை நிரப்பித் தந்திருக்கலாமே.. தரகு வேறை.. பிறகேன் இஞ்சை அனுப்பினவை.. ஏன் அவரையும் மாட்டிவிடவே...

*நாக* : நான் ஏன் சுந்தரி உப்பிடி வேலை செய்யப் போறன். ஏன் ஆரையேன் மாட்டி விடுறன்.. சொல்லு பாப்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சுந்* : இல்லை .. பேரம்பலம் அண்ணை மாட்டிவிட்ட ஆரோ எழுதிப்போட்ட பெட்டிசனாலைதானே முந்தியும் பெஞ்சன் இல்லையெண்டு வந்தது. பிறகும் போய் அதைக் கிண்டிறதெண்டால்... கிண்டிறவர்தானே மாட்டுப்படுவர்.. அதைத்தான் சொன்னன்..

*நாக* : அதை நான் இல்லை எண்ணேலை... பெடியன் தந்திட்டுப் போயிட்டுது. ஒரு நப்பாசை.. முயற்சிசெய்து பாப்பம்... கிடைக்காட்டில் போகட்டுமன்..

*சுந்* : சரி.. சரி.. எனக்கெண்டால் உவங்களிலை எள்ளளவும் நம்பிக்கையில்லை.. எதுக்கும் அவரை உதுக்கை மாட்டி விடாமல் விட்டால் சரி.. உதிலை இருங்கோ.. எருதுகளுக்கு தவிடு வைக்கப் போனவர் வந்திடுவர்.. அவரோடை கதைச்சு என்னத்தை எண்டாலும் செய்யுங்போ

*நாக* : (பெருமூச்சு விட்டு). ம்.. எல்லாம் காலம்... தெரியாமலே சொல்லுறது யானை சேத்திலை மாட்டுப்பட்டால் எலி அதின்ரை முதுகிலை கூத்தும் கொண்டாட்டமும் ஆடுமெண்டு.. ம்.. எல்லாம் என்ரை விதி..

----- காட்சி மாற்றம் -----

## காட்சி - 6

*பாத்திரங்கள்* : *குரு, சஞ்சயன்*

*இடம்* : *வீதி*

*குரு* : மச்சான் சஞ்சயன்.. பேரம்பலம் அங்கிள் பெரிய பெட்டிசன் எழுத்தாளிதான். ஆனால் அவ அன்ரி பாவமடா... இப்பிடி நடக்குமெண்டு தெரிஞ்சிருந்தால் நாங்களே எல்லாம் செய்திருப்பம்.

*சஞ்* : ஏனடா என்ன நடந்தது..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு : இஞ்சைபார் .. நீ எப்பிடியும் இந்தப் பென்சன் அலுவல் அவவுக்குச் செய்து குடுத்து நாங்கள் ஆரெண்டதைக் காட்டவேணும். அது மட்டுமில்லை பெட்டிசன் எண்ணுறது பிழையான விசயத்துக்கு மட்டுமில்லை. பிழையை சரியெண்டு நிருபிக்கவும் தேவைப்படும் எண்டதைப் புரியவைக்கவேணும்..

சஞ் : ஏனடா அப்பிடி என்ன சீரியஸா நடந்தது.

குரு : அயல் வீடே இப்பிடியெண்டால்.. அதுக்கும் நாங்கள் தான் காரணமெண்டால்..

சஞ் : ஏன் நாங்கள் அவைக்கு என்னவாம் செய்தனாங்கள்.

குரு : நாங்கள் போய்வாறது அவைக்குப்பிடிக்கேலையாம்.

சஞ் : அவை வீட்டை நீ போகேலைத்தானே

குரு : தனக்கு வடிவாய் பென்சன்போம் நிரப்பத் தெரியாதெண்டு போமை பிழைவிடாமல் நிரப்பித்தரச் சொல்லி அன்ரி கேக்க நடராசர் ஓமெண்டு சொல்லவும் அவ மனிசிக்காறி ஏதோ தேவையில்லாத கனகதை கதைச்சு இல்லையெண்ட பென்சன் இல்லைத் தானே எண்டு ஏசியிருக்கிறா.

சஞ் : ஆ..ஆ...?

குரு : அதுமட்டுமில்லை பெட்டிசன்காரருக்கு பெட்டிசன் போடுறதிலை தவறில்லை எண்டு வியாக்கியானம் வேறை சொல்லியிருக்கிறா.. அழுதழுது சொன்னா...

சஞ் : இஞ்சை பார் குரு நாங்கள் அடுத்தவையின்ரை கதையைக் கேக்கிறதிலையோ அவையோடை வியாக்கியானம் செய்யிறதிலையோ பிரயோசனமில்லை. செயலிலை காட்டவேணும்...

குரு : ஓம் சஞ்சயன்.. இந்தா அந்த போமை பிறகு நான் தான் நிரப்பினனான். எல்லா டொக்குமென்சும் இருக்கு.. சரியோ எண்டு பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ் : ம்.. அ.. சரி.. சரி;.. எல்லாம் சரிபோலைதான் கிடக்குது. இன்னும் ஏதேன் தேவையெண்டால் சொல்லிறனே...

குரு : ஓம் மச்சான் அவர் எங்கடை வாசிகசாலை விசயத்திலை தலையிட்டு எங்களுக்குச் சார்பாமுடிவு வந்ததாலை அவற்றை பென்சன் அவவுக்கு இல்லைஎண்டு பெட்டிசன் போட்டு நிப்பாட்டினவைக்கு செய்து காட்டவேணும் மச்சான்.

சஞ் : இஞ்சைபார் குரு. உண்மையிலை பெட்டிசன் எண்ணுறது மற்றவைக்குத் தப்பாப் புரிஞ்சாலும் நாணயத்துக்கு இரண்டு பக்கம் இருக்கிறது போலை பெட்டிசத்துக்கும் இரண்டு பக்கம் இருக்குதெண்டதை நாங்கள் மறக்கக்கூடாதடா..

குரு : ஓம் சஞ்சயன்.. ஒருபக்கத்துக்கு சாதகமாய் அமைஞ்சால் மற்றப் பக்கத்துக்கு பாதகமாய்த்தானடா அமையும். அவை எப்பவும் எதிராய்த்தானே இருப்பினம். அதில தவறில்லைத்தானே.. உதை நாங்கள் எதிர்பாத்துத்தானே இருக்கவேணும்.

சஞ : (சிரித்துக்கொண்டு) இல்லையடா.. பெட்டிசனும் ரெண்டு வகை அதை மறந்திடாதை.. ஒண்டு உண்மையை வெளிக்கொண்டு வரும். மற்றது உண்மையை மறைச்சு பொய்யை வெளிக்கொண்டு வரும்.

குரு : அதெண்டா சரி தானடா... ஏதோ நாங்கள் எங்களாலை இயண்டதை செய்துபாப்பம். இல்லாட்டி நாங்களும் அதையே செய்வம்..

சஞ் : என்ன? (ஆச்சரியத்துடன்)

குரு : (சிரித்துக்கொண்டு) நாங்களும் ஒரு பெட்டிசத்தை எழுதுவம்..

சஞ் : (சிரித்துக்கொண்டு) சரி .. சரி எங்களையும் தொடங்கச் சொல்லுறியோ.. பெரும்பாலும் தேவை வராதெண்டு நினைக்கிறன்...

குரு : தேவைப்பட்டால் களத்திலை இறங்குவம்

*இருவரும்*: (சிரித்தல்)

----- காட்சி மாற்றம் -----

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - 7

*பாத்திரங்கள் : குரு, சஞ்சயன்*
*இடம் : நடராசா வீதி*

*சுந் :* என்ன நாகம்மாக்கா.. இந்தநேரம்.. இந்தப்பக்கம்.. அதுவும் அவர்செத்து இன்னும் அந்திரட்டிகூடமுடியேலை.. வெளிக் கிட்டிருக்கிறியள்..

*நாக :* அந்திரட்டி என்ன ஆட்டத்துவசமென்ன. . தன்ரை தன்ரை அலுவலை தான்தானே செய்யவேணும். அடுத்தவையைப் போய்க் கேட்டு அவைக்குக் கரைச்சல் குடுக்கவும்.. வீணாய் மனஸ்தாபப் படவும் வேணுமே..

*சுந் :* நீங்கள் அண்டைக்கு அவர் போம் நிரப்ப மறுத்ததை இன்னும் மனத்திலை வைச்சிருக்கிறியள் போலை.. பேரம்பலம் அண்ணை உயிரோடை இருக்கேக்கையே இல்லையெண்டது பிறகென்னண்டு வருமெண்டு சொன்னவரே தவிர.. நிரப்பித்தர மாட்டனெண்டே சொன்னவர்.. நீங்கள்தான் பிழையாய் விளங்கிக்கொண்டு போமைத் திருப்பிக் கொண்டந்திட்டியள்.. அவர் சரியாய்க் கவலைப்பட்டவர்..

*நாக :* சுந்தரி... அவர் சரியோ.. நீ சரியோ.. நான் பிழையோ.. இஞ்சைபார் ...நடந்தது நடந்ததுதான். ம்... கறந்தபால் முலைக்கேறுமே..

*சுந் :* ஓம் அக்கா.. என்ன இந்தப் பக்கம்.

*நாக :* இந்தப் பென்சன் மட்டையிலை விதானையாற்றை கையெழுத்தும் வாங்கி அனுப்பச்சொல்லி பெடியன் குடுத்து விட்டிருக்கு.

*சுந் :* பெடியனோ.. ஆர் பெடியன்.

*நாக :* வாசிகசாலையடிப் பெடியன். ஏதோ பெடியன் மனம் வைச்சபடியாலை விசயம் சரிவரும் போலை கிடக்குது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சுந்* : ஆ... அப்பிடியே .. நல்லதக்கா.. ஏதும் தேவையெண்டா மனசிலை ஒண்டையும் வைச்சிருக்காமல் கேளுங்கோ...

*நாக* : குளத்தோடை கோவிச்சுக்கொண்டு குளிக்காமல் இருக்கேலுமே.. எனக்கு வேறை ஆர் இருக்கினம்.. எதுக்கும் உங்களிட்டைத்தானே வருவன்.

*சுந்* : சரி வாறனக்கா... (மனதுக்குள்) .. பெடியன் பென்சன் செய்து குடுக்குதோ.. ம்.. அதுதான் எங்களுக்குத் தெரிஞ்சிடும் எண்டு ஒளிக்கிறாபோலை.. இப்ப அயலெண்டும் கணக்கெடுக்கிறாவில்லை... முள்ளை.. முள்ளாலைதான் எடுக்க வேணும். அப்பதான் புரியும்...

----- காட்சி மாற்றம் -----

## காட்சி – 8

*பாத்திரங்கள் : நடராசா, சுந்தரி*
*இடம் : நடராசா வீடு*

*நட* : இஞ்சேரும்.. உங்கை நாகம்மா அக்கா வீட்டை பொலிஸ் வந்ததப்பா...

*சுந்* : ஏதேன் களவு கிளவு எண்டால்; வந்தாங்களாக்கும்.

*நட* : இல்லையப்பா.. உந்த வாசிகசாலையடிப்பொடியள் வந்து பென்சன் விசயம் எல்லாம் சரிக்கட்டி பென்சன் காட்டும் குடுத்ததாம்.

*சுந்* : (ஆச்சரியத்துடன்) அப்ப அவவின்ரை பென்சன் வந்திட்டுதே... அவ அதுபற்றி மூச்சுக்கூட விடேல்லை.. அப்ப பெட்டிசன் எல்லாம்..

*நட* : பெட்டிசன் எல்லாம் குப்பையுக்கைதான்.. பென்சன் காட்டும் குடுத்து கொம்மியுற்றட் பென்சனும் நாகம்மாக்கா திறீவீலரிலை பெடியனோடை போய் எடுத்ததாம்...

*சுந்* : (ஆச்சரியத்துடன். அவசரத்துடன்) அப்ப எடுத்த கொம்மியுற்றட் பென்சனைக் கள்ளன் பறிச்சுக் கொண்டு ஓடிவிட்டானோ..?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவளவாம். கனகாசே..? அதுக்கே பொலிசு வந்தது..? கள்ளனை ஆரெண்டு தெரியுமாமே?

நட : ஏனப்பா நீ அப்பிடி நினைக்கிறாய்.. ஒருநாளும் உனக்கு நல்லது நினைக்க வராது..

சுந் : (சிறிது கோபத்துடன்) நீங்கள்தானே பொலிஸ் வந்ததெண்டு சொன்னனீங்கள் பிறகென்ன... அதாலை தான் கேட்டன்... கடைசியிலை என்னிலைதான் பிழைபிடியுங்கோ.. ரெண்டு பக்கமும் என்னிலைதான் நல்லாய் இடம் கண்டு கொண்டியள் ஓ..

நட : நான் பொலிஸ் வந்ததெண்டு சொல்ல நீ கள்ளன் வந்ததெண்டா...

சுந் : நீங்கள் தானே கொம்மியுற்றட் எடுத்ததெண்டு சொன்னியள்.

நட : ஆனால் கள்ளன் எண்டது உன்ரை கனவுக்கற்பனைக் கதைதானே.

சுந் : கனவோ கற்பனையோ விடுங்கோ.. அந்தாள் உயிரோடை இருக்கேக்கை கிடைக்காது எண்ட பென்சன் இப்ப எப்பிடி?

நட : உந்த வாசிகசாலையடிப் பொடியன் பெஞ்சன் டிப்பாட்மென்ரிலை வேலை செய்யிற பெடியன் பெட்டிசன் பொய் எண்டு புறூவ் பண்ணி எல்லாம் சரிவந்திட்டுதாம்.

சுந் : அப்ப பொலிஸ் வந்தது.

நட : அதுவும் பெட்டிசன்தானாம்.

சுந் : பெட்டிசனோ... என்னவாம்..

நட : அதுவும் பெட்டிசம்... இதுவும் பெட்டிசம்... தான்...

சுந் : பெட்டிசம்.. பெட்டிசம்.. பெட்டிசம்.. என்னண்டு விபரமாய்ச் சொல்லுங்கோ..

நட : சுந்தரி.. இஞ்சைபார். பெட்டிசன் பேரம்பலத்தாற்றை பென்சனை நிப்பாட்டினதும் பெட்டிசம்.. பிறகு பென்சனை வரப்பண்ணினதும் பெட்டிசம். இப்ப பென்சன் பேப்பர் கொண்டு வந்த பெடியனைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிஸ் பிடிச்சுக்கொண்டு போகப் பண்ணினதும் பெட்டிசம்.. இப்ப விளங்குதே... பெட்டிசன் என்னெல்லாம் செய்யுதெண்டு

*சுந்* : அப்ப பெடியனுக்கு பொலிஸ்காரர் முட்டிக்கு முட்டி குடுப்பாங்கள் என்ன?

*நட* : என்ன நீயே எழுதினமாதிரிச் சொல்லுறாய்... அது எழுதின பெட்டிசனைப் பொறுத்ததப்பா..

(மோட்டார் சைக்கிள் சத்தம்)

*சுந்* : அங்கை பாருங்கோ வாசிகசாலையடிப் பெடியனைப் பொலிஸ் பிடிச்சுக்கொண்டு போனதெண்டியள். இப்ப மோட்டச் சைக்கிளிலை பிறகும் நாகம்மா அக்கா வீட்டை போகுது.

*நட* : அப்ப இந்தப் பெட்டிசனும் வீண் எண்டு சொல்லு.

------ முற்றும் -----

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. பெறுமதி

## பாத்திரங்கள்

- கோமதி – தாய்
- அருணாசலம் – தாத்தா
- குரு – மகன் [சிறுவன்]
- பார்த்திபன் – அதிபர்
- லட்சுமி – ஆயா [வேலைக்காரப்பெண்]

## காட்சி - 1

*பாத்திரங்கள் : அருணாசலம், லட்சுமி, குரு, கோமதி*

*இடம் : வீடு*

*(பாடசாலை வான் ஹோர்ண் சத்தம்)*

*அரு* : தம்பி.. தம்பி குரு... ஸ்கூல் வான் வந்திட்டுது எல்லே... வெளிக்கிட்டாச்சே.. பிந்தினால் பிறகு இண்டைக்கும் பிறிபெக்ற் அண்ணாமாரிட்டை பேச்சு வாங்கவேண்டி வரும்.. நெடுக லேற்றாகிறக்கோட் புத்தகத்திலை லேற் எண்டு எழுதிறது நல்லதில்லை தம்பி. அதை மறக்கவேண்டாம்..

*குரு* : ஓம் தாத்தா.. நான் றெடி... அம்மா லன்ச் பொக்ஸ் வைச்சாச்சா...

*அரு* : கோமதி! தம்பி குருவின்ரை லன்ச் பொக்ஸ் எங்கைமோனை..

*கோம* : (எரிச்சலுடன்) அவன் கேட்டால் திருப்பி என்னைக் கேக்கிறதை விட்டிட்டு தேடிப்பாத்து எடுத்துக் குடுங்கோ.. இல்லாட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லச்சுமியைக் கேளுங்கோ எதுக்கெடுத்தாலும்... இவர் கோமதி கோமதீ எண்ணுறதும் அவர் அம்மா.. அம்மா.. ஆட்டுக்குட்டி எண்ணுறதும்... சீச்சீ.. காலமை தொடங்கினால் ஆள் மாறி ஆள் அரிச்சனைதான்.. எல்லாம். எல்லாம் என்ரை தலைஎழுத்து...

*அரு* : மோனை... தம்பியின்ரை சாப்பாட்டைக் கேட்டால் நீ ஏன் காலங்காத்தாலை சன்னதம் ஆடுறாய். என்னாலை ஏலாது நொண்டிதான். அதை நான் இல்லை எண்ணேலை.. பிள்ளை நான் நொண்டி எண்டதை பெத்தமகள் நீயே சொல்லாமல் சொல்லிக் குத்திக் காட்டிறாய் போலை..

*கோம* : சன்னதமோ... நானோ... ம்..சன்னதமாடாமல் இருந்தால் தெரியும் எல்லாருக்கும்.. அப்பா ஒண்டை மட்டும் மறந்திடாதையுங்கோ... அவரும் இல்லாமல்... நான் தாய்க்குத் தாயாயும் தேப்பனுக்குத் தேப்பனாயும் ஏன் உங்களுக்கு மகளாயும் எத்தினை பேருக்குப் பதில் சொல்ல வேணும்.. நான் சன்னதம் ஆடுறன் எண்டு சொல்லுறதை விட்டிட்டு என்ரை கஸ்டத்தையும் கொஞ்சமெண்டாலும் சிந்திச்சுப்பாருங்கோ..

*அரு* : அதை நான் இல்லையெண்ணேலை கோமதி.. எனக்கும் தெரியுது உன்ரை கஸ்டம்... ஆனால் பிள்ளையைப் பற்றி கொஞ்சம் தன்னும் யோசிக்கிறியே. அதுவும் உன்ரை பொறுப்புத்தான் .. பெரிய பொறுப்பு. அதை மறந்திடாதை.

*கோம* : அப்பா நான் தாயப்பா.. பத்து மாதம் சுமந்து பெத்தவள்

*அரு* : ஓம் கோமதி. அதை நான் இல்லை எண்ணேலை.. ஆனால் பிள்ளையின்ரை மனம் நோகாமல் நடக்கிறதும் தாயின்ரை பொறுப்பு அதை மறந்திடாதை.

*கோம* : என்னை என்ன செய்யச் சொல்லுறியள் இப்ப..

*அரு* : நீ ஒவீசுக்கு 9 மணிக்குத்தானே போறது. இப்ப ஆறே முக்கால்தானே.. பிள்ளையை சந்தோசமாய் அனுப்பிப் போட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்ரை அலுவலைப் பாரன் கோமதி.. தகப்பனும் இல்லை... பள்ளிக்குடம் போற பிள்ளை சந்தோசமாய் போகவேணும் எல்லே. அதைச்சொன்னனன்...

***கோம*** : அப்பா... அதுக்குத்தானே லட்சுமி இருக்கிறாளாச்சே.. எனக்கு நீங்கள் எந்தநேரமும் உபதேசிக்க வேண்டாம். உங்கடை அலுவலை நீங்கள் பாருங்கோ.. (வேண்டா வெறுப்பாக) வயது போன நேரத்திலை சும்மா எதுக் கெடுத்தாலும் முணுமுணுத்துக்கொண்டு... லட்சுமீ.. லட்சுமீ..

***லட்*** : தம்பியை வானிலை ஏத்திப்போட்டு வாறனம்மா..

***குரு*** : பாய்.. ஆச்சி பாய்.. தாத்தா பாய்.. அம்மா .. அம்மா பாய்...

***கோம*** : சரி சரி போ போ.. ஒவ்வொரு நாளும் போற ஸ்கூலுக்குப் போறதுக்கு.. ஏதோ வெளிநாடு பயணம் போறது மாதிரி ஆளாளுக்கு பாய் சொல்லிக்கொண்டு.

***லட்*** : (கொஞ்சி) என்ரை ராசா... தம்பி கவனமாய்ப் போட்டு வரவேணும்.. நல்லாப் படிச்சு முன்னுக்கு வரவேணும். தம்பிக்கு கடவுள் துணையிருப்பார்.. தம்பி இசுக்கூலாலை வருமட்டும் ஆச்சி பாத்துக்கொண்டிருப்பன்...

***குரு*** : தாங்ஸ் ஆச்சி... பாத்துக்கொண்டிருங்கோ... ஆனால் சாப்பிடாமல் இருக்காதேங்கோ ஆச்சி..

***லட்*** : என்ரை செல்லத்தைப் பார்... ஆச்சியிலை இருக்கிற அக்கறையை.. என்ரை தங்கம். ச்சா.. பாய் பாய்.. (வாகனம் வெளிக்கிடும் சத்தம்).

***அரு*** : (தனக்குள்) பெத்தது இஞ்சை எரிஞ்சுவிழுகுது.. வளர்க்கிறது பாசம் கொஞ்சுது.. எல்லாம் காலம்தான்.. பெறுகிறதுக்கு உடம்பு மட்டும் காணும்... ஆனால் வளக்கிறதுக்கு உடம்போடை முக்கியமாய் மனமும் பக்குவமாய் இருக்கவேணும்.. திருந்துகிறதுகளைத்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லித்தன்னும் திருத்தலாம்.. இதுகளையோ.. (பெருமூச்சுவிட்டு) நாய்வாலை நிமித்தேலாதெண்டு தெரியாமலே அந்தக்காலத்திலை சொன்னாங்கள்.. அது இவள் பாவியின்ரை விசயத்திலை நூற்றுக்கு நூறு சரி.

----- காட்சி மாற்றம் -----

## காட்சி - 2

*பாத்திரங்கள் : அருணாசலம், குரு, கோமதி*
*இடம் : வீடு*

*குரு* : அம்மா ..அம்மா.. நாளைக்கு வருவீங்கள்தானே அம்மா... பிறின்சிப்பல் கட்டாயம் கூட்டியரச் சொன்னவர். கட்டாயம் வருவியள்தானே அம்மா...

*கோம* : இப்பபோய் படு குரு... விடியப் பாப்பம் எண்டுதானே சொல்லுறன் பிறகென்ன...

*குரு* : பாப்பம் எண்டில்லை ஒமெண்டு சொல்லுங்கோ அம்மா.. பிளீஸ்... பிறின்சிப்பல் பணிஸ்மென்ற் தருவார்... மற்றவைக்கு முன்னாலை வெக்கம் அம்மா... ஒரே ஒருநாளைக்குத்தானே அம்மா..

*கோம* : வெக்கத்தை நாளைக்குப் பாப்பம்... ஒண்டில் நான் வாறன் அல்லாட்டில் லச்சுமியை அனுப்பிவிடுறன். அம்மாவுக்கு லீவு இல்லையெண்டு சொல்லு.. அவைக்கென்ன தாங்கள் படிப்பிக்கிதை விட்டிட்டு ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொண்டைச் சொல்லி வாவா எண்ணுவினம் உதுக்கெல்லாம் லீவுபோட்டால் கட்டுமே..

*குரு* : என்னம்மா நீங்கள்.. நீங்கள் வராட்டில் நானும் போகமாட்டன்... நீங்கள்வராமல் போய் எல்லாருக்கும் முன்னாலை பணிஸ்மென்ற்தர வெக்கித் தலை குனிஞ்சு நிக்கிறதைவிட போகாமலே விடலாம்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***கோம*** : அதுதானே நான் வராட்டிலும் லட்சுமி ஆச்சி தன்னும் வருவா எண்ணிறன் பிறகென்ன?

***குரு*** : பிறின்சிப்பல் அம்மா - அப்பாவைத்தான் கூட்டியரச் சொன்னவர். ஆச்சியை இல்லை.. ஆயாமாரை இல்லை..

***கோம*** : குரு! நீயும் இப்ப தாத்தாவைப்பாத்து சரிக்குச்சரி கதைக்கப் பழகியிட்டாய் என்ன...

***அரு*** : இஞ்சை பார் கோமதி.. உங்கடை தாய் - பிள்ளை புடுங்குப் பாட்டுக்கை ஏன் என்னை வில்லண்டத்துக்கு இழுக்கிறியள்.

***கோம*** : நான் உங்களை வலுவாய் இழுக்கேலை உண்மையைத் தான் சொன்னன்.. நீங்கள் எதுக்கெடுத்தாலும் இந்த வயசுபோன காலத்திலையும் எனக்கு ஒத்தாசையாய் இருப்பமெண்டில்லை.. என்ரை செய்கையளிலை பிழை பிடிச்சு தர்க்கம் புரியிறதுதான் தொழில். அவனும் அப்பிடித்தான். இப்ப நான் எது சொன்னாலும் தானும் அதை எதிர்த்து வாய்காட்டிக் கதைக்க வெளிக் கிட்டிட்டான்.. அதைத்தான் சொன்னன்.

***அரு*** : அவன் தேவையில்லாமல் கதைக்கேலை.. பிறின்சிப்பல் அம்மா - அப்பாவைத்தான் கூட்டியரச் சொன்னவர். ஆச்சியை இல்லை. எண்டு உள்ளதைத்தானே சொன்னவன்.

***கோம*** : என்னாலை போகேலாட்டில் நான் என்ன செய்யிறது. நீங்கள்தான் படுத்த படுக்கையே உங்களாலும் ஏலாது. அதுதான் ஆச்சியை அனுப்புறன் எண்டன்.. அதுக்குப் போய் ஆளாளாய் எனக்கு நியாயம் கற்பிக்க வெளிக்கிட்டால்.

***அரு*** : பிள்ளையின்ரை படிப்புச்சம்பந்தமாய் கதைக்க தாய் தகப்பனை வரச் சொல்ல கிழவியை பள்ளிக்குடத்துக்கு அனுப்புறதெண்டால் அது எவளவுதூரம் நியாயமெண்டு உனக்கு நான் சொல்லித் தெரியவேண்டு மெண்டில்லை..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***கோம*** : என்ரை பிள்ளையின்ரை படிப்பு அலுவல் எனக்குத் தெரியும். அது பள்ளிக்குடத்திலை தான் சொல்லித் தரவேணுமெண்டில்லை.. ஏதோ வரச்சொன்னதுக்காக ஒரு ஆளை அனுப்பினால் சரிதானே..

***குரு*** : அம்மா தாத்தாவை ஏசவேண்டாம்.. நீங்கள் வரமாட்டியள் எண்டு எனக்கு வடிவாய்த் தெரியும். அதாலைதானே நீங்கள் பாப்பம் எண்டு சொல்லேக்கை கட்டாயம் வருவியளோ என்டு கேட்டனான். உங்களாலை ஏலாட்டில் சொல்லுங்கோ.. ஆச்சி வரட்டும். பரவாயில்லை ..நீங்கள் உங்கடை அலுவலைப் பாருங்கோ..

***அரு*** : பிள்ளைக்குப் புரியிறது.. பெத்த உனக்குப் புரியேலை..

***குரு*** : எல்லாருக்கும் பேரன்றஸ் வர எனக்கு மட்டும் ஒரு நாளும் ஒருத்தரும் வாறேல்லை.. அப்பா இருந்திருந்தால் வந்திருப்பர். அம்மாக்கு ஒரு நாளும் என்ரை அலுவல் பாக்க நேரம் கிடையாது. (அழுது) எந்தவொரு பிள்ளைக்கும் என்னை மாதிரி நிலைமை வரக்குடாது. அப்பிடி வந்தால் பள்ளிக்கூடம் போறதையே நிப்பாட்டிப்போடவேணும்.

***அரு*** : நீ அழாதை குரு... இஞ்சை வா தாத்தாட்டை... வா.. வா.. சீச்சீ.... இதுக்கெல்லாம் போய் அழுதுகொண்டு.. நாளைக்கு எட்டு மணிக்குத்தானே.. அது அம்மா வருவா.. சரி தம்பி கண்ணைத்துடை...

***குரு*** : அம்மா வருவா (அழுகை குறைதல்) சரிதானே தாத்தா...

***அரு*** : ம்..ம்.. கோமதி தம்பி என்ன நெடுகவே வரச்சொல்லிக் கேக்கிறான்.. ஒரு நாளைக்குத்தானே.. அதுவும் எட்டு மணிக்குத்தானே.. சோட் லீவைப் போட்டிட்டு போவன் மோனை.. என்ன செய்யிறது சிறிசுகளின்ரை மனதை நோகப் பண்ணக்கூடாது கோமதி... ம்.. (பெருமுச்சு விட்டு) நான் ஏலக்கூடியவனாய் இருந்திருந்தால் உன்னைக்கெஞ்சிறனே... ஆண்டவன் தான் என்னைக் கட்டிப்போட்டுட்டானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கோம* : சரி .. சரி.. ஆளுக்காள் பேரனும் பேரனும் மூக்காலை அழுகிறதை நிப்பாட்டுங்கோ. நான் சோட் லீவைப் போட்டிட்டு வாறன்.. எப்பிடியும் பத்து மணிக்கு ஒவீசிலை நிக்கவேணும். திறீவீலரிலை ஒவீசுக்குப் போவம்..

*குரு* : தாங்ஸம்மா.. தாங்ஸ்.. ரொம்ப நன்றியம்மா... (புழுகத்துடன்) தாங்ஸ் தாத்தா... ஆச்சி ஆச்சி... லச்சுமி ஆச்சி.. (உள்ளுக்குப் போய்க் கொண்டு) நாளைக்கு அம்மா என்னோடை ஸ்கூலுக்கு வாறா.. பிறின்சிப்பலிட்டை ஏச்சு வாங்கத் தேவையில்லை.

*அரு* : பாத்தியே கோமதி.. அந்தப்பிஞ்சு எவளவு சந்தோசத்தோடை ஓடுது.. இந்தச் சந்தோசம்தானம்மா நிரந்தரமாய் இருக்கவேணும். பார் சந்தோசத்தை ஆச்சியோடை பகிரப் போகுது. ம்... பிஞ்சு மனம்...

----- காட்சி மாற்றம் -----

## காட்சி - 3

*பாத்திரங்கள்* : *பார்த்திபன், குரு, கோமதி*

*இடம்* : *பாடசாலை*

(மாணவர்கள் ஓடித்திரியும் சத்தம்)

*கோம* : சீ.. உதுக்குத்தான் சொல்லுறது அடுத்தவையின்ரை சொல்லைக் கேக்கக்கூடாதெண்டு.. அப்பாவின்ரை சொல்லைக் கேட்டு வந்தன்.. இப்ப பார்.. எட்டோ எட்டரைக்கோ கூட்டம் எண்டினம். இப்ப ஒன்பதரை ஆகுது.. இன்னும் தொடங்கவேயில்லை.. இனி எப்ப கூட்டம் தொடங்கி முடிஞ்சு பிள்ளையளின்ரை விசயம் கதைக்கிறது. சொன்ன மாதிரியே ஆச்சியை அனுப்பியிருக்கலாம். அப்பா சொல்லுறார் எண்டிட்டு மோட்டு வேலை செய்து போட்டன். ஆ தம்பி வாறான்.. (எரிஞ்சு விழுந்து) என்ன குரு ஒண்டையும் காணேலை.. எத்தினைதரம் சொன்னன். கேட்டியே.. நீ ஒரு பக்கம்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாத்தா ஒரு பக்கம்.. ரெண்டு பேரும் விட்டியளே.. இப்ப பார் மீற்றிங்குமில்லை ..ஒவீசுமில்லை..

***குரு*** : அதம்மா ஏதோ ஒவீசிலை ஆரோ வந்தவையாம்.. அதுதான் லேற்றாம். இப்ப வந்திடுவாராம்.(திறனற்ற நேர முகாமைத்துவம்)

***கோம*** : இப்ப தெரியுதே நான் ஏன் மாட்டன் எண்டு சொல்லுறனான் எண்டு. ஆச்சியோடை வந்திருக்கலாம்..

***குரு*** : அம்மா

***கோம*** : கிழடுகட்டையளுக்கு இதுகள் எங்கை புரியப்போகுது.. அனுபவிக்கிறது நானெல்லோ.. அரைவாசி பேரன்ஸ் போட்டுதுகள். நானும் போயிருக்கலாம் .. எல்லாம் உன்னாலை

***குரு*** : (ரகசியமாய்) அம்மா .. அதிபர் வாறார்..

***கோம*** : எட்டரைக்கெண்டார்.. பத்துமணியாகுது.. ஒண்டரை மணித்தியாலம் வீண்.. புவர் ரைம் மனேஜ்மென்ற். (தாக்குதலில்லாத நேர முகமைத்துவம்) Poor time management இப்பிடியானவை எப்பிடித்தான் பள்ளிக்குடம் நடத்தப்போகினம் பிள்ளையளைத் திருத்தப்போகினம்.

***குரு*** : அம்மா.. மெல்லமாய்.. மெதுவாய்ச் சொல்லுங்கோ... கேட்டுதெண்டால் பிறகு அதிபர் வைரவராட்டம் குதிப்பார். பிளீஸ்ம்மா..

***கோம*** : சரி.. சரி.. வாயைப் பொத்திக்கொண்டு வா..

***பார்த்*** : எங்கை... இண்டைக்கும் பாருங்கோ... நாப்பது பிள்ளையள் படிக்கிற வகுப்பிலை எத்தினை பெற்றார் வந்திருக்கினம் எண்டு... இதுதான் பெற்றார் பிள்ளையளின்ரை புறோக்கிறஸை அறியிறதிலை இருக்கிற அக்கறை.. இப்பிடியெண்டால் எங்கடை ரீச்சர்ஸ் எவளவு கஸ்டப்பட்டாலும் எங்கை நல்ல றிசல்ற் எடுக்கிறது.

***கோம*** : ஏன் சேர் வந்ததும் வராததுமாய் பேரன்சிலையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையளிலையும் குறை சொல்லுறியள்.. பேரன்சுக்கு பிள்ளையளிலை அக்கறை இல்லாமலில்லை.. நோட்டீசிலை இருந்த மாதிரி எட்டரைக்கு வந்திருந்தியளெண்டால் தெரிஞ்சிருக்கும் எத்தினை பேரன்ஸ் வந்தவை எண்டு. லேற்றாகுதெண்டிட்டு ஒவ்வொருதராய் போட்டினம்.

***பார்த்*** : எங்களுக்கு எத்தனை வேலை சோலியள் எண்டு தெரியுமே.. இங்கை வந்தால் உங்கடை மீற்றிங் மட்டுமே.. ஒரு கொஞ்சம் லேற்றானாய்ப் போலை விட்டிட்டு ஓடிப்போறதே... இவளவுதான் பிள்ளையளிலை இருக்கிற அக்கறை..

***கோம*** : பிள்ளையளிலை பேரன்சுக்கு அக்கறையில்லை எண்டு பிறகும் பிறகும் ஏன் சேர் சொல்லுறியள். இது நீங்கள் ஒழுங்கு பண்ணின மீற்றிங். நீங்கள் எழுதிக்குடுத்த நேரத்துக்கு நாங்கள் வந்தம். இஞ்சை வந்தா ஒரு இழவும் இல்லை. அற்லீஸ்ற் எப்ப தொடங்கும் எண்டு சரியான நேரத்தைத் தன்னும் சொல்லி விட்டிருந்தால் பரவாயில்லை. எத்தினை பேர் எவளவு நேரம் நிண்டு தூங்கிப்போட்டு போனதெண்டது தெரியுமே சேர்.

***பார்த்*** : அப்ப எங்களிலைதான் பிழை எண்டு சொல்ல வாறியள் போலை..

***கோம*** : அப்பிடியில்லை சேர் பேரன்சிலை பிழை இல்லை எண்டு தான் சொல்ல வாறன்.

***பார்த்*** : உங்கடை பிள்ளையளுக்காக ஒரு கொஞ்ச நேரத்தை ஒதுக்க முடியாமல் .. பிறகென்ன பேரன்ஸ்... ஏதோ ரீச்சேரஸ்தான் வேலை வெட்டி இல்லாமல் எல்லாத்தையும் சுமக்க வேணுமெண்ணிறியள் போலை..

***கோம*** : இல்லை சேர்.. நீங்கள் தவறாய்ப் புரிஞ்சு கொண்டியள்.. ஏதோ பேரன்ற்ஸ்தான் வேலைவெட்டி இல்லாதவை எண்டு நீங்கள் தவறாய்க் கணக்குப் போடுறியள். கல்குலேற் Calculate பண்ணிப் பாருங்கோ.போட்டி இன்ரு வண் அன்ட் ஏ காவ்.. சிக்ஸ்ரி அவர்ஸ் வேஸ்ட்.. கான்யூ இமாஜின் சேர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Forty into one and a half .. sixty hours waste can you imagine Sir. (40 தர ஒண்டரை அறுபது மணித் தியாளம் வீண்)

*பார்த்* : இப்பிடிக் கல்குலேற் பண்ணுறதெண்டால் நாங்கள் பள்ளிக்கூடம் நடாத்தேலாது.

*கோம* : மன்னிச்சுக் கொள்ளுங்கோ சேர். அதே மாதிரிதான். இப்பிடி நீங்கள் கல்குலேற் பண்ணத் தவறினால் நீங்கள் மீற்றிங்குகளை நடத்த பேரன்ற்ஸ் வராமல் விடுறதையும் வந்து திரும்பிப் போறதையும் தவிர்க்க ஏலாதுசேர்

*குரு* : (ரகசியமாய்) அம்மா கனக்க ஆகியூ (வாதிட வேண்டாம்) argue பண்ணாதேங்கோ அம்மா.. பிறகு அறுவை எனக்குத் தானம்மா.. பிளீஸம்மா Please.

*கோம* : சரி.. சரி.. மனேசில்லாத பிறின்சிப்பல். லேற்றாய் வந்ததுக்கு ஒரு எக்ஸ்கியூஸ் கேப்பமெண்டில்லை.. பேரண்சிலை பிழைபிடிக்கிறார். சொறிடா குரு.. நானும் ஆத்திரத்திலை பிறின்சிப்பலோடை ஆகியூ argue (வாதிட்டிட்டன்) பண்ணியிட்டன்.

*குரு* : அம்மா.

*கோம* : சீ குளிக்கவந்து சேறு பூசின மாதிரி.. இதிலும் பாக்க வராமலே விட்டிருக்கலாம். இண்டைக்கு ஒவீசிலையும் என்ன பாடோ.. ஏதோ கதைக்கிறதைக் கதைச்சுப்போட்டு திறீவீலரிலை போவம்.. இல்லாட்டில் சோட்லீவிலையும் போகேலாது போகிடும். எல்லாம் தாத்தாவாலை வந்தது. ஆச்சி வந்திருந்தால் ஒருசோலியும் வந்திராது.

*குரு* : அது பரவாயில்லை நீங்கள் ஸ்கூலுக்கு வந்ததே போதுமம்மா.. தற் இஸ் கிறேற்; That is great.. வாங்கோ அதிபரோடை போய்க் கதைப்பம்..

*கோம* : சரி வா... ஆச்சியைக்கூட்டிக்கொண்டு போ எண்டன் .. கேட்டியே.. இப்ப.. ஒண்டுக்கு மேலை ஒண்டு.. பிரச்சனையள்..சீ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*குரு* : அம்மா இதுகளைப் பெரிசாய் எடுங்காதேங்கோ அம்மா.. நீங்கள் என்ரை அம்மா எண்டு வந்ததே சந்தோசம். அம்மா இல்லாமல் எந்த நாளும் என்னைப்பாக்கிற ஆச்சியோடைதான் வாறது எண்டவைக்கு இண்டைக்கு நல்ல பதிலடி அம்மா..

*கோம* : நான் எனக்கு ஒவீசுக்கு லேற்றாகுமெண்டு பதை பதைக்கிறன். நீ என்னண்டா மற்றவைக்கு பதிலடி குடுக்கிறனெண்டு துள்ளியடிக்கிறாய்

*குரு* : குட் மோணிங் சேர் Good Morning Sir .. சேர் இவதான் என்ர அம்மா...

*பார்த்* : குட்மோணிங் .. Good Morning குட்மோணிங் Good Morning இருங்கோ. இண்டைக்குத்தான் முதல் முதலிலை மகன்ரை புறோக்றஸ் Progress தொடர்பாய்க் கதைக்க நீங்கள் வந்திருக்கிறியள். வந்த நாளாய் அதுவும் லேற்றாய்ப் போச்சுது. அதுமட்டுமில்லை சின்ன அகியுமென்ற் argument (வாதாடல்) வேறை....சொறி மடம்.. Sorry Madam.

*கோம* : Thats O.K. Sir தற்ஸ் ஒகே சேர்

*பார்த்* : I highly appreciate your comments. Healthy comments. ஐ ஹைலி அப்பிறசியெற் யுவர் கொமன்ற்ஸ்.. ஹெல்தி கொமன்ற்ஸ் (நான் உங்கடை ஆரோக்கியமான கருத்துகளை வரவேற்கிறேன்)

*குரு* : பாத்தியளே சேர்.. நான் உங்களுக்குச் சொன்னன்.. ஆச்சிதான் என்ரை எல்லா அலுவலும் பாத்தாலும் முக்கியமெண்டால் அம்மா வருவாவெண்டு. வந்திட்டா

*பார்த்* : ஓம் மிஸஸ் கோமதி... குரு கெட்டிக்காரன். ஒழுங்கான ஒழுக்கமான.. உண்மையிலேயே ஒரு முன்மாதிரியான மாணவன். ஆனால் இங்கை எல்லாரும் நீங்கள் வாறதில்லை வேலைக்காற ஆச்சிதான் எல்லாம் எண்டு சொல்லச் சொல்ல.. தனக்குள்ளையே ஒரு தாழ்வு மனப் பான்மை..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***கோம*** : சேர்.. அது வந்து.. வீட்டிலையும் வேலை... அப்பாவும் பெட்டிலைதான். எழும்பி நடக்க மாட்டார்.. ஒவீஸ் வேறை.. அதாலைதான் சேர்.

***பார்த்*** : எனக்குப் புரியுது... இதுகளைக் கொஞ்சம் கதைக்க வேணுமெண்டுதான் வரச்சொன்னனான்

***கோம*** : சொல்லுங்கோ சேர்.

***பார்த்*** : குரு.. இந்தா இந்த றெஜிஸ்ரறை கிளாஸ் ரீச்சரிட்டைக் குடுத்திட்டு வா பாப்பம்.

***குரு*** : சரி சேர்.

***பார்த்*** : மிஸஸ் கோமதி... குரு இல்லாததாலை சொல்லுறன். குற்றம் சாட்டுறன் குறை சொல்லுறன் எண்டு தப்பாய் எடுக்காதையுங்கோ... நான் அப்பப்பவும் ஒரு கொஞ்சம் முந்தியும் இதை அவதானிச்சதாலைதான் கதைக்கிறன்.

***கோம*** : சொல்லுங்கோ சேர்.

***பார்த்*** : நானும் எங்கடை ரீச்சேசும் அவதானிச்சதிலையும் குருவோடை கதைச்சதிலையும் எல்லாரும் ஒரு விசயத்தை அவதானிச்சம்...

***கோம*** : என்னத்தைச் சொல்லவாறியள் சேர்.

***பார்த்*** : குருவுக்கு உங்கடை அரவணைப்பு தேவைப்படுகுது. உங்களிட்டை இருந்து நிறைய எதிர்பார்க்கிறான். நீங்கள் உங்கடை வீட்டு வேலைக்கு நிக்கிற ஆச்சியிட்டை தன்னை விட்டிட்டு விலகிப் போறதாய் பீல் Feel (உணருறான்) பண்ணுறான்.

***கோம*** : அது வந்து சேர்

***பார்த*** : உங்கடை நிலைமை புரியுது.. நீங்களும் படிச்ச பண்பான குடும்பத்திலை பிறந்து வளர்ந்து உயர்ந்த உத்தியோகத்திலை இருக்கிறனீங்கள். நாங்கள் சொல்லித்தான் தெரிய வேணுமெண்டில்லை.. இண்டைக்கு நீங்கள் தன்னோடை ஸ்கூலுக்கு வந்ததுக்கே எவளவு சந்தோசப் பட்டான் எண்டதைக் கண்ணாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்தியள்தானே... பிஞ்சு மனம். காயம் படாமல் பெற்றார் நாங்கள் தான் பாதுகாக்க வேணும்.. ஏதோ எங்கடை மனதிலை தோன்றினதைச் சொன்னன்

***கோம*** : விளங்குது சேர். இயண்டளவு நானும் அனுசரிச்சுத்தான் போறனான் சேர்.. ஏதோ இன்னும் முயற்சி செய்து பாக்கிறன் சேர்.. ஐ வில் ட்றை மை பெஸ்ற் I will try my best சேர்

----- காட்சி மாற்றம் -----

## காட்சி - 4

***பாத்திரங்கள்*** *: அருணா, லட்சுமி, கோமதி*

***இடம்*** *: வீடு*

***கோம*** : பாத்தியளே உங்கடை பேரன் செய்த வேலையை...

***அரு*** : ஏன் என்ன நடந்தது.. குரு எங்கை ..ஆருக்கு ..என்ன.. செய்தவன்.

***கோம*** : எங்கை .. ஸ்கூலிலைதான்

***லட்சு*** : எங்கை ஸ்கூலிலையோ.. தம்பி அங்கை ஒரு குழப்படியும் இல்லை அம்மா.. நேற்றும் ஒருத்தரும் ஒண்டும் சொல்லேலை அம்மா..

***கோம*** : நித்தம் போய்வாறாய் உனக்குக் கொம்பிளயின் Complaint வரேலை ஆனால் ஒருநாள் போன எனக்குச் கட்டியிருந்த சீலை கழண்டு விழுந்த மாதிரி இருந்தது.

***லட்*** : என்னம்மா என்ன நடந்தது?

***அரு*** : ஆர் குருவோ.. அப்பிடி என்ன செய்தவன் குரு..?

***கோம*** : நான் போகமாட்டன் எண்டு சொன்னன். நீங்கள் சொன்னதாலைதான் போனன். எனக்குத் தெரியும் இப்பிடி ஏதேனும் நடக்குமெண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*லட்* : ஏனம்மா தம்பி என்ன செய்தது.

***கோம*** : நான் தன்னைக் கவனிக்கிறேலையாம்.. பள்ளிக்குடம் முழுதும் பறைதட்டி இருக்கிறான். பரிசுகேடு.. பிறின்சிப்பல் சொன்னா ரெண்டாப் பாருங்கோவன்.

*லட்* : என்ன நீங்கள் கவனிக்கிறதில்லை எண்டோ

***கோம*** : ஓம்... நான் நாயாய்ப் படுறபாட்டை ஆருக்குத் தெரியும். என்னைப்பற்றி பிறின்சிப்பல் ரீச்சேஸிட்டை சொல்லியிருக்கிறான் எண்டாப் பாருங்கோவன். விடிய எட்டுமணியிலை இருந்து நிண்டு தூங்கினதுக்கு கிடைச்சது உதுதான்..

*அரு* : சரி கோமதி. அதை விடு.. அதை ஏன் பெரிசுபடுத்திறாய்.. அவன் ஆருக்கோ சொன்னவனே... தன்ரை ரீச்சேசுக்குத்தானே.. பாவம் இஞ்சை கிடைக்காத அரவணைப்பை அங்கை கண்டிருக்கிறான். அவயிட்டை மனதைத் திறந்து சொல்லி யிருக்கிறான்.

***கோம*** : அப்ப சரியெண்டு நீங்களும் சொல்லிறியளோ..

*அரு* : பிஞ்சு மனசு சூதுவாது தெரியாதது.. தன்ரை ஏக்கத்தையும் எதிர்பார்ப்பையும் சொல்லியிருக்குது. அதிலை என்ன தவறு கோமதி.. கோபப்படாமல் நாங்கள் தான் அனுசரிச்சுப் போகவேணும்.

***கோம*** : உப்பிடியெண்டால் நான் எல்லாத்தையும் விட்டிட்டு வீட்டோடை இருக்க வேண்டியதுதான்.

*லட்* : ஏதோ நான் ஏலக்கூடியளவுக்குத் தம்பியைப் பாக்கிறன் தானே அம்மா.

***கோம*** : அவருக்கு அது பிடிக்கேலையாம்... காணாதாம்.

*அரு* : எதுக்கும் தாயைப் போலை வருமே மோனை.

***கோம*** : அப்ப என்ன.. லச்சுமியை விட்டிட்டு என்னை எல்லாத்தையும் செய்யச்சொல்லி நீங்களும் சொல்லுறியளோ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அரு* : கோமதி... ஏதோ எனக்குத் தெரிஞ்சதை சொல்லுறன்.. ம்.. (பெருமூச்சு விட்டு) எழும்பித்திரிஞ்சு ஊசாடக்கூடிய ஆளெண்டால் உன்னட்டைச் சொல்ல மாட்டன்.. நானும் கொஞ்சம் அவதானிச்சன்.. அவன் உன்னை நெருங்கி வர.. நீ விலகிப் போறதாய் தெரியுது.

*லட்* : ஓம் அம்மா என்னோடை எப்ப கதைச்சாலும் நான் என்ன செய்தாலும் அம்மா அம்மா எண்ட கதைதான். தம்பி பாவம் அதிலை குறைசொல்லாதேங்கோ

***கோம*** : (கோபத்துடன்) மரத்தாலை விழுந்தவனை மாடேறி மிதிச்சது எண்டது மாதிரி அங்கை ஸ்கூல் கொம்பிளெயின் Complaint முடிஞ்சு இப்ப இஞ்சை.. ஆளுக்காள் என்னைப் பிழை பிடியுங்கோ... உரலுக்கு ஒருபக்கம் இடி மத்தளத்துக்கு ரெண்டுபக்கமும் இடி எண்டது போலை.. கிடக்கு எல்லாம் நான் செய்த கறுமம்.

----- காட்சி மாற்றம் -----

## காட்சி - 5

*பாத்திரங்கள் : லட்சுமி, அருணாசலம்*

*இடம் : வீடு*

*அரு* : லட்சுமி.. குரு வந்திட்டானே ஸ்கூலாலை..

*லட்* : ஓம் ஐயா.. இப்பதான் வந்தவர். கைகால் கழுவுறார்

*அரு* : இண்டைக்கும் அழுகைதானோ..

*லட்* : ஓம் ஐயா.. தம்பிக்கு அம்மாவோடை கதைக்கவேணும். விளையாட வேணும். ஒண்டாயிருந்து அம்மாவின்ரை கையாலை வாங்கிச் சாப்பிட வேணும் எண்டு ஆசை. ஆனால் அம்மாவோ தான் எல்லா வசதியும் செய்து குடுத்திருக்கிறன்தானே.. தம்பியின்ரை அலுவல் பாக்க நான் இருக்கிறன்தானே எண்ட பிடிவாதம். தம்பி போகேக்கையும் வரேக்கையும் உதைப்பற்றித்தான் ஒரே கதை ஐயா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அரு* : எனக்கும் விளங்குது லட்சுமி.. நானே கோமதிக்கு பாரமாய் இருக்கேக்கை என்னெண்டு சொல்லுறதெண்டு தான் தெரியேலை... குருவுக்கும் அது சரியாய் மனதளவிலை பாதிச்சிருக்குது. அதுதான் பள்ளிக்குடத்திலையும் சொல்லியிருக்கிறான்.

*லட்* : மற்றப்பிள்ளையள் தாயோடை ஒண்டாயப் புழங்கிறதைப் பற்றியும் தாய்மாரோடை விடுகிற பகிடியள் பற்றியும்தான் நெடுகக்கதை. தன்ரை சிநேகிதங்களை ஒவ்வொருத்தராய்க் காட்டி அவையவையின்ரை கதையள்தான் நெடுக. இதைப்பற்றி கோமதி அம்மாட்டைச் சாடைமாடையாய்ச் சொன்னால் உன்னாலை தம்பியின்ரை அலுவல் பாக்க ஏலாதோ எண்டு என்னிலை சீறி விழுறா.. அவ சொல்லுறதைக் கேக்கவும் நியாயமாய்த்தான் தெரியுது

*அரு* : அத சரி லட்சுமி. ஆனால் குருவின்ரை நிலைமையையும் பாக்கத்தானே வேணும். குறை நினைக்காதை லட்சுமி.

*லட்* : சொல்லுங்கோ ஐயா.

*அரு* : பெற்றார் எண்டாப்போலை உழைச்சு சம்பாரிச்சு வேலைக்காரரை வைச்சு பிள்ளையளுக்கு வசதிசெய்து குடுத்தாப்போலை எல்லாம் சரி .. தங்கடை கடமை முடிஞ்சுது எண்டு நினைச்சால் ..வாழேலாது. பிள்ளையளின்ரை எதிர்பார்ப்பையும் புரியிற மனப்பக்குவம் இருக்கவேணும். அதிலையும் சின்னப்பிள்ளையளைக் கவனமாய்க் கையாளவேண்டும்

*லட்* : அதுதான் ஐயா.. உந்தப்பெரிய ஒவீசிலை எத்தினை பேரைக் கட்டியாளுற அம்மா தம்பியின்ரை விசயத்திலை பிழைவிடுறா எண்டுதான் நான் நினைக்கிறன். கொஞ்சம் சமாளிச்சுப்போனால் அம்மாக்கும் நல்லது தம்பியும் சந்தோசமாயிருக்கும் எண்டு நினைக்கிறன் ஐயா

*அரு* : (பெருமூச்சு) உனக்குப் புரியுது எனக்குத் தெரியுது. ஆனால் புரியிறவைக்குப் புரியவேணுமே..

----- **காட்சி மாற்றம்** -----

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - 6

*பாத்திரங்கள் : அருணா, குரு, கோமதி*
*இடம் : பாடசாலை*

*பார்* : என்ன குரு.. கண்டும் தெரியாத மாதிரிப் போறாய்.. என்ன பாடநேரத்திலை

*குரு* : அது சேர் ரீச்சர் றக்கோட்புக் எடுத்தரச் சொன்னவா அதுதான் ஸ்ராவ் றூமுக்குப் (Staff Room) போறன்.

*பார்* : எப்பிடி தாத்தா சுகமாயிருக்கிறாரே..?

*குரு* : ஓம் சேர்.. படுக்கையிலைதான் .. ஆனால் தன்ரை அலுவல் எல்லாம் செய்வார். அவர் இருக்கிறதுதான் கொஞ்சமெண்டாலும் சந்தோசம் சேர்.

*பார்* : அப்ப .. இப்பவும் தாத்தாதான் ஹோம் வேர்க் சொல்லித்தாறவரோ இல்லை அம்மாவோ..?

*குரு* : தாத்தாதான் சேர் அம்மாவுக்கு அதுக்கெல்லாம் நேரமில்லை.. நான் கேட்டாலும் தாத்தா சும்மாதானே கிடக்கிறவர் கேள் எண்டிட்டுப் போயிடுவா..

*பார்* : அப்ப ஆச்சிதானே இப்பவும் கூட்டிக்கொண்டு வாறபோறதோ..

*குரு* : ஓம் சேர்.. ஆச்சிதான் எல்லாம். அம்மாவுக்கு என்னைக் கவனிக்க எங்கை சேர் நேரம். அவவுக்கு தன்ரை அலுவல் பாக்கவே நேரம் இல்லை.. அவ ஒரு மெசின் மாதிரி சேர்

*பார்* : ஓம் குரு அம்மாவும் பாவம்தானே.. அவவும் வேலைக்குப் போய் தன்ரை அலுவலுகளை ஒழுங்காய் செய்தால்தானே... ஒவீசிலையும் பிரச்சனை இல்லாமல் வேலைசெய்தால் தானே... உங்கடை செலவுகளுக்குக் கஸ்டப்படத் தேவையில்லைதானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*குரு* : ஓம் சேர்.

(மணி அடிக்கும் சத்தம்)

*பார்* : சரி.. சரி.. மணியும் அடிக்குது.. உதுகளை மனதிலை வைச்சிருக்காமல் கவனமாய் படிக்க வேணும். அப்பதான் வளந்து பெரிய உத்தியோகம் பாத்து அம்மாவையும் தாத்தாவையும் பாக்கலாம்

*குரு* : சரி சேர்...

----- காட்சி மாற்றம் -----

## காட்சி - 7

*பாத்திரங்கள் : அருணா, குரு, கோமதி*

*இடம் : பாடசாலை*

*குரு* : (குழைந்து) அம்மா!... நான் ஒண்டு கேப்பன் கோபிப்பியளே..?

*கோம* : என்ன.. என்னெண்டு சொல்லு எனக்கு நிறைய வேலை கிடக்குது...

*குரு* : அது வந்து.. வந்து...

*கோம* : (எரிச்சலுடன்) குரு.. இஞ்சை பார். விளையாடுறதெண்டால் ஆச்சியோடையோ தாத்தாவோடையோ போய் விளையாடு.. என்னை மினைக்கெடுத்தாதை.. கிடக்கிற சோலியிலை என்ரை தலையே வெடிச்சிடும் போலை கிடக்குது.. அது போதாதெண்டு நீ வேறை...

*குரு* : அப்ப ..இப்ப வேண்டாம் ..பிறகு கேக்கிறன்.

*அரு* : என்ன குரு.. ஏதோ கேக்கிறது எண்டு முடிவெடுத்திட்டாய்.. பிறகென்ன.. கேளன் ..இப்பவோ பிறகோ ..கேக்கப் போறது நீதானே..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***கோம*** : என்ன தாத்தாவும் பேரனும் எனக்கு நாடகம் காட்டுறியளோ..? அப்பா என்ன குருவை ஏவி விட்டிட்டு கூத்துப் பாக்கிறியளோ..?

***அரு*** : உண்ணாணைக் கோமதி எனக்கொண்டும் தெரியாது. சிவசத்தியமாய் எனக்கொண்டும் தெரியாது கோமதி.

***குரு*** : அம்மா இது தாத்தாக்கும் தெரியாது..

***கோம*** : அப்ப ஆர் லச்சுமி ஏவி விட்டதோ..

***குரு*** : ஏனம்மா நீங்கள் ஆரையேன் குற்றம் சாட்டுறியள்..

***கோம*** : சரி.. தாத்தாவும் சொல்லேலை ஆச்சியும் சொல்லேலை. நான் நம்புறன்.. என்னெண்டு கேள் குரு.. என்னண்டு தான் சொல்லன்..

***குரு*** : அது வந்து...

***கோம*** : வந்தும் போயும்.. என்னெண்டு சொன்னால் எல்லோ வருமோ இல்லையோ எண்டு எனக்குத் தெரியும்.

***அரு*** : தம்பி என்னடா.. கேட்டால் எல்லோ என்னண்டு தெரியும். எல்லாத்தையும் விபரமாய் சொல்லு.. ஏன் பள்ளிக்குடத்திலை எதேன் நடந்ததே..?

***குரு*** : பள்ளிக்கூடத்திலை இல்லைத் தாத்தா.

***அரு*** : அப்ப..

***குரு*** : இது ஸ்கூல் விசயமில்லை. அம்மாட்டைத்தான் கேக்கவேணும்.

***அரு*** : அம்மாதான் நிக்கிறாவாச்சே பிறகென்ன கேளன்.

***கோம*** : சும்மா விடுகதை விடுறதை விட்டிட்டு .. மற்றவைக்கு விசர் வரப் பண்ணாமல். என்னண்டு சொல்லன் குரு..?

***குரு*** : அம்மா உங்களிட்டை நிறைய பவுண் நகையள் இருக்குது தானே.. நீங்கள் போடுறது .. பாங்க் லொக்கரிலை .. அப்பிடி இப்பிடி எண்டு நிறையக் கிடக்குதுதானே..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கோம* : ஓ.. இப்ப அதுக்கென்ன?

*அரு* : என்னடா குரு ..நான் என்னவோ எதுவோ எண்டு நினைக்க நீ கொம்மான்ரை நகையளைக் கேக்கிறாய்..

*குரு* : தாத்தா!

*அரு* : ஏனடா ஏன்.. ஆர் என்ன சொல்லிவிட்டது.. உதுக்குத் தான் சொல்லிறது கூடாத சிநேகிதங்கள் கூடாதெண்டு.. இப்ப ஏன் அதுகள் உனக்கு?

*கோம* : பாத்தியளே இப்ப புரியுதே பேரனைப் பற்றி.. நான் கட்டுமட்டாய் வைச்சிருக்க என்னைத் திருத்தினியள். இப்ப ஊசியிலை தொடங்கி உலக்கையிலை முடிஞ்ச மாதிரி அம்மான்ரை நகையிலை வந்து நிக்குது.. பாத்தியளே..?

*குரு* : தாத்தா.. அம்மா.. இப்ப ரெண்டு பேரும் ஏன் எங்கெங்கையோ போறியள்.. நான் இப்ப என்ன எனக்குத் தரச் சொல்லியே கேக்கிறன்.. இருக்குது எண்டுதானே கேட்டனான்.. அதுக்குப் போய்..

*கோம* : சரி இருக்குதுதானே ..அதை நான் இல்லை எண்டு சொல்லேலையே..

*குரு* : அதை ஆருக்குத்தன்னும் பாருங்கோ... பராமரியுங்கோ.. கவனியுங்கோ எண்டு குடுப்பியளோ..?

*கோம* : இது நல்ல கதை... லட்சக்கணக்கான பெறுமதியான நகையளை ஆரிட்டையேன் குடுப்பமெண்டோ.. உனக்கென்ன பைத்தியமே.. அதுகின்ரை அருமை ..அதைத் தேடப்பட்டபாடு உனக்குத் தெரியுமே..

*குரு* : அம்மா.. ஓம் பைத்தியம்தான் அம்மா.. ..எனக்குப் பைத்தியமெண்டால் பரவாயில்லை .. அப்ப லட்சக் கணக்கிலை பெறுமதி எண்டதாலையும் அதைத் தேடக் கஸ்டப்பட்டனீங்கள் எண்டதாலையும் மற்றவை யிட்டைக் குடுக்க மாட்டியள். அப்பிடித்தானே..?

*அரு* : குரு.. என்னதம்பி இண்டைக்கு உனக்கு..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*குரு* : கொஞ்சம் பொறுங்கோ தாத்தா.. அதுதானே நான் ஸ்கூல் பிரச்சனை இல்லை எண்டனே.. கொஞ்சம் பொறுங்கோ... என்ன அம்மா நகையளை மற்றவையிட்டைக் குடுக்கமாட்டியள் அப்பிடித்தானே..

***கோம*** : நீயே கேள்வியையும் கேட்டு நீயே பதிலையும் சொல்லிப் போட்டு.. பிறகும் என்ரை வாயாலைதான் சொல்ல வேணுமெண்டால் ..சொல்லுறன் வடிவாய்க் கேள் உந்தப் பெறுமதியான என்ரை நகையளை மற்றவயிட்டை மட்டுமில்லை .. ஏன் கடவுளிட்டையே... உந்தக் கடவுளிட்டையே குடுக்க மாட்டன். போதுமே.. சொல்லி விட்டவயிட்டைப் போய்ச் சொல்லு.. போ.. (கோபத்துடன்) அம்மா தரமாட்டாவாம் எண்டு சொல்லிவிட்டவயிட்டைப் போய் இப்பவே சொல்லு.. போ.. பிறகென்ன.. பிறகுமேன் நிக்கிறாய் போய்ச் சொல்லு.. இன்னுமேதேன் கிடக்கே... கிடந்தால் கேள்.

*அரு* : கோமதி. கோவிக்காதை.. இண்டைக்கு என்ன விசேசமெண்டுதான் தெரியேலை... நடவடிக்கை ஒருமாதிரித்தான் கிடக்குது.. எதுக்கும் அவசரப்படாதை

***கோம*** : அதுதானே தரேலாதெண்டு சொல்லிப்போட்டனே... ...இன்னுமேதேன் கிடந்தாக் கேக்கச் சொல்லிறனே..

*குரு* : ஓம் அம்மா.. அப்ப இந்த வீடு வாசல் வளவுகளைத் தன்னும் ஆருக்கும் பாக்கச் சொல்லிக்குடுப்பியளே...

***கோம*** : எடேய்... அதுகள் முதுசமில்லையடா.. வரேக்கை கொண்டு வந்ததும் இல்லை. அது ஒவ்வொண்டும் .. கொப்பரும் இல்லாத நேரத்திலை. இரத்தத்தை இரத்தமாயும் ..வேர்வையாயும் சிந்தி உழைச்சதடா..

*குரு* : அம்மா.

***கோம*** : விடச் சொன்னால் விடுவனே.. நகையையே குடுக்கமாட்டன் எண்ணுறன் இதுகளைக் குடுப்பனே...

*குரு* : ஆச்சியிட்டைத் தன்னும் குடுப்பியளே..?

***கோம*** : ஆச்சியிட்டையோ... அவவுக்கும் இதுக்கும் என்னடா குரு சம்பந்தம்.. ஆச்சியுக்கென்ன.. உன்னைப் பாக்கிறது தான் அவவின்ரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பு... அதைச் சரியாய்ச் செய்தால் சரி.. உன்ரை அலுவலுகளை ஒழுங்காய்ச் செய்யவேணும். அவவுக்கென்ன செய்யிற வேலைக்கு மூண்டு நேரச் சாப்பாடும் மாசம் முடிய சம்பளமும் குடுக்கிறன். பிறகென்ன..? இதுகளும் குடுக்கிற தெண்டா..இது நல்ல கதை..?

*அரு* : எவன்தான் என்ரை பிள்ளையை இண்டைக்கு ஏவி விட்டானோ.... ஏன் இந்தப் பிள்ளை இண்டைக்கு இப்பிடிக் கேக்குதோ.. கடவுளே...

*கோம* : வேறைஆர். கேக்கிறதைப் பாக்கத் தெரியேலையே.. ஆராயிருக்குமெண்டு.. வேறை ஆர்.. அந்தக் கிழவி தான். லட்சுமிதான்.. அதுதானே ஆச்சியிட்டைக் குடுப்பியளோ எண்டு கேக்கிறான்.

*குரு* : அம்மா பிறகும் பிறகும் சும்மா.. ஆச்சியைக் குறைசொல்ல வேண்டாம். எத்தினை தரம் சொல்லியிருக்கிறன் அவவுக்கு இதுபற்றி எதுவும் தெரியாதெண்டு..

*அரு* : ஒருநாளும் இல்லாதமாதிரி.. இண்டைக்கு இவன்தம்பிக்கு என்ன நடந்தது.. ஆச்சியிட்டைக் குடுப்பியளோ எண்ணிறான் ஆனால் ஆச்சி சொல்லேலை அவவுக்கு ஒண்டும் தெரியாதெண்ணுறான்..

*கோம* : அது ஆச்சியாய் இருந்தாலென்ன ஆண்டவனாய் இருந்தாலென்ன.. நகையளையோ அல்லாட்டில் என்ரை சொத்துகளையோ பொறுப்பாய்க்குடன்.. அவளவு தான்.. ஆச்சிக்கோ அல்லாட்டில் உனக்கோ அதுகளின்ரை பெறுமதி எவளவெண்டு தெரியுமோ சொல்லு பாப்பம்

*குரு* : நகையள் குடுக்க மாட்டியள்.. காணி பூமி சொத்துக் குடுக்க மாட்டியள். ஏனெண்டால் அதுகள் பெறுமதி கூடினதுகள். ஆனால் அதுகள் ஒரு நாளும் அம்மாவோடை தான் இருக்க விருப்பமெண்டு கேட்டதுமில்லை.. விரும்பினதுமில்லை.. ஆனால்..

*அரு* : (இடைமறித்து) ஆனால்,

*குரு* : ஆனால் அம்மாவோடையே இருக்க விரும்புற.. அம்மாவின்ரை நிழலிலையே வாழவிரும்புற... எந்தநேரமும் அம்மாவின்ரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாசத்தையே சுவாசிக்க நினைக்கிற என்னை மட்டும் ஏனம்மா ஆச்சியிட்டைக்குடுத்திட்டு.. உங்கடை பொறுப்பு எல்லாம் முடிஞ்சு தெண்டிட்டு விலகி இருக்கிறியள். .. எடுத்ததுக்கெல்லாம் ஆச்சியே தஞ்சம் எண்டு சொல்லி ஒதுங்கியிருக்கிறது ஏனம்மா... என்ரை பெறுமதி அவ்வளவுதானா அம்மா... இந்த நகை நட்டு வீடு வளவு காணிபூமி எல்லாத்திலையும் பார்க்க என்ரை பெறுமதி குறைஞ்சதாலையா அம்மா.. அப்ப நான் பெறுமதி இல்லாதவனா அம்மா...?

***கோம*** : (ஆச்சரியத்துடன் - தடுமாறி) தம்பீ.. அதடா.. அது வந்து.. குரு.. (அழுதல்) தம்பீ (தொடர்ந்து நாடகம் முடியும் வரை பின்னணியில் அழுதல்வேண்டும்)

***குரு*** : ஓமம்மா... உங்களைப் பொறுத்தவரையில் நான் பெறுமதி இல்லாதவனா அம்மா.. உண்மையைச் சொல்லுங்கோ அம்மா...

***கோம*** : (அழுதுகொண்டு) தம்பி அப்பிடிச் சொல்லாதையடா செல்லம்.. சொல்லாதை..

***குரு*** : தாத்தா .. நீங்களே யோசிச்சுப்பாருங்கோ தாத்தா... சத்தியமாய் தாத்தா இது ஆர் சொல்லியும் நான் கேக்கேலைத் தாத்தா... நீங்களே சொல்லுங்கோ தாத்தா... அடிக்குமேலை அடி அடிச்சால் அம்மியும் நகரும்தானே .. அம்மா ஒவ்வொண்டுக்கும் என்னை ஆச்சியிட்டையே பாரங்குடுத்திட்டு விலகிப்போகேக்கை என்ரை மனச்சாட்சியே என்னைக் கேக்கச் சொல்லுது தாத்தா... அதாலைதான் கேட்டன் தாத்தா.. இது பிழையே தாத்தா..

***அரு*** : (அழுதுகொண்டு) என்ரை செல்லம்.. உன்ரை பிழையில்லையடா... இது .. இது .. எங்கடை பிழையடா எங்கடை பிழை... என்ரை செல்லம், எங்கடை கவலையீனம்தான் பிள்ளையை இப்பிடி நினைக்கத் தூண்டியது.. என்ரை துரை.. எங்கடை பரம்பரையிலை வந்த ஆணிமுத்து... ஆளவந்த செல்லம்... நான் சொல்லுறனடா.. உன்ரை பெறுமதியை கணக்கிடவே முடியாதடா கணக்கிட முடியாது... நீ எங்கடை விலைமதிக்கமுடியாத சொத்து...

--- நிறைவு ---

முற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. அறுவடை

## பாத்திரங்கள்

- 'அண்ணாவியார் " – அருணாசலம் – தகப்பன்
- பாக்கியம் – மனைவி
- சுதன் – மகன்
- சாந்தினி – மருமகள்

### காட்சி - 1

*இடம் : அருணாசலம்; வீடு.*
*பாத்திரங்கள் : அருணாசலம், பாக்கியம்*

*அரு* : (பாடிக்கொண்டு வரல்)

*தன்னன தானனனா தனனன னானன னானனனா*
*னானன னானனனா*

*பத்தினிக் கற்பகமே - எனதரு*
*பாக்கிய லட்சுமியே - எனதரு*
*பாக்கிய லட்சுமியே -*

*அகமது*
*மெத்தப் பொலிவிழந்தே*
*இன்று - நீயும்*
*உற்ற துயரமென்ன...!*

*மெத்தப் பொலிவிழந்தே*
*இன்று - நீயும்*
*உற்ற துயரமென்ன..!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னப்பா பாக்கியம்.. வழமைக்கு மாறாய் இண்டைக்குத் தலையைத் தொங்கப்போட்டுக்கொண்டிருக்கிறாய். ஏன் எஞ்சின் ஏதேன் பிசகு பண்ணுதோ..

*பாக்* : உங்களுக்கு என்ரை தலையிலை இடிவிழுந்தாலும், பிசகு அது இதெண்டு ஒவ்வொண்டுக்கும் ஒவ்வொரு சொட்டை சொல்லி பாட்டையும் இழுத்து என்னை ஏளனம் செய்வியளே தவிர.. ஒரு.. ஒரு நாளாவது... (சிணுங்கிக் கொண்டு) ஒரு ஆறுதல் வார்த்தை எண்டாலும் சொல்லியிருப்பியளே.?... ம்ம்.. எல்லாம் அவரவற்றை கொடுப்பனவு ... படைக்கேக்கை பிரமன் எழுதினதை ஆராலை மாத்தமுடியும்...

*அரு* : ஏனப்பா சும்மா பழஞ்சீலை கிழிஞ்சமாதிரிப் புறுபுறுத்துக் கொண்டிருக்கிறீர்.. என்ன இடி விழுந்ததெண்டு சொல்லுமன்.. நானென்ன சாத்திரியே... என்னண்டாலும் விசயத்தை சொன்னாலெல்லோ புரியும்.

*பாக்* : சொன்னாத்தான் தெரியுமில்லை... அவரவர் பட்டுத் தெளிஞ்சால்தான் தெரியும்.. ஓ..

*அரு* : என்ன பாக்கியம் விடியக் காத்தாலை கடைக்குப் போட்டுவந்து சும்மா குலைச்சுக்கொண்டு நிண்டால் நான் என்னப்பா செய்யுறது.

*பாக்* : (அழுதுகொண்டு) ம்...என்ரை வெப்பியாரம் உங்களுக்கு குலைக்கிறது மாதிரித்தான் இருக்கும்.. என்ரை தலையிலை விழப்போற இடியை நான் ஆரிட்டை சொல்லி அழ.. எல்லாம் என்ரை தலையெழுத்து...

*அரு* : சரி.. சரி... அது தலைஎழுத்தோ கால்எழுத்தோ என்னட்டைச் சொல்லனப்பா... இப்ப என்னத்துக்கு அழுகிறாய்... அழாமல் பதகளிக்காமல் என்ன விசயமெண்டு என்னட்டைச் சொல்லு நான் கேக்கிறன்.

*பாக்* : அதுக்குத்தானே மண்டையிலை வாங்காமல் ஒவ்வொரு சொட்டை சொல்லிக்கொண்டு இருக்கிறியள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அரு* : நான் ஒரு மரமண்டை எண்டது இண்டைக்கு நேற்றே... சொல்லும் பாப்பம்... ஒரு பெடியனைப் பெத்து அவனையும் டாக்குத்தராக்கி.. இப்ப பேரப் பிள்ளையையும் காணப் போறம்...

*பாக்* : இப்ப சொன்னியளே .. அங்கை.. அங்கை தான் பிரச்சனை... பேரப்பிள்ளையைக் காணப் போறம் எண்ட புழுகத்தில நீங்கள் இருங்கோ .. அங்கை அவ உங்கட ஆசை மருமகள் சாந்தினி...

*அரு* : (சிரித்துக்கொண்டு) சாந்தினி ..எனக்கு மருமகள்.. உனக்கு ஆரப்பா... என்ன மகனின்ரை தர்மபத்தினி எண்டு சொல்லப் போறாய்... அப்பிடித்தானே...

*பாக்* : (கோபத்துடன்) உங்களுக்கு எப்பவும் எல்லாத்திலையும் பகிடிதான். நாடேபத்தி எரியேக்கை ஆரோ ஒரு ராசா விசில் வாசிச்சானாம்.. அத மாதிரித்தான் இஞ்சை இருக்கிற இல்லிடமே பறிபோய் நடுத்தெருவிலை நிக்கவேண்டி வருமோ எண்டு நான் பதகளிக்கிறன்.. அவருக்கு இப்ப பகிடிவேண்டிக் கிடக்குது... பகிடி...

*அரு* : (இடைமறித்து) நல்ல விசிலடிச்ச கதையாய்க் கிடக்கு அது விசில் இல்லையப்பா பிடில்... பிடில்.

*பாக்* : இஞ்சை பார் பிறகும்... விசிலும் தவிலும்... இந்த மனிசனுக்கு எப்பதான் நல்லபுத்தி வருமோ..?

*அரு* : அது வாற நேரம் வரும்.. ஏன் பாக்கியம் இல்லிடம் பறிபோறது அது இதெண்டு கதைக்கிறாய்...? இருக்கிறது ஒரே பிள்ளை அவனுக்கு வீட்டை எழுதிக்குடுக்காமல் வேறை ஆருக்கு எழுதிக் குடுக்கிறது. அவன் வேறை .. மருமோள் வேறையே..?

*பாக்* : அதை ஆர் இல்லையெண்டது... இந்த வீட்டை விக்கப்போறனெண்டு ஒரு சொல்லு கேட்டாவோ ..சரி நான்தான் கொடுமைக்காரி.. . என்னைக் கேட்க வேண்டாம்.. கட்டி கிட்டத்தட்ட 30 வருசமாய்க் கட்டிக்காத்து எழுதிக் குடுத்த மனிசனெல்லே .. உங்களைத் தன்னும் கேட்டிருக்கலாமே... நீங்களே சொல்லுங்கோ பாப்பம்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அரு* : அதுகளின்ரை வீடு.. அதுகளுக்கு இடமாற்றம் கிடைக்குது... போகப் போகுதுகள்... வீட்டைஏன் வீணாய் அலைய விடுவான் எண்டு வித்திட்டுப் போய் தங்களுக்கு வசதியான ஒண்டை வாங்கப் போகுதுகள்.. அதுகளின்ரை சொத்தை அதுகள் பாதுகாக்காமல் வேறை ஆர் பாதுகாக்கிறது... அதுமட்டுமே... அதுகளின்ரை வசதியை அதுகள்தானே பாக்கவேணும். நீரே சொல்லும் பாப்பம்.. நீரெண்டால் விடுவீரே... அதிலை என்ன பிழையப்பா கண்டு பிடிச்சனீர்... சும்மா சன்னதம் ஆடுறீர்.. உன்னை ஆரப்பா இண்டைக்கு காலங் காத்தாலையே உசுப்பேத்திவிட்டது..

*பாக்* : என்னை இஞ்சை ஒருத்தரும் சும்மா உசுப்பேத்தி விடேலை... அடுத்தவையிலை ஏன் வீணாய்ப் பழியைப் போடுறியள். நீங்கள் சொன்னமாதிரி தங்கடை சொத்தைப் பாதுகாக்கினம் எண்டு வைப்பம்... இந்தக் கிழடு கட்டையளைப் பற்றி கொஞ்சம் தானும் யோசிக்க வேண்டாமே... பெத்த தாய் தேப்பனை என்ன செய்யிற தெண்டுதன்னும் யோசிச்சானே...

*அரு* : அதுக்கேதும் ஒழுங்கு பண்ணியிருப்பான்தானே...

*பாக்* : நான் அந்த நேரம் சொன்ன மாதிரி சீவியம் காட்டியாவது எழுதியிருந்தால் இப்பிடிச் செய்யக்கனவிலை தன்னும் நினைச்சிருப் பினமே.. எத்தினை தரம் திருப்பித் திருப்பிச் சொன்னன்... கேட்டியளே... உதைத்தான் சொல்லுறது கெடுகுடி சொல் கேளாதெண்டு... இப்ப இந்தப் பெரிய வீட்டை விட்டிட்டு நாங்கள் நடுத்தெருவிலை நாயாய் அலையவேண்டி வரும்போலை இருக்கு..

*அரு* : ஏனப்பா அங்கை போகேக்கை எங்களைக் கூட்டிக் கொண்டு போகாமல் போகப் போகுதுகளே... நீ ஏன் இப்ப எல்லாத்தையும் தாறுமாறாய் நினைக்கிறாய்.

*பாக்* : அப்பிடி எங்களையும் கூட்டிக்கொண்டு போறதெண்டால் நான் ஏனிப்பிடி நிக்கிறன்... வித்துப்போட்டு அவை மட்டும் தானாம் போறது.. எங்களைக் கொண்டு போனால் கவுரவக் குறைவாம்... அதுக்கு வயோதிப மடம் பாக்கினமாம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அரு* : இதுக்கு சுதனும் சம்மதமாமோ பாக்கியம்...

*பாக்* : ஓமாம்... அவனும் சேர்ந்து தானாம் இந்தப் பிளான் போட்டது..அதுதானே சொல்லுறன் அங்கை எங்களைக் கூட்டிக்கொண்டு போறது அவைக்குக் கௌரவக் குறைவாம்... இனித்தன்னும் கண்ணைத்திறவுங்கோ..

*அரு* : சுதன் ஒரு நாளும் பிழையான முடிவெடுக்கான். அப்பிடிச் செய்யானெண்டுதான் நினைக்கிறன்.

*பாக்* : இஞ்சேருங்கோ.. சுதன் இப்ப முந்தி மாதிரி இல்லை ..எங்களைப் பற்றி யோசிக்கிற ஆள் இல்லை.. உங்களுக்குத் தெரியா மலிருந்தாலும் நான் சாடை மாடையாய்க் கவனிச்சனான். கலியாணத்துக்குப்பிறகு அவன் ஒரு பெட்டிப்பாம்பு... அவள் மயக்கிப் போட்டாள்.. மனிசியின்ரை சொல்லுக்கு ஆடுற மகுடிப் பாம்பு.. அதை மட்டும் மறந்திடாதையுங்கோ...

*அரு* : அவன் என்ன பாம்பெண்டாலும் பரவாயில்லை.. ஆரேன் சொன்னதைக் கேட்டு ஒரு ஊகத்திலை அதுகளைப்பற்றி அப்பிடி இப்பிடிச் சொல்லி சும்மா சன்னதம் ஆடாதை.. எதுக்கும் அவன் சுதனிட்டையே நேரை கேட்டுப்பாப்பம்..

*பாக்* : சரி எப்பிடி எண்டாலும்... ஆரிட்டை எண்டாலும் கேட்டுப் பாருங்கோ... ஆனால் ஒண்டு மட்டும் சொல்லிப் போட்டன்.. (அழுதுகொண்டு) ம்.. ம்.. ஆற்றையேன் சொத்தை ஆரேன் வித்துப்போட்டு போகட்டும்.. எனக்கென்ன... அவை வித்தாலென்ன அல்லாட்டி தெருவிலை போற நாய்க்குக் கொட்டினாலென்ன... பெத்ததுகளெண்டு தன்னோடை சுதன் அங்கை கூட்டிக்கொண்டு போனால் போவனே தவிர.. போகத்தவறி உந்த வயோதிப மடமோ, வாடகை வீடோ, ஆற்றையேன் கோடியோ... போ எண்டு சொன்னால் நான் இஞ்சை... இந்த வீட்டிலை இருந்து வெளிக்கிடெண்டு சொல்லேக்கையே இந்தக்கட்டை .. இஞ்சையே செத்துத் துலையுமே தவிர... அடுத்தவன் வீட்டுக்கோடி தூங்கமாட்டுது.. அதை மட்டும் மறந்திடாதையுங்கோ...,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அரு* : பாக்கியம் ஏனப்பா .இந்தச் சின்ன விசயத்துக்கு இப்பிடிப் பெரிய பெரிய சபதமெல்லாம் போடுறாய்.. அப்பிடி ஒண்டும் நடவாது.. அதுதானே நான் சுதனோடை கதைப்பமெண்டிறன். ஆரோ பொறாமையிலை கட்டிவிட்ட கதையாலை ஏனப்பா நீ ரென்சனாகிறாய்.

*பாக்* : அப்பிடிச் சொல்லாதையுங்கோ.. உது கட்டுக்கதையில்லை .. ஒரே வீட்டுக்கை நாங்கள் இருக்கிறம் எங்களுக்குத் தெரியாதெண்டு சொல்லுங்கோ. நெருப்பில்லாமல் புகையாது..

*அரு* : அப்ப உண்மையெண்டுதான் சொல்லுறாய்.

*பாக்* : நீங்கள் என்ன இருக்கிற இல்லிடத்தை விட்டிட்டு அடுத்தவன் கோடிதூங்கச் சொல்லுறியளோ...

*அரு* : பாக்கியம்.. நீ பதட்டப்படாதை... கொஞ்சம் உன்னை ஆசுவாசப்படுத்து... உன்ரை உடம்புக்குக் கூடாது. பிறசர் அது இதெண்டு. இந்த நேரத்திலை வந்தால் அது வேறை கரைச்சலப்பா... அது சுதனோ மருமகளோ வேறை ஆரோ.. மற்றவையை விடும்.. பாக்கியம் ஆரில்லாட்டிக்கும் உன்னோடை எண்டைக்கும் நானிருக்கிறனப்பா... அதை மறந்திடாதையும்.

----- காட்சி மாற்றம் -----

## காட்சி - 2

*இடம் : அருணாசலம் வீடு*

*பாத்திரங்கள் : சாந்தினி, சுதன்*

*சுதன்* : இஞ்சேரும் சாந்தினி, நாங்கள் வீடு விக்கிறதும் அம்மா அப்பாவை எல்டேர்ஸ் கோமுக்கு அனுப்புறதுக்கு ஆயத்தப்படுத்துறதும் ஏதோ ஒரு விதமாய் அம்மாவின்ரை காதுக்கும் எட்டியிருக்குது போலை

*சாந்* : அதுக்கேனப்பா நீங்கள் முழி பிதுங்கிறியள். நல்லது தானே... எப்பவோ ஒரு நாளைக்கு தெரியவரத்தானே வேணும். அதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்களே எங்கடை வாயாலை சொல்லி முகத்தை முறிக்காமல் தாங்களே அறியிறது எவளவோ நல்லதுதானே சுதன்...

***சுதன்*** : தனக்கு எதுவெண்டாலும் பிரச்சினையில்லை எதையும் ஒழுங்கு பண்ணட்டாம்.. ஆனால் அம்மாவுக்குத்தான் துளியும் விருப்ப மில்லையாம். அழுதுகுழறினவாவாம் எண்டு அப்பா சொன்னார். அதுதான் கொஞ்சம் யோசிக்கவேண்டியிருக்கு சாந்தினி...

***சாந்*** : உங்கடை அம்மா எதுக்குத்தான் சம்மதிப்பா.. எதுக்கெடுத்தாலும் பிழை பிடிக்கிறதுதானே வழமை.. இந்த விசயத்திலை மட்டும் ஏன் மாறப்போகுது. அதிலையும் நான் இன்வோல்வ் பண்ணுறன் எண்டு தெரிஞ்சா ஊரையே கூட்டி ஒரு பிரளயத்தையே உருவாக்கிவிடுவா.. நானெண்டா உதை எதிர்பார்த்தது தான்

***சுதன்*** : அது சரி சாந்தினி... ஏதோ அவவின்ரை குணம் அப்பிடி.. ஆனால் நெஞ்சிலை ஒண்டை, வார்த்தையிலை ஒண்டைவைச்சு கதைக்கிற குணமில்லையப்பா.. அதை மறந்திடாதையும். அதுதான் மனசிலை கிடந்ததை அப்பாவிட்டை சொல்லி அவலப் பட்டிருக்கிறா..

***சாந்*** ; நீங்கள் அப்பிடி சொல்லுங்கோ.. நான் எண்டால் உதுக்கு எதிர்மறைதான். மாமி என்னிலை பிழை பிடிக்கிறதிலைதான் கண்ணும் கருத்தாய் இருப்பா.. நான் என்னதான் தேனாய்த் திரவியமாய் செய்தாலும் அதிலை பிழைபிடிச்சு ஒரு சொட்டைசொன்னாத்தான் அவவின்ரை பொழுது விடியும். அதுதான், நாரதருக்கு ஒருநாளைக்கு ஒரு பொய் சொல்லி குழப்பத்தை விளைவிக்காட்டி தலையே வெடிச்சுச் சுக்கு நூறாகியிடும் எண்டது போலை உங்கடை அம்மாவுக்கும் ஒருநாளைக்கு ஒருபிழை எண்டாலும் என்னிலை பிடிக்காட்டி அவவின்ரை தலையே வெடிச்சிடும்.

***சுதன்*** : உது எங்கையில்லாதது. வீட்டுக்கு வீடு வாசல் படிதானே.. அதுதான் அச்சுப்பிசகாமல்.. மாறாமல் இஞ்சையும் நடக்குது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சாந்* : எத்தினை வீட்டிலை மாமி மருமகள் தாய் பிள்ளை மாதிரி இருக்கிறதை கண்டிருக்கிறன்.. எல்லாரையும் உங்கடை அம்மாவோடை ஒப்பிடாதையுங்கோ...

*சுதன்* : ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம், இறங்கச் சொன்னால் கழுதைக்கு கோபம் எண்டது போலை உதுகளிலை சரி பிழை சொல்லுறதாலை வீண் மனஸ்தாபம்தான் மிஞ்சும்.. நானெண்டால் சொல்லுவன் ஒரு கலியாணப் பேச்சிலை முதலிலை மாப்பிளை பொம்பிளையின்ரை சாதகக் குறிப்போ பொருத்தமோ இல்லை பாக்கவேணும்.. மாமி மருமகளின்ரை சாதகக் குறிப்பும் பொருத்தமும்தான்... ஏனெண்டா மாப்பிளை பொம்பிளையின்ரை பொருத்தம் அவையுக்கை மட்டும்தான் பொருத்தத்தைக் குடுக்கும்.. ஆனா மாமி மருமகள் பொருத்தம் பொருந்தினா முழுக் குடும்பமே பொருந்தின மாதிரித்தான்.

*சாந்* : உங்களுக்கு உங்கடை அம்மாவைப்பற்றிச் சொன்னாத்தான் கோபம் பொத்துக்கொண்டு வந்திடுமே.. அவ செய்யிறதொண்டும் உங்களுக்குத் தெரியாது...

*சுதன்* : உதாலைதானே நான் உங்கடை விசயத்திலை தலையிடு கிறதில்லை..

*சாந்* : அப்ப ஏன் இதிலை மட்டும் தலையிடுகிறியளாக்கும். என்னைக் குத்திக்காட்டவோ..

*சுதன்* : அப்பாவும் கேட்டார். அவர் சொல்லுறதிலையும் ஞாயம் இருக்கிறது மாதிரித் தெரிஞ்சுது. அதாலைதான்.

*சாந்* : ஓகோ விசயம் அப்பிடியே...

*சுதன்* : இல்லை சாந்தினி... அவையள் கட்டின வீடு.. அவையள் வாழ்ந்த அயலட்டை... சொந்த பந்தம்.. சிநேகிதங்கள்.. ஏன் எல்லாத்துக்கும் மேலை கோயில் குளங்கள். வயது போன நேரத்திலை மனதுக்கு ஆறுதலாயிருக்கிறது இதுகள் தானப்பா... இதுகளைப்பிரிச்சு அவையின்ரை மனசை சலனப்படுத்த வேணுமே...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சாந்* : நீங்கள் சொல்லுறியளோ.. அல்லாட்டில் அம்மா சொன்னவாவோ..?

*சுதன்* : அது நான் சொன்னா என்ன? அம்மா சொன்னா என்ன.. அவை எவளவு கஸ்டப்பட்டு என்னை இப்பிடியொரு நிலைக்குக்கொண்டந்தவை எண்டதை கூட இருந்து பட்டுத் தெளிஞ்சவன் எண்டதாலை நானும் சொல்லுறன். அவையள் சொல்லுறதிலையும் எதிர் பார்க்கிறதிலையும் நியாயம் இருக்குதுபோலை கிடக்குது. அதுதான்..

*சாந்* : சுதன்.. நீர் அம்மா சொல்லுறதிலை ஞாயம் இருக்கு தெண்டு சொல்லுறீர்.. சரி ஏற்றுக்கொள்ளுவமன்.. நீங்கள் ஏன் இப்பிடி நினைக்கக்கூடாது..

*சுதன்* : எப்பிடியப்பா..

*சாந்* : கலியாணம் செய்தவுடனேயே நாங்கள் தனிக்குடித்தனம் போயிருந்தால் உம்மட பேரன்ற்ஸ் என்ன செய்திருப்பினம்.. ஒண்டும் பேசாமல் தங்கடை அலுவலைத் தாங்களே பாத்துக் கொண்டு அடுத்த வயின்ரை அலுவலிலை தேவையில்லாமல் தலையிடாமல் இருந்திருப்பினம். உங்கை எத்தினை பேரன்ற்ஸ் தங்கடை பிள்ளையள் சந்தோசமாய் வாழவேண்டும் எண்டு தாங்களே விலகிக்கொள்ளுதுகள்.. தாங்கள் வாழ்ந்து அனுபவிச்சவை இளசுகள் அனுபவிக்க வேண்டியதுகள் எண்டு சொல்லி ஒதுங்கிக்கொள்ளுதுகள். அதுகள்தான் உண்மை யிலேயே பக்குவம் தெரிஞ்ச பெற்றார்.

*சுதன்* : எல்லாரும் ஒரே மாதிரி மனப்பக்குவத்திலை இருப்பினமே.. இனி. அதுகளும் சந்தோசமாயிருக்குதுகளோ.. இல்லை நொந்து நொடிஞ்சு...

*சாந்* : (இடைமறிச்சு) இல்லை.. அதுகள் நல்ல சந்தோசமாய்த்தான் இருக்குதுகள். பிள்ளையளும் சந்தோசமாய் பாசத்தோடதான் இருக்குதுகள். மொத்தத்திலை முழுக்குடும்பமுமே சந்தோசமா யிருக்குது. இது தாங்களே சுயபுத்தியாலை சிந்தித்து நடக்கிறது மில்லை மற்றவை சொல்லுகினமெண்டு தன்னும் கேக்கிறதில்லை..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கள் நினைக்கிறதுதான் சரியெண்டும் அப்பிடியே மற்றவையும் செய்யவேணும் எண்டும் ஒற்றைக்காலிலை நிக்கினம். மனசாட்சியே இல்லாத பிறவியளாய்க் கிடக்குது. சீ..

*சுதன்* : பிரச்சனை இல்லையெண்டு நான் சொல்லேலை... அவைதான் அப்பிடி எண்டால் நீரும் விட்டுக் குடுக்கிறதாயில்லையே.. .எப்ப பாத்தாலும் அவை செய்யிற ஒவ்வொண்டிலையும் பிழைபிடிக்கிறதிலையே கண்ணாயிருக்கிறீர். அவையும் தனித்துவமானவை.. அவைக்கெண்டும் சுயகௌரவம் இருக்கும் .. உம்மடை சொல்லிலை சொல்லப்போனால் எதிர்பார்ப்புகள், ஏக்கங்கள், தேவைகள் இளைஞர்களுக்கு மட்டுமில்லை.. வயோதிபப் பெற்றாருக்குமிருக்கும் .. அவையின்ரை விசயத்திலை ஒரு முடிவெடுக்கேக்கை அதையும் நாங்கள் யோசிக்கவேணும்.

*சாந்* : என்ன சுதன் நீரும் அவவை விட்டுக்குடுக்காமல் என்னைத்தான் குத்திக்காட்டுறீர் போலை... நாங்களென்ன கவுண்மேன்ற் கோமிலையே விடுறம் .. அல்லது அவை ரெண்டுபேரையும் தனித்தனிய வெவ்வேறை இடத்திலை இருங்கோ எண்டே சொல்லுறம்.. இல்லையே.. வசதியான, துப்பரவான பெரிய இடத்துப் பேரண்ட்ஸ் இருக்கிற இடத்திலை ரெண்டுபேரும் ஒண்டாயிருங்கோ எண்டுதானே ஒழுங்குபண்ணியிருக்கிறம்.

*சுதன்* : அங்கை இவையள் சமாளிப்பினமோ எண்டுதான் பாத்தன். சாந்தினி வயசுபோன காலத்திலை அவை சுகமாயும் தனித்துவமாயும் இருக்க நாங்கள் முட்டுக்கட்டை போடாமல் இருக்கவேணும்.

*சாந்* : அங்கை என்ன குறை சுதன்.. இஞ்சை எங்களோடை இருக்கிற மாதிரித்தானே.. அங்கையும் டீசன்ரான ஆக்கள்தான் இருக்குதுகள். அவையை மாதிரி கவுண்மென்ற் சேவிசிலை இருந்திட்டு றிட்டயர் பண்ணினாக்கள் மற்றது பிள்ளையள் வெளிநாட்டிலை இருக்கிறதுகள் அப்பிடி நல்லமாதிரியான ஆக்கள் தானே இருக்குதுகள். பிறகென்னத்துக்கு இவை தேவையில்லாததுகளைப் பற்றி யோசிக்கினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***சுதன்*** : நாங்கள் வலோத்காரமாய் கொண்டு போய்ச் சேர்த்தால் அவை மனசளவிலை மட்டுமில்லை .. அந்த மனப் பாதிப்பாலை உடலளவிலையும் தேவையில்லாத வருத்தங்கள் வரப்பாக்கும். இப்பவே அம்மா பிறசர்க்காறி வேறை.. பிறகு வருத்தம் துன்பமெண்டு வந்தால் நாங்கள்தானே அதையும் பாக்கவேணும்.

***சாந்*** : ஒவ்வொண்டுக்கும் ஒண்டொண்டு சொல்லி என்ரை வாயை மூட மட்டும் பாருங்கோ.

***சுதன்*** : ஏதோ என்ரை மனதிலை பட்டதைச் சொன்னன். நீர் உதைச் சொல்லும். அவையும் எங்களோடை இருந்தால் நாங்கள் வேலைக்குப் போனாலும் அதுகள் தங்கடை வயதுபோன காலத்திலை தனிமரமாய் இல்லாமல் பேரப்பிள்ளையளோடை காலத்தைப் போக்கலாம்தானே. எங்களுக்கும் றிலீவ்தானே சாந்தினி.

***சாந்*** : என்ன சுதன் இப்பிடிச் சொல்லுறியள். உங்கடை பி.எச்.டீ. சரிவந்தா அவையைக் கூட்டிக்கொண்டே போகப் போறியள், இல்லைதானே.. அதை இப்ப செய்தால் ஏன் பிழையாய் விளங்கிக்கொள்ளுகினம்.

***சுதன்*** : அதை ஆர் இல்லையெண்டது.. அதாலைதானே நீர் இப்பிடிச் செய்வம் எண்டு கேக்கேக்கை நானும் சம்மதிச்சு அங்கை றெஜிஸ்ரர் பண்ணினது.. ஆனால் இப்ப அப்பா ஒண்டுமில்லை அம்மாதான்.. தலைகுத்திக்கொண்டு நிக்கிறா அதாலைதான் கேட்டன்..

***சாந்*** : பிறகென்ன சுதன்.

***சுதன்*** : சாந்தினி அதுக்கு மேலை ஊர் உலகம் எண்டும் ஒண்டு இருக்கு.. அதுகளையும் தட்டிக்கழிக்க முடியாது. எல்லாத்துக்கும் மேலை மனச்சாட்சியும் இருக்கு. அதோடை நான் ஒரே ஒரு பிள்ளை.. வயதுபோன காலத்திலை அவையளுக்கு என்னைவிட்டால் வேறை ஆரப்பா ஆறுதல்.. ஊர்வாய் சும்மாய் கிடக்குமே...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாலை சொன்னன் ..(பெருமூச்சு விட்டு).. ஏதோ நடக்கிறதைப் பாப்பம். வேறை என்னத்தைச் செய்யிறது.

*சாந்* : இஞ்சேரும் சுதன் வேண்டா வெறுப்பாய் நடக்கிறதைப் பாப்பம் எண்டு விட்டிட்டிராமல் நடக்க வேண்டியதைப் பாரும். எங்கடை வாழ்க்கையையும் எதிர்காலத்தையும் கொஞ்சமாவது யோசியும்.. சரி.. எல்டேஸ் கோமுக்கு அவையையும் கூட்டிக்கொண்டு போய் அதைப் பாத்து அவை சம்மதிச்சா சேர்த்துவிடுவம்.

*சுதன்* : சம்மதிக்காட்டில்.. பிறகு வீணான பிரச்சனைதான் வரும். அது மட்டுமே அயலட்டை சும்மா இருக்குமே...

*சாந்* : நீங்கள் பேச்சுக் கேக்க வேண்டாம்.. அது வாற வசையை நான் கேக்கிறன்.

*சுதன்* : என்ன நீர் வேறை நான் வேறையே.. வசை எல்லாருக்கும்தான்.. ரெண்டுபேரும் பிடிச்ச முயலுக்கு மூண்டு காலெண்டால் நான் என்னசெய்யிறது. ஏதோ வசதியான நேரத்திலை பக்குவமாய்ச் சொல்லிக் கூட்டிக்கொண்டு போய்க் காட்டிக் கேட்டுப் பாப்பம். சம்மதிச்சாப் போயிருக்கட்டும். இல்லாட்டில் பிறகு யோசிப்பம்.

*சாந்* : யோசிப்பம் எண்டு எல்லாத்தையும் பின்போடுங்கோ. அப்பதான் உங்கடை அம்மா ஊருலகத்துக்கெல்லாம் சொல்லி ஒப்பாரி வைப்பா.. பிறகு றோட்டாலை போற கண்டவை எல்லாம் எங்களுக்குப் புத்தி சொல்ல வெளிக்கிடுவினம். அதை மறந்திடாதையுங்கோ.. ஒவ்வொருத்தர் ஒவ்வொண்டு சொல்ல நீங்களும் பிறகு மனம் மாறினால் உபத்திரவம் எனக்கெல்லோ.. அது மட்டுமே நாங்கள் டிலே பண்ண... இந்த இடமும் இல்லாமல் போயிடும். ஒண்டு மட்டும் சொல்லிப் போட்டன் உவையைக் கட்டி மேய்க்க என்னாலை ஏலாது. அதை மறந்திடாதையுங்கோ.

----- காட்சி மாற்றம் -----

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி – 3

*இடம்* : *அருணாசலம் வீடு*
*பாத்திரங்கள்* : *பாக்கியம், சுதன், சாந்தினி, அருணாசலம்*

*பாக்* : (நப்பாசை) இஞ்சேருங்கோ.. என்னப்பா..

*அரு* : என்ன பாக்கியம்... சொல்லுமன்.

*பாக்* : என்ன முகத்தைத் தொங்கப்போட்டுக் கொண்டிருக்கிறியள்.. கட்டாயம் நாங்கள் இந்த வீட்டை விட்டிட்டுப் போகத்தான் வேணுமே.. சுதனும் சம்மதமாமே..

*அரு* : ஓம் பாக்கியம் அதுதானே உறுதியெழுத்தும் முடிஞ்சுதே... பிறகென்ன..

*பாக்* : சரி.. வீட்டைத்தான் வித்தாலும் போற புதுவீட்டுக்கு தன்னோடை எங்களையும் கூட்டிக்கொண்டு போவான். என்னப்பா .. நான் சாகு மட்டும் எண்டாலும் நாங்கள் எல்லாரும் ஒண்டாய் இருக்கலாம் என்ன..

*அரு* : அது படைச்ச அந்த ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம் பாக்கியம்.

*பாக்* : ஏன் நீங்கள் ஏதோ வேண்டா வெறுப்பாய் எடுத்தெறிஞ்சு பேசிறியள்.

*அரு* : வேறை என்னத்தை என்னைச் சொல்லச் சொல்லுறாய். உன்ரை கேள்விக்கு மறுமொழி சொல்லுறதெண்டால் .. படைச்சவனைத் தவிர வேறை ஆராலை ஏலும்.. நீயே சொல்லு பாப்பம்..

*பாக்* : நீங்களே இப்பிடி நொந்தது மாதிரிச்சொன்னால். கவலைப்படாதையுங்கோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அரு* : (அழுகைச் சிரிப்பு) என்ன பாக்கியம்... என்னை நீ தேற்றிறியோ.. பாக்கியம் இந்த அருணாசலம் எதுக்கும் கலங்கானடி.. (கலங்கி) ஆனால் என்னையே நம்பி வந்த உனக்கு... நான் ஆளாய்த் திரியும் மட்டும் .. என்ரை அறிவுக்கெட்டின மட்டிலை நீ கேட்ட ஒண்டையும் நான் மாட்டதெண்டதில்லை.. ஏசியோ பேசியோ ஏலக்கூடியதைச் செய்தன். இந்த விசயத்திலை மட்டும் நான் கையாலாகதவனோ எண்டு என்ரை மனச்சாட்சி உறுத்துது.. வயதுபோன காலத்திலை நீ இப்பிடி அங்கலாய்க்கேக்கை என்னாலை பதில் சொல்லேலாமல் இருக்குது பாக்கியம். இதுக்கு நான் ஆண்டவனைத் தவிர ஆரிலை நோகலாம் சொல்லு பாப்பம்.

*பாக்* : (பெருமூச்சு) ஏதோ பிள்ளை போற இடத்தில வசதியாய் இருக்கவேணுமெண்டு இந்த வீட்டை வித்துக்கொண்டு போகுது.. நூறுபேர் எத்தினை கதையைச் சென்னாலும், சுதன் எங்களையும் தன்னோடை கூட்டிக்கொண்டு போவனெண்டுதான் இன்னும் என்ரை மனசு சொல்லுது. நீங்கள் மனசைத் தளர விடாதையுங்கோ..

*அரு* : சுதனுக்கு விருப்பமிருந்தாலும் மனிசிக்காறி ஓமெண்டு சம்மதிக்க வேணுமே... (பதிந்து) ஏனப்பா அண்டைக்கு சுதனோடை போய்ப் பாத்து வந்த வயோதிப மடம் வசதியானதுதானே.. அதுக்கும் சுதன்தானே காசு கட்டிறான். பிறகென்ன பாக்கியம்.. ஏன் நாங்கள் மற்றவைக்கு பாரமாய் இருப்பான். சுகம் வலமாயிருக் கேக்கை அங்கைபோறது நல்லதுதானே.. கொஞ்சம் யோசிச்சுப் பாருமன்.

*பாக்* : அங்கை பார்வைக்கு குறையில்லைத்தான்.. ஆனால் ஏதோ ஒரு சோகம் தெரியுதப்பா... இஞ்சேருங்கோ.. நான் பெத்தபிள்ளை யிட்டையிருந்து பணத்தையோ பவிசையோ எதிர்பார்க்கேலை. பாசத்தையும் அன்பையும்தான் தேடுறன். பெத்த தாய் இதைக் கூட எதிர்பார்க்கிறது தவறே...

*அரு* : அதை நான் இல்லையெண்ணுறனே... நீ பாக்கியம் உன்ரை பக்கத்தை மட்டும்தான் பாக்கிறாய்... அதுகளின்ரை பக்கத்தைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றியே நினைக்கிறாயில்லையே..! தாங்கள் சந்தோசமாயிருக்க வேணுமெண்டால் நாங்கள் வயோதிப மடம்தான் போகவேணுமெண்டு மருமோள்காறி விடாப்பிடியாய் நிக்கிறா. அவன் என்ன செய்யிறது..

*பாக்* : அப்ப மாட்டன் எண்டுறாவோ.

*அரு* : ஓம் பாக்கியம். உரலுக்கு ஒரு பக்கம் இடியெண்டால் மத்தளத்துக்கு ரெண்டு பக்கமுமெல்லே அடி எண்டது போல அவன்ரை நிலைமை... மனிசி ஒரு பக்கம்.. நாங்கள் மற்றப்பக்கம்.. அவனும் அனுபவமில்லாதவன் இஞ்சேர் பாக்கியம்..

*பாக்* : சொல்லுங்கோ..

*அரு* : அவ மருமோளை விடு... சுதன் ஆர்... எங்கடை பிள்ளைதானே... அவன்ரை சந்தோசத்துக்காக வெண்டாலும் நாங்கள் கொஞ்சம் விட்டுக்குடுத்தால் என்னப்பா... எதுக்கும் அதுகள் கேக்கிற மாதிரி கொஞ்சநாளைக் கெண்டாலும் போயிருந்து பாப்பம்..

*பாக்* : உங்களுக்கென்ன எல்லாத்தையும் மனதிலை அடக்கிவைச்சுக் கொண்டு சுகமாய்ச் சொல்லிப் போட்டியள். இந்தப் பாழாய்ப்போன என்ரை மனம் கேக்குதில்லையே.. வாற மாதமோ அடுத்த மாதமோ பேரக்குழந்தையும் கிடைக்கும். அதுவரையெண்டாலும் ஒண்டா யிருப்பமெண்டு பாத்தன்.. அதுக்கும் கொடுப்பனவு இல்லைபோலதான் கிடக்குது..

*அரு* : இதுக்கென்னப்பா கொடுப்பனவு... சந்தோசமாய் போனமெண்டால் விரும்பின நேரத்திலை போய் ஆசைதீரப் பாத்திட்டு வரலாம்தானே.. அதுகளின்ரை பக்க நியாயத்தையும் பாருமன்... அது மட்டுமே சந்தோசமாய்ப் போனமெண்டால் மரியாதையாயும் இருக்கும்... இல்லாமல்... அவையே வெளிக் கிடுத்தினால் ஊரே சிரிக்குமெல்லே.. மரியாதையாய்ப் போறது தானப்பா நல்லது.. அப்பதான் விரும்பின நேரம் கௌரவமாய் வந்து போகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பாக்* : ம்... ஏனப்பா .. ஏன்தான் இந்த மருமோள்காறி எங்களை அப்பிடிக் கலைக்கிறதிலையே கண்ணாயிருக்கிறாவோ தெரியேலை... உங்கை எத்தினை பெற்றார் பிள்ளைகுட்டி பேரப்பிள்ளை ஏன் பூட்டப்பிள்ளையெண்டு கூட்டுக் குடும்பமாய் இருக்குதுகள்.. நாங்கள் இன்னுமொண்டைப் பெத்திருந்தால் ஏதோ ஒண்டில்லாட்டில் மற்றதின்ரை நிழலிலை தன்னும் ஆறியிருக்கலாம்.. அதுக்கும் குடுப்பினையில்லாமல் போட்டுது...

*அரு* : அது அவரவருக்கு ஆண்டவன் கொடுத்தது

*பாக்* : நாங்கள் அவவுக்கு என்ன கெடுதல் செய்தமோ தெரியாது.. ஒரு கொஞ்சம் கூட இரக்கமில்லாமல் ராட்சசிபோலை போங்கோ போங்கோ வயோதிப மடத்துக்கு எண்டு கலைக்கிறதே தொழிலாய் இருக்கிறா... இவ என்ன பிறப்போ தெரியாது..

*சாந்* : (வந்து கொண்டு) என்ன என்ரை பிறப்பிலையே உங்களுக்கு இப்ப சந்தேகம் வந்திட்டுதோ.. தெரியேலையே... மனிசப்பிறப்புத் தான்... எல்லாம் கேட்டுக்கொண்டுதான் வந்தன்... ம் பாவங்கள் பெத்ததுகள் எண்டு உவளவு காசு மாதாமாதம் குடுத்து எல்லா வசதியளோடும் எவளவு கஷ்டப்பட்டு அட்மிசன் எடுத்ததெண்டு தெரியும் தானே... அதுமட்டுமே ரெண்டு பேரும் ஒண்டாயிருக்க வேணுமெண்டு இன்னும் எவளவு கஸ்டப்பட்டது.. அது என்ன அனாதை விடுதியோ அல்லாட்டி மாட்டுப் பண்ணையே... உங்கடை கண்ணாலை கண்டியள் தானே. அங்கையும் படிச்சதுகள், பணக்காரர்தானே இருக்குதுகள். அதுகளும் பிள்ளைகுட்டி எண்டு பெத்து வளர்த்து ஆளாக்கினதுகள்தான். அதுகள் சந்தோசமாய் இருக்கேலையே...

*அரு* : அது பிள்ளை வந்து..

*சாந்* : இதுகளைத் தெரியாமல் ராட்சசியெண்டு திட்டத் தோணுதோ.. ஓம் நான் ராட்சசிதான் எக்கேடு கெட்டாலும் போகட்டுமன் எண்டு எங்கையேன் ஒரு கவுண்மென்ற் கோமிலை விட்டிருக்க வேணும்... இவளவு வசதி தேடினது என்ரை பிழை.. எனக்கு இதுகும் வேணும் இதுக்கு மேலையும்வேணும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அரு* : அது பிள்ளை அவ ஏதோ தெரியாத்தனமா சொல்லிப் போட்டா... மனசிலை ஒண்டையும் வைச்சிருக்கத் தெரியாதவ... உப்பிடித்தான் நெல்லுப் பொரிஞ்சமாதிரி பொரிஞ்சு கொட்டுவா. வயது போன நேரமெல்லோ.. உதைப் பெரியமனசு பண்ணி பெரிசுபடுத் தாதேங்கோ பிள்ளை...

*சாந்* : இதுக்கு மட்டும்தான் தெரியாத்தனம். மற்றதுகள் எல்லாம் தூண்டு துரவு பிடிச்சு சொல்லுறதுக்கெல்லாம் ஏலும். ஒண்டுமட்டும் சொல்லிப்போட்டன். அவரை அதுதான் சுதனைக் கெஞ்சி மண்டாடி கோள் குண்டணி சொல்லி அங்கை வரலாம் எண்டு மட்டும் எண்ணாதையுங்கோ...

*அரு* : பிள்ளை...

*சாந்* : அப்பிடி ஏதும் நினைச்சால் அல்லது நடந்தால்தான் நான் ஆர் எண்டு தெரியும்.. அப்பதான் ராட்சசி எப்பிடியெண்டு காணுவியள். ம்... அவரும் ஓமெண்டு சம்மதிச்சுத்தான் ஒவ்வொரு மாதத்துக்கும் இவளவு காசை அள்ளிக்குடுத்து அங்கை சேர்க்க சம்மதிச்சது. அதை மறந்திடாதையுங்கோ... இஞ்சை அவரே வாறார் கேட்டுப்பாருங்கோ..

*சுதன்* : (வந்துகொண்டு) ஏனம்மா என்ன பிரச்சினை..

*சாந்* : இல்லை நான் உங்கடை அம்மாவுக்கு ராட்சசி மாதிரித் தெரியிறனாம்.. வேறை என்ன..

*பாக்* : (தழுதழுத்து) என்ன சுதன்.. நீயும் சேர்ந்து .. நீயும் சேர்ந்து திட்டம் போட்டே இவளவும் நடக்குது... எங்களை அனாதை மடத்துக்கு அனுப்புறதிலை முன்னுக்கு நிக்கிறியள்.. ஏன்மோனை அதிலை உங்கடை கோடியிலை நாங்கள் ரெண்டுபேரும் ஒதுங்கினால் என்ன சுதன் குறையுது. ஏன்ரா சுதன் எங்களை வெளியிலை கலைக்கிறதிலையும் பார்க்க ஏதும் நஞ்சை நறுக்கைத் தந்தாயெண்டாலும் நிம்மதியாய்ப் போய்ச்சேர்ந்திடுவம். ஏன்தான் உன்ரை புத்தி இப்பிடிப் போய்ச்சுதோ... எடேய் அண்ணாவி அருணாசலத்தின்ரை மனிசி எண்டு சொல்லுறதிலும் பாக்க டொக்டர் சுதனின்ரை அம்மா எண்டு சொல்லுறதிலைதானடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பெருமைப்பட்டன்.. ஆனால் இண்டைக்கு வெக்கப்படுறன். பெத்தவயிறடா...

*அரு* : பாக்கியம்.. கொஞ்சம் யோசிச்சுக் கதையப்பா.

*பாக்* : ஆளாயிருக்கேக்கை எண்டால் இப்பிடிக் கெஞ்சவோ அடம்பிடிக்கவோ மாட்டனடா.. இப்ப நொந்து நொடிஞ்சு பற்றிப் பிடிச்சு வாழ ஒரு கொழுகொம்பு தேவைப் படுகிற நிலையிலை.. பெத்ததுகள் எண்டு கூடப் பாக்காமல் போக்கிடம் இல்லாமல் பண்ணிப் போடாதையடா...

*சுதன்* : அதை ஆரம்மா இல்லை எண்டது. நாங்களும் உதுகள் எல்லாத்தையும் யோசிச்சுத்தான் முடிவெடுத்தது. அது ஒண்டும் அரசாங்கம் நடத்திற அனாதை மடமில்லை எண்டு தெரிஞ்சும் ஏனம்மா சும்மாய் நச்சரிக்கிறாய். .அங்கை என்ன குறை .அங்கை எல்லா வசதியும் இருக்கு . அதை மறந்திடாதையுங்கோ. சும்மா அதை இதைச் சொல்லிப் போகமாட்டன் போகமாட்டன் எண்டு சொல்லி கழுத்தறுக்காதையுங்கோ... கொஞ்சம் தன்னும் மனிசத் தன்மையோடை நடவுங்கோ அம்மா...

*பாக்* : சுதன்.. சுதன்.. என்னடா.. நா.. நா..ன்.. கழு..த் த று க் க கி ற னோ... சுதன்... சுதன்.. நா ன் பெ த் த வ ள டா? உ ன் னை ப் பெ த் த வ ள டா.. நான் நா ன்..கழு..த் த று க் க கி ற னோ... சு த (விழுதல்)

*அரு* : பாக்கியம்.. எழும்பப்பா.. இஞ்சேரும் பாக்கியம்.. கண்ணை கண்ணைத் திறவப்பா.. பாக்கியம் நானிருக்கிறன் இந்த அருணாசலம் இருக்கிறான்.. உன்னைக் கடைசிவரை பாப்பன்.. கண்ணைத் திறவப்பா.. பாக்கியம்... பாக்கியம்.. பாக்கியம் என்னை விட்டிட்டுப் போட்டியோ... என்ரை பாக்கியம். என்னை நீயும் விட்டிட்டுப் போட்டியோ.. (அழுதல்)-------------

(இயலுமாயின் எம் மகன் படத்தில் வரும் ஒப்பாரி பாடல் முன் இசை)

----- காட்சி மாற்றம் -----

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - 4

*இடம் : அருணாசலம் வீடு.*

*பாத்திரங்கள் : சுதன், சாந்தினி, அருணாசலம்*

***சுதன்*** : என்னப்பா சாந்தினி.. அம்மாவும் சொன்னமாதிரியே எங்களோடை தன்னைக் கூட்டிக்கொண்டு போகமாட்டம் எண்டு முடிவாகின வுடனை போய்ச்சேர்ந்திட்டா..

***சாந்*** : அது காலம் சுதன். சாகிறவையை காலம் வந்தால் எவையாலையும் இழுத்துப் பிடிக்கேலுமே காலம் வந்திட்டுது. போட்டா.. அதுக்கு ஒரு ஏதுவாய் நீங்கள் கிடைச்சியள். ஏன் நீங்களென்ன வெளியிலை போகச்சொல்லி கழுத்தைப் பிடிச்சுத் தள்ளினீங்களே.. இல்லையே... உண்மையைச் சொன்னியள்.. அவவின்ரை காலம் போட்டா.. சாகேக்கையும் உங்களைச் சங்கடப்படுத்தி நின்மதியையும் குலைச்சுப்போட்டுத்தானே. போனா..

***சுதன்*** : எப்பிடியும் சொல்லலாம் சாந்தினி. வீடுவித்திட்ட மெண்டு கேள்விப்பட்டவுடனையே உப்பிடி நடக்கு மெண்டு அம்மா சொன்னதாய் அப்பா சொன்னவர். அவளவு மன அழுத்தக்காரி. பிடிவாதக்காரி.. ஆனால் குடுத்துவைச்சவ... போய்ச்சேர்ந்திட்டா... இப்ப அப்பாவின்ரை நிலைமை.. பாவமப்பா... அம்மா செத்த கவலையிலை நொந்துபோயிருக்கேக்கை... அங்கை அனுப்புறது சரியே.. தனிமை. பிரிவு. கவலை, தனிமை புது இடம்.. இந்த நிலைமையிலை அதுதான் யோசிச்சன்...

***சாந்*** : இதிலை என்ன யோசிக்க இருக்கு... வித்த வீடு வித்ததுதான் ..அதிலை மாற்றமில்லை .. வசதியான எல்டேர்ஸ் கோம் பாத்திருக்கு ...நல்ல வசதியான இடம். இவரைப்போலை அவற்றை வயதுக்காரர் எத்தினை பேர் அங்கை இருக்கினம். எங்களோடை தான் தனிமை.. நாங்கள் ரெண்டு பேரும் வேலைக்குப் போனால் கதைக்கவும் மனிசரில்லை.. ஆனால் அங்கை அவரையொத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கள்.. கதைச்சு தங்கடை கவலையை மறக்கலாம்.. இதைவிட என்னை வேறை என்ன செய்யச்சொல்லுறீர் சுதன்.

***சுதன்*** : (குழைந்து) இல்லை சாந்தினி... அப்பாவையும் எங்களோடை கூட்டிக்கொண்டு போனால் பிரச்சனை குறையுமெண்டு நினைக்கிறன். அதுதானப்பா..

***சாந்*** : (கோபத்துடன்)அப்ப அம்மா செத்ததோடை பயந்துபோய் மனம் மாறி அப்பாவைக் கூட்டிக்கொண்டு போறதெண்டு முடி வெடுத்தியள் போல.. நல்லது.. நான் வேண்டாமெண்டு சொல்லேலை... நீங்கள் கூட்டிக் கொண்டு போய் வைச்சிருங்கோ.. ஆனால் நான் ஒருக்காலும் உதுக்குச் சம்மதியன்.

***சுதன்*** : இல்லையப்பா .. அம்மாவும் அப்பிடிப் போட்டா ... அப்பாவும் பிறகு ஏதும் அப்பிடியெண்டா.... பிறகுமேனப்பா வீணாய்க் கொடுமை கேட்பான்...

***சாந்*** : என்ன!.. அம்மா செத்தது என்னாலைதான்.. அதுக்குப் பிராயச்சித்தமாய் அப்பாவைக் கூட்டிக்கொண்டு வா எண்டு சொல்ல வாறியளோ ..

***சுதன்*** : அது வந்து...

***சாந்*** : வந்தும் போயும்... அது அவவின்ர விதியை என்னாலையோ உங்களாலையோ ஏன் அந்தக் கடவுளாலையே மாத்தமுடியாது.. அவையவையின்ரை காலத்துக்கு சாகிறவையை எவையாலும் நிப்பாட்டேலாது. மற்றவைதான் சொல்லுகினம் எண்டால் ஒரு டொக்டராயிருந்துகொண்டு... இது தெரியாமல் நீங்களும் மற்றவையின்ரை கதைக்குப் பயந்து சாகிறியள். ...அது அம்மா செத்தாலென்ன.. ஆச்சி செத்தாலென்ன... எடுத்த முடிவிலை மாற்றமில்லை... போற வீட்டுக்கு... அதுதான் புதிசாய் வாங்கின எங்கடை வீட்டுக்கு உங்கடை அப்பாவைக் கூட்டிக் கொண்டு போறதெண்ணுறது நடவாத காரியம். மற்றவை குறை சொல்லுவினம் எண்டால் குறை சொல்லுறவையைக் கொண்டு போய் வைச்சுப் பாக்கச் சொல்லுங்கோ.. செலவு தாறமெண்டு..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பதான் தெரியும்... பட்டாத்தான் தெரியும்.. சொல்லுறது சுகம்.. செய்யிறது கஷ்டமெண்டு

***சுதன்*** : சரி.. சரி.. அதுக்கேனப்பா இந்தச் சத்தம் போட்டுக் கத்துறீர்... இஞ்சை ஆர் நானும் நீரும்தானே... முகத்துக்கு முகம் பாத்துக் கதைக்கிறதுக்கு, ஏனப்பா ஊரைக் கூட்டுறீர்... அப்பா வந்தாலும் கேக்குமப்பா...

***சாந்*** : கேக்கட்டுமன்... அவரைப்பற்றிக் கதைக்கேக்கை மட்டும் என்ரை வாயை மூடுங்கோ.. என்னைப்பற்றி ஊரே கதைக்குதெண்டு சந்தோசப்படுங்கோ... இப்படிக் கிடந்து உத்தரிக்கவேணுமெண்டது என்ரை பலன். வேறை என்ன... நான் என்ரை நிலையை ஆரிட்டைச் சொல்லி ஆறுவன்

***அரு*** : (பின்னணியில் பாடிக்கொண்டு வருதல்)

உனது *திருமுகத்தை என்று காண்பேனோ*
*உத்தம நாம் செய்த தீவினை யாதோ*
*கமலாசனன் பிரமன் இப்படியேனோ*
*கற்பித்து விட்டான் புவிமீதே*
*புவிமீதே.. என தன்பே.. நானறியேன்*

(பாட்டின் இடையிலேயே வசனம் ஆரம்பித்தல்)

***சுதன்*** : அப்பா வாறார் போல கிடக்கு... அவருக்குக் கேக்கப்போகுது.. கொஞ்சம் நிப்பாட்டுமன்.

***சாந்*** : என்ரை வாயை மட்டும் அடக்குங்கோ.. ஏன்.. அவருக்குக் கேட்டாலென்ன.. கேட்கட்டுமன்.. அப்பதன்னும் புரியுதோ பாப்பம்...

***சுதன்*** : (சுதாகரித்துக்கொண்டு) ஆ..ஆ.. உந்தா அப்பாவும் வந்திட்டார்.. வாங்கோப்பா வாங்கோ... உங்களைப் பற்றித்தான் கதைச்சுக் கொண்டிருந்தனாங்கள்.

***அரு*** : ஓமடா.. எல்லாம் கேட்டுக்கொண்டுதான் வந்தனான். பிள்ளை சாந்தினி என்னாலை ஏன் பிள்ளை நீங்கள் ஒருவருக்கொருத்தர் வீணாய் வாக்குவாதப்படுகிறியள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சாந்* : அதை அவை அவை புரிஞ்சுகொண்டால் சரி.

*சுதன்* : (அதட்டி) சாந்தினி.. நானும் திரும்பத் திரும்பச் சொல்லுறன்.

*அரு* : ஏனடா சுதன் அவவை அதட்டிறாய்.. அவவைப் பேசாதை... பிள்ளை சொல்லுறதிலையும் நியாயம் இருக்குதுதானே... நீங்கள் முந்தநாள் கலியாணம் செய்ததுகள்.. வாழவேண்டியனீங்கள். வாழ்க்கையை அனுபவிக்க வேண்டியனீங்கள். நான் வாழ்ந்து சலிச்சனானடா.. அனுபவிச்சு வெறுத்தனானடா.. உங்கடை சந்தோசத்துக்கு தடையாயிருப்பனெண்டு நினைச்சியே.. (பெருமூச்சு விட்டு) ம்.. உன்ரை அப்பாவைப் பற்றி நீ புரிஞ்சது அவளவுதானே..

*சுதன்* : இல்லையப்பா.. அது வந்து..

*அரு* : எட சுதன்.. அம்மா இருக்கேக்கையே பாத்த அந்த இடத்திலை என்னைக் கொண்டு போய் விட்டிட்டு நீங்கள் உங்கடை இடத்திலை சந்தோசமாயிருங்கோ... அதுதான்ரா எனக்கு சந்தோசம். உங்களுக்கும் இடைஞ்சலைக் குடுத்து நானும் சிரமப்படுகிறதிலையும் பார்க்க அதுதானடா மனதுக்கு நின்மதி... ஆறுதல்.

*சுதன்* : அம்மாவும் இல்லாமல் தனிய..

*அரு* : என்னடா தனிய .. அவள் சீதேவியடா.. பூவோடையும் பொட்டோடையும் தானும் கரைச்சல் படாமல் மற்றவைக்கும் கரைச்சல் குடுக்காமல் போய்ச் சேர்ந்திட்டாள்.. குடுத்து வைச்ச பிறப்படா.. (தழுதழுத்து) தான் கட்டின வீட்டிலையே சாவனென்டு அடம்பிடிச்சு அதையும் சாதிச்ச பாக்கியவதியடா.. சுதன் கொம்மா பொட்டோடை பூவோடை மட்டுமில்லை தன்மானத்தோடையும் போய்ச்சேர்ந்திட்டாவடா.. சீமாட்டி போனாப்பிறகு.. எல்லாக் கனவும் போட்டுதடா.. இந்தக் கட்டை அங்கை கிடந்தாலென்ன.. இஞ்சை கிடந்தாலென்ன..

*சுதன்* : எண்டாலும் அப்பா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அரு* : ஓமடா.. இப்ப இது ஒரு நடைப்பிணம்.. இண்டைக்கோ நாளைக்கோ போகவேண்டியது. ஆனால் கிடந்தழுந்தாமல் மற்றவைக்குக் கரைச்சல் உபத்திரவம் குடுக்காமல் போனால் நான் புண்ணியம் செய்தவனடா... அதுக்கு உகந்த இடம் நீ பாத்த அந்த அனாதைமடம்தானடா... ஒண்டுக்கும் யோசியாதை .. அங்கை கொண்டுபோய் விடு..

*சாந்* : மாமா... அது ப்றீ சேர்விஸ்ல இயங்கிற ஓர்பனேஜ்ஓ.. அனாதை மடமோ இல்லை.... இது ஓய்வு விடுதி... எல்டேர்ஸ் றெஸ்ட் சென்ரர்.. எல்லாரும் பே பண்ணித்தான் அங்கை இருக்கினம்.. அநேகமானவை வெளிநாட்டிலை இருக்கிறவையின்ரை பேரன்றஸ்... வசதியானவை... உங்கடை வயசாக்கள்தான்.. இதுக்கு அட்மிசன் எடுக்கிறதே எவளவு கஷ்டம் மாமா..

*அரு* : ஓம்பிள்ளை எனக்குத் தெரியாதே உந்த விசயமெல்லாம் அட்மிசனுகள் எடுக்கிறதெல்லாம் எவளவு கஷ்ட மெண்டு.. உவன் சுதன் கிடக்கிறான்.. அவனுக்கு ஏம்பலிச்ச மனம்.. அம்மா பிள்ளையெல்லே.. அதுதான் மோனை.. சும்மாய் வீணாய் மனசைப் போட்டுக் குழப்பிக்கொண்டிருக்கிறான். நீ அதை விடு.. ஒண்டுக்கும் யோசியாதையுங்கோ.. நீங்கள் என்னை அங்கை கொண்டு போய் விட்டிட்டு நீங்கள் கவலைப் படாமல் வீடு மாறிற வேலையை ஒரே மனமாய்ப் பாருங்கோ...

*சாந்* : மாமாவே சரியெண்டு சொல்லுறார். பிறகென்ன சுதன்.

*சுதன்* : ஓமோம்.. நீர் உதுவும் சொல்லுவீர் உதுக்கு மேலையும் சொல்லுவீர்.

*அரு* : தம்பி .. நான் திரும்ப திரும்பச் சொல்லுறன். நீ ஏன் அவவை மனம் நோகப் பண்ணுறாய்.. அதுவும் வாயிலையும் வயித்திலையும் வேறை.. இதோடை இந்தக் கதையை நிப்பாட்டுங்கோ.. என்னை அங்கை கொண்டுபோய் விடுற ஒழுங்கை வேளைக்கே செய்யுங்கோ.. பிறகு அந்தஇடமும் போனால்... தம்பி சுதன் நீ வரச்சொன்னாலும் நான் உன்னோடை வரனடா.. அவ மருமோள் சொன்ன மாதிரி அங்கை போய் கொஞ்சக் காலத்துக்கு இருந்து பாப்பம்..

----- காட்சி மாற்றம் -----

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - 5

*இடம் : சுதன் வீடு.*

*பாத்திரங்கள் : சுதன், சாந்தினி, அருணாசலம்.*

*சாந்* : இஞ்சேரும் சுதன். உமக்கொரு கடிதம் வந்திருக்குது அந்த ரிவி க்கு மேலை இருக்குது.

*சுதன்* : இப்ப கடிதம் போடுறதெண்டால் வேறை ஆர் அப்பாவாய்த் தானிருக்கும்...

*சாந்* : அப்பிடிப் போலை தான் கிடந்துது.

*சுதன்* : புது இடமெல்லோ... பிடிச்சுதோ.. பாவம்.. அம்மாவுமில்லாமல் தனியனாய்...

*சாந்* : என்னைக் கேக்கிறியள் உதுகளை... நான் கடிதம் உடைக்கேலை.. இந்தாங்கோ உடைச்சு நீங்களே வாசியுங்கோ. வயது போன காலத்திலை மற்றவைக்கு இடைஞ்சலில்லாமலிருக்க அவையும் பழகிக்கொள்ள வேணும்... அதை மறந்திடாதையுங்கோ

*சுதன்* : ஆருக்கு எனக்கே சொல்லுறீர் .. அதுதானே அப்பா மனதிலை என்ன கிடந்தாலும் எந்த மறுப்பும் இல்லாமல் ஓமெண்டு போட்டாரே பிறகுமேனப்பா அந்தாளிலை பாயுறீர். தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தான் தெரியுமெண்டது சும்மாவே அந்தக் காலத்திலை சொல்லிக்கிடக்கு. சரி அதுகளைப் பிறகு பாப்பம்.. இஞ்சை தாரும் கடிதத்தை... ம்.. அவற்றை தான். (கிழித்து).

*அன்பு மகனுக்கு உன் அப்பா எழுதுவது...!*
*நான் நலம்..*
*நான் இங்கே இருப்பதனால்*
*நீங்களும் நலமாயிருப்பீர்களென எண்ணுகின்றேன்*
*ஆண்டவனையும் பிரார்த்திக்கின்றேன்..*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சாந்* : பரவாயில்லை.. இன்னும் குத்துக் கதைபோடுறது குறையேலைபோலை.

*"வசதியாகத்தான் இருக்கிறது மகனே...*
*நீ கொண்டு வந்து சேர்த்த*
*முதியோர் இல்லம்..*
*இல்லை இந்த*
*எல்டேர்ஸ் ரெஸ்ட் சென்ரர்"*

*சாந்* : ஏனாம் என்ன குறையாம். வசதிஎல்லாம் இருக்குதெண்டு சம்மதிச்சதாலைதானே சேர்த்துவிட்டது.. பிறகென்ன..

*சுதன்* : பிளீஸ் வெயிற் சாந்தினி.. முழுதாய் வாசிக்க முந்தி இடைநடுவிலை

*சாந்* : (கோபத்துடன்) நான் ஒருத்தரையும் குழப்பேலை நீங்கள் வாசியுங்கோ..

*பொறுப்பாய் என்னை*
*ஒப்படைத்துவிட்டு எதுவித சலனமின்றி நீ*
*வெளியேறியபோது, முன்பு நானும்*
*அது போல் உன்னை*
*வகுப்பறையில் விட்டுவிட்டு*
*என் முதுகுக்குப் பின்னால்*
*நீ கதறக் கதறக்*
*கண்ணீரை மறைத்தபடி*
*புறப்பட்ட காட்சி*
*ஞாபகத்தில் வருகிறது*

*சாந்* : அது அப்ப நடந்தது .. அதுக்கு இப்ப என்னவாம்

*சுதன்* : அவர் நினைச்சுப் பாக்கிறாராம். அவளவுதான்.. மிச்சத்தை வாசிச்சாலெல்லோ தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*முதல்தரமிக்க*
*இந்த இல்லத்தை*
*நீ தேடித்திரிந்ததை அறிகையில் கூட*
*அன்று உனக்காக நானும்*
*பொருத்தமான பள்ளி*
*எதுவென்றே*
*ஓடி அலைந்ததை*
*ஒப்பீடு செய்கிறேன்!*

***சாந்*** : அது பேரன்ஸின்ரை கடமை. நாங்கள் என்ன அவரை நடுறோட்டிலையே விட்டிட்டு வந்தனாங்கள். உந்த இடம் தன்னும் எடுக்க எவளவு கஸ்டப் பட்டனாங்கள் எண்டது தெரிஞ்சு கொண்டும் உப்பிடி எழுத மனம் வந்துதே... ஒரு அண்டர்ஸ்ராண்டிங் இல்லாத ஆளாய்க் கிடக்கு வேறை என்னவாம்

***சுதன்*** : பாவமப்பா.. தன்ரை கவலையை எழுதியிருக்குது... உம்மைப்பற்றிக் குறையாய் ஒரு சொல்லுதன்னும் இருக்கே பிறகேன் புறுபுறக்கிறீர்..

*இது வரையில்*
*ஒரு முறையேனும்*
*என் முகம் பார்க்க*
*நீ வராமல் போனாலும்*
*என் பராமரிப்பிற்கான*
*மாதத் தொகையை மறக்காமல்*
*அனுப்பிவைப்பதற்காக*
*என் மனம் மகிழ்ச்சியடைகின்றது.*

***சாந்*** : (வெறுத்து) அப்பாடா அதைத்தன்னும் ஏற்கிறார். மாமியை மாதிரிகொடுமை சொல்லேலை

*நீ விடுதியில்*
*தங்கிப் படித்த காலத்தில்*
*உன்னைப் பார்க்க வேணுமென்ற*
*ஆவல் இருந்தும்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*படிப்பை நினைத்து*
*உன்னை சந்திக்க மறுத்ததன்*
*எதிர் வினையே இதுவென்று*
*இப்போது அறிகின்றேன்!*

***சாந்*** : இஞ்சை எங்கடை வேலையையே பார்க்க நேரமில்லாமல் நாங்கள் இருக்கிறம். ம் ஒரு குறை வேறை.. என்னத்தைச் செய்தென்ன ஆரிட்டையாகிலும் நன்மை கேக்கலாமே...

*உன் அம்மா கொடுத்து வைத்தவள்*
*அன்றும் என்னை அதட்டி*
*உனக்காகத்தான் நியாயம்*
*பேசுவாள்*
*அதனால்தானோ*
*இன்றும்*
*இதை நீயே*
*மொத்தமாக அனுபவி என்று*
*என்மீது*
*முழுதாகச் சுமத்திவிட்டு*
*முடிவில்லா நெடும்பயணம்*
*சென்றுவிட்டாள்*
*ஆம் உன் அம்மா நாலும் நன்குணர்ந்த*
*பாக்கியசாலியடா*
*அன்றும் தப்பித்துக்கொள்ளுவாள்...*
*இன்றும் தப்பித்துவிட்டாள்...*

***சுதன்*** : உண்மையிலேயே அம்மா பாக்கியசாலிதான் சாந்தி.... குடுத்து வைச்சவ

***சாந்*** : போனவையைப்பற்றி ஏனப்பா அது இதெண்டு

*ஆம் மகனே*
*இளம் வயதில்*
*நீ சிறுகச் சிறுக சேமித்த*
*அனுபவத்தை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*என் முதுமைப் பருவத்தில்*
*மொத்தமாக எனக்கு மட்டுமே*
*செலவு செய்கிறாய்*

***சுதன்*** : பாத்தீரே சாந்தினி அப்பாவின்ரை கனத்த வரிகளை..

***சாந்*** : அதுதானே அவர் அண்ணாவியார் ஆச்சே.. உதுக்குக் குறைச்சலே மற்றவையின்ரை மனசு எவளவு நோகு மெண்டு கொஞ்சம் தன்னும் நினைச்சிருப்பாரே..

*ஆயினும்*
*உனக்கும் எனக்கும்*
*ஒரு சிறு வேறுபாடு*
*அன்று*
*நான் கற்றுக் கொடுத்தேன்*
*உனக்கு..*
*வாழ்க்கை இதுதானென்று*
*இன்று*
*நீங்கள் கற்றுக் கொடுக்கிறீர்கள்*
*எனக்கு..*
*உறவுகள் இது தானென்று*
*ஆம்*
*நீ எனக்குக் கற்றுக் கொடுக்கிறாய்*
*உறவுகள் இதுதானென்று*
*ஆம் மகனே*
*இதுதான் அறுவடை...*
*ஆம்..*
*அறுவடை*
*சுபம்*
அன்பு அப்பா அருணாசலம்.

----- **காட்சி நிறைவு** -----

-----**முற்றும்**-----

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியர் மறவன்புலோ
## செல்லம் அம்பலவாணர் - ஓர் அறிமுகம்



இலங்கையின் வடபுலத்தில் அமைந்துள்ள "மறவன்புலோ" என்ற கிராமத்தில் செல்லம் - சேதுப்பிள்ளை தம்பதிகளின் மூன்றாவது மகனாகப் பிறந்து, மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாசாலையிலும், யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்திலும் தனது கற்றலைத் தொடர்ந்தார்.

பட்டயப் பொறியியலாளரான இவர் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் முதுமாணிப் பட்டதாரி ஆவார்.

ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தில் அழைப்பு நிலைய பொறியியல்பகுதித் தலைவராகக் கடமைபுரியும் இவர் யப்பான் "ஜெய்க்கா" நிறுவனம் மற்றும் இந்தியா, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா ஆகிய நாடுகளிலும் சீனக்குடியரசில் "ஹுவாவி" பல்கலைக்கழகத்திலும் அழைப்பு நிலையத் தொழில்நுட்பம் தொடர்பான விசேடபயிற்சிகளைப் பெற்றுக்கொண்டவர்.

தொலைதொடர்புத்துறைப் பொறியியலாளராகக் கடமைபுரியும் இவர் நீண்டகால அனுபவம் கொண்ட வானொலி, தொலைக்காட்சி நாடகக கலைஞரும், நாடக எழுத்தாளரும் ஆவார்.

அகில இலங்கை ரீதியான திறந்த போட்டியில் இவரது நாடகப் பிரதிகள் அறுவடை(2014), சலங்கை(கூத்து)(2016) என்பன முதலாம் இடத்தையும், பஞ்சாமிர்தம்(2015)(சிறுவர்நாடகம்-கிராமியக்கலை தொகுப்பு) இரண்டாம் இடத்தைப் பெற்றன. பஞ்சாமிர்தம்(2015) என்ற சிறுவர் நாடக நூலின் ஆசிரியர்.

அகில இலங்கை சமாதான நீதவானாகிய இவர் புராணபடலம், பன்னிருதிருமுறை மற்றும் திருமுறை முற்றோதலில் கடந்த பத்துவருடமாக ஈடுபாட்டுடன் பங்கு கொள்ளும் ஒரு சிவனடியார்.

திருவாவடுதுறை ஆதீன கொழும்புப் மையத்தினரால் "திருமுறை நெறிச் செல்வர்" என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர்.

**- பெல்ப்ஸ் ஜெகநாதன்**

தலைவர், கொழும்பு தெற்கு றோட்டறிக் கழகம்

**மறவன்புலோ செல்வம் அம்பலவாணர்**
**இல 478 / 28. அளுத்மாவத்தை வீதி.**
**கொழும்பு 15.**

ISBN 978-955-42626-1-4

9 789554 262614

**விலை ரூ.500**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org